# திருக்குறள் ஆராய்ச்சி

பதினான்கு பேராசிரியர்களின் கருத்துரைகள் அடங்கிய

தொகுப்பு நூல்

வெளியிடுவோர்:

திருக்குறள் மன்றம்

கொழும்பு.

முதற் பதிப்பு டிசம்பர், 1955
பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ 2—0—0

விற்பனை உரிமை:
ஸ்ரீ மகள் கம்பெனி
சென்னை—1

Digitized By Roja Muthiah Research Library

# முன்னுரை

நூல் நிலையங்களில் தமிழ்த் துறையில் இலக்கணம், இலக்கியம், வரலாறு, ஆராய்ச்சி, அறிவியல் எனப் பல பாகுபாடுகள் உண்டு. ஆங்கிலப் பகுதியிலும் அத்தகைய பாகுபாடுகள் உண்டு. அவற்றோடு 'ஷேக்ஸ்பியர்' என்று ஒரு தனிப்பகுதியும் உண்டு; ஷேக்ஸ்பியர் நூல்களின் விளக்கங்களும் ஆராய்ச்சிகளும் அப் பகுதியில் உண்டு. அதுபோல் தமிழ்த் துறையிலும் 'திருவள்ளுவர்' என்று ஒரு பகுதி அமைய வேண்டும் என்பது என் வேட்கை.

'திருக்குறள் ஆராய்ச்சி' என்னும் இந்நூலில் உள்ள ஆராய்ச்சிப் பகுதிகள் அவ் வகையில் தனித் தனி நூல்களாக விரிவடைய வேண்டியவை எனலாம். தொடக்கத்தில் இதுபோன்ற தொகுப்பு நூல்கள் தோன்றுதல், அவ்வளர்ச்சிக்கு உறுதுணையாக—வழி காட்டியாக—அமையும் என நம்புகிறேன்.

திருக்குறள் அத்தகைய கருத்துவளம் மிக்க நூல்; கற்று ஆராய்வோர்க்குப் பற்பல துறையிலும் பலவகைச் செல்வங்களைச் சுரக்கும் வளம் இதனிடம் உள்ளது. ஆராய்ச்சித் திறனுடையோரும் தமிழார்வம் மிக்கோரு மாகிய அறிஞர் பலருடைய கருத்துக்களை இவ்வாறு ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்ட முயற்சியைப் போற்று கிறேன்.

வாழிய இலங்கைத் திருக்குறள் மன்றம்!

சென்னை,
1-11-'55.

மு. வரதராசன்.

Digitized By Roja Muthiah Research Library

# எங்கள் எண்ணம்

ஒழுக்கத்தால் மேம்பாடுடையது பண்பாட்டால் சிறந்தது அறிவால் உயர்ந்தது தமிழினம் எனக் கூறலாம். இத்தகைய சிறப்பும் பண்பும் உயர்வும் எய்துவதற்கு தமிழ் மூதறிஞர்கள் வழங்கிய பல நூற்கள் துணை புரிந்திருப்பினும் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் வள்ளுவப் பெருந்தகை வழங்கிய, இன்று உலகப் பொது மறையாக விளங்குகின்ற திருக்குறள் ஒன்றே முதன்மையானது.

அத்தகைய சிறப்புடைய நூலை மக்கள் பலரும் அறிய வேண்டுமென்ற எண்ணத்தால் கடந்த நான்காண்டுகளாய் ஒவ்வொரு கிழமையும் திருக்குறள் வகுப்பு நடத்தி வருகின்றோம். வகுப்பு நடாத்துவதில் குறைந்த தொகையான மக்களே பயன்பெற முடிகின்றது எனத் தோன்றியதுடன் திருக்குறள் என்னும் ஆழ் கடலினுள் பல நிற முத்துக்கள் புதைந்து கிடப்பதையும் அறியலானோம். அவற்றை அறிஞர் பலரைக் கொண்டு அகழ்ந்தெடுத்து மக்கள் மன்றத்திலே ஒளி வீசச் செய்தல் வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அதன் பயனாய் 1952-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 1—2-ஆம் நாட்களில் தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் சான்றோர் பலரை வரவழைத்து சாகிரா கல்லூரி மண்டபத்தில் மாநாடு நடததப் பட்டது. தொடர்ந்து 1954-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16, 17, 18ஆம் நாட்களில் நடைபெற்ற இரண்டாவது மாநாட்டில் முதல் மாநாட்டில் அறிஞர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளையும் பல அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளும் கொண்ட நூல் ஒன்றை திருவள்ளுவர் நினைவு மலராக வெளியிடுவதால் மக்கள் பெரும்பயன் பெறுவர் எனக்கருதி அறிஞர் பலரைக்

Digitized By Roja Muthiah Research Library

கட்டுரைகள் வழங்குமாறு கேட்டபொழுது உளமுவந்து கட்டுரைகள் வழங்கினார்கள் எனினும் குறித்த காலத்தில் கட்டுரைகள் எங்கள் கைக்குக் கிடைக்காமையால் இரண்டாவது மாநாட்டில் இம்மலரை வெளியிட இயலாமற் போயிற்று ஆகையால் 3-வது மாநாட்டில் இம்மலரை வெளியிட்டுள்ளோம்.

கட்டுரைகள் அனைத்தும் ஒரே மலராக வெளியிடுவதற்கு நூல், வடிவில் பெரிதாக அமைந்தமையால் கட்டுரைகளை இரு பகுதியாகப் பிரித்து திருக்குறள் கட்டுரைகள், திருக்குறள் ஆராய்ச்சி என்ற தலைப்புக்களில் இரண்டு மலராக வெளியிட்டுள்ளோம்.

இம்மலருக்காக கட்டுரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீமகள் கம்பெனியாருக்கும் எங்கள் உளமுவந்த நன்றி.

கடந்த இரண்டு மாநாடுகளிலும் பேருரையாற்றிய அறிஞர்களுக்கும் மாநாடுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு நன்கொடை யளித்த பெருமக்களுக்கும் உடலுழைப்பை நல்கிய நண்பர்களுக்கும் எங்கள் உளமுவந்த நன்றி.

**தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறு மறிவு.** (குறள்)

**திருக்குறள் மன்றத்தார்,**
கொழும்பு.

Digitized By Roja Muthiah Research Library

Digitized By Roja Muthiah Research Library

# கொழும்பு திருக்குறள் மன்ற

# நாண்மங்கல வாழ்த்து

[பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ணபாரதி]

●

அம்மை யப்பர் அருட் கிடனுக
இம்மையிற் பிறந்தார் எவரும் ஆகலின்
சாதியும் ஒன்றெனச் சமயமும் ஒன்றென
நீதியும் ஒன்றென நினைவுற வாழும்
வாழ்க்கையும் ஒன்றென மன்னுற மகிழ்ந்து
பன்னூற் ருண்டின் முற்படக் கண்டு
யாவரும் கைக்கொடு தேவராய்ச் செய்யும்
வள்ளுவ னென்ற வாய்மொழிப் புலவன்
தெள்ளுதமிழ்ப் பாவின் திறம்படச் செப்பிய
ஒவ்வொரு சமயத் துரிய நூலாக
எவ்வகைப் பெரியரும் இயற்றி வெளியிட்ட
அவ்வந் நூல்போல் அகற்றப் படாமல்
செவ்விய திதுவெனச் செப்பிப் போற்றி
அவ்விய மகல அறந்தெளிந் தவராய்
திருக்குறட் பெயரால் திருக்குறள் மன்றம்
என்னும் பெயரை நன்னர்ப் பூண்டு
ஈராண் டெய்திய இன்பத் தமிழா!
நீயே,
எல்லார் மனத்தும் இன்குறள் இலகவும்
எல்லார் வாழ்விலும் இன்குறள் பயிலவும்
நல்லா ராகி நயப்புற வாக்கி
எங்கும் வள்ளுவர் ஈண்டியுள் ளாரெனும்
மங்கல வாழ்த்துரை பொங்கப் பூண்டு
நன்னர் வெள்ளி நயஞ்சால் விழாவும்
பொன்னெடு மணியும் மாண்புறப் பொலிய
துன்னிய விழாவும் தொடர்ந்து
மன்னுக நீயே வழிவழி வாழ்ந்தே.

Digitized By Roja Muthiah Research Library

# பொருளடக்கம்


1. திருவள்ளுவர் கண்ட தமிழகம் ... 9
[பேராசிரியர். ஔவை. சு. துரைசாமி.]

2. பெரியாரும் சிறியாரும் .... 56
[டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.]

3. மானம் ... 60
[டாக்டர். ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.]

4. திருக்குறளும் சங்கநூல்களும் .... 63
[பேராசிரியர். க. அன்பழகன், எம். ஏ.,]

5. கள்ளும் சூதும் ... 78
[செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை.]

6. இருவேறு உலகத்து இயற்கை .... 87
[செல்வி. சி. தேவி, எம். எஸ்ஸி.]

7. ஒப்புரவு ... 103
[திருவாட்டி ஞானம் இரத்தினம்.]

8. சான்றோன் யார்—அறிஞனா, வீரனா? ... 125
[மயிலை. சீனி. வேங்கடசாமி.]

9. பகைத்திறன் தெரிதல் ... 143
[பேராசிரியர் ஆ. கார்மேகக் கோன்.]

10. அரண் ... 147
[புலவர். கா. கோவிந்தன், எம். ஏ.]

11. செம்பொருள் கண்டார் ... 161
[உமை தாணு.]

12. நன்றியில் செல்வம் ... 178
[அ. சே. சுந்தரராஜன்.]

13. வள்ளுவர் கண்ட நாடு ... 188
[சுப. இராமநாதன், எம். ஏ.]

14. சொல்வன்மை .... 201
[வித்துவான். ந. சேதுரகுநாதன்.]


Digitized By Roja Muthiah Research Library

# வள்ளுவர் கண்ட தமிழகம்

**பேராசிரியர், ஔவை. சு. துரைசாமி.**

*தியாகராசர் கல்லூரி, மதுரை*

நமது இந்திய நாட்டின் பல பகுதிகளிலும் இப்போது எண்ணிறந்த பல மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் சில ஒரு குறிப்பிட்ட பகுதியிலும் சில மக்கள் தொகுதியிலும வழங்கி வருகின்றன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, குசராத்தி, உரியா, வங்காளம் முதலியன அவற்றின் பெயரையே கொண்ட பகுதிகளில் நாட்டு மொழியாக இருக்கின்றன. இவைகளில்....காலத்தால் தொன்மை வாய்ந்தவை சில. அச்சிலவற்றிலும் தமிழ்க்கு நிகராக எவையுமேயில்லை. காலத்தால் தமிழ்க்கு நிகராக வடமொழி யென்னும் சமஸ்கிருத மொழி ஒன்றுதான் உளது; என்றாலும் அது பேச்சு வழக்கில் எந்தப் பகுதியிலும் மக்களால் பேசப்படுவது கிடையாது. மேலும், பழமையான வேத காலத்தில் இருந்தது போலாது இப்போது அது வேறு வகையாக மாறியும் இருக்கிறது. இன்றைய ஆங்கிலம் கற்றவர்களால் எழுநூறு எண்ணூறு யாண்டுகட்கு முன்பு நிலவிய ஆங்கிலம் கற்க இயலாதபடி மாறியிருப்பது போல வேத கால வடமொழியினும் இன்றைய வடமொழி மாறியிருக்கிறது.

தெலுங்கு, மலையாளம் முதலியன தமிழின் கிளையினமாகும். அவற்றில் வடமொழியின் கலப்பு மிகுந்து இன்றைய நிலை தோன்றியிருக்கிறது. வடமொழிக்



Digitized By Roja Muthiah Research Library

கலப்பு வளம் பெற்ற காலத்தில்தான் அம்மொழிகளில் இலக்கிய இலக்கணங்கள் தோன்றி நிலைபெறலாயின. பொதுவாக நோக்கின், அவற்றின் தொன்மையெல்லாம் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு உள்ளேயே இருப்பது தெரிகிறது. மராத்தி, குசராத்தி, வங்காளம் முதலிய மொழிகள் தமிழ் இனத்தின் வேறுபட்டவை யென்பர். ஆயினும், அவையும் வடமொழியின் சேர்க்கை மிகுந்த பின்பே இலக்கிய வளம் பெற்றுள்ளன. இதனால் அம் மொழிகளின் இலக்கியங்களைக் கண்ணுகக் கொண்டு அவை நிலவும் நிலப்பகுதிகளின் தொன்மை நிலை ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு காண முடிவதில்லை. வட இந்தியாவில் ஒரு காலத்தில் நிலவிய பழமையான மொழிகளுள் பாளி மொழி என்பது ஒன்று. இப்போது அது திபேத்து முதலிய நாடுகளில் சமயமொழியாக நிலவு வதைப் பார்க்கிறோம். மக்கள் பேச்சுவழக்கில் அஃது அருகியே இருக்கிறது. சிந்து நதி பாயும் பகுதியில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழின் இனமான மொழியே பேசப்பட்டு வந்ததெனப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கட்டுரைக்கின்றனர். ஆயினும், அம் மொழிபற்றிய இலக்கிய இலக்கணச் சிறப்புக்கள் இதுகாறும் காணப்படவில்லை யாதலால் அதனை விடுத்து மேற்செல்வாம்.

வடமொழியின் வேதகாலம் முதல் இன்றுவரை தமிழ் மொழிமட்டில் அன்றிருந்த திருமேனி சிறிதும் வேறுபடாமலும் மாறுபடாமலும் இருந்துவருகிறது. இதுபற்றியே மொழித்துறையில் வல்ல பேராசிரியர்கள், "ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்து

துமே" என்று தமிழ் மொழியைப் பாராட்டிக் கூறு கின்றனர். இதனால் மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியமும் இரண்டாயிர மாண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியங்களும், இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட திருக்குறளும் இன்றைய மக்களால் எளிது இனிது பயிலப் படுகின்றன. இவற்றின் தமிழ்நடை தானும் இன்றைய தமிழ் மக்கள் பேச்சு வழக்கினின் றும் பெரியதோர் வேற்றுமையோ மாற்றமோ அடை யவே யில்லை. பதினுயிரத்துக்கு ஒன்று அல்லது இரண்டு விழுக்காடு சொற்களில் சில வழக்கு வீழ்ந்து விட்டன. சமஸ்கிருதம், பாரசிகம், உருது, ஆங்கிலம் முதலிய மொழிகளின் கூட்டுறவால் மரஞ் செடி கொடிகளின் பெயர்களும் வேறு பொருள்கள் சிலவற்றின் பெயர் களும் நகரங்களில் வாழும் மக்களிடையே மறைந்தொழி கின்றனவே யன்றி நாட்டு மக்களின் பேச்சுவழக்கில் இன்னும் பெரும்பான்மையும் மறையவில்லை.

அரசியல் ஆதரவு கொண்டு மக்களிடையே அதி காரம் செலுத்தி வந்த காரணத்தால் சமஸ்கிருதம், பார சிகம், உருது முதலிய மொழிச் சொற்கள் தமிழில் கலந்து கொள்வதற்குத் தமிழகத்தின் இடைக்காலம் நல்ல வாய்ப்பளித்தது. அதனால் பத்திரிகையுலகில் நில வும் தமிழ் மேலேகூறிய சொற்களைப் பெருகக் கொண்டு நிற்கிறது. இப் பத்திரிகையுலகிலும் வேற்று மொழி யாளர் இடையிலும் நிலவும் தமிழ், தமிழ் மரபுக்கு ஒவ் வாத வகையில் பல சொற்களைக் கொண்டு நிற்பதனால் தமிழ் இலக்கிய வுலகில் அவை இடம் பெறுமல் ஒதுங்கி விடுகின்றன. கிறித்தவரது விவிலிய நூல் தமிழ் மர புக்கு ஒத்த நிலையில் பெயர்களைத் திரித்துக் கொண்ட

Digitized By Roja Muthiah Research Library

போதும் தமிழ் இலக்கிய நெறியில் வளவிய சிறப்பினை இன்றும் நன்கு பெறமுடியவில்லை. பலவேறு மொழிக்குரிய சொற்களைக் கலந்து மயக்க நடையிட்டு மருண்டு திரியும் பத்திரிகைத் தமிழும், சிறு கதையுலகில் திரியும் அம்மாயித் தமிழும் பழைய தொல்காப்பியம் முதலிய செந்தமிழ் நூல்களைப் படித்து இன்புறுதற்குப் பெருந் தடை யுண்டுபண்ண முயன்றும் ஒன்றும் செய்ய இயலவில்லை இன்றைய ஆங்கில நன்மக்கள், இடைக் காலத்தில் லத்தீன், கிரீக்கு முதலிய மொழி விரவி நிலவின கடுநடை ஆங்கிலத்தை அருவருத்து ஒதுக்கித் தூய ஆங்கில மொழி நடையை விரும்புவது போல.

இன்றைய தமிழ் இளைஞர்கள், தங்கள் தமிழைத் தூய நிலையில் படித்து இன்புறுதற் கேற்ற விருப்பும் வேட்கையும் மிகுந்து உள்ளனர். இப்போது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிலவிய செந்தமிழ் நூல்களைப் பேரார்வத்தோடு படித்து இன்புறுகின்றார்கள்.

இப் பழைய இலக்கியங்களைப் படிக்கும் போது அவற்றை ஆக்கிய புலவர் பெருமக்களின் மனக்கண்ணில் விளங்கித் தோன்றிய தமிழகம் படிக்கும் இன்றைய இளைஞர் உள்ளத்தில் காட்சியளிக்கிறது. அந்நாளைய தமிழகத்துத் தமிழ் மக்களின் உள்ளம் உரை செயல் என்ற மூன்றும் இயங்கிய திறம் புலனாகிறது. வாழ்க்கையில் அவர்கள் கொண்டிருந்த குறிக்கோள்களும் நல்லொழுக்கங்களும், சமுதாய நெறிமுறைகளும் அரசியல் அடைவும் பிறவும் நன்கு விளங்குகின்றன. இன்றைய வாழ்வில் காணப்படும் கொள்கைகள் சிலவற்றின் கருத்துக்களை விளங்கிக் கொள்வதற்கும் அக்காட்சி பேருதவி செய்கிறது. இந்த நல்ல பயனை நோக்

கியே திருவள்ளுவர் செய்தருளியிருக்கும் திருக்குறளைத் துணையாகக் கொண்டு அது காட்டும் தமிழகத்தைக் காண்பது நமது கருத்தாகின்றது.

நமது தமிழகத்தில் திருவள்ளுவரைக் காட்டும் தமிழ் இலக்கியம் அவருக்குப் பல நூற்றாண்டு முன்னையோரான தொல்காப்பியரையும் காட்டுவது வழக்கம். திருவள்ளுவரும் அவரைத் தமக்குச் சிறந்த முன்னோராகக் கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களின் பொருள் நெறியொழுக்கத்தைக் கூறப் புகுந்த தொல்காப்பியர், "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்றாராக. திருவள்ளுவர், அவ்வொழுக்கத்தையே வேறு வகையில் உரைக்கக் கருதி, அறனும் பொருளும் இன்பமும் என்று மூன்று பால்களாக முறை செய்து மொழிகின்றார். தொல்காப்பியர் வழங்கிய சில சொற்றொடர்களைப் பொன்னே போல் போற்றித் தனது நூலில் அமைத்துக் கொண்டுள்ளார். "நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறை மொழி தானே மந்திரம் என்ப" என்பது தொல்காப்பியம்; "நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும்," என்பது திருவள்ளுவர் உரைக்கும் திருக்குறள். "கொடியார் கொடுமை சுடுமென வொடியாது" என்று தொல்காப்பியர் சொன்னாராகத் திருவள்ளுவர், "கொடியார் கொடுமையின் தாங்கொடிய இந்நாள், நெடிய கழியும் இரா" என்று அமைத்துக் கொள்வர். "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" எனத் தொல்காப்பியர் தமிழகத்துத் தமிழ் மக்களது ஒழுகலாற்றையே வரைந்து கொண்டு அகமும் புறமுமாக வகுத்துரைத்தாராக. திருவள்ளுவர், தமிழகத்தைச் சிறப்பாக

Digitized By Roja Muthiah Research Library

நிறுத்தி நிலவுலகத்து மக்களினம் அனைத்தையும் பொதுவாக நிறுத்தி நோக்கித் தமது நூலை வழங்கு வாராயினர். இதனை நன்குணர்ந்தே "சமயக்கணக்கர் மதி வழி கூறாது, உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்" எனக் கல்லாடனாரும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" எனப் பாரதியாரும் பாராட்டியுரைப்பாராயினர்.

தொல்காப்பியம், தமிழகத்தை வடவேங்கடத்துக் கும் தென்குமரிக்கும் இடையிலே வைத்துக் காணுகின்ற தென அதற்குப் பனம்பாரனார் உரைத்த பாயிரம் கூறு கின்றது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்பது பனம்பாரனார் கூறிய பாயி ரம். வடவேங்கடம் என்பது இப்போதைய சித்தூர் மாவட்டத்துக்கு வடவெல்லையாகவும் நெல்லூர் மாவட் டத்துக்கு மேற் கெல்லையாகவும் நிற்கும் மலைத்தொடர். தென்குமரியென்பது இப்போதைய குமரி முனைக்குத் தெற்கே யிருந்து கடலுள் மறைந்துபோன குமரிநாடு என்பர். எனவே "வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" தொல்காப்பியனார் மேற் கொண்ட சொற்பொருள் ஆராய்ச்சிக்குச் சீரிய இடமா யிற்று என்றே கொள்ளல் வேண்டும். கொள்ளவே, மக் களுக்கு உறுதி நல்கும் அறம் பொருள் இன்பக் கூறு களை ஆராயத் தொடங்கிய திருவள்ளுவர், வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தையே தமக்குச் சிறப்பிடமாகக் கொள்கின்றார் என்பது தெளி வாம். தமிழ் மக்களின் வழக்கும் செய்யுளும் தொல்காப் பியர்க்கு முதலாதல் போலத் திருவள்ளுவர்க்கு அத் தமிழ் மக்களின் நினைவும் சொல்லும் செயலும் முதலா கின்றன.

Digitized By Roja Muthiah Research Library

இனி, தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களை யும் காணும்போது தமிழகத்தின் உண்ணாடுகளின் பிரிவு வகை நன்கு தெரிகிறது. வடவேங்கடத்துக்கும் வடவெள்ளாற்றுக்கும் இடையிலுள்ள பகுதி தொண்டை நாடென்றும், வடவெள்ளாற்றுக்கும் தென்வெள்ளாற் றுக்கும் இடையிலுள்ளது சோழ நாடு என்றும், தென் வெள்ளாற்றுக்கும் தென்குமரிக்கும் இடைநிலைப் பகுதி பாண்டி நாடென்றும், மேற்குக் கடலுக்கும் மேற்கு மலைத் தொடர்க்கும் இடையிலிருப்பது சேர நாடென் றும், சோழ நாடு தொண்டை நாடுகட்கு மேற்கிலும், மேற்குமலைத் தொடருக்குக் கிழக்கிலும் உள்ள பகுதி கொங்கு நாடென்றும் வழங்கி வந்திருக்கின்றன. இன் றும் அந்தப் பாகுபாடுகள் மக்கள் பேச்சு வழக்கில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்பெருநாடு கட்குள்ளே சிறு சிறு உண்ணாடுகள் ஒய்மா நாடு, அருவா நாடு, கோநாடு என்பன முதலாகப் பல உள் ளமை சங்க இலக்கியங்களால் தெரிகின்றன; இடைக் காலக் கல்வெட்டுக்களால் அவை வற்புறுத்தவும் படு கின்றன.

தமிழகத்தைக் காணும் திருவள்ளுவர்க்கு அது பெருநாடுகளாகவும் சிறுநாடுகளாகவும் பிரிந்திருப்பது தெரிகிறது. இவற்றின் அமைப்பை நோக்குகின்றார். ஒவ்வொரு நாடும் தன்கண் வாழும் மக்கள் உண்டி, உறையுள், உடை முதலியவற்றுக்கு ஏனை நாடுகளை எதிர்நோக்காத வகையில் செவ்வையாக அமைந்துள் ளது; இவ்வமைதிதான் நாடு பிரிவினைக்கு அடிப்படை யென்று சான்றோர் கூறுகின்றனர். திருவள்ளுவர், "நாடு என்ப நாடா வளத்தன; நாடல்ல நாட வளந்தரும்

Digitized By Roja Muthiah Research Library

நாடு" என்று குறிக்கின்றார். இந்நாடுகட்குக் காப்பெல்லையாகவும் வருவாயாகவும் மலைகளும் ஆறு களும் சிறந்த உறுப்பாய் அமைகின்றன. "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் நாட்டிற்கு உறுப்பு" என்று இசைக்கின்றார். தள்ளா விளையுளைச் செய்யும் நிலக் கிழவரும் தக்கோரும் தாழ்விலாச் செல்வரும் வாழ்ந்து நாட்டின் புகழைப் பெருக்குகின்றனர். இந் நாடுகளுள் சில தலைசிறந்து விளங்குகின்றன. அவை கேடு என்பதையே அறியாமலும், ஒரு சில கெட்ட விடத்தும் வளங் குன்றாமலும் உள் ளன. அந்நாடுகளில் "பல் குழுவும், பாழ் செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல் குறும்பும்" இல்லை. பிணியின்மையும், செல்வமும், நல்ல விளைவும், இன்ப வாழ்வும், இனிய அரசு காவலும் இருந்து அழகு செய் கின்றன. அழகிய நாடுகள் சில வேந்தமைவு இல்லாமை யால் பயனின்றிப் பாழ் படுவதைக் கண்டு, "ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே, வேந்தமை வில்லாத நாடு" (740) என்று அறைகின்றார்.

இந் நாடாளும் வேந்தர்கள் பக்கம் திருவள்ளுவரது உள்ளம் செல்கிறது. வேந்தர்களின் நலம் தனி நிலை, ஆட்சி நிலை என்ற இரண்டினும் கலந்து நிற்கிறது. தனி நிலையில், தமிழ் வேந்தன் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற நான்கிலும் எஞ்சாமல் இருக் கின்றான்; தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்ற மூன்றும் அவனை நீங்காமல் உள்ளன. வேந்தருள் சிறப்புடையோர், கொடை, அளி, செங்கோன்மை, குடியோம்பல் என்ற செயல்களால் பிறர்க்கு எடுத்துக் காட்டாய் இலங்குகின்றனர். இவ் வேந்தருடைய

Digitized By Roja Muthiah Research Library

எண்ணமுற்றும், நாட்டின் செல்வ வருவாய்களைப் புதிய புதியவாய் இயற்றுதலினும், முன்புள்ள வருவாய்களால் எய்துவதை ஈட்டுதலினும், ஈட்டியவற்றைப் பயனின்றிக் கெடாதவாறு காத்தலினும், படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறினுக்கும் வகுத் தாளுதலினும் ஒன்றியிருக்கின்றது.

குடிகளின் ஒத்துழைப்பின்றி நாடாட்சி இனிது நடவாதென்பதை ஒவ்வொரு வேந்தனும் உணர்ந் தொழுகுகின்றான். குடி தழீஇக் கோலோச்சும் மன்னவனே நெடிதாளும் நிலை பேறுடையனாகின்றான். குடிபுறங் காத்து ஓம்பும் வேந்தன் நாட்டில் எத்தகைய குற்றமும் நிகழாவாறு கடிந்தொழுகுகின்றான். கொடியவரை ஒறுத்தல் பைங்கூழ்க்குக் களையெடுப்பது போலக் கருதப்படுகிறது. எதனையும் ஓர்ந்து யார் மாட்டும் கண்ணோடாமல் உண்மை தேர்ந்து முறை செய்வது நாடாளும் இறைவனது இறைமைச் செயலாகத் திகழ் கிறது. வேந்தர்கட்கு உளதாகும் வெற்றியெல்லாம் அவர் தம் படை நலத்தால் அன்று; செங்கோன்மை யின் செம்மை நலத்தாலாம் என்ற கருத்து அவ ரவர் உள்ளத்திலும் தோய்ந்து கிடக்கின்றது. நாட்டில் நன் மழை பெய்தலும் நல் விளைவு உண்டாதலும் வேந்தனது செங்கோல் நலத்தாலாம் என்று சான்றோர் சாற்றுகின்றனர்.

வேந்தியல், படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்ற ஆறனையும் உறுப்பாகக் கொண்டுளது. இவற்றுள், படை தன்னாடு காத்தற்கும் பிறர் நாடு கோடற்கும் அமைந்த பேருறுப்பு; இதன் கண் யானைப் படை, குதிரைப் படை, தேர்ப்படை, வாட்படை, விற்

Digitized By Roja Muthiah Research Library

படை, வேற்படை யெனப் பல வகையுள்ளன. போர்க் களம் புக்க வழி உளவாகும் ஊறுகட்கு அஞ்சாது வென்று சிறப்பது இப்படையின் குறிப்பு; இதுபற்றியே ஒரு வேந்தன் பெற்றுள்ள செல்வங்களுள் படையே "வெறுக்கையுள் எல்லாந்தலை" (761) என்று கருதப்படுகிறது. பகைவர் படையில் முன்னேறிச் சென்று தாக்கும் அடற்றகையும், மேல் வரும் பகைப் படையை எதிரூன்றித் தாங்கும் ஆற்றலும் இவற்றின் சீரிய தொழில்; இத் தொழில் வகையில் ஒரு சிறிது குன்றினும் படைத்தகைமையில் மேன்மையுற்று விளங்குவது பெருமையாக இருக்கிறது. படைமறவர் அனைவரும் தத்தம் தலைமக்கள் குறிப்பு வழி நின்று ஒழுகும் சீரிய ஒழுக்கம் உடையராவர். படையை நெறியறிந்து செலுத்தும் தலைமைப் பண்புடைய நன்மக்கள் இவற்றிற்குத் தலைமை தாங்குகின்றனர். "நிலைமக்கள் சாலவுடைத் தெனினும் தானை, தலைமக்கள் இல் வழி இல்" என்று திருவள்ளுவர் தெளிந்து கூறுகின்றார். "கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என்று ஒரு படை மறவன் உரைக்கின்றான்; "விழுப்புண் படாத நாளெல்லாம்" வழுக்கிய நாளாகக் கருதுகின்றான் வேறொருவன்; "புரந்தார் கண்ணீர் மல்கச் சாகிற் பின் சாக்காடு இரந்து கோட்டக்கது உடைத்து" என்று பேசுகின்றான் மற்றொரு மறவன். தன் மேல் பொரவந்த களிற்றோடு தன் கை வேலைப் போக்கி வரும் ஒருவன், பகைவன் தன் மார்பின்கண் எய்த வேலைப் பிடுங்கி மகிழ்கின்றான்.

போர் வந்த வழிப்படை மறவனாய் வேந்தர்க்குத் தொழில் புரிபவர் ஏனைக் காலத்தில் குடி மக்களாய்

Digitized By Roja Muthiah Research Library

நல்லறஞ் செய்கின்றனர். "அடுக்கிய கோடி பெறினும்," தமது குடிப் பெருமை குன்றத்தக்க செயல்களைச் செய்வது சிலர். குடி வாழ்க்கை யென்பது தனக்கும் பிறர்க்கும் பயன்பட வாழும் வாழ்வாக மக்கள் எண்ணுகின்றனர். தாம் வழங்குவது உள் வீழ்ந்த விடத்தும் இக்குடிகள் தமது பண்பு குன்றாது வாழ்கின்றனர். பிறரை வஞ்சித்து ஏய்த்து வாழும் கீழ்மை சால்பின்மை யாகும்; அது செய்யாமையே குடிமையாம். திருவள்ளுவர் இக்குடிகளை நோக்குகின்றார். ஒவ்வொருவர் வாயிலும் இன் சொல்லே தவழ்கின்றது; வறியார்க்கு ஈவதை அவர்கள் கை செய்கிறது; முகத்தே உவகை பொலிகின்றது; எவரையும் கண்ணால் இகழ்ந்து நோக்குவதும் வாயால் இகழ்ந்து பேசுவதும் அவர்கள்பால் இல்லை. "நகையீகை இன் சொல் இகழாமை நான்கும் வகை யென்ப வாய்மைக் குடிக்கு" (953) என்று வள்ளுவர் வாய் மலர்ந்து மொழிகின்றார்.

வேந்தர்களுக்கு இம் மக்கள் இறை செலுத்துவதில் சிறிதும் தயங்குவதில்லை. தம் வாழ்வில் எத்துணைப் பொறை மிகுந்து நிற்பினும் "இறை யொருங்கு நேர்வது" இம் மக்கட்கு இயல்பாக வுளது. குடிகளுடைய வருவாயுள் மிக்கு வரும் உறு பொருளும், உடையார் இல்லையாதலால் ஒழிந்து நிற்கும் உறு பொருளும், காலினும் கலத்தினும் வரும் பொருள்கள் மேல் வாங்கப்படும் உல்கு பொருளும் வேந்தனுக்கு, உரியவாய் விடுகின்றன. வேற்று வேந்தர், தோற்றமை குறித்தோ துணைமை குறித்தோ செலுத்தும் திறைப் பொருள் வேந்தனைச் சேர்ந்துவிடுகிறது. திருவள்ளுவர் இதனை நன்கு ஆராய்ந்து, "உறு பொருளும் உல்கு பொருளும்

Digitized By Roja Muthiah Research Library

தன் ஒன்னார்த்தெறு பொருளும் வேந்தன் பொருள்" (756) என்று கூறுகின்றார். குடி புறங்காத்தலும் குற்றங் கடிதலும் செங்கோற் செலுத்துதலும் வேந்தர்க் குக் கடனாயினும், பொருளை இயற்றலும் ஈட்டலும் கடன் என்றும், பொருள் இல்வழி வேந்தன் செறுநர் செருக்கு அறுக்க இயலாது (759) என்றும் அரசர்கள் அறிந்து பொருள் செய்கின்றனர்.

இனி, இவ் வேந்தர்களுக்கு உறு துணையாக அமைச்சர்கள் உள்ளனர். வன்கண்மை, குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினையுடைமை, வினை செய்யும் திறல் என்ற ஐந்து இயல்புகள் இவர்களிடத்தே அமைந்துள் ளன. தம்மிற் கூடி நிற்கும் பகைவரைப் பிரித்தலும், கூடியிருப்போரைப் பிரியாதவாறு பிணித்துக் கோட லும், பிரிந்து நிற்கும் துணைவரைப் பொருத்திக் கொள்வ தும், செய்தற்குரிய வற்றை நன்கு ஆராய்தலும், ஆராய்ந்து துணிந்தவற்றை அயராமல் செய்து முடிப் பதும், தக்கவற்றை ஆராய்ந்து வேந்தர்களுக்கு உரைப் பதும் அமைச்சர் தொழிலாக உளது. செய்வதற்குரி யவைகளைத் தெரிந்தும் உலக இயற்கை யறிந்து செய் வது தலைசிறந்த அமைச்சரிடத்தே காணப்படுகிறது. தனக்கோர் உறுதியும் எண்ணாது, வேந்தன் தான் சொல்வதைக் கேளாது வெகுண்ட போதும், அவன் வெகுளியைத் தாங்கி நீதியையும் நேர்மையையும் கை விடாது கூறுவது தலையாய அமைச்சன் செயலாகத் திகழ்கிறது. இந்த அமைச்சர் குழுவிலே வேற்று வேந்தரிடம் சென்று தக்கது கூறிச் செயலாற்றும் தூதுவர்களும், தன்னாட்டினும் வேற்று நாட்டினும் நிகழ்வனவற்றை அறிந்து வந்துரைக்கும் ஒற்றர்களும் உள்ளனர்.

Digitized By Roja Muthiah Research Library

இந்த அமைச்சர் முதலியோரின் வேருக அறனறிந்து மூத்த அறிவுடையோர் பலர் சூழ்ச்சித் துணைவராக உள்ளனர். "உற்ற நோய் நீக்கி உருமை முற்காக்கும்பெற்றி" இவர்களிடத்தே ஒன்றியிருக்கிறது. தம்மினும் பெரியாராகிய இவர்களைத் தமராகக் கொள்வதை வேந்தன் தனக்குரிய வன்மையில் தலையாய வன்மையாக நினைக்கின்ருன். இப் பெரியோர் அமைச்சரின் சிறிதுமிக்கு நின்று வேந்தன் தவறு செய்யுமிடத்து அவன் செவிகைக்கும் சொற்களால் இடித்துரைத்துச் செம்மை நெறியில் அவனை நிற்கச் செய்கின்றனர். இவ்வாறு இடிக்கும் துணையாரை இல்லாத மன்னன் கெடுப்பார் இன்றியும் கெட்டழிந்து போகின்ருன்.

தேனும் பாலும் போன்ற சொற்களால் வேந்தனைச் சூழ்ந்து கெடுக்கும் சிற்றினத்தின் தீ நட்பும், பகைவர்களின் கூடா நட்பும் சில சமயங்களில் தோன்றுகின்றன. அவ்வாறே உட்பகையும் ஒரு சமயத்தில் உண்டாகின்றது. இந் நட்பினை ஆராய்ந்து நல்லோரது நட்பினையே நற் பண்புடைய வேந்தன் நயந்து கொள்கின்ருன்.

வேந்தர் வாழும் இடங்களில் அரண்கள் பல உள்ளன. தன்னைக் காத்தற்கும் பிறவேந்தரைப் பற்றுதற்கும் இவ்வரண்கள் பொருளாக இருக்கின்றன. இவை நீரரண், மண்ணரண், மலையரண், காட்டரண் எனப் பலவகைப்படும். இந்த அரண்களுள் செயற்கையாக அமைத்தற்கு நூல்கள் பல உள்ளன. இவற்றின் உயரம், அகலம், திண்மை, கொளற்கருமை முதலிய கூறுகளை அரணைப்பற்றிய நூல்கள் விரித்துரைக்கின்

Digitized By Roja Muthiah Research Library

றன. இவை காக்குமிடம் சிறிதாயும், உள்ளிருந்து வினை செய்தற்கேற்ப அகலமாயும் இருக்கும். இவ் வரண்களில் பொறிவகைகள் பல அமைக்கப்பட்டுள்ளன. அரண்கள் எத்துணை வலியுடைய வாயினும், அவற்றின் அகத்தும் புறத்தும் இருந்து காத்தலைச் செய்யும் படைமறவரது திறமையே சிறந்த அரணுகிறது. அவர்பால் வினைமாட்சி யில்லையாயின், மலையரணும் மாண்புடைய தாகாது.

மேலே படை முதலாகக் கூறி வந்த ஆறினையும் உறுப்பாகக் கொண்ட வேந்தன், கல்வி கேள்வி அறிவு உடையனாய், குற்றம் கடிந்து, பெரியோர்களைத் துணைகொண்டு செய்வனவும் தவிர்வனவும் தானே அறிய வல்லவனாகவும் உள்ளான். அரசியலுக்குரிய செயல் வகைகளைச் செய்யுமிடத்து, அழிவதும், ஆவதும், ஆகிய வழிப்பிறக்கும் ஊதியமும் சூழ்ந்து செய்கின்றான். அச் சூழ்ச்சியையும் தெரிந்த இனத்தாரைக் கூட்டித் தேர்ந்து எண்ணிச் செய்வதில்தான் அவன் செயல் சிறப்பெய்துகின்றது. தெளிவில்லாத எதனையும் வேந்தன் தொடங்குவதில்லை. தெளிந்த தொன்றும் உலக மக்களால் எள்ளப் படாததானலன்றி அவன் தொடங்குவதே இல்லை. தொடங்கும் முன் வலியும், காலமும் இடமும் அறிந்து செய்வது அவற்கு இயல்பாக இருக்கிறது.

அரசு செலுத்துதல் என்பது தனி மகன் ஒருவன் பிறர் துணையின்றிச் செய்யக்கூடிய தன்று என்பதை நன்கு அறிந்தவனாதலால், அரசியற் செயல் வகைகள் ஒவ்வொன்றிற்கும் தக்கவரைத் தேர்ந்தெடுப்பது அவன் கடனாகிறது. அரசியற் செயலாளரை, அறம், பொருள்,

Digitized By Roja Muthiah Research Library

இன்பம், உயிரச்சம் என்ற நான்கு திறத்தால் ஆராய்ந்து தேர்ந்து கொள்கின்றான். அவ்வாறு கொள்ளப்படுவோர், உலகில் ஒரு பற்றும் இல்லாதவராயின் அவர் பற்றிலாதலால் பழிபாவங்கட்கு நாணார் என்று தெளிந்து அவர்களை அறவே விலக்கி விடுகின்றான். அன்பு காரணமாகவேனும் நல்லறி வில்லாதவர்களை வேந்தன் தனக்கு அரசியல் வினையாளராகக் கொள்ளான். குணமே நிறைந்தவரும் குற்றமே யுடையவரும் உலகில் மக்களிடையே இல்லை யாதலால், யாவராயினும் அவர் தம் குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து குணம் மிகுமாயின் தேர்ந்து கொள்வது அரசனுக்கு அமைதியாக உளது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண் விடல்" வினையாளரை ஆளும் திறமாகும். இவ்வாறு ஒருவனை வினைக்குரியன் என்று நாடி நிறுத்திய பின்பு அவனை அவ்வினைக்கு உரியனாக்கி விடுவது அவனது அடுத்த செயல்; அவன்பால் ஐயுறுவானாயின் உண்டாகும் கேடு பல. "எனைவகையால் தேறியக் கண்ணும் வினை வகையால்" மாந்தர் பலர் வேறாய் விடுகின்றனர். அதனால், மன்னவன் நாடோறும் வினையாளரை ஆராய்கின்றான்; வினை செய்பவன் கோட்டம் அரசியலைக் கொடிதாக்கும் என்பதற்காகவே வேந்தன் இவ்வாறு நாளும் ஆராய்வது அறமாகிறது.

வினை செய்யும் பலதிறத்தார்க்கும் வேந்தனுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. அதனால் வேந்தன் அவர்களைத் தனக்குச் சுற்றமாகச் சூழ்ந்து கொள்கின்றான். அவர்களோடு அடிக்கடி அளவளாவி வினை நிலை

Digitized By Roja Muthiah Research Library

யைத் தெரிந்து கொண்டு மேல் செய்யக் கடவவற்றை அறிய முற்படுகின்றான். வினை செய்வோர் பலரும் தன் சுற்ற மாதற் கேற்பச் சீரிய செயல்களையும் வேந்தன் செய்கின்றான். அதற்காக வேந்தனிடம், கொடுத்த லும் இன்சொல்லும் ஆகிய இனிய செயல்கள் இயல் பாய் அமைந்து விடுகின்றன. வேந்தன் பெருங் கொடையும் வெகுளி பேணுமையும் உடையவனாகிய போது வினையாளர் அனைவரும் அவனுக்கு உறுதிச் சுற்றமாய் விடுகின்றனர். வேந்தனும் அவர்களைப் பொதுப்பட நோக்காமல் அவரவர் வரிசை நோக்கிச் சிறப்புச் செய்கின்றான். ஒவ்வொரு வினையாளன் வினை நலத்தையும் வேந்தன் மறப்பதே இல்லை. இம் மறவாமையால் வேந்தனுக்கு "அரியவென்று ஆகாத செயல்களே இல்லையாய்" விடுகின்றன.

இவ்வண்ணம் நிகழும் ஆட்சியில், நாட்டில் மேலே காணப்பட்டோரின் வேறாகக் கற்று வல்ல அந்தணர்களும், மறையோதும் பார்ப்பனரும், முற்றத் துறந்த முனிவர்களும் உள்ளனர். அந்தணர் "எவ்வு யிர்க்கும் செந்தண்மை பூண்டு" அறங் கூறுகின்ற னர். பார்ப்பார் மறையோதுவதும் வேள்வி வேட்ட லும் செய்கிறார்கள். துறவிகள் "தூயராய்" ஒழுக்கம் குன்றாது விளங்க, அவரிடையே "உண்ணாது நோற்கும்" பெரியோரும் காணப்படுகின்றனர். நாட்டில் உழவ ரும் வணிகரும் ஆயரும் வேட்டுவரும் மருத்துவரும் எனப் பல திறத்தார் வாழ்கின்றனர். இவர்கள் பலரும் கொள்கை பற்றியும் தொழில் பற்றியும் வேறு வேறு வகை பெற்று நிற்பினும், இவ்வகைகள் யாவும் உலகியல் வாழ்வு பற்றி மக்கள் தாமே வகுத்துக்

Digitized By Roja Muthiah Research Library

கொண்டவையென்று திருவள்ளுவர் எண்ணுகின்றார். இவை என்றும் நிலைபேறு இன்றிக் காலத்துக் கேற்ப மாறுபடக் கூடியவை. இவற்றிற்கு உள்ளீடாய்ப் பொது நிலையிற் காணப்படும் தமிழ் நிலமும் மக்களுயிரும் எப்போதும் நின்று காட்சி தரும் நீர்மையுடையன என்பது அவரது கருத்து. அதனால் செய் தொழிற் சிறப்புப் பற்றி வந்த வேறுபாடுகளை விலக்கி அனைவரையும் ஒரு சேரத் திரட்டிக் காணும் மதி நுட்பத்தால், திருவள்ளுவர் அவர்களுடைய சொல்லும் செயலும் கண்டு அவர் தம் உள்ளத்திற்குள் நுழைந்து அங்கே நிகழும் நிகழ்ச்சிகளை அளந்து பார்க்கின்றார்.

மக்களுடைய வாழ்வு தனக்குப் பயன்பட வாழ்தலும் பிறர்க்குப் பயன்பட வாழ்தலும் என இரு வகையில் இயலுகிறது. தனக்குப் பயன்படும் வாழ்வு தனி வாழ்வு என்றும், பிறர்க்குப் பயன்பட வாழ்வது பொது வாழ்வு என்றும் கொள்ளப்படும். இவற்றை அகவாழ்வு என்றும் புறவாழ்வென்றும் முறையே கூறுவர். இதனைச் சிறிது விளங்கக் காணும் போது ஒருவனுடைய உடலும் உயிரும் தம்மில் இயங்கும் திறம் இங்கே நினைக்க வேண்டிய நிலைவருகிறது. இளமைக் காலத்தில் உடலுக்குள் இயங்கும் உயிர் உடல் வழி நின்று அதனை ஒம்பிப் பேணுவதில் பேரீடுபாடு கொள்ளுகிறது. உடலையே தான் எனக் கருதி அவ்வுடல் வழியாகப் பெறக்கூடிய இன்பத்தையே உயிர் நாடுகிறது. உடம்பால் எத்துணைத் துன்பங்கள் வரினும், உயிர், அந்த உடம்பையே காதலித்து ஒழுகுகிறது. உயிரைத் தனக்குப் பணியா



Digitized By Roja Muthiah Research Library

ளாக்கி வளர்ந்து வரும் உடல் சிறிது காலத்துக்குப் பின் வேறு உடம்புகளை ஆக்குவதில் ஈடுபடுகிறது. வளர்தலும் இனம் பெருக்குதலும் ஆகிய இரண்டு அறங்களும் உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றின் கண்ணும் அமைந்துள்ளன. இந்த அறத்தில் விலக்குருத உடம்பு தன்னுள் உறையும் உயிரைத் தனக்குரிய பணிக்குத் துணையாக்கிக் கொள்ளுகிறது. உடலினது இச்செயலுக்கு ஆளாகியலமரும் உயிர் அவ்வகையில் உடல் தரும் இன்பத்துக்கு இரையாகி அதனையே நாடி நிற்கிறது. இந்நிகழ்ச்சிக்குப் பின் உயிர் அறிவு சிறந்து உடம்பைத் தனக்கு அடங்கி ஒழுகச் செய்து விடும். உயிர் வழி நின்று உடம்பு இயங்கும்போது தான் உலகியல் அற வாழ்வு தொடங்கி மக்கள் வாழ்வாக மாண்புறுகிறது. உடம்பின் வழி உயிர் ஒழுகும் போது தன்னலவுணர்வும், உயிர் வழி உடம்பு இயங்கும் போது தன்னலங் கருதாப் பொது நலவுணர்வும் மக்கள் வாழ்வில் இடம் பெறுகின்றன.

உடம்பையின்றி உயிர் ஒரு செயலும் செய்ய மாட்டாது. நினைக்கும் மனமும் பேசும் வாயும் எழுதும் கையும் பிறவும் உடம்பின் கூறுகள்; மேனுட்டார் மனத்தை உடம்பின் வேருகக் கூறுவர். அது நம் நாட்டவர்க்கு உடன்பா டன்று. நிற்க, உணர்வு வடிவாக நின்று இயங்குவது உயிர். அதனல், உலகியல் வாழ்வில் தனக்கு இன்றியமையாத உடம்போடு ஒன்றியிருந்து தொடக்கத்தில் அவ்வுடம்பின் வழி நின்று அதன் வாயிலாக அறிவன அறிந்து நுகர்வன நுகர்ந்து தனது உலகியலறிவை வளம் பெறச் செய்து கொள்வது உயிரின் தலையாய அறம். அவ்

Digitized By Roja Muthiah Research Library

வாறு நின்றதன் பயனைக ஆணுடம்பு பெண்ணையும் பெண்ணுடம்பு ஆணையும் கூடியொழுகும் முறை யால் பிறவுடம்புகளை ஆக்கும் ஒள்ளிய பணி நடை பெறுகிறது. அக்காலத்தே உயிர் பெறும் அனு பவ அறிவு உடம்பைத் தன் கீழ் அடக்கித்தான் மேம்பட்டு நின்று விளக்கம் பெறுதற்குரிய நிலை யினை உண்டு பண்ணிக் கொள்ளுகிறது. இப்போது தான் தன்னலமே சூழும் இயல்பு வேறுபடுகிறது. தன்னலத்தை மறந்து மனைவி மக்களாகிய பிறர் நலம் பேணும் பேரறம் தொடங்குகிறது. உடம்பின் வழி யொழுகும் ஏனை விலங்குயிர் போல இருந்த ஒருவன் இந்த மனை வாழ்வால் மக்கள் வாழ்வு நடத்தும் அற வோனாகின்றான். அவனுடைய கடமையும் பணியும் அறமாகின்றன. அவனது மனை வாழ்வு மனையற வாழ்வு என்றும், இல்லற வாழ்வு என்றும் சிறப்பிக்கப் படுகிறது. "அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே" என்று திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாக எடுத்து மொழிகின்றார்.

இவ்வாறு இயற்கையோடு இயற்கையாய் இயைந்து நின்றே அதனைத் தன் வழி இயங்கச் செய்யும் உயிர் முதற்கண் செய்ய நிற்கும் பணி தனிவாழ்வாகிறது. தன்னை ஓம்புதல், மனைவி மக்களை ஓம்புதல், விருந் தோம்புதல் முதலிய செயல்களால் தனி வாழ்வு புகழ் பூத்துப் பொலிவுறுகின்றது. இது தமிழகத்தின் சிறப்பியல்பு; "புகழெனின் உயிரும் கொடுக்குவர்" என்னும் பண்பால் ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் விளக்க முறுகின்றனர். இந்தக் காட்சியைக் கண்ட திருவள்ளுவனார் அதன் ஒவ்வொரு பகுதியி

Digitized By Roja Muthiah Research Library

னையும் தனித்தனியே பகுத்து ஆராய்ந்து பார்க்கின்றார்.

தனிவாழ்வு வாழும் ஒருவன் மணம் செய்து கொண்டு மனைவி மக்கள்பால் அன்பு செய்து விருந்தோம்பி, இனியன கூறி, செய்ந்நன்றி மறவாமல் நடுவு நிலையில் நின்று அடக்க முடையனாய் உலகத்தோடு ஒட்ட ஒழுகிப் பிறனில் விழையாத பேராண்மையும் பொறுமையும் மேற்கொண்டு பிறர் செல்வம் கண்டு பொறாமல் அதனைக் கவர நினைப்பதும், புறங்கூறிப் பயனில்லாதவற்றைப் பேசித் தீவினை புரிவதுமாகிய குற்றம் இல்லாமல் ஒப்புரவொழுகி வறியார்க்கு ஈந்து புகழ் பெறுகின்றான். இஃது ஆடவர் பெண்டிர் ஒவ்வொருவர் தனிவாழ்விலும் உயிர் நாடியாய் ஓடுவதைத் திருவள்ளுவரது புலமைக் கண்ணுக்கு விளங்கித் தோன்றுகிறது. இது பெண்டிர் வாழ்விலும் அமைந்திருப்பதைத் "தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்றும், "புகழ் புரிந்த இல்" என்றும், "எள்ளின் இளிவாம் என்று எண்ணியவர் திறம் உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு" என்றும் அவரே கூறுவதனால் இனிது காணலாம்.

மேலும், இவ்வாழ்வின் முதற் கூறாக நிற்பது அன்பு. அன்பு நெறியில் தன்னலமே சூழும் உடல் வாழ்வின் பிணிப்பினின்றும் உயிர்க்கு விடுதலை யுண்டாகிறது. உடலைத் தன் வழி நிறுத்திப் பணி கொள்ளும் உயிரினது உயர் வாழ்வு தலை தூக்குகிறது. "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்று

Digitized By Roja Muthiah Research Library

அதனை நமக்குக் காட்டுகின்றார். தனிவாழ்வில் முற்பட நிற்கும் அன்புடைமை பிறர்பால் ஆர்வத்தைப் பயந்து அதன் வாயிலாக எல்லா மக்களுடைய நட்பையும் புகழையும் விளைவிப்பது காணுகின்றார். இவ்வாறே விருந்தோம்பல் இனியவை கூறல் முதலிய கூறுகளை நோக்கி வருபவர், ஒழுக்கமுடைமை என்னும் பகுதியில் உயிரறிவு சிறந்து உயர் நிலை எய்துவதனை நாம் தெளிய அறியுமாறு எடுத்துக் காட்டுகின்றார்.

மனைவாழ்வில் தான் நிகழ்த்தும் அறங்களால் சுற்றமும் நட்பும் சூழ, இருந்து மகிழ்விக்கும் நிலைமையினை ஒருவன் அடைந்து தன் நினைவு, சொல், செயல்களால் விளையும் பயனை அவர்பால் காண்கின்றான். நலம் விளையுமாயின் அதனையே கடைப் பிடித்தலும் தீது விளையின் அதனைக் கைவிடுதலும் செய்து தன் மனைவி மக்களையும் சுற்றத்தாரையும் அவ்வாறு நடக்குமாறு வழிகாட்டுகின்றான். இச்செயல் இடையறாமல் நடப்பதுதான் ஒழுக்கம். இடையறாது ஒழுகும் நீர் போல ஒருவனுடைய மனமும் சொல்லும் செயலும் நன்மை விளையும் செயலில் இடையறாது இயங்குவது நல்லொழுக்கமாகும். இவ்வொழுக்கத்தால் உண்டாகும் விழுப்பம் பிறவற்றால் பெறப் படுவதன்று. உடம்பால் விளையும் வேட்கையை ஒறுத்துத் தன்னடிப் படுத்தி அதனை நல்வழிக்கண் செலுத்துவதால் இவ்வொழுக்கம் செவ்வையாக நின்று விழுப்பம் தருகிறது. அதனால் இஃது உயிரினும் சிறந்ததாகக் கைக் கொண்டு போற்றப் படுவதை அறிகின்றார். ஒழுக்கமுடையவர் வழுக்கியும் தம் உடம்பு வயப்பட்ட

வாயால் தீய சொற்களைச் சொல்ல மாட்டாராகின்ற னர். ஒழுக்கத்தில் வழுக்குபவர், பிறனில் விழைந்தும் பொறாமைப் பேயால் துன்புற்றும் பிறன் பொருளை வெஃகியும், பயனில்லாதவற்றைப் பேசியும் தீவினை செய்து துன்புறுவது கண்கூடாக இருக்கிறது.

மனைவாழ்வில் ஒருவன் தனக்கு வேண்டப்படுவன எல்லாவற்றையும் தானே செய்து கொள்வதென்பது முடியாத தொன்று. ஒருவரோடொருவர் கொண்டும் கொடுத்தும் வாழ வேண்டியது இயல்பாகிறது. இது தமிழ் வாழ்வில் ஒப்புரவு எனப்படும். இடம் பொருள் முதலிய நலங்களால் ஒத்த இயல்புடையவர்கள் தமக் குள் உள்ளதும் இல்லதுமாகியவற்றைக் கொடுத்தும் கொண்டும் ஒப்புரவு செய்து கொள்வது ஒழுக்கம் போல் மேன்மை தருகிறது. வறியவர்க்கு ஒன்று ஈவது ஈகையாய்ப் புகழை விளைக்கிறது. ஒப்புரவால் ஒருவன் பொருட் கேடு எய்தினும் அது பெரிதும் விரும்பத்தக்கதாகும் (220) என்று தமிழகம் கருதுகி றது. ஈகை இல்லையாயின் நாட்டில் வறியவர் கூட் டம் பெருகும்; வறுமை நிலை, மக்கள் உள்ளத்தின் மாண்பைக் கெடுத்து மக்களின் தனிவாழ்வுக்கும் பொது வாழ்வுக்கும் பெருந் தீங்கை உண்டு பண்ணி, உலக வாழ்வை நரக வாழ்வாக்கி விடுமெனப் பண் டையோர் நன்கு அறிந்திருந்தனர். மக்களை மாக்க ளாக்கும் பசியைப் போக்குவதுதான் சிறந்த ஈகை யாகத் திருவள்ளுவர் குறிக்கின்றார். பசியைப் போக்குவ தென்பது வெறிதே சோறு அளிப்பதன்று; சோற ளிப்பதோடு, அச்சோற்றைப் பெறுதற் கேற்ற வழி வகைகளைச் செய்து தருவதாகும். இதைக் கருதியே,

Digitized By Roja Muthiah Research Library

திருவள்ளுவர், இதனை, "பெற்றான் பொருள் வைப்புழி" என்று வற்புறுத்துகின்றார்.

தனிவாழ்வு, பொதுவாழ்வு என்ற இரண்டிற்கும் இன்றியமையாது வேண்டப்படுவது பொருள்; அஃது உழவு, வாணிகம் முதலிய தொழில் வாயில்களால் வருவது. தனி வாழ்வை அறத்துப் பாலாகவும் பொது வாழ்வைப் பொருட் பாலாகவும் வகுத்துத் திருவள்ளுவர் தமிழகத்தின் வாழ்க்கைப் பண்பை நமக்குக் காட்டுகின்றார்.

பொருளை வெற்றிபெற இயற்றியும் ஈட்டியும் காத்தும் வகுத்தும் செய்யத் தகுவன செய்தற்கு அறிவு இன்றியமையாது. அந்த அறிவு ஒவ்வொருவர்க்கும் இயற்கையாகவே உண்டு; எனினும், அது செயற்கையாய் நிலவும் கல்வி கேள்விகளால் வன்மையும் வளமையும் பெறுகிறது. இயற்கையும் செயற்கையும் விரவிய கல்வியறிவுடையோர் கூடிச் செய்யும் பொருள், நாட்டின் பொது வாழ்வுக்குப் பெரிய அரணும் ஆக்கமுமாகிறது. இந்த அறிவு நலத்தைப் பயப்பதனால்தான் கல்வியைச் சான்றோர் செல்வமெனச் சிறப்பாகக் கருதுகின்றனர். "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று (400) திருவள்ளுவர் உரைப்பது காண்க. கி. மு. நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பிளேட்டோ, அரிஸ்தாத்தில் முதலிய மேலை நாட்டு அறிஞர்களும் கல்வியை நாட்டின் செல்வமாக உரைத்திருக்கின்றனர். இங்ஙனம் நாட்டின் பொதுச் செல்வமாவதுபற்றியே திருவள்ளுவர் கல்வியை ஏனைப் பொதுவாழ்வு கூறும் பொருட்பாலில் வைத்து ஆராய்கின்றார். கல்விச் செல்வத்துக்கும் பொருட் செல்வத்திற்கும் வேற்றுமையுண்டு. பொருட் செல்வம் என்றும் நிலைத்திராது. எங்கும் எப்போதும் நீங்

Digitized By Roja Muthiah Research Library

கும் நீர்மையுடையதென்பது உலகறிந்ததொன்று. கல்விப் பொருள் ஒருவரால் ஈட்டப்பட்டு அவர்க்கு உடைமையான பின்பு எக்காலும் நீங்குவதில்லை; மேன்மேலும் பெருகுவதே அதன் இயல்பு. அதனால் அது பொருள் வகையில் தலையாயதாய் முதற் கண் வைத்துப் பேசப்படுகிறது. மேலே பெற இருக்கும் பொருளைப் பெற்று வளர்த்துப் பயன் பெறுவதற்கு அறிவு இன்றியமையாத காரணமாவதால், எவ்வகையால் நோக்கினும், பொருணெறியில் கல்வியறிவு முதலிடம் பெறுவதாகின்றது. ஆகவே திருவள்ளுவர், கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற நான்கு பகுதிகளில் வைத்துக் கல்வியறிவை விரிவாக நோக்கி ஆராய்கின்றார்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி." ஒருமையில் கற்கும் அஃது எழுமையும் தொடரவல்லது. கற்கும் அளவுக்கு ஏற்பவே ஒருவர்க்கு அறிவும் பெருகுகிறது. கற்றோர்க்கு யாதும் ஊரே; யாதும் நாடே. மேற்குடியில் பிறந்தோன் ஒருவன் கல்லானாயின், அவன் கீழ் மகனாகவே கருதப்படுவான்; கீழ்ப் பிறந்தோன் கற்றோனாயின் உயர்ந்தோனாகின்றான். கல்லாதவன் ஒருவன் இயற்கையறிவால் ஒள்ளியனாகத் தோன்றினும், அவனது ஒட்பத்தை அறிவுடையோர் கொள்வதில்லை. கற்றிலனாயினும் ஒருவன் கேள்வியுடையவனாவது சிறப்பு. கல்விபோலக் கேள்வியும் அறிவுப் பேற்றுக்கு வாயிலாதலால், கேள்வியறிவைச் செல்வமெனச் சிறப்பித்ததோடன்றி அதனைச் செல்வங்கள் எல்லாவற்றினும் தலையாய செல்வம் எனத் திருவள்ளுவர் செப்புகின்றார். இவ்வாயில்களால் உண்டாகும் அறிவு மனத்தைச் சென்றவிடமெல்லாம் செல்லவிடாது நன்றின்கண் உய்த்து

Digitized By Roja Muthiah Research Library

மக்கட்குப் பகைவரால் அழித்தற்கரிய அரணாய் விளக்க முறுகின்றது.

பொருளில் தலையாயது உணவு; அதனை நல்குவது உழவு. "உழவினார் கைம் மடங்கின்" முற்றத் துறந்த முனிவர்க்கும் உலகில் நிலையில்லை. "உழுவார் உலகத் தார்க்கு ஆணி;" அவர்கள், "பல குடை நீழலும் தம் குடைக் கீழ்க்" காண்கின்றனர். இந்த நலம் பற்றியே, அவைக் களத்தில் சொல்லாடி வெல்லும் நல்லறிஞரைச் "சொல்லேருழவர்" என்றும், போர்க்களத்தில் வில்லும் வாளும்கொண்டு பணிபுரிபவர்களை "வில்லேருழவர்" "வாளுழவர்" என்றும் மக்கள் வழங்குகின்றனர். இந்த உழவரிடையே சிறந்த பண்புகள் காணப்படுகின்றன. அவர்கள்பால் "கையில் ஒன்றும் இல்லையே" எனக் கையற்று வருந்தும் சோம்பல் நிலை இல்லை. உழைப்புக் குரிய உடல் வளம் பெற்றும் உழைத்துப் பயன் பெற்று வாழாது மடியுற்று வருந்துவோரைக் கண்டு எள்ளிநகை யாடுவது உலகியல்பு. அதனால் உழவர்கள் பிறரிடம் சென்று இரப்பது கிடையாது. தாம் இரவார் எனினும், தம்மிடம் வந்து இரப்பவர்க்கு இயல்வது கரவாது உதவு கின்றனர். அவரது உழவுபற்றிய அறிவு திருவள்ளு வர்க்கு இன்பம் செய்கிறது. உழுதல், எருவிடுதல், களை யெடுத்தல், கால் வகுத்து நீர் பாய்ச்சுதல், விளைபயிரைப் பாதுகாத்தல் என ஐந்து வகை உழவுத் தொழில் விரிந்து இயலுகின்றது. நிலத்தை உழுமிடத்தும் ஒரு முறைக்குப் பன் முறை உழுது, அவ்விடத்துப் பிறந்த புழுதியை ஒன்று பாதியாகுமாறு உணக்குகின்றனர். இவ்வாறு நன்கு உணங்கிய புழுதியே போதிய எரு வாய்ப் பயிர் விளைவுக்குப் பேராக்கம் ஆகின்றது.

Digitized By Roja Muthiah Research Library

உழவினால் விளையும் பொருள்களை நாடு முழுதும் பரவிப் பயன்படச் செய்வது வாணிகம். வணிகர், தம் பொருளைப்போல் பிறர் பொருளையும் எண்ணிக் கொடுப்பதும் கொள்வதும் செய்கின்றனர். "சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல்" அவர் நெஞ்சம் நடுவு நிலை தவறாது நிற்கிறது. வாணிகத்தில் "முதலில்லார்க்கு ஊதியம் இல்லை" "ஆக்கம் கருதி முதலிழக்கும்" வினைகளை அவர்கள் செய்வது கிடையாது. வாணிகம் பொருட்டுப் பொருள்கள் கடல் ஆறு, காடு மலை முதலியவற்றைக் கடந்து கொண்டுபோகப்படுகின்றன. காவடிகளில் இரு தலையிலும் பொருள் மூடைகளைத் தாங்கி வருவோரும் உண்டு. பண்டிகளிலும் கலங்களிலும் மயிற்பீலி முதலிய பொருள்கள் செல்லுகின்றன. கடலில் தோணிகளும், நாவாய்களும் கலங்களும் இயங்குகின்றன. கடற் செலவில் கலங்கள் கவிழ்ந்து கெடுதலும் தோணிகள் பார் தாக்கப்பக்கு விட்டழிதலும் சில காலங்களில் நிகழ்கின்றன.

உழவு வாணிகம் முதலியவற்றால் உண்டாகும் பொருள் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது. பொருள் இல்லார்க்கு இவ்வுலகில் வாழ்வில்லை. பொருளற்றவர் முயன்றால் உடையவராகலாம். இப்பொருள் உயர்ந்தோரிடத்தேயன்றிக் கீழான பூரியரிடத்தும் வேற்றுமையின்றித் தங்கும். "போற்றாதவர்க்குப் பொருளாட்சி இல்லை" பொருளுடைய செல்வர்க்கு எல்லாரும் சிறப்புச் செய்கின்றனர். பொருளல்லாதவரையும் இப்பொருள் பொருளாகச் செய்கின்றது. தனிவாழ்வு பொதுவாழ்வு என்ற இரு வகை வாழ்வில் அறம் வளரவும் இன்பம் நுகரவும், பொருள் பெருகவும் நாட்டிற்குப் பொருள் மிகவும் இன்றியமையாததாகும்.

Digitized By Roja Muthiah Research Library

தனிவாழ்வில் தன் குடிக்குத் தலைவனாகிறவன், பொதுவாழ்வில் நாட்டுக்குத் தலைவனாகவும், அரசுக்கு அறிவுத் துணைவனாகவும் படைத் துணைவனாகவும் பணி புரிகின்றான். இவ்வண்ணம் தலைவனாவோன், கல்வி கேள்விகளோடு கூடிய நல்லறிவு பெற்றுக் குற்றம் கடிந்து, பெரியோரைத் துணைக்கொண்டு சிற்றினத்தை விலக்கி எதனையும் தெரிந்து செய்யும் செயலுடையனாய், செய்தற்குரிய வலி, காலம், இடம் முதலிய கூறுகளை நன்கு கண்டு தக்கோரை வினைக்குரியராகத் தேர்ந்து வினை செய்து, சுற்றம் தழுவி மறதிக்கு மனத்தை இரை யாக்காமல், அல்லவை நீக்கி நல்லன புரிந்து, எவர்க்கும் வெருவந்த செய்யாமல், கண்ணோட்டமுடையனாய் ஆங் காங்கு நிகழ்வன அறிந்து ஊக்கத்தால் மடிமையின்றி முயற்சி மிகுந்து இடுக்கணுக்கு அழியாது இலங்கு கின்றான்.

அறிவுத் துணைபுரியுங்கால், சொல்வன்மையும் வினைத் தூய்மையும் வினைத் திட்பமும் தெரிந்து செயல் வகையும் இவன்பால் சிறந்து தோன்றுகின்றன. வேற்று வேந்தர்பால் தூது சென்று தகுவனவற்றை அவர்கட்கு எடுத்துரைக்கும் வன்மையும், வேந்தரைச் சேர்ந்தொழுகும் விரகும், அவர் குறிப்பறிந்து நடக்கும் வித்தகமும், அவர்களது அவையின்கண் அஞ்சாது வெற்றியுண்டாகப் பேசும் வீறும் இத் தலைவர்களின் தலைமைப் பண்புகளாகும்.

இனி, போருண்டான விடத்துப் படைத் துணைவர் களாகவும் தானைத் தலைவராகவும் நின்று போர் செய்து நாடு காவல் புரிவதும் நாட்டு மக்களிடையே காணப்படுகிறது. "கூற்றுடன்று மேல்வரினும் கூடி

Digitized By Roja Muthiah Research Library

எதிர்க்கும் ஆற்றல்" இவர்பால் விளங்கித் தோன்றுகிறது. போர்மறவர் காலில் கழல் அணிகின்றனர்; வில், அம்பு, வேல், வாள், கணிச்சி முதலிய படைகள் இவர்களிடம் உள்ளன.

இத்தகைய பொதுவாழ்வால், நாட்டில் செல்வம் பெருக எல்லாரோடும் நன்னட்புற்று அரண்புரிந்து, புறப்பகை கடிந்து உட்பகை கெடுத்து ஒழுகும் நல்வாழ்வே எங்கும் நிலவுகிறது. பெரியோர்களைப் புறக்கணித்துப் பெண்வழி நின்று பொருட் பெண்டிரொடு கூடிக் கள்ளுண்டு சூது மேற்கொண்டு வறுமையும் நோயும் உற்று வருந்தும் கீழ் மக்களும் ஆங்காங்குக் காணப்படுகின்றனர். குடிப் பிறப்புணர்வும் மானமும் பெருமையும் சால்பும் அவரவர் பாடறிந்தொழுகும் பண்பும்கொண்டு, செருக்கு மிகுதியால் தீமை செய்தலின்றி நாணுடையராய்க் குடிசெய்து வாழும் நல்லோர் மிகுந்திருப்பதால் மேலே கூறிய கீழோராகிய கயவர் கூட்டம் குறைந்திருக்கிறது.

இருவகை வாழ்விலும் இனிது வாழ்ந்து புகழ் நிறுவியோர் . முதுமை எய்துங்கால் துறவுள்ளத்தராகின்றனர். அருள் சிறந்து, புலாலுணவு மறுத்துத் தவம் மேற்கொண்டு கூடா வொழுக்கம் களவு முதலியன விரும்பாது வாய்மையுடையராய்ச் சினமகற்றி எவர்க்கும் இன்னா செய்யாமல் கொல்லாமை நெறியில் நிலையாமை தெளிந்து உலகியலைத் துறந்து மெய்ம்மையுணர்வு பெற்று அவாவறுத்து உயர் நிலையுலகத்து இன்ப வாழ்வுக்கு உரியராகின்றனர்.

"காமஞ் சான்ற கடைக்கோட்காலை, ஏமம் சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்றமொடு கிழவனும்

கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'' என்று தொல்காப்பியரே கூறுதலால், இல்வாழ்வின் முது நிலையிலே பண்டைத் தமிழ் மக்கள் துறவு மேற்கொண்டனரென்பது தெளிவாகிறது. துறவியொருவன் சடை முடித்து அருவி நீராடிச் செந்தீ வேட்டு நிற்பதைப் பார்க்கின்றார் ஒரு சான்றோர்; "புறந்தாழ் புரி சடை புலர்த்துவோன்'' முன்பு மனைவாழ்வில் "பாவையன்ன குறுந்தொடி மகளிர், இழை நிலை நெகிழ்த்த மள்ளன்'' (புறம். 251) என்றும், "இல்வழங்கு மடமயில் பிணிக்கும், சொல்வலை வேட்டுவனாயினன் முன்னே'' (புறம்.252) என்றும் அவர் கூறுவதாகச் சங்க நூல்கள் உரைக்கின்றன. பெரும்பான்மை இவ்வாறாயினும் ஒரு சிலர் இளமையிலும் துறவு மேற்கொண்டிருக்கலாம்; வேறு சிலர் இல்வாழ்வில் காமஞ்சாலா முன்பே துறவு பூண்டிருக்கலாம். ஒவ்வொருவருக்கும் வாழ்வில் மக்கட் செல்வமும் முதுமையும் நிரம்பும்போது துறவு நிலை இயல்பாகவே உண்டாகிறது. முதுமை மிகுதலால் எய்தும் இயற்கைத் துறவினும் அது வருமுன் மேற்கொள்ளும் துறவு அறம் வளர்த்தற்குப் பெருந் துணை செய்கிறது. துறவு பூண்டோர்க்கு வேந்தனும் ஒரு சிறு துரும்பு போல் காணப்படுவன். இன்னார் இனியர், பகைவர் நண்பர், உடையவர் இல்லாதவர், உற்றார் உறாதவர் என்ற வேறுபாடின்றி யாவரையும் ஒப்ப நோக்கி வாழ்க்கைக்கு உறுதியாவனவற்றை ஆராய்ந்து உள்ளவாறு உரைப்பதற்கு இத்துறவினும் பெரிய வாய்ப்புடைய நிலை இவ்வுலகத்தில் இல்லை. இதுபற்றியே திருவள்ளுவர் தொடக்கத்தேயே நீத்தாராகிய துறவியரின் பெருமையைப் பொதுப்படக் கூறிப் பின் இல்வாழ்வின் முடிவில் அதனை விரித்து ஆராய்கின்றார்.

Digitized By Roja Muthiah Research Library

மனைவாழ்வில் தன்பாலும் தன்னைச் சேர்ந்தோர் பாலும் அன்பு செய்து ஒழுகிய ஒழுக்கத்தின் உயர்ந்து, தன் உயிர்க்கு உறுதுணையாகக் கருதி ஓம்பிய உடலை யும் மறந்து, உலகில் வாழும் ஏனை உயிர்கள் அனைத் தையும் உறவாகக்கொண்டு ஒழுகுவதால் துறவு நெறி யில் அருளே முதலறமாகக் காணப்படுகிறது. அருட் செல்வர்க்குத் தீவினையுண்டாக இடம் இல்லை. தன் னுயிர் நிற்றற்குத் தன்னுடம்பு இடமானதுபோலப் பிற வுயிர்கட்கு அவற்றின் உடம்பு சிறந்து நிற்பதால், அவ் வுடம்பாகிய புலாலை அருளறம் பூண்ட துறவியர் வெறுத்து மறுக்கின்றனர். தன் உடற்குவரும் துன் பத்தைப் பொறுத்துக்கொண்டு பிறவுயிர்கட்குத் துன் பம் செய்யாதொழிவதுதான் தவம் என்று கருதப்படு கிறது. அகத்திற் பகைமையும் முகத்தில் இனிமையும் கொண்ட கூடா நண்பர் சிலர் மனைவாழ்வில் இருப்பது போல், தவம் மறைந்து அல்லவை செய்வோரும் துறவு நெறியில் சிலர் உள்ளனர்; அவர்கள் உண்மைத் துறவி களாகார்.

காமஞ்சாலா முன் துறவு மேற்கொண்டமையால் சிலர், நெஞ்சில் துறவாது, உடம்பின் குறும்புக்கு இரையாகிக் கூடாவொழுக்கின ராகின்றனர். அதனல் அவர்பால் களவென்னும் காரறிவும் பொய் கூறலும் பிறவுமாகிய குற்றங்கள் உளவாகின்றன.

அந் நாளைத் துறவியர் சடை முடித்தலும், தலை மழித்தலும் பலகால் நீராடலும் ஆகிய பல செய்ல்களை மேற்கொண்டு அவற்றிற் கேற்பதொரு வேடமும் கொண்டிருந்தனர். மனை வாழ்வோர் அவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு பேணினர்.

Digitized By Roja Muthiah Research Library

வேந்தர் பலர் அவர்களைத் தம் அரசியற் சுற்றமாகவும் கொண்டனர். தீயவர் பலர் இத் துறவு நெறியைத் துணையாகக் கொண்டு தம் தீச்செய்கையை மறைத்து வந்தது காரணமாக இங்கே கூறப்படும் குற்றங்கள் துறவின்கண் பேசப்படுதற்கு இடம் பெற்றன. துறவு வாழ்வில் பொய்யும் களவும் புலையும் கொலையும் பிறவும் புகுதற்கு இடமேது?

வாழ்க்கையிற் கண்ட இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமை நன்கு உணரப்பட்டாலன்றி ஒருவன் உள்ளத்தில் துறவுநிலை முறுகிச் சிறவாதாகலின், துறவுக்கு முன்னும் பின்னும் நிலையாமை நினைக்கப் படுகிறது. யான், எனது என்னும் பற்றுக்களைத் துறப்பதே துறவின்கண் முதற் செயல். அப்பற்றுக்களை விடாதவர் எத்தனை உயர்ந்தோராயினும் அவரைத் துன்பங்கள் பற்றிக் கொண்டேயிருக்கும். பற்றறும் பொழுதுதான் பற்றுகிய பொருள்களின் நிலையாமை இனிது விளங்குகிறது. பற்றற்ற துறவியரது அன்பினை இல்வாழும் தனிமகனும், பொது வாழ்வில் இயங்கும் தலைமகனும் பிறருமாகிய எல்லோரும் பெறுதல் வேண்டும். அவரது பற்றுக் கோட்டால் துன்பத்தில் துளங்குதலும் இன்பத்தில் ஏமுறுதலுமின்றி யாவரும் இனிது வாழ்தல் கூடும்.

இனி, ஆண் மகன் ஒவ்வொருவனுக்கும் மணம் புரிந்து கொண்டு அக வாழ்வு தொடங்குதற்கு முன்பு காதற் காம வாழ்வு ஒன்று முன்னணியாகத் தோன்றுகிறது. அக் காலை அவன் தன் மனம் விரும்பும் இனிய மகள் ஒருத்தியைத் தனிமையிற் கண்டு அவளைக்

Digitized By Roja Muthiah Research Library

காதலிக்கின்ருன். அவளது மனம் ஒத்த கருத்தினை அவளுடைய நாட்டக் குறிப்பால் உணர்ந்துகொண்டு அவளைக் களவு நெறியிற் கண்டு பயிலுகின்ருன். அவளுடைய தோழியாலும் உறவினராலும் அக் களவொழுக்கம் இடையீடு படுகிறது. அதனுல் அவர்களிடையேயுள்ள காதல் குறுகிப் பெருகி ஒருவரையொருவர் இன்றியமையாத நிலைமையைப் பயந்து விடுகிறது. ஒருகால் அவளுடைய தமர் மகட் கொடை மறுப்பார்களாயின் அவன் அவளைத் தானே உடன்கொண்டு சென்று மணந்து கொள்கின்ருன். திருமணத்துக்குப் பின் இருவரும் தனித்திருந்து மணவாழ்வை நடத்துகின்றனர். இதுகாறும் அவளைப் பிரியாதொழுகிய கணவன் கடமை குறித்தும் பொருள் குறித்தும் பிரிகின்ருன். இவ்வாறு நிகழும் பிரிவுகளுள் சில பிரிவுகளால் மனைவிபால் புலவியும் ஊடலும் உண்டாகின்றன.

புலவி யென்பது காதல் மனையாட்டியின் உள்ளத்தில் நின்று வாயிற் சொல்லளவாய் நிற்கும் பிணக்கம்; **ஊடல்** என்பது அவளுடைய சொல்லிலும் செயலிலும் தோன்றும் பிணக்கம். பெருகியோடி வரும் நீர்ப் பெருக்கு இடையிடையே குறுக்கிட்டுத் தடுத்துவிடும் சிறியவும் பெரியவுமாகிய அணைகளால் கடுமை மிகுவது போல் காதலனது காதற் பெருக்கை இப் புலவியும் ஊடலும் இடையிடையே தோன்றிக் கடுமை மிகுவித்து இன்பம் விளைவிக்கின்றன. அதனுல் காதற் கூட்டத்துக்குப் புலவியும் ஊடலும் வேண்டப் படுகின்றன. புலவி யில்லாத காமக் கூட்டம் இன்பம் சிறவாது; அதனுல் புலவியை உணவிற் கலக்கப்படும் உப்போடு

Digitized By Roja Muthiah Research Library

உவமிக்கின்றார் திருவள்ளுவர். உப்பு மிகினும் குறையினும் உணவு சுவை யிழப்பது போலப் புலவி மிகினும் குறையினும் கூட்டம் இன்பம் தராது என்பாராய் "உப்பமைந்தற்றால் புலவி; அது சிறிது மிக்கற்றால் நீளவிடல்" என்று இசைக்கின்றார். புலவியில்லாத கூட்டம், நன்கு கனியாத கருக்காய் போல்வதாம் என்று தெரிவிக்கின்றார். இவ்வாறே ஊடுதலும் காமக் கூட்டத்துக்கு இன்பமாம். இவ்வூடலுற்ற காதலியை ஊடல் உணர்த்திக் கூடுவது காதலன் கடமை; உணர்த்தானாயின், அது, வாடிய பூங்கொடியை வேரரிந்து விடுவது போலும் தீச்செயலாகும். உணர்த்தும் காதலன் ஒருகால் தானும் ஊடினான் போல நடிப்பன். இவ்வூடல் கூட்டத்தால் முற்றியின்பம் செய்யும். சில காலங்களில் ஊடல் முறுகி ஒருவரை யொருவர் பிரியும் துன்பம் விளைத்துவிடும்; அது துனி யென்று வழங்கும். துனியுண்டாகாத புலவியும் ஊடலுமே காதலின்ப வாழ்வுக்கு வேண்டப் படுவன.

இவ் வகையால் மனை வாழ்வில் கணவனும் மனைவியுமாகிய இருவரும் ஒருவர் ஒருவரிற் கலந்த உள்ளம் கொண்டு ஓருயிரும் ஈருடலும் போல் கருத்தொன்றித் தமக்குப் பயன்படுதலும் பிறர்க்குப் பயன்படுதலுமாகிய வாழ்வில் ஈடுபடுகின்றனர். "உடம்பொடு உயிரிடையென்ன மற்றன்ன, மடந்தையொடு எம்மிடை நட்பு" என்றும் "வாழ்தல் உயிர்க் கன்னள் ஆயிழை சாதல் அதற்கன்னள் நீங்குமிடத்து" என்றும் காதலன் மகிழ்ந்து கூறுகின்றான். இக் காதற் காம வாழ்வின் விளைவே மக்கட் பேறும் புகழ்ப் பேறுமாகும்.



Digitized By Roja Muthiah Research Library

இங்ஙனம் காதற் காம வாழ்வில் கால் கொண்டு அகமும் புறமுமாகிய வாழ்க்கை நடத்தி முதுமையில் துறவு மேற்கொண்டு மெய்யுணர்ந்து மறுமையின்பப் பெரு வாழ்வுக்குச் சமையும் நிலையில் தமிழகத்து மக்கள் வாழ்வு காட்சியளிப்பதைத் திருவள்ளுவர் தமது புலமைக் கண்ணுல் கண்டு நமக்குத் திருக்குறள் வாயிலாகக் காட்டுகின்ருர்.

இத் தமிழகத்தில் ஆங்காங்கே சிறுபான்மைய ராகச் சில தகவிலாரும் தாழ்வுடைய வறியரும் காணப் படுகின்றனர். தகவிலாச் சிறுமதியினர் பிறன் மனை யாளை விரும்பி யொழுகும் பேதைமையும், பிறனுடைய ஆக்கத்தையும் பிறனொருவனுக்கு ஒருவன் வழங்கும் கொடையினையும் கண்டு அழுக்காறு கொள்வதும், பிறனுக்குரிய பொருளை நடுநிலை பிறழ்ந்து படுபயன் கருதியும் தன்னலம் குறித்தும் தனக்கு இல்லாமை பற்றியும் கவர்ந்து கொள்வதும், புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்வதும் பயனில் சொல் பாராட்டுவதும் பிறர்க்குத் தீமை செய்வதுமாகிய அறமல்லாத செய்கை களைச் செய்கின்றனர். பொது வாழ்வில் இப் பெற்றி யோர் சிலர் கூடா நட்பும் தீ நட்பும் உட்பகையுமாய்ப் புல்லறிவு கொண்டு நல்லோரை இகழ்ந்து கயவர் இனமாய்க் காட்சி யளிக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் தாழ்விலாச் செல்வர் காணப் படுவது போலத் தாழ்வுடைய வறியரும் காணப் படுகின் றனர். செல்வரினும் இல்லாதவர் பலராக வுள்ளனர். இலர் பலராதற்குக் காரணம் காணலுற்ற திருவள்ளுவர், "நோற்பவர் சிலர்" என்றும், "நோலாதவர் பலர்" என் றும் துணிகின்ருர். பின்னர் அவரது வறுமையை

Digitized By Roja Muthiah Research Library

நோக்குகின்றார். வறுமையினும் துன்பம் தருவது வேறு யாதும் இல்லை. வறுமையுற்றார்க்குப் பல்வகையான துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன. வறியவரை அவரை ஈன்றதாயும் வெறுத்து நோக்குகின்றாள். அவர்கள் நற்பொருளை நன்குணர்ந்து சொல்லினும் எவரும் கேளாது இகழ்கின்றனர். "நெருப்பினுள் துஞ்சலுமாகும் நிரப்பினுள், யாதொன்றும் கண்பாடரிது" என்று வறியவர் நிலைமை கண்டு திருவள்ளுவர் வருந்திக் கூறுகின்றார். வறியவர் செல்வர்பாற் சென்று இரக்கின்றனர். மானத்திற் கண்ணின்றி அவர்கள் இரத்தற்றொழிலை மேற்கொள்வது திருவள்ளுவர்க்கு வியப்பாக வுளது. தம்பால் உள்ளதைக் கரவாது ஈயும் செல்வர்கள் இருப்பதுதான் இல்லாதவர் இரத்தற்குக் காரணம் என்று எண்ணுகின்றார். இரப்போருட் சிலர் ஈயாரை வெகுளுவது கண்டு, தனக்குண்டான வறுமைக்குரிய காரணங்களுள் வெகுளியும் ஒன்றாக இருக்க அதனையுணர்ந்து, "இரப்பான் வெகுளாமை வேண்டும்" என்று சொல்லுகின்றார். இரப்பவர் சிலர், வறுமைத் துன்பத்தை இரந்துண்டு போக்கக் கருதுகின்றனர்; அவர் கருத்து, உயிரினும் சிறந்த மானத்தைக் கருதாத முரட்டுத் தன்மை யுடையதாக இருப்பது தெரிந்து, "இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின் வன்பாட்டது இல்" என்று வியக்கின்றார்; "இரந்துண்டு வாழ்வது எமக்கு இறைவன் பணித்தது" என்று சில இரவலர் கூற, "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்" என வெகுளுகின்றார். முடிவில், இரத்தலை வெறுத்து, "ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்" என்று இயம்புகின்றார்.

Digitized By Roja Muthiah Research Library

இங்ஙனம் மக்களிடையே யுள்ள கீழ் மக்களைக் கண்ட திருவள்ளுவர், மகளிருள்ளும் இழிந்தோர் சிலரைக் காண்கின்றார். அவர்களில் பொருளே கருதித் தமது பெண்மை நலத்தை விற்றுழலும் வரைவின் மகளிரைப் பார்க்கின்றார். கள்ளுண்டு களிப்போரும் சூதாடுவோரும் கூடா வொழுக்கினரும் ஆகிய இவர்கள் நாட்டின் நலத்துக்குத் தீங்கு செய்யும் களைகளாகக் கருதப் படுகின்றனர். களையெடுக்கும் நெல்லுழவர் போலத் தமிழ் வேந்தர் இவர்களைத் தக்காங்கு நாடி ஒறுக்கின்றனர். குற்றம் செய்தோரை ஒறுக்குமிடத்துக் "கடிதோச்சி மெல்ல எறிவது" இயல்பாக இருப்பது இன்பம் செய்கிறது.

திருவள்ளுவர் காலத் தமிழகத்தில் சமயக் கருத்துக்கள் பல மக்களிடையே நிலவுகின்றன. மேலே தேவருலகும் கீழே நரகமும் குறிக்கப்படுகின்றன. தேவருலகைப் "புத்தேளிர் வாழும் உலகு" எனப் புகல்கின்றனர். வீடு பேறென்பது தேவருலகுக்கும் மேற்பட்டது; அதனை "வானோர்க் குயர்ந்த உலகு" என்பர். தேவர்கள் என்பவர் அவியுணவு கொள்ளும் ஆன்றோர்; தம்மை நியமிப்பாரின்றி விரும்பிய விடத்துக்கு விரும்பியவாறு செல்லும் உரிமை அத்தேவர்கட்கு உண்டு. அவர்களுள் இந்திரனும் நிலமளந்த திருமாலும், தாமரைக் கண்ணனும் பிறரும் குறிக்கப் படுகின்றனர். சீதேவியைச் செய்யவள் என்றும் மூதேவியைத் தவ்வை யென்றும் முகடியென்றும் மக்களைத் தாக்கி வருத்தும் தெய்வங்களைத் தாக்கணங்கு என்றும் வழங்குவர்; பேய்கள், அலகைகள் முதலியவற்றைப் பற்றியும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

Digitized By Roja Muthiah Research Library

இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் பின்னர் "வானுறையும் தெய்வத்துள்" வைக்கப்பட்டு அங்கே இன்புறுவன்; தீவினை செய்வோன் நரகம் புகுந்து துன்புறுவன். நரகம் "தீயுழி" யெனவும், "ஆரிருள்" எனவும், "அளறு" எனவும் வழங்குகிறது. உலகுயிர் எல்லாவற்றிற்கும் முழுமுதலாய கடவுளை இறைவன், ஆதிபகவன், வாலறிவன், எண்குணத்தான், மலர்மிசை ஏகினன், தனக்கு உவமையில்லாதவன், வேண்டுதல் வேண்டாமை யில்லான், பொறிவாயில் ஐந்தவித்தான், அறவாழி யந்தணன், உலகியற்றியான், என உயர்திணைக் கண் வைத்துப் பால் பிரித்திசைப்பதும், செம்பொருள், மெய்ப்பொருள் எனப் பொருண்மை தோன்றக் கூறுவதும் உண்டு. உயிர்கள் என்றும் அழியாத அறிவுப் பொருள். செய்யும் வினைக்கேற்ப இன்பமும் துன்பமும் ஆகிய பயனை அவை நுகர்கின்றன. பயனை நுகர்தற்பொருட்டே அவ்வுயிர்கட்கு எழுவகைப் பிறப்பு அமைந்துள்ளது. பிறத்தலும் இறத்தலும் விழித்தலும் உறங்குதலும் போல்வன. உடம்பை விட்டு நீங்கிச் செல்லும் உயிர்களுக்கு உடம்பு இல்லாமல் இல்லை. ஒருவன் செய்யும் வினை, அவன் உயிரின்கண் கிடந்து விடாது தொடரும். ஆயினும் இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தொழுகுபவர் பால் அவ்வினையின் தொடர்ச்சி அறுந்து போகிறது.

தேய்தலும் வளர்தலும் உடைய திங்களைக் கிரகண காலத்தில் இராகு கேதுவென்னும் பாம்பு வந்து பற்றிக் கொள்ளுகிறது என்றும், பிரிந்திருக்கும் அன்பர் இருவருள், ஒருவர் நினைத்தால் மற்றவர்க்குத் தும்மல் உண்டாகும் என்றும், மக்கள் மதிநலத்தால் ஊழை உப்பக்கம் காண்டலும், கூற்றத்தை வெல்லுதலும் கூடும் என்

பர். தெய்வங்களுக்கு நாட் பூசனையும் விழாக்களும் நடக்கின்றன. நாட்டில் நன்மழை பெய்தற்கும் ஆனினம் இனிது வாழ்வதற்கும் வேந்தரது நல்லரசு காரணமாம் என்பர்; தன் கொழுநனுக்குரிய தொண்டுகளையே செய்தொழும் கற்புடை மகளிர் வேறு தெய்வத்தைத் தொழாராயினும் குறையில்லை; அவர்கள் ஏவின செய்தற்கு மழையும் தெய்வமும் அடிபணிந்து காத்திருக்கும் என்று கருதுகின்றார்கள்.

வள்ளுவரது தமிழகத்தில் மக்களிடையே பொன்னும் மணியும் இரும்பும் ஆகிய பொருள்கள் உள்ளன. பொன்னைச் சுடச் சுட அது ஒளி மிகுகிறது. அதன் அருமைகண்டு மக்கள் அதனைப் பெற்றால் பொதிந்து வைத்துப் போற்றுகின்றனர். கட்டளைக் கல்லைக் கொண்டு பொன்னின் மாற்றுக் காணப்படுகிறது. பொன்னும் இரும்பும் அரத்தால் அறுக்கப்படுகின்றன. நீட்டி அளக்கும் அளவுகோல்களும், தொடி, கழஞ்சு என நிறுத்து நோக்கும் நிறை கற்களும் மக்களிடையே வழங்குகின்றன.

வேட்டுவர் வலை வீசிப் புள்ளினங்களைப் பிடிப்பதும், கோவலர் மாலைப் போதில் குழலூதி ஆனிரைகளைத் தொகுப்பதும், மீன் வேட்டுவர் தூண்டில் கொண்டு மீன் பிடிப்பதும் ஆங்காங்கு உள்ளன.

இசையும் கூத்தும் இயலுமாகிய தமிழ் மூன்றும் தழைத்து விளங்குகின்றன. யாழும் குழலும் இனிது இசைக்கின்றன. யாழின் கோடு இக்காலத்து வீணை முதலியவற்றிற்கிருப்பது போல இன்றி வளைந்தே யுளது. குழலிசையை ஆயர்களே சிறப்பாக இசைக்கின்றனர். மக்கள் மிடற்றால் பண் சுமந்த பாடல்களைப் பாடுகின்

றனர். "பண்ணென்னும் பாடற்கியை பின்றேல்" என வள்ளுவர் பண்ணியற் பாட்டைப் பாராட்டுகின்றார். மக்கள் கூடும் அவைகளில் கூத்து நடைபெறுகிறது. நாணால் இயக்கப் படும் பாவைக் கூத்து முதலியனவும் ஆங்காங்கு உண்டு. இயல் வகையை நோக்கின், நுண்ணிய நூல்கள் பல கற்கப் படுகின்றன. அந்த நூல்கள் ஆராயுந்தோறும் மிக்க நயம் பயந்து இன்புறுத்துவதும் அறிவார்க்குப் புதிய புதிய அறிவு தந்து மகிழ்விப்பதும் மக்களால் அறியப்படுகின்றன. சான்றோர் பலர் இந் நூல்களைத் தொகுத்து விழுப்பமுடையன இவை, மெய்யான நூல்கள் இவை என வகை செய்கின்றனர். நூல்களும் பலவேறு வகையில் உள்ளன. அரசியலமைப்பும் அரணமைப்பும் நூற் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

மண்ணால் மட்கலங்களும் பாவை முதலிய உருவங்களும் மக்கள் கைத்தொழிலில் உருவாகின்றன. மனைகளில் சுதை வேலைகளும் கற் கதவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இராக் காலங்களில் விளக்குகள் எரிந்து இருள் நீக்கி ஒளிசெய்கின்றன; அதனால் இருள் விளக்கினது அற்றத்தையே பார்த்திருக்கிறது. மாசூர்ந்த விளக்குகள் மாய்ந்து கெடுவதும் ஒரு சில இடங்களில் உண்டு.

மக்களால் அஞ்சப்படும் பொருள்களுள் தீயும் ஒன்று. எரி சிறிதாயினும் அதன் முன் மலைபோல் நிற்கும் வைத்தூறும் எரிந்து மாய்ந்து போய்விடுகிறது. சில கொடியோர் தீத்திரள் கொண்டு மக்கட்குத் தீங்கும் செய்கின்றனர். எரியால் சுடப்பட்டோர்க்கு உய்தி அரிது. அதனால் உண்டாகும் புண் எளிதில் ஆறாது. குளிர்

Digitized By Roja Muthiah Research Library

மிகுதியால் வருந்துவோர் அகலாது அணுகாது தீக்காய்கின்றனர்; அந்நிலையில் உறங்குதலும் உண்டு. நீரிடைத் துயில்வது உண்டெனினும் நெருப்பிடைத் துயில்வது ஒரு காலும் இல்லை. தீண்டிற் சுடுவதும் தீண்டாது சேட்பட்ட வழிச்சுடாமையும் தீக்கியல்பு.

உடம்போடு கூடி உயிர் நெடிது வாழ்தற்கு அளவறிந்துண்ணும் உணவு வேண்டப்படுகிறது. மேன்மேலும் உண்பதிலும் உண்டது அறல் இனிது, என்ற கருத்து எங்கும் நிலவுகிறது. உணவுப் பொருள்களுள் பாலும் ஒன்று. பாலிற்குச் சுவையூட்டத் தேன் கலக்கப்படுகிறது. பால் அரிய பொருளாதலின், அதனைத் தூய கலத்தில் பெய்து வைக்கின்றனர். கலம் தீதுறின் பால் கெட்டுவிடுகிறது. உணவுக்குச் சுவை கூட்டுவது உப்பு. அது மிகினும் குறையினும் உணவு சுவை குன்றும். மிக்க எளியோர்க்கு உப்புக் கலந்த காடி நீர் உணவாகிறது.

மக்களிற் சிலர் கள்ளுண்டலும் சூதாடலும் செய்கின்றன ரென்றாலும் சான்றோர் அவர் செய்கையை மறுத்து விலக்குகின்றனர். கள்ளுண்டோர் களிப்பு மிகுந்து அறிவு சோர்ந்து விடுகின்றனர்; அவர்களை அந்நிலையில் பார்த்தற்கு ஈன்றதாயும் வெறுக்கின்றாள். சூதாடுவோன் அதனால் தன் கைப்பொருளை இழந்தாலும் அச் சூதினையே காதலிக்கின்றான். அவனைப் போலக் கள்ளுண்போனும் அதனால் தன் அறிவு சோர்ந்து கெடினும் மேன்மேலும் அதனையே காதலித்துக் குடிக்கின்றான்.

மக்களிடத்து நோயும் மருத்துவமும் நிலவுகின்றன. வளி, பித்து, ஐ என்ற மூன்றும் மிகினும் குறையினும்

Digitized By Roja Muthiah Research Library

மக்கட்கு நோய் உண்டாகிறது. மருந்துகளெல்லாம் நோய்க்கு மாறுகவே இருக்கின்றன. மருத்துவர்கள், நோய் வகையும் அதற்குக் காரணமும், அதனைப் போக்குதற்குரிய முறையும் மருந்தும் கண்டு மருத்துவம் செய்கின்றனர். மருத்துவச் சாலைகளில் மருத்துவரும் மருந்து செய்பவரும் உள்ளனர்; உயரிய மருந்து வகைகளும் அங்கே இருக்கின்றன.

ஊர்களில் ஊருணிகள் காணப்படுகின்றன. மணற்பாங்கான இடங்களில் ஊற்றுக்கள் உண்டு; அவை தொட்ட அனைத்தேயன்றி, இறைக்குந் தோறும் நீர் மிக்கு ஊறுகின்றன. பொதுவகையில் நீர் ஒருமைத்தாயினும் காணப்படும் நிலத்துக் கேற்ப நிறமும் சுவையும் திரிந்து வேற்றுமைப் படுகிறது. குளங்களெல்லாம் வலிய கரை கொண்டு நீர்தாங்கி நிற்கின்றன. கரை வலியில்லாதவை நீரை இழந்து விடுகின்றன. மக்கள் நீருட் குளித்தலும் நீராடி உடற் புறத்தைத் தூய்மை செய்து கொள்ளலும் இயல்பாக வுளது. நீர் நிலைகளைச் சார நிழல் தரும் இனிய மரங்கள் உள்ளன. நீருண்டு தாகம் தணிந்தார் இனிதிருந்து களைப்பார இந் நிழன் மரங்கள் நீர் நிலைகளைச்சார இருப்பது மக்களின் நேரிய நாகரிகத்தைப் புலப்படுத்துகிறது. மரவகைகளுள் பயன் மரங்கள் உள்ளூரிற் பழுத்திருப்பதும், மருந்தாய்ப் பயன் படுவன நன்கு போற்றப் படுவதும் மக்களது பண்பாட்டை எடுத்துரைக்கின்றன. முள் மரங்கள் இளமையிலேயே களையப் படுகின்றன.

மக்கள் வாழும் இடங்களில் யானை, குதிரை, எருது, மான், தகர் முதலிய விலங்குகள் வளர்கின்றன. காடுகளில் யானைகளேயன்றிப் புலி முதலியவிலங்குகள் வாழ்

Digitized By Roja Muthiah Research Library

கின்றன. களர் நிலப் பகுதிகளில் நரிகளைக் காணுகின்றோம். நீர் நிலைகளில் முதலைகள் வாழ்கின்றன. மக்களுறையும் இடங்களில் யானைகள் மிக்கிருக்கின்றன. அவை காட்டில் வாழ்பவையாயினும் இந்நாட்டவர் அவற்றைப் பழகிய யானைகளைக் கொண்டு யாத்துக் கொள்கின்றனர். போர்க்களத்தில் போர் செய்யும் யானை பகைவர் எறிந்த அம்பு பட்டு வருந்தினும் சலிப்படையாது வெற்றியை நிலைநாட்டுவதில் வீறு கொண்டு விளங்குகிறது. பருத்தவுடலும் கூரிய மருப்பும் உடையதெனினும் புலியினது தாக்குதலுக்குத்தான் அது பெரிதும் அஞ்சுகிறது. யானையை நோக்க நரி மிகச் சிறிதே; ஆயினும், காலமும் களர் நிலத்தே வந்துவிடின் அந்த யானையையும் சிறு நரி ஒன்றே கொன்றுவிடுகிறது. போர் மறவர்களும் பகைவரது யானைப்படையை எறிந்து அழிப்பதைத்தான் பெருமையெனக் கருதுகின்றனர். யானையோடு பொருதற்கு வேற்படையே சிறந்தது. "கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என்றே கருதுகின்றனர். குதிரைகளும் போர்த் துறையில் பயிற்றப் படுகின்றன. அத்துறை கல்லாத குதிரை அமர்க்களத்தில் தீங்கு செய்துவிடுகிறது.

திருவள்ளுவரது நாட்டில் செல்வர்கள் சிவிகையூர்ந்தும் குதிரைபூட்டிய தேரேறியும் செல்லுகின்றனர். ஆங்காங்கு விளையாட்டுகள் பல நடைபெறுகின்றன. குன்றொத்த யானைகளைக் கொணர்ந்து அவற்றைத் தம்மில் ஒன்றோடொன்று போர் செய்ய விட்டுக் கண்டு இன்புறுகின்றனர். யானைப் போர் காண்போர் குன்றுகளின் மேலே இருந்து கொண்டு காணுகின்றனர். இளஞ்சிறுவர்

கள் அரங்கிழைத்து வட்டாடுகின்றனர். ஒருவர் நீர்க்குள் மூழ்கி மறைவதும் மற்றொருவர் அவரைத் தேடிப் பிடிப்பதுமாகிய ஒரே விளையாட்டு நீர்த் துறைகளில் காணப்படுகிறது. ஆடுகளைக் கொண்டு வந்து போர் செய்யவிடுவதும் இன்ப விளையாட்டாக வுளது. இதுதான் வெற்றி யெனத் தொல்காப்பியரால் குறிக்கப் படுகிறது.

திருவள்ளுவர் காட்டும் தமிழகத்தில் மகளிர் ஒரு மனப் பெண்டிர், இருமனப் பெண்டிர் என இரு திறத்தர் காணப்படுகின்றனர். ஒரு மன மகளிர் ஒருமை மகளிர் எனவும் கூறப்படுவர். இவர்கள் கற்பால் சிறப்புற்று மழை வளம் தரும் மாண்புடையராய் விளங்குகின்றனர். தெய்வம் தொழுவதிலும் தம் கொழுநனைத் தொழுவதுதான் சிறந்த அறமாக இம் மகளிர் கருதியொழுகுகின்றார். இவர்கள் மழை பெய்க என நினைப்பராயின் மழையும் பொய் படாது பெய்யும் என்பது அக்காலக் கொள்கை. தன்னையல்லாது பிறள் ஒருத்தியையும் நினையாத மனம் உடைய கணவனைப் பெறின், அதுவே ஒரு மகளிர்க்குச் சிறந்த பேருக விளங்குகிறது. அப்பேறு பெற்றோர், தேவர்கள் உறையும் இன்ப உலகை மறுமையில் நன்கு பெறுவர் என்பது அக்காலச் சான்றோர் கொள்கை. அதனல், அம்மகளிர் தம் கணவன் நெஞ்சு புறத்தே சென்று படராத வகையில் அவற்குரிய பணிகளை அவன் நெஞ்சு பிணிப்புண்ணுமாறு செய்தொழுகுகின்றனர். "எள்ளின் இளிவாம் என்று எண்ணி அவர் திறம் உள்ளும் உயிர்க் காதல் நெஞ்சு" என ஒருத்தி கூறுவதைக் காணலாம். மிக்க நலமுடையளாயினும் ஒருத்தி

மணமாகாதிருத்தல் கூடாது என்பது அக்காலக் கொள்கை. மணமாகா முன் ஒருத்தி இறந்து விடின், ஒருவனுக்கு மிக்க பொருளைத் தந்தேனும் அவள் பிணத்தைத் தழுவச் செய்கின்றனர். இவ்வழக்கு இக் காலத்தும் மலையாள நாட்டில் "ஆலிங்கன தானம்" என்ற பெயரால் நடைபெறுகிறது என்று கே. பி. பி. மேனன் என்பார் * கூறுகின்றார்.

இளமகளிர் கையில் வளையும் தொடியும் அணி கின்றனர். எழுதுகோல் கொண்டு கண்களில் மை தீட்டிக் கொள்வதும் பெருவழக்கு. காதலன் பிரிந்த வழி அவன் திரும்பி வரக் குறித்த நாட்களைச் சுவரில் புள்ளியிட்டு வைப்பது அவர் செய்கைகளுள் ஒன்று. ஒருவர் தம்மை நினைப்பாராயின், தமக்குத் தும்மல் வரும் என்பதும் மகளிர் கருதிய கருத்து வகையாகும். "நினைப்பவர் போன்று நினையார் கொல் தும்மல், சினைப்பது போன்று கெடும்" என ஒருத்தி உரைக்கின்றாள். விருந்தோம்புவதில் இம் மகளிரது வேட்கை மிக்கிருக்கின்றது.

மனைவாழ்வில் மாண்புறும் மகளிர் மனைத்தக்க மாண்பும் கணவன் வளத்துக்குத் தக்க செலவும் மேற் கொண்டு, தம் குடிக்குப் புகழ் உண்டாவதையே பெரும் பொருளாகக் கருதுகின்றனர். இவ்வாறு கொண்ட கொழுநனது குடிச்சிறப்பையே பெரிதும் பேணி அவன் கருதுவதையே தன் கருத்தாகக் கொண்டு ஒழுகுவதால் இவர்கள் கணவனுக்கு வாழ்க்கைத் துணையென்று பாராட்டப் பெறுகின்ற னர். மக்களைப் பெற்றுத் தாய்மை நிலை எய்தும்

* K. P. P. Menon's History of Kerala. vol. i. p. 526.

Digitized By Roja Muthiah Research Library

போது இவரது எண்ணம் தம் வயிற்றிற் பிறக்கும் மகன், தம்மினும் மிக்க அறிவுடையனாதல் வேண்டுமென விழைகின்றனர். மகன் பேரறிவுடையனாவது தமக்கேயன்றி நிலவுலகில் வாழும் ஏனை எல்லா வுயிர்க்கும் இன்பமாம் என்பது அவரது கருத்து. அறிவுடையோரையும் ஆண்மை மிக்கோரையும் தமிழ் மக்கள் சான்றோர் என்ற உயர் சொல்லால் வழங்குவர். இத்தாயரும் தம் வயிற்றிற் பிறந்த மகன் சான்றோன் என்று நன் மக்களால் பாராட்டப்படும் தகுதி பெற்றுத் திகழும் போது பேரின்பம் எய்துகின்றனர். பெற்ற தாய் பசித்து வருந்தக் காண்பது அவள் பெற்ற மகனுக்கு அறமன்று எனத் தமிழகம் அன்றும் இன்றும் கருதும் இயல்பிற்று. தன் மகன் கள்ளுண்டு களித்து அறிவு பிறழ்ந்து நிற்கும் போதும், கல்லாது மூத்துக் கடைப்படும் போதும் அத்தாயினது மனம் பெருந் துன்பம் எய்துகின்றது.

இருமனப் பெண்டிர் என்பார் பொருள் கருதி வாழும் பொய்ப் பெண்டிராவர். ஆடல், பாடல், அழகு என்ற இவற்றால் செல்வமக்கள் உள்ளத்தைப் பிணித்து அவர்கட்குத் தமது பெண்மை நலத்தைத் தந்து பொருள் பெற்று வாழ்பவராவர். தம்மைக் கூடும் ஆடவர் கூட்டத்தினும் அவர் தரும் பொருளிலேயே நாட்டமும் செயலும் நிற்பது பற்றி அவர் இருமனப் பெண்டிர் எனப்பட்டனர். பிற ஆடவர் கண்களைக் கவர்வதற்குத் தமது மேனி நலமும் அணியும் அணிகலமுமே கருவியாதலின், இந்த இருமனப் பெண்டிர் தங்களை அணி செய்து கொள்வதிலும் உடலைச் செம்மையுறப் பேணிக் கொள்வதிலும் சிறப்புற்றிருக்கின்றனர். ஆடவருள் பிறர்மனை நயக்

Digitized By Roja Muthiah Research Library

கும் பேதையர் இருப்பது போல மகளிரிடையே இவர்கள் இருக்கின்றனர். இப்பொருட் பெண்டிர் வலைக்குட்பட்டுக் கெடும் ஆடவர் தமது பொருளை யிழந்து கெடுவது போலவே கள்ளுண் போரும் சூதாடுவோரும் தமது பொருளை யிழந்து கெடுவது கண்டே திருவள்ளுவர், "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு" என்று வற்புறுத்துகின்றார். ஆண்மையுடைய ஆடவரைத் தம்முடைய சொற் செயல்களால் மயக்கி அவரது பொருளையே வரைந்து கவர்வது பற்றி, இம்மகளிர் பொருட் பெண்டிர் என்றும் மாயமகளிர் என்றும் திருக்குறளாசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

அறிவு, ஆண்மை, பொருள், படை முதலிய ஆற்றலைக் கொண்டு ஒருவன் ஒரு செயலை நன்கு எண்ணித் துணிந்து செய்யின், அச்செயல் எண்ணியவாறு முடிந்து பயன் விளைவிப்பது பெரும்பான்மையும் உண்டு. சிறு பான்மை அது கருதிய பயனை நல்காது வேறு பட்டுப் போவதும் முண்டு. ஒரு செயல் இனிது முடிதற்குரிய உறுப்புக்களான இடம், காலம், கருவி, செயல் முதலிய எல்லாம் ஒருங்கே தொழிற் பட்டவிடத்தும் செயலின் பயன் வேறாய் விடுதற்குரிய காரணம் யாது என ஆராய்ந்த பண்டைத் தமிழகம் அக்காரணம் ஊழ் வினை யென்று முடிவு செய்து வழங்கி வந்தது. ஊக்கம், உழைப்பு, உறுதி அறிவு முதலிய நலங்களெல்லாம் நன்குடையனுயினும் ஒருவனுக்கு ஊழ் துணையாகாதபோது அவற்கு மடிமை தானகவே வந்து அவ்வினையை வேறுபடுத்தும் என்றும் அது துணையாகும் போது மடியான் மாசுற்றவனும்

Digitized By Roja Muthiah Research Library

சிறு முயற்சியால் பெரும் பயன் விளைவித்துக் கொள்வன் என்றும் அறிஞர் கண்டு, நல்லூழ் இல்லாத விடத்து "நல்லவையெல்லாம் தீயவாம்"; நுண்ணிய நூல்பல கற்பினும், அக்கல்வியறிவு கை கொடாது; ஊழைக் கடத்தற்கு எத்துணை முயற்சி செய்யினும் அஃது அம்முயற்சி யெல்லாம் கடந்து தாக்கி விடும்; அதனினும் பெருவலியுடையது பிறி தில்லை எனச் சிலர் அறிவு மழுங்குதலும் உண்டு. முயற்சியின் பெருமையும் விளைவும் கை கண்ட சான்றோர், ஊழின் திறம் இவ்வாறு இருப்பினும் விடா முயற்சி யென்ற ஒரு கருவியால் இவ்வூழினை வென்று விடலாம் என்று கண்டனர். "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்று இவ்வூழினை வென்று உயர்தற்குரிய ஒள்ளிய முறையையும் இனிது எடுத்துரைத்துள்ளனர்.

இவ்வண்ணம், தாம் வாழ்ந்த காலத் தமிழகத்தை நமது திருவள்ளுவர் திருக்குறள் வாயிலாக இன்றும் நாம் அறிந்தொழுகச் செய்தது எதிர் காலத்தில் நாம் இதனைச் செவ்விய முறையில் வைத்து வாழ்ந்து இன்புற வேண்டியேயெனக் கொள்ளல் வேண்டும். மேலும் அவர் காலத்துப் பொது வாழ்வில் வண்டிகள் மயிற் பீலிகளை ஏற்றிச் செல்வதும், மக்கள் தனி வாழ்வில் அவரவர் வாழ்க்கைத் துணைகளை அவரவர்களே தேர்ந்து கொண்டு வாழ்வதும் பிறவுமே நடைபெறுதலின், மயிற் பீலிகள் மேலைக்கடற் கரையினின்று மேலை யவன நாடுகட்குச் சென்ற காலம் திருவள்ளுவர் காலம் என்றும், அக்காலம் சங்க காலத்துக்கும் முற்பட்டதென்றும், எனவே, **திருவள்ளுவர் கண்ட தமிழகம் ஏறக்குறைய 2500 ஆண்டுகட்கு முற்பட்டதொரு பழங்காலம்** என்றும் தெளிய வேண்டியவர்களாகின்றோம்.

Digitized By Roja Muthiah Research Library

# பெரியாரும் சிறியாரும்

(டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.,

தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

திருவள்ளுவர் கருத்தின்படி பெரியாரும் சிறியாரும் யாவர் யாவர் என்பதையும், அவர்தம் இயல்புஞ் செயலும் இன்னின்ன என்பதையும் அறிந்துகொள்ள முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

செய்தற்கு அருமையான செயல்களைச் செய்தலும், பொறையுடையராய் இருத்தலும், தருக்கில்லாமல் வாழ்தலும், பிறருடைய குற்றங்களைக் கூறுமல் தவிர்த்தலும் பெரியாரின் பெற்றி எனக் கூறப்படும். முயற்சி பெரிதில்லாத மக்களாற் செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்வார் பெரியார் எனவும், அச் செயல்களைச் செய்ய இயலாதவர் சிறியர் எனவும் திருவள்ளுவர் கூறினர்.

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற திருக்குறளைக் காண்க.

உண்ணு நோன்புடன் வாழ்ந்து தவம் இயற்றுகின்றுரைவிடப் பிறர் கூறுகின்ற கடுஞ் சொற்களைப் பொறுக்கின்றவர்கள் பெரியவர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து. தவம் இயற்றுகின்றவரோ வெயிலையும் குளிரையும் பனியையும் பிற இன்னுமைகளையும் பொறுப்போம் என உறுதி செய்துகொண்டு முயலுபவர்கள். ஆனல், இல்லறத்தில் வாழ்கின்ற ஒருவனே

Digitized By Roja Muthiah Research Library

தானென்றும் தனதென்றும் கருதிப் பற்றுள்ளம் செய்கிறவன். பிறர் கடுஞ்சொல் சொன்னால் அவன் வெகுளும் இயல்பினன். அவன் வெகுளாமற் பொறுத்திருந்தால் பாராட்டுதற்கு உரியவன். அதனால் அன்றே திருவள்ளுவர்

"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரிற் பின்"

என்றார்?

உண்மையாகப் பெரியர் எனப்படுவோர் அவர் அமர்ந்திருக்கும் இடத்தை வைத்து மதிப்பிடப்படார்; அவர் செய்யும் செயலைப் பொறுத்தும் அவர் உள்ளத்தின் உரத்தைப் பொறுத்தும் மதிப்பிடப்படுவர். அவ்வாறே சிறியவர்களும் மேலிடங்களில் உட்கார்ந்திருந்தார் ஆயினும், அதுகாரணமாக உயர்ந்தவர் எனக் கருதப்படமாட்டார். பழிக்கத்தக்க இழி செயலைச் செய்கின்ற ஒருவன் இழிந்தவன் என்றும், பிறரால் பாராட்டத்தக்க நற்செயலைச் செய்கின்ற ஒருத்தன் உயர்ந்தவன் என்றும் சொல்லப் படுவர். இழி செயலைச் செய்துவிட்டும் ஒரு நிவந்த ஆசனத்துள் ஒருவன் அமர்ந்திருப்பின், அவனை மேலோன் என நல்லோர் மதிக்க மாட்டார்கள். பிறரால் செய்வதற்கு அரிய உயரிய நல்ல செயலைச் செய்த ஒருவன் தாழ்ந்த இடத்துள் உள்ளான் எனினும், அவனை உயர்ந்தோன் எனவே நன்மக்கள் மதிப்பார்கள். இக் கருத்துக்கள்

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமை யான்"



ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

என்ற குறட் பாக்களில் அடங்கிக் கிடக்கக் காண்கின்றோம்.

குணங்களாலும் பிற சிறப்புக்களாலும் பெரியவராய் உள்ளவர்கள் செருக்கின்றிப் பணிவுடையராய் இருப்பார்கள். குணங்கள் நிரம்ப இல்லாத சிறியரோ செருக்கித் தருககித் தம்மையே வியந்து தமக்கே பெருமையை ஏற்றுக்கொள்வர். இக் காரணங்களால்,

"பணியுமாம் என்றும் பெருமை—சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" என்றும்,

"பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்"

என்றும் செந்நாப்போதார் செப்பினர்.

பெரியாருடைய இயல்புகளில் இன்னொன்று ஏனையோருடைய குணங்களைச் சொல்லிவிட்டுக் குற்றங்களை மறைப்பார் என்பது. ஆனால், சிறியவரோ பிறர் குற்றங்களையே சொல்லி மகிழ்ந்து குணங்களை எடுத்துச் சொல்லாமல் மறைத்துவிடுவார். இதனை விளக்க

"அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமை தான்
குற்றமே கூறி விடும்"

என்ற திருக்குறள் எழுந்தது.

கற்றுத் தேர்ந்த பெரியவர்களும், அறிவு நிரம்பிய பெரியவர்களும் ஞானம் முற்றிய பெரியோர்களும் தம்மைக் காட்டிலும் பெரியராய் உள்ளார் தொடர்பினை விரும்பிப் பெற முயல்வார்கள். சிறியவரோ தம்மினும் மிக்காரிலை எனக் கருதித் தம்மையே வியந்துகொண்டு பிறரையும் வியப்பிக்க முயலுவர். அதனல்,

Digitized By Roja Muthiah Research Library

"சிறியார் உணர்ச்சியுள் இல்லை; பெரியாரைப்
பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு"

என்பது கூறப்பட்டது. ஒருவன் தன்னைவிடப் பெரியவர்கள் தனக்கு உறுதுணையாக வாய்க்கும்படி நடந்துகொள்வானாஞல், அவன் பெறும் நலங்கள் பல. அறிவினாலும் ஒழுக்கத்தினாலும் உயர்ந்தவர்களைத் தனக்குத் துணையாகப் பெற்று வாழ்கின்ற ஒருவனைப் பகைவர்கள் அழித்துவிடுதல் இயலாது. இவைபோன்ற கருத்துக்கள் "பெரியாரைத் துணைக் கோடல்" என்னும் அதிகாரத்துள் உரைக்கப் பட்டுள்ளன.

ஒருவன் உயர்ந்தவனாவது அவனுடைய மன நலத்தினால் ஆகும். "மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்." ஒருவன் மனத்திலே மாசற்றவனாய் ஒழுகுவானாயின் அறத்தினால் உயர்ந்தவனாய் மதிக்கப்படுவான். ஒருவனுக்கு மன நலத்தினால் மறுமைகூட நல்லதாய் அமையும். ஆயினும், அந்த மனநலம் ஒரோவொரு வேளையில் வேறுபடுமாயின், அதனைத் தக்க வழியில் நிறுத்துதற்குப் பெரியோர் தொடர்பு பயன்படும். அதனால்தான்,

"மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து"

எனத் திருவள்ளுவர் சொல்லினர்.

எனவே, இக் கட்டுரையுள் பெரியார் சிறியார் இன்னார் இன்னார் என்பதும், அவருடைய இயல்புகள் இன்ன இன்ன என்பதும், சிறியார் பெரியாருடைய தொடர்பினைப் பேணிக்கொள்தற்கு உரிய காரணங்கள் இன்ன என்பதும் ஒருவாறு உரைக்கப்பட்டன.

Digitized By Roja Muthiah Research Library

# மானம்

**டாக்டர். ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.**

'மானம்' என்பது மக்கள் தன்மதிப்பு, அதாவது சுயமரியாதை. என்றும் தன்மதிப்புக் குன்றாது பேணும் இயல்பு அல்லது பண்பு. மானம் அல்லது தன் மதிப்புக் குறைய மக்கள் வாழப் பொறார். "மானம் அழிய உயிர் காவலா?"—என்பது தமிழில் என்றும் எங்கும் வழங்கும் பழமொழி.

"இன்றி யமையாச் சிறப்பின வாயினும் (மானம்)—குன்ற வருப விடல்."—என்பது பொய்யில் புலவராம் வள்ளுவர் பொருளுரை. உயிரினங்களில் உயர்ந்தது மக்கட்பிறவி. உயிர் வகுப்புக்களில் மக்கள் மட்டுமே தம் பெருமை பேணுவர்: அதனழிவு நாணுவர். ஊன்றி நோக்கில், தன் மதிப்புக் குறைவு நாணும் மானமே மக்கட் பண்பு; உணர்வும் அறிவும் உயிர்களுக் கெல்லாம் ஏறக்குறையப் பொது உடைமை: தன்மதிப்பாம் மானம் ஒன்றே மக்களின் சிறப்பியல்பு. தன் மதிப்பில்லாத உயிர் வாழ்க்கை மற்ற விலங்குகளின் வாழ்வினின்றும் வேறுபடாது. உண்ணலும், உறங்கலும்—எண்ணலும், இயங்கலும் எல்லா உயிர்களுக்கும் உண்டு. தன் மதிப்பு அல்லது மானம் குன்றாது காத்தல்; அது குறையில் வாழாதுயிர் நீத்தல்,எனும் இயல்பு ஒன்றே மக்கள்தம் சிறப்பியல்பு.

"ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு."

தன் தகைமை தணியாமல் போற்றும் மானம், மனிதா தற்பெருமை அன்று. வீண் பெருமை பழிக்கிடமாம்.

Digitized By Roja Muthiah Research Library

இறுமாப்பு:பொறுக்காது யாராலும் வெறுக்கப்படுவது. சிறந்த மக்கட்பண்பாம் தன்மதிப்பு அல்லது மானம் எல்லார்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் சால்பாகும். மதிப்புக் குறைவை நாணுவதே சான்றோர் இயல்பாதலால், பழி நாணுவதே மானம் என்பாரும் உளர். நாணம் இலாதவரை மானமிலாதவர் என்பது வழக்கன்றோ? இச் சீரிய சால்பாம் நாணுடைமை மாந்தர் சிறப்பியல்பாதலால், பழி நாணாக் கயவர் மக்கள் என மதிக்கப்படார்.

மாந்தரிடை பிற சால்புகள் குறையின், அவ்வவற்றால் ஒவ்வொரு கேடே நேரும். பழிநாணா மானக்கேடு எல்லாமும் கொல்லும். நாணிழந்து வாழாமை 'மானம்' ஆதலால், அது மாந்தர் சிறப்பியல்பு எனப்படுகிறது.

மானம், பொதுவாக மனிதசுபாவம்; பால் பெற்றி பற்றியதன்று. வீரம் ஆண்மைக்குணம். ஈரம் பெண்மைப் பண்பு. ஆணோ? பெண்ணோ? மனிதராய்ப் பிறந்தார் அனைவருக்கும் மானம் இன்றியமையாச் சிறப்பியல்பு. மானம் மக்கட் பண்பென்பது தமிழர் கொள்கை. அதனுல் தமிழில் "மானி" என்ற தனித் தமிழ்ச் சொல், பாலுருபு ஏலாது அவன் மானி, அவள் மானி, எனப் பாலுருபு கொள்ளாமல் வாளாவரக் காண்கிறோம். இவ்வாறு சிறந்த இந்த மக்கள் பொதுப் பண்பல்லாத பிறமனித இயல்புகள் குறிக்கும் எல்லாச் சொல்லும் பாலுருபேற்றே வரும். நல்லன்-நல்லள், உடையன்-உடையள், சிவப்பன்-சிவப்பி என்று வேற்றுமை தோற்றப் பாலுரு பேற்றே வரக்காண்பாம்.

'மானம்' தன் மதிப்பன்றி, செருக்கன்று. செருக்கு இறுமாப்பு; செம்மாக்கும் கீழோரின் கயமைக் குணம்

Digitized By Roja Muthiah Research Library

அறனிழுக்காத் தன்மதிப்புக்கு 'மானம்' எனத் தமிழ்ப் பெயருண்மை ஒன்றே, தமிழருக்குத் தொன்று தொட்டு இப் பெருந்தக வுண்மைக்குச் சான்றாகும். மானம் எனும் பெருந்தகவு பீடழிய வந்தவிடத்து மக்கள் உயிர் நீப்பர்.

1. "மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

2. "நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப் பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்."

அரசன் முதல் ஆண்டிவரை தமிழர் மானமிழந்து உயிர் வாழப் பொறார். அரசி சிலம்பை அபகரித்த தட்டான், தன் மனைவி காற் சிலம்பை விற்கவந்த கோவலனைப் பாண்டிமா தேவி சிலம்பைத் திருடி விற்கக் கொணர்ந்தான் எனக் குற்றம் சாட்டக் கேட்ட பாண்டியன் உண்மை விசாரியாமல் கோவலனைக் கொல் வித்து, பிறகு உண்மை விளங்கவும், மானம் பொறாமல் தன் உயிர் துறந்த செய்தி தமிழ்ப் பழங்காப்பியமான சிலப்பதிகாரத்தால் தெரிகிறோம். இன்றும் தமிழகத்தில் நிகழும் பல தற்கொலைகள் ஏழைகளும் மானம் இழந் துயிர் வாழா மக்கட் பண்புடைமைக்குச் சான்றாகும்.

மானம் தமிழர் தனிச் சிறப்பு. பிறமொழிகளில் அதற்குச் சரியான பெயர் காண்பதரிது. ஆங்கில "ஆனர்" (**Honour**) கூட சிறிது வேறுபடும் பொரு ளுடைய தாதலை உற்று நோக்குவோர் உணர்வார்.

"மானமழிந்து பின் வாழாமை முன் இனிது" என்பது தமிழ் முது மொழி.

---

Digitized By Roja Muthiah Research Library

# திருக்குறளும் சங்க நூல்களும்

பேராசிரியர். க. அன்பழகன் எம். ஏ.

திருவள்ளுவப் பெருந்தகையார் வாழ்ந்திருந்த காலம், தமிழ் மக்கள் வரலாற்றில் 'பொற் காலம்' எனப் போற்றத் தகும் 'சங்க காலம்' என்பது, பொது வாகத் தமிழ் அறிஞர் பலராலும் ஒப்புக்கொள்ளப் படுவதாகும். சங்க காலம் என்பது, தமிழ்ப் பாக்களை யும் ஏடுகளையும் ஆராய்ந்த நுண்மாண் நுழைபுல முடைய புலவர்கள் கூடியிருந்த, தலை, இடை, கடைச் சங்கங்களுள், கடைச் சங்க காலத்தையே குறிப்பதாகும். அச் சங்கங்கள் தோன்றி நிலைத்திருந்த கால முறையினு லேயே அவை, தலை, இடை, கடை என்னும் பெயர் பெறலாயின. அவற்றுள், இக் கால ஆராய்ச்சிக்குக் கிடைப்பனவாக உள்ள நூல்களில் பெரும்பான்மை யானவை, கடைச் சங்க காலத்தில் தோன்றியனவே யாம். கிருத்து பிறப்பதற்கு முன்பாக இரண்டு மூன்று நூற்றாண்டுகளும், பின்பாக ஓரிரு நூற்றாண்டு களுமே (கி. மு. 300 முதல்—கி. பி. 100 முடிய) கடைச் சங்க காலம் என்று கருதுகின்றனர் ஆராய்ச்சியாளர்.

அந்தக் காலத்தில்தான், ஓரிரு நூற்றாண்டு முன் பின்னாக, சங்க நூல்களும், திருக்குறளும் இயற்றப் பட்டனவாகும். சங்க காலத் தமிழ் இலக்கண நூலாகிய, புலவர்கள் புகழும் தொல்காப்பியம், திருக்குறளினும் பன்னூறாண்டுகள் பழமை யுடையதாகும். அதனைத் தழுவியே திருக்குறள் எழுந்தது என்பதற்குச் சான்று கள் பலவாம்.

Digitized By Roja Muthiah Research Library

சங்க காலப் புலவர்களான இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனர் ஆகியோர் இயற்றிய இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு பெரு இலக்கியங்களிலும், திருக்குறள் போற்றப் பட்டிருத்தலையும், அதன் அடிகளையும் கருத்துக்களை யும் தழுவி எடுத்தாளப்பட் டிருத்தலையும் காணலாம். சங்க இலக்கியம் எனச் சிறப்பாகக் குறிக்கப்படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள், வெவ் வேறு காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்களின் தனிப் பாக்களை வகைப்படுத்தியும் முறைப்படுத்தியும் தொகுக்கப் பட்டவையே யாகும். எனவே அப் புலவர் கள் அனைவரும் வள்ளுவருக்கு முன் வாழ்ந்தார் என்றே, பின் பிறந்தார் என்றே அறுதியிட்டுக் கூறுதற்கில்லை. ஆனல், அவருள் பலர், திருகுறளில் திளைத்திருப்பதை மட்டும் அறிய முடிகின்றது.

வடவரின் உயர்வையே நோக்கமாகக் கொண்டு, வள்ளுவரின் காலத்தை ஆராயப் புகுவார் பலர், அவரது காலம், கி. பி. நான்கு, ஐந்து, ஆரும் நூற் ருண்டுகள் எனத் தாம் விரும்பியவாறு கூறி வருவ தைத் தெளிவாக மறுத்துரைப்பதற்கும் சங்க நூல் களே சான்ருக உள்ளன.

மணிமேகலை இயற்றிய சீத்தலைச் சாத்தனரும், சிலப்பதிகாரம் வழங்கிய இளங்கோ அடிகளாரும் சங்க காலத்தவர் அல்லர் என்று சாற்ற முனைவாரும், திருக்குறளைப் போற்றும் வேறு சங்கப் புலவர்களின் முழக்கத்தைக் கேட்பின்—வாய் புதைப்பரன்றே! ஆம், தமிழ் செய்த நன்றியைக் கொன்ருரின் உரைகட்கு—

Digitized By Roja Muthiah Research Library

நன்றி மறவா நன்னெஞ்சினோராகிய சங்கப புலவரின் கூற்று—கூற்றுதலைக் காணலாம்.

அறம் உரைத்த அண்ணல், 'செய்ந்நன்றி யறிதலி'ன் சிறப்பினை உணர்த்துமிடத்து, அதை மறத்தலினால் ஆகும் தீமையினை,

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" — என்று அறிவுறுத்தியுள்ளார். அதனையே, ஆலத்தூர் கிழார் என்னும் சங்கப் புலவர், குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்ற பேரரசனுக்குத் தம் நன்றியைப் புலப்படுத்து மிடத்து, அந்த நன்றி மறத்தலால் விளையும் தீமையைத் திருக்குறள் எவ்வாறு கூறியுள்ளதென எடுத்துக் காட்டுகிறார்.

"நிலம் புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்திகொன் றோர்க் குய்தி யில்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ!"—

இவையே அவ்வடிகள். ஊழிக் காலமாகிய, நிலம் மேல் கீழாகப் புரளும் காலமாயினும், குரவர் தப்புதல் முதலிய கொடுமைகள் செய்தோர்க்கும் அவற்றைப் போக்கிக்கொள்ளும் கழுவாய்கள் உள வேனும், ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு எவ்விதத்தும் கழுவாய் இல்லையென அறநூல் கூறிற்று என்பதுகருத்தாம்.

"ஒருவன் செய்திகொன்றோர்க்கு உய்தி இல்"

என்னு மிடத்து,

"உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறளடியொடு கருத்தொன்றி வரைந்திருப்பதோடு கூட, 'அறம் பாடிற்று' என்பதன் மூலம்,

Digitized By Roja Muthiah Research Library

திருக்குறள் அறிவிக்கிறது என்று குறிப்பிட்டிருத்தலை யும் எண்ணுக. திருக்குறள், சங்ககாலத்திலேயே 'அறம்' எனப் போற்றி ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்குமானால் மற்றும் பல புலவர்கள் திருக்குறளில் வழங்கிய கருத் துக்களையும், அடிகளையும், சொற்களையும் எடுத்தாண்டு கொண்டிருப்பதில் வியப்பென்னே!

பாண்டியன் அறிவுடை நம்பி இயற்றிய புறப் பாட்டு ஒன்றில், வள்ளுவர் "மக்கட் பேறு" என்னுந் தலைப்பில் கூறியுள்ள குறள் பாக்களின் கருத்துக்கள் பலவும் காணப்படுகின்றன.

அப்புறப் பாட்டு,

1. "படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும்
2. உடைப் பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
3. குறு குறு நடந்து சிறுகை நீட்டி
4. இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
5. நெய்யுடை யடிசில் மெய் பட விதிர்த்தும்
6. மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
7. பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே"

அதன், 3, 4, 5, வரிகளின் கருத்துக்களை,

"மக்கள் மெய் தீண்டல் உடற் கின்பம்—மற்றவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு,"

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"—

என்னும் இரு குறளிலும் காணலாம்.

மற்றும், 6, 7, வரிகளின் கருத்தானது,

"பெறு மவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"—

Digitized By Roja Muthiah Research Library

என்னும் இக்குறளில் அழகுபட அமைந்திருப்பதை அறியலாம்.

பொன்முடியார் என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார் பாடிய ஒரு புறப்பாட்டின்கண் வரும் ஓரடி திருக்குறளைத் தழுவியுள்ளது. அப் பாட்டில் (புறம்—312)

"சான்றே னாக்குதல் தந்தைக்குக் கடனே"
—என்பது.

"தந்தை மகற் காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"—

என்பதனோடு கருத்து ஒப்புமை கொண்டுள்ளது.

"குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்னும் குறளின் சொல்லும் பொருளும் மட்டுமன்றி அதன் இனிமையையும் குழைத்துத் தருகிறார் ஒளவை மூதாட்டியார் ஒரு புறப்பாட்டில்:

"யாழொடுங் கொள்ளா, பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும்—தந்தையர்க்கு
அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை
என் வாய்ச் சொல்லும் அன்ன [ஒன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சி நீ யருளன் மாறே.] "

யாழோசை போல இன்பமும் செய்யா; காலத்தோடும் பொருந்தி யிரா; பொருளும் தெளிவு படா; ஆயினும் தம் பிள்ளைகளுடைய இளஞ் சொல் தந்தையர்க்கு இன்பமாய், அருளச் செய்கின்றன—என்று கூறி, அதிகமானின் அருள் திறத்தை வியக்கின்றார்.

Digitized By Roja Muthiah Research Library

அதே குறள் கருத்து, தலைவி ஒருத்தி தன் இள மகனை நோக்கிக் கூறுவதாக வரும் மருதக்கலி பாட்டொன்றினும் காணப்படுகின்றது.

"ஐய, காமரு நோக்கினை, அத்தத்தா என்னு நின்
தேமொழி கேட்டல் இனிது"—

என்பதே அது. வள்ளுவர் மொழியால், பிள்ளையின் மழலை பெற்றப் பெருஞ் சிறப்பு இதுவாகும்.

மேலும், காக்கைப் பாடினியார் என்னும் பெண்பாற் புலவர் இயற்றிய புறப்பாட்டொன்றில்,

"செங் களந் துழவு வோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே"

என வரும் அடிகளும், பூங்கணுத் திரையார் என்பாரின் புறப்பாட்டில்

"சிறுவன், களிறெறிந்து பட்டன னென்னு முவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே"

என வரும் அடிகளும்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்னும் குறளில் வரும் அடியினை அப்படியே கொண்டிருப்பனவன்றோ? சான்றோ னெனக் கேட்டலும், பட்ட மகனின் கிடக்கை காணலும் ஒன்றோமோ வெனில், பெற்றவள் படுமகன் கிடக்கை கண்டதாலேயே, சான்றோன் எனத் துணிதல் இயல்வதாகலின் கருத்தொற்றுமை தெளிவாம்.

Digitized By Roja Muthiah Research Library

வள்ளுவர், கண்ணோட்டம் என்னும் அதிகாரத்தின் கண், அதன் எல்லையை உணர்த்துவான்,

"பெயக் கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்று கூறுகிறார். 'தம்மொடு பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டு வைத்தும், தமது அன்பினால், மறுக்க மாட்டாமையின், அதனை உண்டு பின்னும் அவரொடு பழகி இருப்பர், யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை விரும்புபவர்—என்பதே அதன் கருத்தாகும். அக்கருத்து அவ்வாறே நற்றிணைப் பாட்டொன்றில்,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

எனவும், கலித் தொகையில் வரும் பாட்டொன்றில்,

"நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரு மேழுற்றார்;"

எனவும், வந்துள்ள அடிகள் அக்குறளினையே ஒத்திருப்பன வன்றோ!

நெய்தற் கலியில், மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியதாக வருகின்ற ஒரு பாட்டில்,

"பிறர் நோயுந் தந்நோய் போற்போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடன்"

என்று வருவதானது, திருக்குறளில், 'இன்னா செய்யாமை' அதிகாரத்தில்,

"அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய் போற் போற்றாக் கடை"

Digitized By Roja Muthiah Research Library

எனவரும் குறட் பாவினைத் தழுவியுள்ளது. நெய்தற் கலியின் கண்ணே வரும் பிறிதொரு பாட்டில்,

"கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்—
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்"

என்று வருகின்ற அடிகளும்,

"அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை"

என்று வரும் குறுந்தொகை அடியும்—உணர்த்துகின்ற கருத்தாக,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்னும் குறட்பா அமைந்திருப்பது காணத் தக்கது.

வினைத் தூய்மை என்னும் அதிகாரத்தில், அமைச்சன் தீய வினைகளால் பொருள் படைத்து அதனால் அரசனுக்கு நன்மை செய்தல்—அரசனுக்கே அழிவாகும் என்பதை,

"சலத்தாற் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்
கலத் துணீர் பெய்திரீஇ யற்று"

என்றுரைக்கின்றார். அதே உதாரணச் சொற்றொடர்—குறுந்தொகைச் செய்யுளொன்றில்,

நல்லுரை இகழ்ந்து புல்லுரை தாஅய்ப்
பெயல் நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ளம் நீந்தி—

என வருவதைக் காணலாம்.

Digitized By Roja Muthiah Research Library

கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதியார் இயற்றிய புறப்பாட்டு ஒன்று, பல குறட்பாக்களின் கருத்துக்கள் நிழலாடுவதாக உள்ளது.

1. "உண்டா லம்ம விவ் வுலக மிந்திரர்
2. அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
3. தமியர் ருண்டலு மிலரே, முனிவிலர்
4. துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
5. புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
6. உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
7. அன்ன மாட்சி யனைய ராகித்
8. தமக்கென முயலா நோன்றாட்
9. பிறர்க்கென முயலுந ருண்மையானே"

இப் பாடலுள், 2, 3 அடிகளின் கருத்துக்கள்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல்—சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற் றன்று"—

என்னும் குறளையும், 5, 6 —வது அடிகளின் கருத்துக்கள்,

"ஒன்றா வுலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்ப தொன்றில்"

"செயற் பால தோரும் அறனே ஒருவற்
குயற் பால தோரும் பழி"—

என்னும் குறட்பாக்களையும்; 7, 8, 9, வது அடிகளின் கருத்துக்கள்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்—அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"—

"பண்புடையார் பட்டுண்டு உலகம்- அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்."

Digitized By Roja Muthiah Research Library

என்னும் குறட்பாக்களையும் தழுவி வந்துள்ளதையும் கண்டுணரலாம்.

பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய புறப்பாட்டு ஒன்றில், வள்ளுவர், 'கல்வி'யைக் குறித்தும் "கல்லாமை"யைக் குறித்தும் கூறியுள்ள குறட்பா கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்னும் இதனை, கீழ்வரும் பாட்டின் முதல் இரண்டடிகளில் காணலாம்.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன் கட் படுமே."

இப்பாட்டின் ஈற்றடிகள் மூன்றில் காணப்படும் கருத்து,

"மேற் பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு."

என்னும் குறட்பாவில் கூறப்படுவதே யாகும்

கழைதின் யானையார் என்னும் புலவர் வல்வில் ஓரி என்ற வள்ளலைப் பாராட்டி யுரைத்த புறப்பாட்டொன்றில்,

Digitized By Roja Muthiah Research Library

"ஈயென விரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயே னென்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்று கூறியுள்ளார். இந்தக் கருத்துக்கள், வள்ளுவரது 'ஈகையில்' விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன வாகும்.

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று"—என்பதும்,

"இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள"

"சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை"

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்"

இந்தக் குறட்பாக்களின் கருத்துக்களே, கழைதின் யானையார் பாட்டிலும் பொதிந்துள்ளன. மேலும் வள்ளுவர், இரத்தலையே கண்டிப்பதையும்

"இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்"—

என்னும் குறளால் அறியலாம்.

வான் சிறப்பைக் கூறுமிடத்து, வள்ளுவர்
"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்று வரையறுக்கின்றார். அதே கருத்தானது, நற்றிணை பாட்டொன்றில்,



Digitized By Roja Muthiah Research Library

"நீரின் றமையா உலகம் போல"—

என்பதன் கண்ணும், புறப்பாட்டு ஒன்றில்,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்"—

என்பதன் கண்ணும் இடம் பெற்றுள்ளது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார், கரிகால் வளவனைப் பாடிய, பட்டினப்பாலையில், வணிகர் தம் பெருமையைப் புலப்படுத்தி வருகின்ற பகுதியில், வள்ளுவர், நடுவு நிலைமை என்னும் அதிகாரத்தில் கூறி யுள்ள கருத்துக்கள் பொதிந்துள்ளன.

"நெடு நுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வ தூஉ மிகை கொளாது
கொடுப்பதூஉங் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல் கொண்டித் துவன்றிருக்கை"—

என்பது பட்டினப்பாலை. இதன் கண், 'நடுவு நின்ற நன்னெஞ்சு' என்பது

"சமன் செய்து சீர்தூக்குங் கோல்போ
லமைந்தொரு பாற்
கோடாமை சான்றோர்க் கணி"—

என்பதனோடும்,

"வடுவஞ்சி வாய் மொழிந்து" என்பது

"சொற் கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்"—

என்பதனோடும்

Digitized By Roja Muthiah Research Library

"தமவும் பிறவு மொப்ப நாடி" என்பது

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்"

என்பதொடும், கருத் தொற்றுமை கொண்டிருத்தல் கண்கூடு.

சுற்றத்தாரைத் தன்னினீங்காமல் அணைத்துக் கொள்ளுதலின் பயனை விளக்கும் "சுற்றந்தழால்" என்னும் அதிகாரத்தில்,

"பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர்"

என்றார் வள்ளுவர். எல்லோரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் தத்தம் தகுதிக்கு ஏற்ப நோக்குமாயின், அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழும் சுற்றத்தார் பலர்—என்பது உரையாகும். இதே கருத்தினை உட்கொண்டு, மலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியிருக்கின்றார். அப்பாட்டு இதுவாகும்:

"ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநன் கறிந்தனை யாயின்
பொது நோக் கொழிமதி புலவர் மாட்டே."

மேலும், பரிசில் பெறுவார் பெரிதென மதிக்கும் வரிசையினைக் கோவூர்க் கிழாரும் ஒரு புறப்பாட்டில்

Digitized By Roja Muthiah Research Library

"வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை"

என்று குறிப்பிட்டுள்ளார்.

"இடுக்கண் அழியாமை"யைக் கூறுங்கால், வள்ளுவர்

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து"—

என்றார். "இடையூறு தோன்றும் இடங்களெல்லா வற்றினும் வண்டியை இழுக்கும் காளையைப் போல, வினையைக் கொண்டு செலுத்த வல்லானிடம், வந்துற்ற இடுக்கண் தானே அழிவுறும்" என்பது கருத்தாகும்.

இக் கருத்தானது, உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடியுள்ள புறப்பாட்டு ஒன்றில்,

"கழியுப்பு முகந்து கல் நாடு மடுக்கும்
ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
உரனுடை நோன்பகட் டன்ன எங்கோன்",

எனவும், அதியமானை ஔவையார் பாடிய பாட்டொன்றில்,

"அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ"—

எனவும் இடம் பெற்றிருத்தலைக் கண்டு மகிழலாம்.

இவ்வாறு, சொற்றொடராகவும், சொல்லாகவும், கருத்தாகவும், திருக்குறளொடு, ஒப்புமை யுடையதாக வரும் இடங்கள் சங்க இலக்கியங்களில் மிகப் பலவாம். அவை அனைத்தையும் ஒரே கட்டுரையின் கண்ணே

Digitized By Roja Muthiah Research Library

கூறலான விரிவஞ்சி விடுக்கின்றேன். மேலும், இவற்றையும், இவை போன்ற பிற ஒப்புமைப் பகுதிகளையும், ஆராய்ச்சிக் கண் கொண்டு நோக்குவார், வள்ளுவரின் காலத்தையும் தெள்ளிதின் அறியக்கூடும்.

பொதுவாகக் கூறுமிடத்துச் சங்க காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்கள் பலர், கற்றறிந்து, ஏற்றுப் போற்றி, வாழ்த்தி வழிநின்ற பெருமைக்குரியது திருக்குறள் என்பது தெளிவாகும். சங்க காலம் அதன் வழிநின்றே பொற்காலமாகப் புகழ்பெற்றுச் சிறந்திருந்ததெனின், வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கும், தாழ்ந்து கிடக்கும் தமிழ் மக்களுக்கும், திராவிட இனத்தவர்க்கும் உண்மை உணர்ந்து உரிமை வாழ்வு பெற, திருக்குறளினும் சிறந்த துணை வேறுண்டோ? எண்ணுக! திருக்குறளை எண்ணுக! செயலாற்றுக! வாகை சூடுக!!

Digitized By Roja Muthiah Research Library

# கள்ளும் சூதும்

[செல்லூர்க்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளை]

உலகம் தோன்றிய நாள் தொட்டு பகலும் இரவும் மாறி மாறி வருவதும் போவதுமாக இருக்கின்றன. இருட்டுண்டேல் வெளிச்சமும் உண்டு. நன்றுண்டேல், தீமையும் அதன் பக்கலிலேயே உளது. இவை போன்றே மக்கள் நலத்தைக் கெடுத்தற்குக் கள்ளும் சூதும் ஒன்றுபட்டுள்ளன.

பழங்காலத்தில் இக்கள்ளினை அரசர்முதல் ஆண்டிவரை எளிதாக உண்டு களித்து வந்தனர். இதற்குச் சான்று சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. சங்க காலத்திருந்த ஔவை மூதாட்டியார் தம்மைப் போற்றிச் சிறப்புச் செய்த அதியமான் நெடுமான் அஞ்சியென்னும் வள்ளல் தன் பருவுடல் நீத்தகாலை அவன் தமக்குச் செய்த சிறப்புக்களுள், இக்கள்ளினைத் தமக்குக் கொடுத்துத் தானும் உண்ட செயலையே பாராட்டித் தம் இரங்கலுரையாக,

'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தாம் மகிழ்ந் துண்ணும் மன்னே'

எனக் கூறி வருந்துவாராயினர்.

முற்கால நூல்களிலிருந்து பிற்கால நூல்கள் வரை இதனையே யெடுத்துப் பாராட்டிப் பேசுகின்றன. அதன் சுவையும் அதை உண்பதால் தம் உணர்விழந்த நிலையைத் தரும் பண்பும், அவற்றைப் பாராட்டிப் பேச அவர் மனத்தை உந்துவ

Digitized By Roja Muthiah Research Library

வாயினா். வள்ளுவர் பெருமானே தம் அறநூற்பகுதியாகிய காமத்துப்பாலில்,

‘இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு’

‘உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு’

எனத், தலைவி, தோழிகள் கூற்றாக இன்பத்திளைப்புக்கு உவமையாக அமைத்துக் கூறுவாராயின், இக்கள்ளின் ஆட்சியை என்னெனப் பகர்வது! இதற்கு அடிமைப்பட்ட அரசர் அறிஞர் தொழிலாளர் முதலியோர் எண்ணிலடங்கார். இதனை உண்டார் எவ்வளவு அறிஞராயினும் செல்வராயினும் தம் அறிவு சிதைய உணர் விழந்தவராகித் தத்தம் அலுவல்களிலும், கடமைகளிலும் தவறுதலுடையராகின்றனர். எனவே, அவர் உணர்விழந்த பிண்டமாய், மக்களாய்ப் பிறந்த தம் மாண்பினை உணராதவர்களாய்க் குடிப்பது களிப்பது உறங்குவது என, இந்த அளவோடு அவர் வாழ்வு கழிந்து விடுகின்றது. ஆகலான், அதனை விலக்கி ஒழித்தாலே மக்கட்பயன் பெற முடியுமென மூதறிஞர் கருதினர். அக்கருத்தால் பல நூல்கள் மூலம் அதன் தீமையை விளக்கிக் கண்டித்து விலக்குமாறு அறிவுறுத்துவாராயினர்.

சூதென்பது இக்கட்குடிக்கு உற்ற துணை; பிரியாத் தோழன்.

இச்சூதினை, அரசர் அறிஞர் தொழிலாளர் முதலியோர் மன ஓய்வுக்காக மனக்கவலையை மாற்றற்காக உழைப்புக்கடுமை குறைதற்காக அமைத்த ஓர் விளையாட்டாகவே கொண்ட

Digitized By Roja Muthiah Research Library

னர். அது போர் முறையை யொட்டி அமைக்கப்பட்ட கதைப் போக்குப் போன்ற ஒன்றே என்று கூறுமாறு அமைந்துள்ளது. இப் போக்கில் அமைந்தனவே, சாதுரங்கம், சொற்கேட் டான், தாயம் போன்ற சூதாட்டங்கள். பிற்காலத்து வந்த சீட்டாட்டமும் இத்தகைய வொன்றே. இவ்வா றமைந்த சூது விளையாட்டு, வரவர ஒருவன் உரிமையை மற்றவன் பறிக்கின்ற கொள்ளைத் திருட்டாக மாறிவிட்டது. சூதாடிக் கெட்டொழிந்த குடும்பங்கள் பல. வீடிழந்து மாடிழந்து சொத்திழந்து சுகமிழந்து ஓட்டாண்டியாக அலமந் தோர் அலமருவோர் பலராவர். அதனால் இதுவும் கள்ளுண்டால் வரும் தீமையைப் போல் அதிற் கட் டுண்ட மக்களைத் தன்வயப்படுத்தி அதிலேயே அவர் கருத்தினை முனையச் செய்து பண்பொடு பட்ட அவர் வாழ்க்கையினையும் நாட்கடன்களாகிய நீராடல் உண் ணல் உறங்கல் முதலிய அன்றாடக் கடமைகளையும் நிகழ்த்த விடாது தன்பால் ஈர்த்து ஒன்றெய்தி நூறி ழக்கச் செய்யும் கொடும்பாடுடையது. இதனை, இத னைக் கள்ளொடு ஒன்றுபடுத்தி அறநூலார் விலக்க முற்பட்டனர். சூதால் பலகேடுகள் நிகழ்ந்ததை நிகழ்வதைப் பண்டும் இன்றும் தெளிந்து வருகின்றோம்.

முற்காலத்து நளன், தருமன் காதைகளும், தற் காலத்துத் தனிப்பட்ட மக்கள் செய்த செய்கின்ற குதிரைப் பந்தயம், சீட்டாட்டம், 'ஐரிஷ் லாட்டரி' கதைப் போட்டி முதலியனவும் நமக்குச் சான்று காட்டுகின் றன. இதனை எவரோ ஒருவர் வாழப் பலர் பொருள் கெட வருந்துகின்றனர். இதில் ஆர்வம் மிகைப்பட்டு

Digitized By Roja Muthiah Research Library

அதுவே அல்லும் பகலும் நினைவாய்ப் பலர் தம் அறிவு நிலை மாறிப் பைத்தியம் பிடித்து இறத்தலையும் காண்டு மன்றே.

ஆகவே கள்ளும் சூதும் மக்கள் மாண்பைக் குலைக்க வந்த பேய்கள் எனக் கூறின் மிகையாகாது. இதனைப் பண்டின் தலைபிரியாத பேரறிஞர், சமயக் கணக்கர், ஒழுக்கம் வேனுநர், உயர்வாளர் முதலிய யாவரும் ஒருங்கே கடிந்தொதுக்க முற்பட்டனர், கடிந்தனர்.

இவைகளின் தீங்குகளை நுனித்தறிந்த பேரறிஞர், சமயக் கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளித்து வென்ற வள்ளுவர், எவ்வாறு விலக்கிக் கடிந்துள்ளனர் என்பதை இனிக் காண்பாம்; கட்டுரைப்பாம்:

வள்ளுவர் ஓர் அறநூல் அறிஞர். அவர் உலக மாந்தர் உய்தற்காக வழி காட்டி விதி விலக்களித்த பெருந்தகையார்; அவர் உலகு பயன் கருதி ஆக்கியருளிய நூல் திருக்குறள் எனப் பெயரிய திருமறை. இதில் முவ்வகைப் பால்வகுத்து அவைகளில் செந்தமிழ் மொழியிற் குறும்பாவான் ஆக்கி அறத்தை, உலகியல் நெறியை, இல்லறக் கிழமையின் ஏற்றத்தை எடுத்துணர்த்திய முதுபெரும் புலவருமாவார்.

திருக்குறளில் வரும் பகுப்புக்கள் மூன்று. அவை: அறம் பொருள் இன்பமென்பன. முதற்கண் அற நெறியினின்று வழுவாது கடனாற்றி உலகியலோடொத்து வாழ்தலை விளக்கிக் கூறினார். அஃது அறத்துப் பால் எனப் பெறும். அறஞ் செய்தற்கும்

Digitized By Roja Muthiah Research Library

உலகில் வாழ்தற்கும் துணைக் கருவியாக நின்று உதவுவது பொருள். பொருளை ஈட்டும் நெறியும் அதை ஈட்டுங்கால் வரும் இடையீடுகளும், அதனை விலக்கி யொழுகும் முறையும் பிறவும் வகுத்துக் கூறிப் பொருளின் இன்றியமையாத தன்மையை உணர்த்தி வழிகாட்டிய நெறியாகும். இது, பொருட்பால் எனப் பெறும். அறம் செய்யப்படும் முறையில் செய்யினும், அதற்கேற்ற முறையில் பொருளீட்டும் நெறி திறம்பட வாய்ப்பினும் அவைகட் கேற்ற இன்பம் அமைதல் வேண்டும். அவ்வின்பம், பெண்மை ஆண்மைப் பண்புகளினிடையே சுரந்து வருவது. இவ்வியல்பு வாய்ந்த ஆண்மகன் பெண்மகள் ஒன்று பட்டுப் பிரிவின்றியைந்த துவரா நட்புடை வாழ்வே இன்பம். இதனை விரித்துரைப்பது காமத்துப் பால் எனப் பெறும்.

இத்தகை அற நூலின் நடு நின்ற பொருட்பாலில் கட்டுரைப்பன 'கள்ளுண்ணுமை' 'சூது' என்னும் தனித்தனி அதிகாரங்கள். கள்ளினுல் வரும் கெடுதலையும் சூதினுல் எய்தும் சீர் கேட்டையும் பலவகைகளில் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டி அவைகளை அறவே நீக்குமாறு வற்புறுத்திக் கூறுகின்ருர்.

பொருளியல் வழியாகச் சென்று கொண்டிருக்கும் ஒருவனை அந்நெறியில் மூட்டின்றிச் செல்லாதவாறு விலக்குவன இவ்விவையெனா, முறைவைப்பாக வைத்து அமைத்துரைத்திருப்பதன் ஒட்பம், வள்ளுவரின் மதி வன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதில், **பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர், கள்ளுண்ணுமை, சூது** என்பன. இவையிற்றுள் முதற்கண் நின்ற பெண் வழிச் சேறல் என்பது, ஒரு ஆடவனுக்கு அமைந்த

Digitized By Roja Muthiah Research Library

வாழ்க்கைத் துணையாகிய இல்லாள், அவன் வழி ஒழு கற் பாலளன்றி, அவள் வழி இவன் ஒழுகுதல் சாலாது. அதற்கேற்ற உடலின் அமைப்புக் கூறு பாடுகளும் அவ்வாறே எனவே, அதனை ஈங்கே விரித்தற்கில்லை. தனியாக ஆராய்ந்து முடிவு காண்டற்பாலது. அதற் கடுத்து நிற்கும் அதிகாரம் வரைவில் மகளிர் என்பது. இது, பெண்மை இயல்பு திறம்பி ஒருவன் வழி நில் லாது இவர் தக்கார் தகவிலரென ஆராயாது பொருள் தருவார்க் கெல்லாம் தம் பெண்மை நலத்தை விற்று வாழும் தந்நெறிப் பெண்கள் இயல்பு. இது, பொருளீட்டு வான் பொருள்களை யெல்லாம் கொள்ளை கொண்டு இவர்ந்து கவரும் தன்மையது. எனவே இவர், கூட்டு றவு கூடாதென்பது. இதனை யடுத்து நிற்பது கள் ளுண் ணாமை. தன்மனையாளுக்குக் கீழ்படிந்தொழுகி அதற்கடுத்துப் பெண்மை இயல்பில்லாத பொதுமகளிர் காமத்தை நச்சி வாழ்வது அறிவுக் கண்ணை அழிக்கும் நீர்மைத்து. அவ்வறிவைத் தலை யெடுக்காது செய்வது கள்ளுண்பது. அக் கள்ளுண்டால் வருங் கேட்டினும் பெருங்கேடெய்து விப்பது, 'சூது' என, முறையே வகுத் ததும் கள்ளுண் ணாமையை முதலினும் அதற்கடுத்துச் சூதென்னும் அதிகாரத்தையும் வைத்துரைத்திருப்ப தன் நோக்கம், இவைகள் கூடாவென்பதும், இவை ஒன்றுக்கொன்று இனமானவை யென்றும் விளக்கற் பொருட்டேயா மென்பதைத் தெரிந்து தெளிக.

கட்குடியின் தீமையை வள்ளுவர் மிக அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கின்றனர். அவர் எடுத்த எடுப்பி லேயே 'கள்ளின்மீது விருப்பங் கொண்டுள்ளவர், பிறரால் மதிக்கப் படார்: தம் புகழையும் இழந்து விடுவார்' என்று கூறுகின்றார். கள்ளின் மீது விருப்பங்

Digitized By Roja Muthiah Research Library

கொள்ளுவோர், பிறரால் நன்கு மதித்தற் கருக ரல்லாதா ரோடு, தம் நற்பெயரும் கெடுமென்று சொல்லாமற் சொல்லிக் கள்ளுண்ணுமையை வற்புறுத்துகின்றார். பின்னரும்,

'ஈன்றாள் முகத்தேயும் இன்னுதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி'

எனவும், இறுதிக் குறளில்,

'கள்ளுண்ணுப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு'

எனவும் கட்டுரைப்பது, அவர், 'கள்ளுண்டு களித்து வெறி கொண்டு பிதற்றுதலைப் பெற்ற அவன் தாய் கூடப் பொறுக்க மாட்டாளே, அப்படியிருக்க இவன் நல்லோர் காணக் கள்ளுண்டு வெறியாடுவது அவர் கட்கு எவ்வளவு வெறுப்புத்தரு' மெனக் கள்ளுண்போரையே கேள்வி கேட்டு அதை உண்பதை விட்டு விடுமாறு நயம்பட வேண்டுகின்றார். பின்பு அவர் கள்ளுண்டு உணர்வற்றுக் கிடப்பதை வெறுத்து நோக்கிக் 'கள்ளுண்போர் உறங்குவோரினும் செத்தோரினும் வேறுபட்டவரல்லர்; எந்தக் காலத்தும் கள்ளுண்போர், நஞ்சை உண்டு தமக்குக் கேடு விளைத்துக் கொள்ளும் அறியாதவரோ டொப்பர்' எனக் கட்டுரைத்து விளக்குகின்றார். பின் பலபட இடித்துக் கூறி அதனை விட்டுத் தொலைக்க வேண்டிய முதன்மையையும் ஓர் எடுத்துக் காட்டு மூலம் அவன் குடித்த வெறித் தன்மையையே விளக்கிக் காட்டி விளக்குந் திறப்பாடு வள்ளுவரின் ஒப்புயர்வற்ற அறிவின் ஏற்றத்தைக் காட்டுகின்றது. அது: "ஒருவன் தான் கள்ளுண்ணுது நல்லறிவோடு இருக்குங் காலத்

Digitized By Roja Muthiah Research Library

தில் கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவன் ஒருவனைக் கண்டு 'நாமும் கள்ளுண்டால் இவன் நிலையில்தானே மயங்கிக் கிடப்போம் 'என, எண்ண மாட்டானோ? என அவன் சிந்தித்து எண்ணாத மதியீனத்தையெடுத்துக் காட்டுகின்றார். இதனோடு கள்ளுண்டலால் வரும் தீமையைக் காட்டி உண்ணாமை வேண்டும் எனக் கூறி முடித்து விட்டு, அதற்குத் துணையாக அமைந்த சூதையும் எடுத்துக்கொண்டு விளக்குகின்றார். அதில்,

> 'வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
> தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று'

'ஒருவன் வெற்றியே பெறுவதாயினும் சூதாட்டத்தை விரும்பாதிருப்பானாக. வென்ற அவன் வெற்றி மேம்பாடும் தூண்டின் முள்ளிலுள்ள இரையை விழுங்கித் தன் உயிரிழக்கும் மீன் தன்மையனவான்' என, சூதால் பெற்ற பொருளினால் வரும் கேட்டினை விளக்கினார். பின்னரும்,

> 'சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
> வறுமை தருவதொன் றில்' எனவும்,
> 'அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
> முகடியால் மூடப்பட் டார்' எனவும்,
> 'உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்
> அடையாவாம் ஆயங் கொளின்'

எனவும் கூறுங் குறள்களில் சூதினால் பல துன்பங்களும் ஒருங்கே தொடருமென்றும், இதனை மேற்கொண்டார்க்கு உடுக்கும் ஆடையும் அதனைப் பெறற்கு வேண்டும் பொருளும் உண்டற்குச் சோறும் தன் நல்ல பெயரும் கல்வியும் ஒருங்கே சேர இல்லாதவராய் அலமந்து ஏங்குவ ரென்றும் அதனைக் கைவிட்டு நன்னெறியிற்

Digitized By Roja Muthiah Research Library

படரவேண்டுமென்றும் அறிவுறுத்துகின்றார் நம் வள்ளுவர் பெருமான்.

ஆகவே, மக்களுடல் பெற்ற நாம், வள்ளுவர் போன்ற வழி காட்டும் வான்பொருட் செல்வர் ஆணை வழிநின்று கள்ளையும் சூதையும் ஒழித்து அறிவுக் கண்ணராய் நெறிவழியே ஒழுகுவோமாக.

இதுகாலை நம் சென்னைமாநில அரசியலார், வள்ளுவர் வழிநின்று தெருட்டிய காந்தியடிகள் ஆணையைத் தலைமேற் றாங்கிநின்று 'மது விலக்குச் சட்டம்' மூலம் வெளிப்படைக் குடியை ஒழித்துள்ளார். 'குதிரைப் பந்தயம்' போன்ற சூது முறைகளையும் விரைவில் ஒழிப்பார்களாக. அதனோடொட்டிப் புகைக்குடியை அறவே ஒழித்துக்கட்டவேண்டுவது முதற் பெருங் கடப்பா டாகும். வள்ளுவர் வகுத்த 'கள்ளுண்ணாமை' அதிகாரத்தினுள் 'ஒரு மொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே' என்னும் உரைப்படி 'புகையுண்ணாமை' யும் கொள்ள அடங்கிக் கிடப்பதை ஓர்க.

இலங்கைத் திருக்குறள் மன்றத்தார் குறள்நெறியை உலகெலாம் பரப்ப மடிதற்று முன் வந்திருப்பதறிந்து மகிழ்கூர்கின்றோம். உலக மக்கள் யாவரும் அந் நெறியை உணர்ந்து கடைப்பிடிக்கச் செய்வதே பெருங் கடப்பாடாகக் கொள்ளல்வேண்டும். அதுவே தொண்டும் எனக் கூறி அதனைச் செயற்கு முற்படவேண்டி அவாவு கின்றேம்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

**வாழ்க வள்ளுவர்; வளருக வள்ளுவம்.**

Digitized By Roja Muthiah Research Library

# இருவேறு உலகத்து இயற்கை

[செல்வி. C. தேவி, M. Sc., நாகர்கோவில்]

முல்லை சான்ற கற்பு - குவளை உண்கண் கால்களை யாள் பெய்த அனிச்சம் என மங்கையர் உலகின் மாண்மை வெளியிடும் விருப்பொடு எழுந்த மலர்மொழி கள் எச்சோலையிடை அரும்பிப் போதாகி அலர்ந்தன, என அறியும் பெற்றியராய் என் தோழி செந்தமிழ்ச் செல்வியும் யானும் வளனுற்ற இளமைவாழ்வின் ஒரு நாள் தேடித்திரிந்தோம். மாமலர் நெடுங்கண் மாதவியும், எழுகென எழுந்து தன் துயர் காணத் தகைசால் கொடி கண்ணகியும், சேரநாட்டின் பைந்தமிழ்ப்புலவர் இளங்கோ இயல்பின் இயற்றிய இன்றமிழ்ச் சோலையில் துவளக்கண்டோம். கானகத்துக் காதலியை காரிருளிற் கைவிட்டு நீங்கின மணாளனை, இரண்டாம் சுயவரம் என்று அங்கோர் முரசறைவித்த அருந்தமிழ்ச் செல்வியை, ஒண்தமிழ் நிறையும் வெண்பாவால் புனைந்த ஒண்மலர்ச் சோலையில் ஒளிரக்கண்டோம். தையல் மீது உற்ற மையலால் வாளினாற் பேசலல்லால் வாயினாற் பேசலாற்ரு மன்னனையும் விட்டு நீங்குதலாற்ரு நங்கை யொருத்தியின் நறுமணக் கூந்தல் திருத்தக்கத் தேவரின், கலைச் சோலையிற் கமழக் காணலுற்ரேம். மலையிடைப்பிறவா மணியும், அலையிடைப்பிறவா அமுதும் யாழிடைப்பிறவா இசையும் பயனற்றன, எனும் பண்மை விளக்கிய, பிறள் மகன் ஒருத்தனேடு பூநாடு விடுத்த பொற்பின் உருவை, கல்விவலார் கற்றுவக்கும் கலித்தொகையினிற் கவினுற மலருதல் கண்டோம் எனினும், கவிநயமும் கற்பனை நயமும் இலங்கக் காவியம்

Digitized By Roja Muthiah Research Library

வரைந்த கம்பன் சோலையினிடை அலர்ந்த நறுமலர், பன்னூறு யாண்டுகளின் முன்னர் பண்பொடு வாழ்ந்து நல்லாரும் நலிந்தாரும் நலனுறுதற் பொருட்டு உலைவிலா உழைப்பால் ஆக்கிய வள்ளுவப் பெருந்தகையின் இலக்கியப் பூம் பொழிலகத்து, அரும்பியதே ஆதல் சாலும், எனும் சான்றோர் கூற்று உண்மை உருப்பெற்று ஒண்மையும் தண்மையும் ஒருங்கே தோற்றமளித்தமை கண்டு களித்தோம். ஆம், தமிழ் நாடகத்தே தோன்றிய நன்னூற்களில் வள்ளுவப்பெருமானின் தெள்ளிய கருத்தோவியங்கள் யாண்டும் பல்வேறு உருவில் சொன்மழையும், சொற்றொடர் மழையும் பொழிய அவ் வெள்ளப் பெருக்கிடை இழுபட்ட யான் ஈண்டு சிலசில வரைய விழைதல் சாலாதோ?

அற்றைநாள் தோன்றி அருந்தமிழ் புனைந்து எப் பாலவரும் விரும்பும் முப்பால் சமைத்து, இல்லத்து உறைவோர் எழில் நலங்களை எடுத்துரைத்தும் மன்னுயி ரெல்லாம் தன்னஞ்சாவாறு - நெல்லும் நீரும் உயிரல - மன்னர் உயிர்த்தே-என மக்களை உண்ணுநீரினும் உயிரி னும் ஓம்பும் இறையின் இயல்பினை இயம்பியும், கருத் தொருமித்து களவினைவிடுத்து ஐந்திணை நெறியளாவித் தாமரைக் கண்ணன் உலகினும் பேரின்பம் எய்தும் நல்வாழ்வின் நலனையும் பெருந்தகை என்ன திருந்த உரைத்தும், நிலவரை நீள் புகழாற்றிப் புத்தேளுலகும் தம் புலவரை விடுத்து தமிழ்ப்புலவரேயே போற்றும் பேற்றிற்கிணங்க மண்ணுலடொழித்து விண்ணு டேகினர் அண்ணல் திருவள்ளுவர் என்போம்.

பிற்றை நாள், எழில் பொதுளிய தமிழால் இமையோர் விருந்தமிழ்தமும் விரும்பாது தமிழ் கண்டீர்,

Digitized By Roja Muthiah Research Library

யாம் வணங்கும் கடவுள் எனும் மொழிப்பற்றால், நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவரும், அறிந்த வால்மீகியும் நயமுடன் கைவண்ணத்தாலும் வாய் வண்ணத்தாலும் வகுக்க, ஆசைபற்றி அறையலுற்ற கலைவல்லான் கம்பன் தன் காவியச் சோலையகத்து, தவஞ்செய்த தவமாம் தையலின் கற்பின் பொற்பினை வியந்தும், தன் உயிர் புகழ்க்கு விற்ற சடாயுவின் சான்றாண்மை சாற்றியும், வில்லின் செல்வன் சொல்லின் திறன் போற்றியும், சொல்லின் செல்வன் அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில் அவ்வஞ்சில் ஒன்று வைத்து வஞ்சியைக் காத்த வண்மையை வரைந்தும் திரிசடை நல்லாள் ஒரு சடை நல்லாளை பெண்மையின் சாயலால் காத்த பெற்றியைப் புகழ்ந்தும் கலைக்கோவில் கட்டினன் கம்பன்.

இவ்வாறு எண்ணமிடுவோர்க்கு வள்ளுவன் ஓவியச் சாலையும் கம்பனின் காவியச்சோலையும் இருவேறு உலகங்கள் எனத் தோற்றினும், நுண்மாண் நுழை புலன் கொள்வார் அவ் இரு உலகத்தினும் இயற்கை ஒன்று உணருவர்.

படைப்பு பல படைத்து பலரொடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வன் அயோத்தி அண்ணல் பொன்னும் புகழும் உடையான் எனினும் மைந்தரை இன்மையால் வரம்பில் காலமும் நொந்தனன். எழுமையும் தீயவை தீண்டாவண்ணம் பழிபிறங்காமற் காத்தற்குரிய இராகவன் தசரதன் மதலையாய் வந்து தோன்றினன். ஊழையும் உப்பக்கம் காணவும், விதியினுக்கு வரம்பு கட்டவும் முனைந்த இளையா இலக்குவனும், கல்வியும் இளமையும் கணக்கு இல் ஆற்றலும் போற்றுமளவிற்



Digitized By Roja Muthiah Research Library

பொலிவுற்ற பரதனும் பின்னர் தோன்றிய இளவல்கள். மைந்தர் நால்வரும் தோள்வலியும் துணைவலியும் பெற்று இலங்க கரிய செம்மல் ஒருவனை முனிவன் வேண்ட கண்ணிலான் பெற்றிழந்தவாறு சிறுவரை விடுக்க, 'தங்கள் நாயகரிற் தெய்வம் பிறிது இல்' என உன்னும் மங்கைமார் உள்ளம் போன்ற தூய வழி செல்லலாயினர் எனும் போழ்து

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்—

எனும் வள்ளுவன் வாய்மொழி உள்ளி மேற்செல்வோம். பெண்ணிற் பெருந்தக்க யாவுள என வினவிய புலமை உள்ளம், பெண்ணிற் பெருந்தக்கது இல் என்றே மறு மொழி விடுத்தமை பெண்மை நிறையும் திண்மையால் அன்றோ?

ஊசி வழி பின் தொடரும் நூல்போல் தேசிகன் வழி மாசறு மன்னன் மைந்தர்கள் செல்லுங்கால் மாவலி வேந்தனின் வரையாது வழங்கும் வள்ளன்மை யையும், வெள்ளியின் ஒள்ளிய கருத்துரைகளையும் இராம இலக்குவர் செவிமடுத்தனர். வரும் பொரு ளுரைத்தல் தன் கடனாகலின் மூன்றடி மண் திருமால் வேண்டிய போழ்து மன்னனின் வறியார்க்கு ஒன்று ஈயும் அறிவுடைமைக்குத் தடையாயினமை கண்டு மாவலி மறுத்துரைத்து மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்றென நினைந்தான். அன்று அவன் வாயினின்று உதிர்ந்த தமிழ் மலர்கள் கம்பன் சோலையகத்துத் தோன்றியனவே எனினும், வள்ளுவனின் இணர் ஊழ்த்தும் நறுமலர் அலவோ?

கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றி விடுகின்றாய்.—

Digitized By Roja Muthiah Research Library

ஆம்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉ மின்றிக் கெடும்.

என உரைத்தார் வள்ளுவனுர்.

வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்—

இங்ஙனம் கொடை மடம் கொண்ட காவலன் திருவாய் மலருவானுயினன்.

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று—

எனும் பொய்யிற் புலவன் புகலுரையின் தெள்ளிய மணமும் திருந்திய பண்பும் மலர் கொய்வான் சென்ற மங்கையரை வழி கொள்ளாவோ?

ஆடவர் பெண்மையை அவாவும் தோள்கண்டார் தோளே கண்டார். மாசறு கற்பின்மிக்க அணங்கெனும் அகலிகையினை உரியான் கையகத் தீந்து வாச மணங் கிளர் சோலை மிதிலை அண்மினர் மூவரும். பிரிந்தவர் கூடும் வாய்ப்பு அமையுமாகலின் ஐயனை ஒல்லைவா என்று கைகளை நீட்டி அழைத்தன அக்கடிநகர் மலர்க் கொடிகள்.

மங்கைப் பருவமுற்ற சனகன் தையல் மாளிகையில் இயற்கையன்னையின் எழில் கண்டு சாளர வழி சந்திர உதயம் என்ன நிற்குங்கால் வீதிவழி செல்லும் இராகவன், மேல் நோக்க, - ஆம் அண்ணல் நோக்க - பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணிக்க - ஒருவரை

Digitized By Roja Muthiah Research Library

ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தமை இயற்கையன்றிப் பிறிதன்று. இந் நிகழ்ச்சியைச் சித்தரிக்க முனைகிறான் காவிய வள்ளல்.

—எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்—

இளமை தவழும் இருவர் நேசமெனும் பாசத்தாற் பிணிப் புண்டவராயின் கண்கள் பேசும் கட்டுரை வாய்ச் சொல்லில் என்ன பயன்? சான்று கூறும் திருக்குறள் காணீர்.

கண்ணொடு கண்ணினை நோக்குஒக்கின் வாய்ச்
என்ன பயனும் இல [சொற்கள்

உரிய இடத்து உயரிய இயற்கை நிகழ்ச்சிகளை அமைத்துச் சித்திரம் வரைவதில் கம்பன் இயற்கையொடு போட்டி இடுவது கூட காணலாகுமே. தன் மகனை சான்றோன் எனக் கேட்கும் தமிழன்னை ஈன்ற பொழுதினும் பெரிதுவப்பாள்.

பன்னெடுங் காலம் நாடு புரந்த அயோத்தி அண்ணல் எச்சில் நுகருவது இன்பமாகாதென நினைந்து மூத்தமகற்கு அரசை நல்க அமைச்சரை அழைத்தனன், எனக் கோவில் கட்டும் கம்பன் தன் முதுமை சான்ற முன்னோன் வள்ளுவன் வரைந்த செம்மொழி சிலவற்றை இடை இடையே அடுக்கிச் செல்வது கற்றார்க்குக் களிப்பூட்டும் கவின்பெறு காட்சியாகும்.

—கற்றவர். மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.—

Digitized By Roja Muthiah Research Library

அமைச்சருக்கு அமையவேண்டிய அரிய பண்புதான். தனக்குப் பெருமை அளிக்கும் பெற்றிமை சான்ற மயிர் ஒன்றினை இழந்த மான் மண்ணிடை வாழாது உயிர் இழக்கும் என்ற உண்மை அன்றொரு நாள் அருந்தமிழ்ப் புலவன் கண்ட காட்சி. அக் காட்சி மாட்சியுடைய ஒன்றாகலின் காவியத்து ஆட்சி பெற்றது. தம்மிற் பெரியாரைத் தமராக ஒழுகுதல் வன்மையினும் தலையாய தன்றோ? எனவே கவரிமான் கம்பன் கலைக் கோவிலுக்குரிய கவின் பொருளாயது. இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென இருந்த அவ் உற்றார் இராமன் பெருமையும் அவன் வருங்கால அரசின் அருமையும் தம் உவமை மொழியால் - வள்ளுவன் உள்ளி மேற்கொண்ட செம்மை நிலவ - மும்மையும் உணர மொழிந்தனர்.

பிறரால் விரும்பப்பட்டு பயன் படாதவன் செல்வம் நச்சுமரம் நடு ஊருள் பழுத்தது போலது. ஆனால் உளத் தாலும் - உரையாலும் - உடலாலும் பிறர்க்கென வாழ் வான் வான் பொருள் வேண்டுவார் வாழும் ஊரின் நடுவே, பன்னளின் பின் பயனுறும் பழமரம் கனிந்தது போலும்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்"

இதுவே போன்று மழையின்றி நாள் பல நலிந்த மக்கள் மழையின் வரவால் ஊரார் விரும்பி உண்ணும் நீர் நிலை நிறைந்தமை போன்றதே நல் லான் கண்பட்ட திரு. ஆம், பேரறிவாளன் திரு உலகு அவாம் ஊருணி நிறைந்தது போன்ற தன்றோ?

Digitized By Roja Muthiah Research Library

நிறைந்த ஊருணியும் பழுத்த பயன் மரமும் வெறுப்பார் உளரோ? இதுவே போன்று சிவந்த வாய்ச்சீதையுடன் கரிய செம்மல் நிவந்த ஆசனத் திருப்பதை விரும்பார் யாரே?

—ஊருணி நிறையவும் உதவு மாடுயர் பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும் கார்மழை பொழிய வும் கழனி பாய்நதி வார்புனல் பெருகவும் மறுக் கின்றார்கள், இல்லை. இல்லவே இல்லை என்றே இதழ்கள் பறை சாற்றும்.

இவ்வண்ணம் 'மற்றவர் வாசகம் கேட்ட மன்ன வன்' இராகவனைப் பெற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான். ஈன்றவள் தாயாயின் பெற்றவன் தந்தையன்றோ. எனவே

—ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்—எனும் சொற் றொடர் வேற்றுருப் பெற்று பெற்ற அன்று என கம்பன் காதையுட் புகுந்தது.

வண்மைக் கேகையன் சூழ்வினால் ஏழிரண்டாண்டு பூழிவெங்கானம் நண்ண விழைகிறான், அன்றலர்ந்த செந்தாமரையினை வென்ற ஐயன். 'செல்லாமை உண் டேல் எனக்குரை' என்றே கூறும் பெண்மைப் பெட்புடன் அமைந்தவள், சீதை எனும் கோதையள். அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் அன்றோ? மண்மகள் அறியா வண்ணச்சீறடியள் என மெல்லியலாரின் நல்லியல்பினை உணர்ந்த இராகவன், தன் குலக் கொடி கல்லும் முள்ளும் மிகுந்த காட்டகத்து வாராமற் தடுக்க விழைகின்ற போழ்து ஒரு சடை நல்லாள் உதிர்த்த ஒண்மலர்கள் எதனை நினைவுறுத்துகின்றன?

Digitized By Roja Muthiah Research Library

—நின் பிரிவினும்சுடு மோபெருங்காடு?—

நீ வருந்தலை நீங்குவன் யான் என்ற தீய வெஞ்சொல் செவிச்சுடத் தேம்புவாள். காதல் நோய் தீ அனையது. புதியதோர் தன்மையாது. நீங்கிற் றெறூஉம் குறுகுங்கால் தண்ணெனும் சிறப்பு நலன் பெற்றது, அன்பு எனும் தீ. தன்கற்புக் கோட்டையின் காவலனது பிரிவு சுடும் என உணர்ந்தாள் சீரை சுற்றி திருமகள்.

—தொடிற்சுடின் அல்லது காமநோய் போல்
விடிற்சுட லாற்றுமோ தீ.—

ஆற்றாமையினாலன்றோ அருஞ்சுரம் முன்னினள்!

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை தீவினை என்ன நீத்து, தையலொடும் தம்பியொடும் வனஞ்சென்றனன். "ஐயா, இளங்கோவே, ஆற்றுதியோ" என்றார் சிலர். கிள்ளையொடு பூவை அழுத. ஆவும் அழுத. அதன் கன்றழுத. மன்னனை இழந்தது அம்மா நிலம்.

நிலைமையைச் செவிமடுத்த பரதன் முன்னவர் முறைமை, பிறழ்ந்தமை நீங்குதற் பொருட்டு, அண்ணலை அழைக்கப் படைஞர் புடைசூழ வருதலைக் கண்ணுற்ற கங்கைக் கரையின் கணக்கிறந்த நாவாயான், குகன் எனப் பெயரினன் உண்மை உணராது மொழிந்த சில, கம்பன் காவியச் சிறப்பிற்கே அணி செய்வன என்பனேன் அது மிகை அன்று.

—எலி எலாம் இப்படை அரவம் யான் என
ஒலியுலாம் சேனையை உவந்து கூயினன்—

எலியும் ஒலியும் அரவத்தின் ஆற்றலை அளவிட உதவுவன. ஆயிரம் எலியும் பகை பொதுளிப்பாயினும்

Digitized By Roja Muthiah Research Library

அரவின் அரவத்தால் வன்மை சிதைந்து ஒழிந்து போகும் தன்மை வள்ளுவன் குறளிலே குமிழ்த்தல் காண்போம்.

—ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்—

—புலமிக்கவரை புலமை தெரிதல் புலமிக்க வர்க்கே புலனும் என்றமைக் கேற்ப வள்ளுவன் புலமை அவன் வழித்தோன்றல் கப்பனுக்கன்றோ புலனுயது எனினும் இவ்விரு உளங்களும் இரு பெருந் தூண்க ளன்றோ?

பூநாடு விடுத்துக் காநாடு சென்றான் கமலக் கண்ணன். இலக்குவன் புல்லினல் தொடுத்த தூய சாலையுள் இருந்தாள் தவஞ் செய்த தவமாம் தையல். அல்லையாண்டமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச, வில்லை ஊன்றிய கையும் வெய்துயிர்ப்பும் துணையாக கண் நீர் சொரிய இரவு முழுமையும் காவல் புரிந்தான் கட்டிளங்காளை இளையோன். நாட்கள் மறைய திங்கள் சில சென்றன.

கானிலே ஒரு காட்சி. அக்காட்சி வள்ளுவனை நினைவுறுத்தும். அன்னுன் வாழ்ந்த பொன்னுளில் தமிழ்ச் சொற்கள் எவ்வுருக்கொண்டன, அவை இந் நாளில் எந்நிலையுற்றன எனும் உண்மை உரைக்கும் இலக்கியச் சோலை மலர் நம் முன் தோன்றி மறை தல் காண்போம். தமிழ் மகளை அணிசெய்த பல சொல்லோவியங்கள் கறங்கு போற் சுழலும் காலத்தின் செலவினல் மாண்டு மறைந்தனவே!

தமிழ்ப் பண்பு தவழும் அரிய சொற்களை அவற் றின் பொருள் சிதையாவாறு காத்தல் மண்திணி

Digitized By Roja Muthiah Research Library

ஞாலத்து மக்கட் கெல்லாம் உண்டியினும் உயர்ந்த ஒன்ருகும். அப்பெருந்தன்மை கம்பனிடம் கனிந்தொழுகுமாயின் கலைக்கோவில் கட்டிய கம்பனை வாழ்த்தி வணங்கிப் போற்றிப் புகழ நிலைக்கோவில் ஒன்று கட்டலன்ரே சாலும்!

—முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்—

(நற்றிணை-355)

—பெயக் கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்—

(குறள்-580)

நற்றிணை எனும் தொகுப்பு நூலும் திருக்குறள் எனும் முதல் நூலும் யாண்டு பலவாக தமிழர் விடுத்துச் சென்ற இ ல க் கி ய உடைமைகள். பெய்யும் மழையும் பூவளமும் பிறந்த நாடும் நம் செல்வம். பிறந்த நாடும் நமதாயின் சிறந்த தமிழும் நமதன்ரே?

நாகரிகர் எனும் திருக்குறட் சொல் கண்ணோட்டம் எனப் பொருள் படல் இலக்கிய உண்மை. அருங்குறள் அனைத்தும் தேடித்திரிவோர் கண்ணுறும் ஒரு சொல். ஓரிடத்தில்! அச் சொல்லே நாகரிகர் என நவிலப்படுவது.

அரக்கர் கோன் தங்கையாய்த் தோன்றிய மங்கை சூர்ப்பனகை கல்லெனத் திரண்ட தோளில் கார்முகம் தாங்கிய இராமன் பஞ்சவடி எனும் பஞ்சுவச்சோலையின் அருகே வர நேர்ந்தது.

—அஞ்சொலிள மஞ்ஞையென
அன்னமென மின்னும்

Digitized By Roja Muthiah Research Library

வஞ்சியென நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்—

வந்த குஞ்சநிமிர் சீறடியள் 'யான் கன்னி என் பெயர் காமவல்லி' என அறிமுகம் செய்தும், பெற்றியில் வெற்றி பெறாது அழகொழுகும் சீதையை அழிக்க முனைகிறாள்.

—பெண்பிறந் தேனுக் கென்றால்
என்படும் பிறருக்கு என்று—

கவன்றாள். மயிலுடைச் சாயலாளை எயிலுடைய இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைக்கும் முன்னர் கனவுலகிலே சிந்தையுற்று - 'என்னைப்போல் இடையே வந்தாள் இகழ்விப்பேன் இவளை என்று' சீதையை நோக்கி விரைந்த அரக்கியை இலக்குவன் கண்டான். நில்லடி, எனக் கடுகினன். வில்லொடாது அவள் கூந்தலை திருகுறப் பற்றி மூக்கும் வெம்முரண் முலைக் கண்களும் முறையே போக்கிப் புரிகுழல் விட்டான்! என் செய்வாள் அரக்கி? அரன் இருந்த மலை எடுத்த அண்ணனை அழைத்தாள். இராவணனோ, இராவணனோ என உரப்பினள். ஆண்டு அவ்வஞ்சி வாய் விழிந்தனவே இவ் வஞ்சின மொழிகள்.

—ஆக்கரிய மூக்கு உங்கை
அரி உண்டாள் என்றுரை
நாக்கரியும் தயமுகனார்
**நாகரிகர்** இல்லாமை—

அரக்கியினுக்கு விடையளிப்போம். ஆனல் 'நாகரிகர்' எனும் சொல் எப்பொருளது? என் அண்ணா கண்ணோட்டம் அற்றவன்...என்ற நங்கை மொழிகளில்

Digitized By Roja Muthiah Research Library

வள்ளுவனின் நாகரிக நற்பெருஞ் சொல்களிடம் புரியக் காண்போம்.

வஞ்சனை மானின் பின் மன்னவன் போக, இளையான் சீதை வேண்டுதலால் பின் செல, மாயவடிவின் வந்த இலங்கையர் கோன் நிலங்கீண்டெழுந்து கற்பின் அழலொடு சென்றான்.

'கோதா விரியே, மாதா அனையாய்' என அல்லலுற்று அழைத்து வருந்தினாள். சஞ்சலம் வந்தபோது தையலாரை உய்யவந்து அஞ்சல் என்கிலாத ஆண்மை, ஆண்மையன்று என எண்ணமிட்டு இராவணனுடன் கழுகரசன் போர் புரிந்த போழ்து அரக்கனது அம்பு கடுமையான சிறகிலே முட்டித் திரும்பிய நிகழ்ச்சியை வரைதலின் முன்னர் கம்பர் கருத்தலைகள்,

—மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து—

எனும் குறளொடு ஊடுருவிச் சென்றிருத்தல் வேண்டும். என்னையோவெனின், 'இன்னேக்கியர் இல்வழி எய்திய நல்விருந்து போல்' மீண்டது அவ்வேல் - என்றுரைத்தான் என்க. வருவிருந்து வைகலும் ஓம்ப அகனமர்ந்து இன்சொலும் கூறும் இல்லவள் தேவையன்றோ? அவள் இல்லது உள்ளதென்?

கூடினர் பிரிந்தால் கூறுதல் ஒண்ணுமோ? ஆவி அனைய தேவி பிரிந்தாள். துயர்க்கடலுள் ஆழ்ந்த இராம இலக்குவரின் சின்னாள் விழைந்த கானக வாழ்விலே, சில நிகழ்ந்தன. வாலியை அம்பெய்ய, இறக்கும் நிலையில் அமைந்த அன்னான், தன் இளவலுக்குச் சில நல்லுரைகள் வழங்கினான். இராகவனின் வலிமை உணர்ந்த கவி

Digitized By Roja Muthiah Research Library

குலத்தரசன் 'பெரியாரொடு பழகும் முறைமையினை' விளங்கக் கூறினன்.

வேந்தரை இகல் வேந்தர் என வரைகிறார் வள்ளுவர். எனில் அத்தகையாரின் உறவை மேற் கொண்டு உறைவோர் தீய்க்காய்வார் போல நெருங்கி உறவாடவோ, அல்லது அகன்று வாழவோ விரும்பினால் பயன் இன்று என அறிவுறுத்த எழுந்த புலவர் உள்ளம்

—அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்—

எனும் நன்மொழி நல்கியது.

ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தானின் உடைமை உற்று வாழும் செம்மலே! அரசு பெருமை தருவது. அப்பாரத்தால் மகிழ்ச்சியிற் றிளைக்கும் போழ்து நின்னையும் நின் நிலையினையும் மறந்தாயினும் நல்லறத்தி னின்றும் வழுவாதிருப்பாயாக. வில்லின் செல்வன் மறை மலர்ப்பாதம் நீங்கா வாழ்வது கடன். என்னையோ வெனின்

—மன்னர் என்பார் எரியெனற்கு உரியார்
என்றே எண்ணுதி—

என அரசியல் அறிவுரை வகையற வாரி வழங்கினன், வாலி. என்றோ தோன்றிய பொய்யிற் புலவன் பொரு ளுரை, அறவுரையாகலின் திறமை பெறும் அரசிய லாயிற்று. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடெனில், உலகம் உவப்பப் பலர் புகழ் ஞாயிறு தமிழ் மணம் நுகர்ந்து செல்ல செம்மலர்ச்சோலை சமைத்து, 'கொள கொளக்

Digitized By Roja Muthiah Research Library

குறைபடா கூழுடை வியனகரன்ன தெள்ளாத தமிழ் மலர் பொழியும்' கம்பன் கலை உலகை என்னென்போம்!

அரக்கன் வனத்து அருந்தவம் புரிந்தாள் ஒருசடை நல்லாள். திரிசடையே தெய்வமாக் கொண்டு சில பகல் வாழ்ந்தாள். வாழ்ந்த அந்நாட்கள் இன்பம் நிறை நாட்க ளல்ல.

—தற்காத்து, தற்கொண்டான் பேணி, தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்—

வள்ளுவன் வகுத்த, வாழ்க்கை இயல்புடைய வாழ்க்கைத் துணையாக, வாழ இயலாமை எண்ணி வருந்தினாள். பெண்ணிற் பெருந்தக்க யாவுள? இல்லது என் இல்லவள் மாண்பானால்? என இல்லக்கிழத்தியின் பெண்மையை உரைத்தான் உயர்தமிழ்ப் புலவன். அகன் அமர்ந்து இன் சொல்லினளாகி மோப்பக் குழையும் விருந்தை ஏற்று வாழ்க்கையின் ஒளிகாட்டும் வள்ளலொடு வாழ இயலாது போயினமை எண்ணி எண்ணி ஏக்குற்றாள் ஏந்தெழிற் கற்பினால் ஆகலின்!

—அருந்தும் மெல்லடகு ஆரிட
அருந்தும் என்ன அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ
என்று விம்மும்—

ஆம் விம்மினவள் சிறையிலிருந்த செல்வி சீதை, தற் கொண்டானைப் பேண இயலாத போழ்து.

தமிழ் மொழியின் தகைசான்ற வளத்தினுக்கு வழிவகுத்த வள்ளுவனும், அவர் வழித்தோன்றி வள்ளுவ மலர்களால் காவியச்சோலை சூழ கலைக்கோவில் கட்டிய கம்பனும் தமிழ் மொழியின் கதியாவார் எனக்

கட்டுரை விடுத்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. இன்று நம்மிடை நின்று மறைந்து விடினும், அவர் வாய் மொழிந்த பெரு நூல்களும் ஊழி பெயரினும் தாம் பெயரா வண்ணம் வனப்புற்று விளங்குகின்றன. ஒள்ளிய நெறிமுறை வகுத்த வள்ளுவன் வாழ்ந்த காலமும் உலகச் சூழ் நிலைகளும் வேறு பல யாண்டு களின் பின்னர் பைந்தமிழ் பரப்ப எழுந்த கம்பன் பண்பாடும் காலமும் வேறு எனினும் அவ்விரு இலக்கிய உலகத்தை ஆக்கியார் உளத்து அரும்பிப் போதாகி மலர்ந்த இயற்கை ஒன்று. அது பண்ணிற் சிறந்தது. இலக்கணம் செறிந்தது. இயல்வளம் நிறைந்தது. பழமை சான்றது. புதுமை பொதுளியது. சுழன்றும் தமிழ் தழீஇயது உலகம். அவ்வுலகினை அழகுபடுத்த எழுந்தது வள்ளுவம். அதன் வழி மலர்ந்தது கம்பன் கவிதை. இரு வேறு உலகத்தியற்கை. அவ்வுலகில் வாழும் யாம் குறளைப் பறையறைந்து குமரித் தமிழ் வளர்ப்போம்.

---

Digitized By Roja Muthiah Research Library

# ஒப்புரவு

**திருவாட்டி ஞானம் இரத்தினம்;**

[தமிழ் கல்விப் பகுதி உதவியாளர்; இலங்கை வானொலி நிலையம்,]

அறிவாற்றல் நிறைந்த தலைவர்க்கும், தமிழார்வம் நிறைந்த சபையோர்க்கும், என் வணக்கம்.

பெரியோர்களே!

தமிழ்ப் புலமையும் பற்றும் நிறைந்த இப்பேரவையில், ஆராய்ச்சியும் புதுமையும் ததும்பும் ஒரு பேச்சினை என்னிடமிருந்து நீங்கள் கேட்க முடியாது. ஆராய்ச்சியிலோ அல்லது பரிசீலனையிலோ நான் பாண்டித்தியம் பெற்றவளல்லள். ஆனால் தமிழ் மீதெழுந்த காதல் ஒன்றினாலேயே இங்கு என் சிற்றறிவிற்கு ஏற்றவாறு பேசவந்துள்ளேன்.

வள்ளுவர் மகாநாடு கூட்டவேண்டும் என்று உழைத்த தமிழன்பர்க்கு என் வாழ்த்துக்கள் உரியதாகுக.

நான் எடுத்துக்கொண்ட விஷயமாகிய ஒப்புரவைப் பற்றிப் பேசுமுன் வள்ளுவர் பெருமானைப் பற்றிச் சில கூற விரும்புகிறேன்.

பெரியோர்களே,

திருக்குறள் மகாநாடு என்று ஒன்று ஏன் கூட்டுவான்? எதற்காக ஒன்று நடத்துவான்? இதனால் வரும் பயன் என்ன? திருக்குறள் அறிவு பெருகுவதற்காக என்று சிலர் கூறலாம். வெறும் அறிவினால்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
R. M. DIST TAMIL NADU - INDIA
Digitized By Roja Muthiah Research Library

பிரயோசனம் என்ன? உலகிற்கு வெறும் அறிவுள்ளவனைப்போல் வேறு பெருஞ்சுமை கிடையாது என்பது ஒரு அறிஞர் கருத்து(“**A merely well informed man is the most useless bore on God's Earth" Prof. Whitehead**) திருக்குறள் என்பது ஒரு ஒழுக்க நூல். இப்படிப்பட்ட மகாநாடுகளால் அறிவுமட்டுமன்றி ஒழுக்கமும் முயற்சியும் இன்பமும் பெருகவேண்டும் என்பது என் வேணவா.

பெரியோர்களே,

ஒழுக்கம் என்பதுதான் வள்ளுவர் மந்திரம். இப் பரந்த உலகில் ஒழுக்கத்தில் நன்று எது தீது எது என அளந்து அறிவதற்கு ஒரு அளவு கோல் உண்டா? உண்டு. அதுதான் ஒப்புரவு செய்தல். ஒப்புரவு செய்தல்தான் திருக்குறளின் சாரம், வள்ளுவர் பெருமானின் உள்ளுறை அறம், என்பது அடியேன் கருத்து. என் அபிப்பிராயத்திற்கு ஆட்சேபணைகள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவர் இயல்பிற்கும் ஏற்ற வாறு மெய்ப்பொருள் காண்பது உலக வழக்கம் தானே?! நான் ஏன் இந்த முடிபிற்கு வந்தேன் என்பதற்குக் காரணமுண்டு.

உலகம் ஒருமையை நாடிச் செல்கிறது. இயற்கைப் பரிணமம் சாதிமதபேதமற்ற ஒரு தனி ஒப்புயர்வற்ற சமூகத்தை நாடிச் செல்கின்றது. இதை அனுசரித்த ஒரு உலக தத்துவஞானம் எங்கட்கு வேண்டும். உலகத்தில் எவ்வளவோ ஐக்கிய தேசச் சபைகள் உண்டாகலாம். ஆனால் உலகத் தத்துவஞானம் அதாவது உலகம் முழுவதற்கும் இயைந்த ஓர் தத்துவஞானம் இல்லா விட்டால் பயன் இல்லை. அதற்கு வள்ளுவர் பெருமானின்

Digitized By Roja Muthiah Research Library

குறளே வழிகாட்டி. ஒரு நூல் ஒரு சமயம் எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றி ஓரிடத்தில் அருணந்தி சிவாசாரியார் கூறியிருக்கிறார்.

"ஓது சமயங்கள் பொருளுணரு நூல்கள்
 ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும்
 இவற்றுள்
யாது சமயம் பொருள் நூல்யா திங்கென்னில்
 இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்க தின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
 நிற்பதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்"

இங்கு கூறப்படும் நூல்கள், மறைகளும் ஆகமங்களும் ஆகும். ஆனால் இந்தப் பாட்டில் உள்ளபடி நீதியினால் உலகத்தில் எல்லோர்க்கும் ஒத்த ஒரு பொது சமயம் காட்டி நிற்பது திருக்குறளேயாகும். இதில் உலகினர் எல்லோர்க்கும் ஒரு சமயம் காட்டப்படுகிறது.

வள்ளுவர் நூல், வழக்கமாக நாம் எடுத்துக் கொள்ளும் முறையில் பாட்டுடைத் தலைவனையுடைய ஒரு காவியமன்று. **ஆனால் அது உலக மகா காவியம்.** அதன் கதா நாயகன் **சாதாரணமான தனி ஒருவன்.** ஒவ்வொரு குறளிலும் சாதாரணமான மனிதனைப் பற்றித்தான் அவர் கூறுகிறார். **இந்த மனிதன் ஒரு நாட்டிற்கு ஒரு காலத்திற்குரியவன் அல்லன்.** அதனால்தான் குறளை நான் மகா காவியம் என்கிறேன்.

சாதாரணமான ஒரு மனிதன் இந்த வையத்துள் எப்படி வாழவேண்டும்? அவன் கைக்கொள்ள வேண்டியன யாவை, ஒதுக்க வேண்டியன யாவை, என்பன



Digitized By Roja Muthiah Research Library

வற்றை எல்லாம் வள்ளுவர் வெகு அழகாகப் பூரண மாகக் கூறியிருக்கிறார். அவரின் தலைவன் ஒரு நாட்டிற்கு ஒரு சமயத்திற்கு ஒரு காலத்திற்கு உரிய வன் அல்லன். அவன் எக்காலத்திற்கும் எந்நாட்டிற் கும் உரியவன். இதை நினைந்தே வள்ளுவனார் நூலை வியந்த இறையனார்

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்-குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர் போன்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்"

என்று வெகு அழகாக எடுத்துக் கூறினார்.

இன்னும் அணுவைத் துளைத்து எழுகடலையும் புகுத்திய குறள் வேறு எப்படியிருக்கும்? எழு கடலை யும் தன்னுள் கொண்டதனால் என்பதனாலேயே ஏழு லகத்தையும் தன்னுள் அடக்கியதென்பது புலனாகும். "மெய்ப்பொருள் கண்டு அதை உலகுய்வான் உணர்த் துவது இலக்கியம்" என்று யாழ்ப்பாணத்துப் பெரி யார் ஒருவர் கூறினார். அவர் உரையினை ஒரு உரை கல்லாய்க் கொண்டு நோக்கும் இடத்து, வள்ளுவர் குறளைப் போன்ற ஒரு உலக இலக்கியம் கிடைத்தல் அரிதாகும்.

வள்ளுவர் நூலைப் பலர் பலவிதமாய் ஆராய்கின் றார்கள். வள்ளுவர் வட மொழியிலிருந்து பல அபிப்பி ராயங்களை எடுத்துக் கொண்டார் என்றும், பகவத் கீதை அர்த்த சாத்திரம் முதலியவற்றிலிருந்து பல பொருள்களை எடுத்துக் கொண்டார் என்றும் வட மொழி அபிமானிகள் கூறுவர். தமிழபிமானிகள் அது எல்லாம் வெறும் பொய் என்றும் வள்ளுவர் சொன்

Digitized By Roja Muthiah Research Library

னவை யாவும் அவரின் அறிவின் சக்தியால் பிறந்தவை என்றும் கூறுவர். இப்படியாக முரண்பட்ட கொள்கைகளைப்பற்றி ஆராய்வது எனது நோக்கமன்று.

உலகத்தின் அறிவுச் செல்வம் எல்லாம் ஒருவரால் தனியே உண்டாக்கப்பட்டனவல்ல. கலைகளாயினும் சரி, சாத்திரங்களாயினும் சரி பல அறிஞர்களால் தொடர்பாக வளர்க்கப் பட்டனவாகும். ஒருவர் கண்டறிந்த உண்மையின் ஒரு பகுதியை மற்றவர் பூரணமாக நமக்கு எடுத்துக் காட்டுவர்.

முழுவதும் புதியனவாக வில்லா விட்டாலும் ஒவ்வொரு ஆசிரியரும் தத்தம் கற்பனைத் திறத்தாலும் உள்ளொளியாலும் பலவித மறைபொருள்களை நமக்குப் புதியனவாகக் காட்டுவர். வள்ளுவர் வடமொழி நூல்களை அறிந்தவர். அவை தம் மரபை நன்கறிந்தவர். எனினும் அவர் கண்மூடித்தனமாக வடமொழியார் கூறிய முடிபுகளைக் கைக்கொண்டவரல்லர். அவர் நூல் சாதி மத பேதமற்ற அறநூல். அதில்தான் வள்ளுவர் பெருமை யிருக்கிறது. சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னரே அவர் ஒரு பேதமற்ற மக்களினம் வாழ்வதற்கு வழி காட்டினர். சாதிகளும் சமயங்களும் விதை விட்டு வளர்ந்த காலத்திலேயே கலங்கா மெய்ம்மை விலங்கற்பாறை போன்ற ஓர் நூலை நமக்கு அவர் தந்தார். மக்களை ஒரு குலமாகக் கண்ட அந்த ஞானக் கண்ணில்தான் அந்தத் தமிழ் முனிவனின் தனிப்பெருமை தங்கியுள்ளது.

வள்ளுவர் நூல் ஒரு ஆராய்ச்சி நூல் மட்டுமன்று. அது ஒரு வாழ்க்கைக் கைநூல். ஒவ்வொருவரும் வாசித்துப் படித்து வள்ளுவர் புலமையை மெச்சுவதற்கு மட்டும் எழுந்த நூலன்று. அப்படியெனில் வள்ளுவர் பொன்னை மணியைப் பொற்கொடி மாத

Digitized By Roja Muthiah Research Library

ரைக் காதலை எல்லாம் சேர்த்திழைத்த நெஞ்சை அள்ளும் ஒரு காவியாரத்தை அளித்திருப்பார். வள்ளுவர் அப்படிப்பட்ட புலவர் அல்லர். வள்ளுவர் மகா ஞானி. என்றும் புலராது எந்நாட்டார்க்கும் ஒளி காட்டும் ஒரு கற்பகத் தருவை அவர் நமக்குத் தந்து போந்தார். மனிதன் முறைப்படி வாழவேண்டும், தெய்வத்தன்மை பெற வேண்டும், தீயன யாவும் ஒழிய வேண்டும், அன்பும் அறனும் வாழ வேண்டும், என்ற இந்த இலக்கியமே அவர் உள்ளத்தில் தேங்கிக் கிடந்தது. புலவர் வரிசையில் நின்று ஓர் உணர்ச்சியை, அழகை அணி அலங்காரங்களினுல் எடுத்துக் காட்ட அவர் நிற்கவில்லை. வள்ளுவர் நூலைப் பயிலப் பயில எவர்க்கும் இந்த உண்மை தோன்றும். திருக்குறள் படித்து மகிழ்வதற்கு மட்டுமன்று; பெரிய சபைகளுள் மேற்கோள்களாக எடுத்துக் காட்டுவதற்காவும் அன்று; ஆனுல் யாவரும் தத்தம் வாழ்முறையை அதன்படி ஒழுகுவதற்காக எழுந்த நூலாகும். இதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும்.

பெரிய காவியங்கள் இலக்கியங்களினுல் என்ன பயன்? இதை வள்ளுவரையே கேளுங்கள். அவரின் இரண்டாவது குறளே இதைக் கூறுகிறது. கற்றதனலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது தான். நற்றாள் தொழுவது என்றால் விக்கிரகாராதனை, ஆலய வழிபாடு அல்ல. வாலறிவன் நற்றாள் எங்கே உள்ளது? இதற்கு ஒரு அரிய மறுமொழியை ரவீந்திரர் கீதாஞ்சலியில் கூறியிருக்கிறார்:

**"Here is thy Footstool and there rest thy feet where live the poorest and lowliest and lost"**

"தீனர், திக்கற்றவர், தாழ்ந்தோருடைய குடிசைகளிலே உன் திருவடிகள் தங்குகின்றன"

அது மட்டுமன்றி "எவ்வுயிரும் பாரபரன் சந்நிதியாகும்" "இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்ற ஆன்றோர் வாக்கை நோக்குங்கள். அப்படி நோக்கும் பொழுது வாலறிவன் நற்றாள் தொழுவது என்பது உலக உயிர் அனைத்தையும் தொழுவதை ஒக்கும்.

பெரியோர்களே, நான் இதுவரை வள்ளுவர் குறிக்கோள் என்ன என்பதை என்னறிவிற்கு எட்டிய வாறு கூறினேன். வள்ளுவரின் பாயிரத்து இரண்டாவது குறளே திருக்குறளின் பயனை நமக்கு எடுத்து உரைக்கிறது. அதை மனதுள் வைத்துக் கொண்டே இனி நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம். ஆனல் முதலில் திருக்குறளின் அமைப்பைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளை உடையது. அறத்தில் சிறப்புடைய ஒழுக்கத்தையும், பொருளில் இருமையும் பயப்பதாய பொருளையும், இன்பத்தில் காமவின்பத்தையும் அவர் கூறினர். இதில் காமத்துப் பாலை நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியதில்லை. அதில் காதலின் பெருநலனை அவர் அழகாகக் கூறியிருக்கிறார். அறம் பொருள் இரண்டிலும் வள்ளுவர் பொதுவாக ஒழுக்கத்தையே கூறியிருக்கிறார் என்று சொல்லலாம். அரசியல் அங்கவியல் இரண்டும் அரசர்க்குரியவை போல் தோன்றினும் ஆராயுமிடத்து அவை எல்லோர்க்கும் பொதுவானவை ஆகும். முடியாட்சிக்

Digitized By Roja Muthiah Research Library

காலங்களில் அரசர்க்குரிய குணங்களைப் பற்றி நாம் கவனியாது இருக்கலாம். ஆனால் பாரதியார் கூறிய வாறு நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆன பின்பு அரசர் அமைச்சருக்கு உரிய ஒழுக்கங்களை நாம் பெறுதிருப்பது எப்படி? அன்றியும் அவ்வதிகா ரங்களின் கீழ் குறள்களை வைத்து நோக்கும்பொழுது அவை சிறப்பாக ஒவ்வொரு பொருளைக் கொடுத்தாலும் பொதுவாக அவை ஒவ்வொரு சாதாரண மனிதனுக் கும் பொருந்தியனவாகும். அறம் பொருள் என்னும் இரண்டையும் நாம் எடுத்துக் கொண்டு அவர் கூறிய பொருள்களைக் கவனிப்போம்.

அறம் பொருள் என்னும் இருபால்களையும் நோக்குமிடத்து இன்னும் ஒரு உண்மை உங்களுக்குப் புலப்படும். அறப்பாலில் அகப் பண்பாட்டிற்குரிய ஒழுக்கத்தையும் அவர் கூறியிருக்கிறார். அகப் பண் பாடு என்றால் என்ன? நெஞ்சத்துள் மாசிலனாகி அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம், இன்சொல், பொறை, ஈகை, தவம், வாய்மை, முதலிய பண்பு களுக்கு உறைவிடமாகி ஒருவன் ஒழுகுதலாகும். பொருட்பாலில் மனிதன் சமூகத்தில் எப்படி ஒழுக வேண்டும்,அதற்கு வேண்டிய பண்புகள் என்னென்ன என்று அவர் கூறியிருக்கிறார். ஊக்கம், ஆள்வினை யுடைமை, சொல்வன்மை, வினைத்தூய்மை, நட்பு முதலிய அதிகாரங்களைக் கவனித்தால் இது புலப்படும்.

மனிதனின் பண்புக் குணங்களைத் தர்க்கரீதியாகப் பிரித்தல் ஒரு பொழுதும் இயலாது. அடிப்படையான சில பண்புகளையே நாம் எடுத்துக் கூறலாம். இன் னின்ன பண்புகளை மனிதன் உடையவனாய் இருத்தல்

Digitized By Roja Muthiah Research Library

வேண்டும் என்று வரையறுத்து ஒருபொழுதும் சொல்ல இயலாது. வள்ளுவர் பெருமான் இதை நன்கு அறிந்திருந்தார். அதற்காகவே பொருட்பாலில் "ஒழிபியல்" என்று ஒரு இயல் வகுத்து 13 அதிகாரங்களை வைத்தார். இந்த இயல் பொருட்பாலிற்கு மட்டும் அன்றி அறத்துப் பாலிற்கும் ஒரு ஒழிபியல் போன்றதாகும். வள்ளுவர் எவ்வளவோ பண்புகளை எடுத்துக் கூறினார், எனினும் அவர் மனம் திருப்தி அடையவில்லை. அதனாலேதான் ஒழிபியலில் மீண்டும் சிலவற்றைக் கூறுகிறார்.

அதனுள் "சான்றாண்மை" என்பது ஒரு உயர்ந்த அதிகாரம். வள்ளுவர் பெருமான் இந்த அதிகாரத்தைச் "சால்புடைமை" என்று கூறாது "சான்றாண்மை" என்று கூறியதை யாவரும் உற்று நோக்கவேண்டும். "சால்பு" என்பது அமைவு, இசைவு, குணம் முதலியவற்றைக் குறிக்கும். சான்றாண்மை என்பதைப் பரிமேலழகர் பல குணங்களாலும், நிறைந்து அவற்றை ஆடற்றன்மை என்கிறார். குணங்கள் நிறைந்தால் போதாது அவை தொழிற்பட வேண்டும். இந்த அதிகாரத்தில் மூன்றாவது குறளாக அமைத்து ஒரு அற்புதமான குறள் பாடியிருக்கிறார்.

"அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."

சால்பு என்று சொல்லப்படுகின்ற குணநலத்துக்கு ஐந்து தூண்கள் உள்ளன. முதலாவதாக அன்பு, இரண்டாவது நாணுடைமை, மூன்றாவது ஒப்புரவு, நான்காவது கண்ணோட்டம், ஐந்தாவது வாய்மை. இந்தக் குறளில் திருக்குறளின் சாரம் முழுவதும் தங்கி

Digitized By Roja Muthiah Research Library

யிருக்கிறது. இந்த ஐந்து நலங்களையும் பற்றி வள்ளுவர் பெருமான் தனித்தனி அதிகாரங்களில் கூறியிருக்கிறார்.

பெரியோர்களே, இந்த ஐந்து பண்புகளையும் நோக்கிப் பாருங்கள். இதில் வள்ளுவர் பெருமான் என்ன கூறுகின்றார்? மனிதர் அன்பும் வாய்மையும் பூண்டு பழிபாவச் செய்கைகளைத் தவிர்த்து அருள் விளங்கும் இன்முகத்தை உடையவராய் **ஒப்புரவு** செய்தல் வேண்டும் என்று கூறுகிறார். இந்த ஒப்புரவு தான் மனித தர்மங்களுள் தலைசிறந்தது. சான்றாண்மைக்கு உரைகல்லாய் உள்ளது ஒப்புரவுதான்.

ஒப்புரவு என்றால் என்ன? இந்தச் சொல் பழைய ஒரு அருமையான சொல். இதை நாம் இப்பொழுது மறந்து விட்டோம். ஒப்புரவு என்பதைப் பிரித்துக் கருத்தெடுக்கும்பொழுது சமமான அறிவு என்று கருதப்படும். ஆனால் "ஒப்புரவு" என்ற சொல்லிற்கு இன்னும் ஒருவரும் சரியான கருத்துக் கூறவில்லை என்பதே என் அபிப்பிராயம். வள்ளுவர் பெருமான் இந்தச் சொல்லை மிகவும் அழகான பொருள்படும்படி உபயோகித்திருக்கிறார். ஒப்புரவறிதல் என்பதற்கு பரிமேலழகர் "உலக நடையினை அறிதல்" என்கின்றார். மணக்குடவர், "தக்கார்க்குத் தக்கன அறிந்து தம்மால் இயன்றதைக் கொடுத்தல்" என்கிறார். மணக்குடவர் பின்னும் ஓர் இடத்தில் ஒப்புரவானது "கைம்மாறு வேண்டாத கொடை" என்கிறார். இனி இதன் கருத்தை வள்ளுவர் பெருமானைக் கேட்போம். **ஒப்புரவறிதல்** என்னும் அதிகாரத்தில் இரண்டாம் குறளில்:

Digitized By Roja Muthiah Research Library

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

என்கிறார். நாம் பாடுபட்டுத் தேடிய பொருள் எல்லாம் மற்றவர்க்குக் கொடுத்தற் பொருட்டேயாம் என்கின்றார். இங்கு தாளாற்றித் தந்த பொருள் என்பது முயற்சியைச் செய்து தேடிய பொருள் என்பதாகும். பொருள் என்றால் காசு, பணம், காணி, நிலம் மட்டும் அல்ல. அது மனிதர்க்குப் பயன்படும் யாவற்றையும் குறிக்கும். கல்வியறிவையும் அது குறிக்கும்.

"தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதன் கருத்து தகுதியுடையவர்க்கு அல்லது கொடையை, உதவியைத் தேவைப்பட்டு நிற்பவர்க்கு உதவி செய்தலாகும். தக்கார் என்பதற்கு முனிவர், அறிவுடையோர் என்று மட்டும் கருத்து எடுத்துக் கொள்ளக்கூடாது. தக்கார் என்பது உண்மையில் ஒரு உதவியை வேண்டி நிற்பவரைக் குறிக்கும். அது அநேகமாய்ப் பொருள் இல்லாதவரைத்தான் குறிக்கும். "வறியார்க் கொன்று ஈவதே ஈகை" என்பதிலிருந்து இது நன்கு புலப்படும்.

இனி அடுத்த குறளைக் கவனியுங்கள்:—

"ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

எவனை உயிர் வாழ்கிறவன் என்று சொல்லலாம்? ஒத்ததறிவான் தான் உயிர் வாழ்வான். ஒத்ததறிவான் என்பது உலக நடையினை அறிந்து அதற்கு ஒத்தது செய்வான் என்பதாகும். மற்றனையவர் யாவரும் செத்த பிணங்களை ஒப்பர்.

Digitized By Roja Muthiah Research Library

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு."

இதன் பொருள் உலக நடையினை அறிந்து ஒழுகுபவனின் திருவானது ஊரில் எல்லார்க்கும் பொதுவாய் இருக்கின்ற குளத்தில் நீர் நிறைந்ததை ஒக்கும். இதிலிருந்து நமக்குத் தெளிவாக இருப்பது என்னவென்றால் ஒருவன் கொண்டுள்ள செல்வம் யாவும் மற்றையவர்க்குப் பயன்படவேண்டிய நம்பிக்கைச் சொத்தாகும். இங்கு மகாத்மா காந்தி அடிகள் அடிக்கடி கூறும் ஒன்றனைக் கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது. அவர் அடிக்கடி பணக்காரரை நோக்கிச் சொல்லுவார்— "நீங்கள் கொண்டுள்ள செல்வம் யாவையும் உங்கள் பொருளென நீங்கள் கருதக்கூடாது. ஆனால் அது ஏழைகட்கு உதவும் பொருட்டு ஆண்டவன் உங்கட்கு அருளிய நம்பிக்கைச் சொத்தாகும்" என்பர். பேரறிவாளன் திரு, ஊருணி நீர் போலிருக்கும் என்பதில் ஒரு பொழுதும் ஐயமில்லை.

இதுவரை நான் கூறிய குறள்களிலிருந்து அறியக் கிடப்பது என்ன என்றால் ஒப்புரவு என்பது எல்லோரையும், தம்மவரையும் பிறரையும் ஒப்பாகக் காண்பதாகும், அறிவதாகும். ஒப்பாகக் காணுமிடத்துத்தான், அந்த சம உணர்ச்சி வந்த பொழுதுதான், மனிதனின் திரு பொருள் செல்வம் யாவும் மற்றவர்க்குப் பயன்படும். ஒப்புரவு உண்டாகும். உலகத்தோடு ஒட்ட வாழ்ந்து ஒத்தது அறிந்து "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு" செய்வதுதான் ஒப்புரவு செய்தலாகும். இந்த ஒப்புரவு எப்படிப்பட்டது என்பதற்கு இன்னும் ஒரு மேற்

Digitized By Roja Muthiah Research Library

கோள் சொல்ல விரும்புகிறேன். இது நாலடியாரில் வருகிறது.

> "இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொல்
> என்று மிலரா மியல்பினற்—றுன்னித்
> தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரேயார் மாட்டுந்
> தலைமக்க ளாகற்பா லார்."

இவர், இப்படிப்பட்டவர், என்னினத்தவர், பிறர், என்று சொல்லும் சொல் எக்காலத்தும் சொல்லும் தன்மை இல்லாதவராய் இயற்கையில் யார்மாட்டும் இணங்கிச் சேர்ந்து வறுமையுற்ற மக்களின் துன்பங்களை நீக்குபவரே மக்களில் தலை சிறந்தவர்கள் ஆவார். பெரியோர்களே, இதுதான் ஒப்புரவு. ஒப்புரவிற்கும் ஈகைக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், ஈகை யாருக்கு ஒரு பொருளைக் கொடுக்கிறோ மென்பதை அறிந்து கொடுப்பது; ஒப்புரவு என்பது யாருக்கென்று தெரியாமல் பொதுப்பட எல்லோர்க்கும் செய்தலாகும்.

ஒப்புரவு என்பதை இன்னும் விரித்துக் கூறுகிறேன். நான் இப்பொழுது கூறுபவை என் சொந்த அபிப்பிராயங்கள் அல்ல. ஆனல் பல இடங்களிலிருந்தும் திரட்டியவையாகும். ஒப்புரவு செய்தல் என்பது சமூகத்தைச் சரிவர அறிந்து எங்கெங்கு, என்னென்ன தேவை இருக்கின்றதோ அதை இயலுமளவில் பூர்த்தி செய்தலாகும். இதை மனதில் வைத்தே ஔவையாரும் "ஒப்புரவொழுகு" என்றார். ஒப்புரவு செய்தல்தான் மனிதனின் சிறந்த கடமையும் செயலுமாகும்.

ஒப்புரவு என்ற சொல்லில் எவ்வளவோ தொனிப் பொருள் உண்டு. ஒப்புரவு என்றால் உபகாரம், ஒற்

றுமை, கொடை, சமம், சமாதானம், முறைமை, ஒழுங்கு, ஒத்த அறிவு முதலிய எல்லாம் தொனிக்கும். எங்கெங்கு உலகியல் பாங்கு தளர்ந்து சமம் இல்லாமல் இருக்கிறதோ அங்கு வேண்டியன செய்து அதை மற்றைய பாகங்களுடன் ஒப்பாகச் செய்வதுதான் ஒப்புரவாகும். உலகத்தின் ஒருமையை எத்துணையும் பேதமுருது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உடையவராய் உவக்கின்ற தன்மைதான் ஒப்புரவறிதல். ஒப்புரவொழுகு என்பது மேற்படி அறிந்த அறிவினல் எவ்வுயிரையும் உபகரிக்கின்ற ஒழுக்கம்தான் ஒப்புரவொழுகல். ஒப்புரவு என்னும் பொழுது வள்ளுவர் பெருமான் மக்கள் தொண்டை மனதில் வைத்திருந்தார் என்பதில் ஒரு ஐயமும் இல்லை. இது எப்படியாகும் என்பதைக் கவனிப்போம்.

நான் முதலில் கூறிய குறளை எடுத்துக் கொள்வோம். அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை இவை ஐந்தையும் கொண்டு ஆண்டவர் தான் சான்றோர். சான்றாண்மை என்ற சொற்றொடரிலேயே வள்ளுவர் வெறும் அமைதியான பண்புக் குணங்களுக்கெல்லாம் அவற்றை ஆடற்றன்மை, அதாவது அவற்றைச் செயலில் காட்டும் தன்மைக்குத் தான் முக்கிய இடம் கொடுக்கிறார்,

இந்த ஐந்து பண்புகளையும் கவனிப்போம். இவற்றில் நடுநாயகமாக விளங்குவது ஒப்புரவு. ஒப்புரவில்லாத மற்றைக் குணநலன்கள் எல்லாம் ஓரளவிற்கு மட்டும் நல்லனவே அன்றிப் பொதுமக்கட்கு அவற்றால் பயனில்லை. உண்மையை ஆராய்ந்து பார்க்கும்

Digitized By Roja Muthiah Research Library

பொழுது ஒப்புரவு செய்வதற்கு அன்பு வேண்டும். எப்படிப்பட்ட அன்பு? பரிமேலழகரே இதை அழகாகச் சொல்கிறார். சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர் மேலதாய அன்பு. இதுதான் எவர்க்கும் வேண்டும்.

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு."

என்பது குறள். உயிர் என்பது அன்பின் வழியது, அன்பினால் வந்தது, அன்பினால் நிலைத்து நிற்பது. உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளம் அன்பிருக்கிறது என்பதுதான். அதைவிட உயிர் வாழ்வதற்கு வேறு அடையாளம் கிடையாது. எனவே ஒருவன் தன் சுற்றத்தாரில் குடும்பத்தில் மட்டும் அன்பு வைத்து வாழ்ந்தால் அவன் ஏனைய உலகத்தார்க்கு இறந்தவன் போலவே கருதப்படுவான். எவர்க்கும் எங்கும் எவரிடத்தும் எப்பொழுதும் அன்பு வேண்டும். அப்பொழுதுதான் ஒருவன் உலகில் உயிரோடு இருக்கிறான் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட அன்பு இருந்தால்தான் ஒப்புரவு செய்தல் இயலும்.

அடுத்தபடியான பண்பு "நாண்". நாண் என்பதன் பொருள் என்ன? நாணுடைமை என்பது அறம் பொருள் இன்பங்களிற் பிறர் பழியாமல் நாணுதல் என்பர் மணக்குடவர். நாண் என்பது பணிவு. நீதியல்லாதவற்றைச் செய்யவரும்பொழுது இயற்கையாகவே தோன்றும் கூச்சம். இன்னும் ஒப்புரவு செய்யும் பொழுது மற்றவர் மனம் நோகாதபடி பணிவும் ஆதரவும் காட்டிப் பெருமிதம் அற்று இருத்தலே நாணுடைமை. அடக்கம் உடைமை பெருமிதம் இன்மை முதலியன பொருந்தியிருப்பதுதான் நாணுடைமை

Digitized By Roja Muthiah Research Library

ஆகும். நாணுடைமை என்பதில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று பழிபாவங்கட்கு அஞ்சியிருத்தல், மற்றையது பணிவுடைய நாணுடைமை.

அடுத்தபடியாகக் "கண்ணோட்டம்" என்ற பண்பினை எடுத்துக் கொள்வோம். "தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியனமறுக்கமாட்டாமையே கண்ணோட்டம்," என்று பரிமேலழகர் கண்ணோட்டத்தைப் பயின்றவர்க்கு மட்டுமே எனச் சுருக்கி விடுதல் கண்ணோட்டம் போலத் தோன்ற வில்லை. ஆகவே கண்ணோட்டம் என்பது உலகத்துள்ளார் யார் மாட்டும் காட்டும் ஓர் தண்ணளி என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனி அடுத்த பண்பு வாய்மை. "வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல்." பிறிதோர் உயிர்க்குத் தீமை தரக்கூடியன சொல்லாமை, அஹிம்சை என்று சொல்லலாம்.

பெரியோர்களே, இவ்வளவு பண்புகளையும் ஒருங்கே சேர்த்துப் பாருங்கள். தம்மவர் மேலன்றிப் பிறரிலும் அன்பு வைத்து, யாவரிடத்தும் பணிவும் அடக்கமும் உடையவராகி, அவர்கட்குத் தீமை அல்லாதன பேசி, உள்ளம் நெகிழ்ந்து முகமலர்ந்து யாவர் மாட்டும் ஒப்புரவு செய்வதுதான் சான்றாண்மை யாகும். இவ்வளவு பண்புகளும் தலையாய ஒப்புரவு செய்வதிலேயே சுற்றி நிற்கின்றன என்பதை மறந்து விடக்கூடாது. "அன்பு நாண் **ஒப்புரவு** கண்ணோட்டம் வாய்மை" நாலு பண்புகளுக்கும் நடுநாயகமாகத் தலை சிறந்ததாக இருப்பது ஒப்புரவே ஆகும். இவ்வளவு பண்புகளையும் நோக்கும் பொழுது ஒப்புரவு என்பது

Digitized By Roja Muthiah Research Library

சமூகத்தொண்டு இல்லாமல் வேறு என்னவாய் இருக்க முடியும்? திருவள்ளுவர் பொதுமக்கள் தொண்டை, நன்மையை மனதில் வைத்திருந்தார் என்பதில் ஒரு விதமான ஐயமும் இல்லை. அதற்குச் சான்றாகப் பல குறள்களை எடுத்துக் காட்டலாம். ஒன்றை மட்டும் கூறுகிறேன்.

இல்லை என்று இரப்பவர்க்கு அவர் நெஞ்சம் எவ்வளவு இரங்கி உருகியது என்பதையும் அவர்க்கு உதவாதவரை நினைக்கும்பொழுது அவர் நெஞ்சம் தீய்ந்து கருகிவிடுவதையும் திருக்குறள் அழகாக எடுத்துக் காட்டுகிறது.

> "இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
> வுள்ளதூஉ மின்றிக் கெடும்"

மனிதர் தம் வறுமையால் பிறரிடம் சென்று இரந்து நிற்பதை எண்ண உள்ளம் உருகும். அந்நிலையைக் கண்டும் வைத்திருப்பவர் ஒளித்து இல்லை என்று சொல்வதை நினைத்தால் இந்த உருகக்கூடிய தன்மையும் இல்லாமல் நெஞ்சம் முறிந்துவிடும்.

இதுவரை குறள் உலக இலக்கியம் என்றும், அதில் கூறப்பட்ட சகல பண்புகளுக்கும் தலைசிறந்ததாய் அமைந்தது சான்றாண்மை எனவும், சான்றாண்மைக்கு உயிர் நாடியாய் விளங்குவது ஒப்புரவு என்பதையும் கண்டோம். வள்ளுவர் தமிழ்ப்பண்பின் வழி வந்த ஞானி. அதனால்தான் ஒப்புரவிற்கு ஓர் உயர்ந்த இடத்தை அவர் கொடுத்தார். தமிழ்ப் பண்பாட்டின் சமரச உட்கிடக்கையை அவர் அறிந்த படியால்தான் அவர் தமிழனுக்கன்றி உலகினுக்கே ஓர் உயரிய நூல் அளித்தார். "வள்ளுவன் தன்னை

Digitized By Roja Muthiah Research Library

உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று பாரதியார் போற்றியதன் பொருள் வள்ளுவர் உலகினுக்குரியவர் என்பதுதான்.

உயர்ந்த இலட்சியச் சிந்தனையாளரின் வாழையடி வாழையாக வந்தவர் வள்ளுவர். வள்ளுவர் இதயம் தமிழ்ப் பண்பாட்டின் இதயம். மக்கள் யாவர்க்கும் தனிப் பெரும் இலட்சியம் ஒன்று வேண்டும். அது தான் ஒப்புரவு என்று வள்ளுவர் பெருமான் எங்கட்கு அறிவுறுத்துகின்றார். இதையே அவர்க்கு முன்னிருந்த இளம்பெருவழுதி என்ற அரசன் புறநானூற்றில் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறான்.

"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்
அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே."

(புறம் 182)

தமக்கென்று முயலாத முயற்சி இல்லாதவராய்ப் பிறர்க்கென முயல்வார்கள் இந்த உலகத்தில் இருப்பதனால்தான் இந்த உலகம் நிலைபெற்று நடக்கிறது. அவர்கள் இல்லையேல் உலகம் இல்லை.

இவ்வுலகம் நடைபெறுகிறது. எதனால்? இந்திரர் அமிழ்தம் கிடைப்பதாயினும் அதை இனிதென்று தனித்து உண்பார் இல்லை, எவருடனும் வெறுப்புக்

கொள்வாரில்லை, பிறர் அஞ்சத்தகும் துன்பம் வரின் அத்துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதைத் தீர்ப்பதற்கு முயல்வாரன்றி ஓய்ந்திருக்கார். பழி என்றால் அதனல் உலகம் முழுவதையும் பெறுவதா யிருந்தாலும் அப் பழியை ஏற்கார். கவலை கொள்ளார். இப்படிப்பட்ட தன்மைகளை உடையவராய்த் தமக்கென்று முயலாது பிறர் பொருட்டே முயல்பவர் உள்ளபடியால்தான்-இவ் வுலகம் உள்ளது. பெரியோர்களே,

இந்தச் செய்யுளுடன் "அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்தும் சால்பூன்றிய தூண்" என்ற குறளை ஒப்பிட்டுப் பாருங்கள்.

அமிழ்தம் இயைவதாயினும் தமியர் உண்டலும் இலர் அதாவது தனித்தொருபொழுதும் அருந்தமாட் டார். இதனல் ஒப்புரவும் கண்ணோட்டமும் பெறப் படும். முனிவிலர் என்பது அன்புடைமையைக் குறிக் கும். பழியெனின் கொள்ளலர் என்பது நாணுடை மையைக் குறிக்கும். இச் செய்யுளில் இருந்தும் ஒப் புரவே உலகின் தலையாய அறம் என்பது வெள்ளிடை மலை.

இவ்விடத்தில் பெரிய புரட்சி வீரரான லெனின் கூறியதைச்சொல்வது மிக அவசிய மாகின்றது. தமக் கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்வதுதான உயர்ந்த இலட்சியம் என்பதை அவர் அழகாகக் கூறுகிறார்:

பெறுமவற்றுள் மனிதப் பிறவியைப் போல் பெருந்தனம் வேறில்லை. இப்பிறவி தப்பினல் ஏது வருமோ யாரறிவர்? ஆதலால் ஆண்டுகள் தோறும்



Digitized By Roja Muthiah Research Library

கவலையும் பச்சாத்தாபமும் வந்து நம்மை வருத்தாமல் வாழவேண்டும். அற்ப பேடித்தனமாகக் கழிந்த வாழ்வு நம்மை அழுத்தி அழுத்தி வருத்தாமல் வாழவேண்டும். இறக்கும் பொழுது, "என் உடல் பொருள் ஆவி அனைத்தும் உலகில் சிறந்த பணியான மனிதனின் விடுதலைக்கு உழைப்பதற்கே அர்ப்பணம் செய்தேன்" என்று சொல்லக் கூடியதாக வாழவேண்டும்.

பெரியோர்களே,

திருக்குறளில் சிந்தனைச் செல்வத்தைவிட இன்னும் பெரிய செல்வங்கள் உள. ஒன்று சொற்செல்வம். தமிழரிடை பிற்காலத்தில் வந்த கலாச்சாரக் கலப்பால் சில அருமையான பழந்தமிழ்ச் சொற்கள் வலியும் வழக்கும் இழந்துவிட்டன. உதாரணமாக சால்பு, கண்ணோட்டம், நாணுடைமை, பண்பாடு, ஒப்புரவு என்ற இந்தச் சொற்களைப் பாருங்கள். இந்தச் சொற்களில் அருமையான கருத்தமைதி உள்ளது. மனிதனுடன் மனிதன் அமையவேண்டும், ஒன்றவேண்டும் என்ற பொருள்கள் இதில் உள்ளன. ஆனால் அவை இப்பொழுது நல்ல வழக்கில் இல்லை. உதாரணமாக **ஒப்புரவு** என்ற சொல்லைவிடச் **சமதர்மம்** என்பது எந்த விதத்தில் சிறந்தது? சமதர்மம் என்பது இரவற் சொல்—இரவற் கொள்கை. ஒப்புரவென்பது சமதர்மத்தை விட உயர்ந்தது.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

ஈட்டிய பொருள் எல்லாம் எதற்கு? வெளாண்மை செய்தற் பொருட்டு. எப்படி ஈட்டிய பொருள்? தாளாற்றித் தந்த பொருள் — அதாவது பாடுபட்டு ஓய்விலாது

Digitized By Roja Muthiah Research Library

உழைத்துச் சேர்த்த பொருள். யார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு? தக்கார்க்கு. அதாவது உதவி தேவைப்பட்டு நிற்பவர்க்கு. இதிலிருந்து பெறப்படுவது என்ன?

"எவரும் இயன்ற அளவு உழைக்க வேண்டும்; தேவையான அளவு எடுக்கவேண்டும்"

இதைத்தான் **"Each Man working according to his capacity and receiving according to his wants"** என்று பொது உடைமை வாதிகள் சொல்வார்கள். இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்றால் திருக்குறள் கடமையைச் சொல்லுகிறது. பொதுவுடைமை (**Communism**) உரிமையைச் சொல்லுகிறது. ஒரு பொருளைக் கிழக்கிலிருந்து பார்ப்பதற்கும் மேற்கிலிருந்து பார்ப்பதற்கும் உள்ள வித்தியாசம்தான் இந்தக் குறளிற்கும் பொது உடைமைக்கும் உள்ள வித்தியாசம். இன்னும் குறள் கடமையை மேலாகச் சொல்லுகிறது. சாதாரண உழைப்புடன் நிற்கக்கூடாது, நன்றாக உழைக்கவேண்டும் என்று சொல்கிறது. மற்றவர்க்குக் கொடுக்கும் அளவிற்கு ஒப்புரவு செய்யவேண்டும். தமிழ்ப் பண்பாட்டின் இதயமாய குறளே அதற்கும் அளவைக் கூறுகின்றது.

"ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து"

என்கிறார் வள்ளுவர் பெருமான்.

ஒப்புரவு செய்வதால் ஒருவனுக்குக் கேடு வந்தாலும் அவன் சலியாது தளராது தன்னைத் தானும்

Digitized By Roja Muthiah Research Library

விற்றேனும் ஒப்புரவு செய்து கொள்ளவேண்டும். தளராது உழையுங்கள்; உங்களை விற்றேனும் ஒப்புரவு செய்யுங்கள்; இப்படிப்பட்ட ஒப்புரவை விடச் சிறந்த சமதர்மம் பொதுவுடைமைக் கொள்கை உலகில் உண்டோ?

பெரியோர்களே,

அகத்தினிலே அன்பு வேண்டும்
வாக்கினிலே வாய்மை வேண்டும்
இன்சொல்லும் கண்ணோட்டமும் வேண்டும்
பணிவும் பண்பாடும் வேண்டும்
உலக இன்பம் தன் இன்பமாக வேண்டும்
கைம்மாறு வேண்டாக் கடப்பாடு செய்யவேண்டும்
அதுவும்
ஒல்லும் வகையால் ஓவாதே செய்யவேண்டும்
அதுவே ஒப்புரவு.

வணக்கம்.

Digitized By Roja Muthiah Research Library

# சான்றோன் யார் - அறிஞனா, வீரனா?

மயிலை. சீனி. வேங்கடசாமி

தமிழ் நூல்களிலே **சான்றோன்** என்னும் சொல் பயின்று வருகிறது. கல்வி கேள்விகளில் சிறந்தவன், நற்குண நல்லொழுக்கம் உடையவன், அறிஞன் என்று இக் காலத்தில் சான்றோன் என்னும் சொல்லுக்குப் பொருள் கூறப்படுகிறது. அதாவது, அறிஞன் என்னும் பொருள் மட்டும் இச் சொல்லுக்குப் பொருளாக இக்காலத்தில் வழங்கப்படுகிறது. பண்டைக் காலத்திலே சான்றோன் என்னும் இச் சொல் **போர்வீரன்** என்றும் **அரசன்** என்றும் வேறு இரண்டு பொருள்களை யும் கொண்டிருந்தது. ஆனால், இந்தக் காலத்திலே சங்க காலத்தில் வழங்கிய வீரன், அரசன் என்னும் பொருள்கள் மறக்கப் பட்டன; மறைந்துவிட்டன. ஆகையினாலே, பழைய இலக்கியங்களிலே சான்றோன் என்னும் சொல் பயின்று வரும் போது, அறிஞன் என்னும் பொருள் கொண்டு உண்மைப் பொருள் காண மாட்டாமல் இக் காலத்துப் பலர் இடர்ப்படுகிறார்கள்.

சங்க நூல்களிலும் அதையடுத்த காலத்து நூல் களிலும் சான்றோன் என்னும் சொல் காணப்பட்டால், அச்சொல்லுக்கு வீரன் என்றும் அரசன் என்றும் அறிஞன் என்றும் இடத்திற்கேற்ப வெவ்வேறு பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு கொள்ளாமல், எல்லா இடங்களிலும் அறிஞன் என்னும் பொருளை மட்டும் கொள்வோமானால், நூலாசிரியர் கருத்துக்கு மாறுபட்ட தவறான கருத்தைக் கொள்ள நேரிடும்.

Digitized By Roja Muthiah Research Library

ஆகவே, சான்றோன் என்னும் சொல்லுக்கு இடம் அறிந்து செம்பொருள் காணவேண்டியது அறிஞர் கடமையாகும்.

வீரன் என்னும் பொருளில் சான்றோன் என்னும் சொல்லைத் திருவள்ளுவர் வழங்கியிருக்கிறார். இந்தப் பொருளில் இந்தச் சொல்லை வழங்கியுள்ள குறட்பா இது:

> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> **சான்றோன்** எனக்கேட்ட தாய்.

இந்தக் குறட்பாவில் சான்றோன் என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சொல்லுக்கு இவ்விடத்தில் வீரன் என்று பொருள் கொள்ளாமல் அறிஞன் என்று பொருள் கொள்ளுகிறார்கள் இக் காலத்தவர் பலர். உரையாசிரியர்களும் அறிஞன் என்றே உரை கூறிச் சென்றார்கள். ஆனால், இச் சொல்லுக்கு இவ்விடத்தில் வீரன் என்று பொருள் கொள்வது சாலச் சிறந்த தென்று தோன்றுகிறது.

இவ்வாறு கூறுவதனாலே உரையாசிரியர்களைக் குற்றஞ் சொல்லுவதாகக் கருதவேண்டா. உரை யாசிரியர்கள் நிறைந்த கல்வியும் விரிந்த அறிவும் உடையவர்கள். அவர்களுக்குத் தலைவணங்கி வணக்கமும் நன்றியும் செலுத்த வேண்டுவது எமது முதற்கடமை. ஆனால், அவர்கள் கூறியது அனைத்தையும் ஆராயாமல் ஏற்றுக் கொள்வது அறிவுடைமை ஆகாது. என்னை? நூலாசிரியர் கருத்தையே உரையாசிரியர் தமது உரையில் கூற வேண்டுவது கடமை என்றாலும், சிற்சில சமயங்களில் சோர்வினாலோ, தமது சொந்தக் கொள்கையைப் புகுத்த

Digitized By Roja Muthiah Research Library

வேண்டும் என்னும் எண்ணத்தினலோ, காலப் போக்கை யொட்டியோ உரையாசிரியர் தமது உரைகளில் நூலாசிரியர் கருத்துக்கு மாறுபட்ட கருத்தையும் எழுது வதைக் காண்கிறேம். ஆகையினல், யார் எதைக் கூறி ஞலும் அதை ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண் டியதைக் கொள்ளவும் தள்ள வேண்டியதைத் தள்ளவும் வேண்டுமே யல்லாமல் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்வது அறிவுடைமை ஆகாது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்று திருவள்ளுவரும் அறிவுரை புகட்டுகிருர் அன்றே? ஆகவே, சான்றேன் என்னும் சொல்லுக்கு இவ்விடத்தில் யாது செம்பொருள் என்பதை ஆராய் வோம். ஆராய்வதற்கு முன்னர், பரிமேலழகர் இதற்கு என்ன உரை கூறுகிருர் என்பதைத் தெரிந்துகொள் வோம்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றேன் எனக்கேட்ட தாய்.

இதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:— "தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும், தன் மகனைக் **கல்வி கேள்விகளான் நிறைந்தானென்று** அறி வுடையோர் சொல்லக் கேட்ட தாய்."

இவ்வாறு உரை எழுதிய பரிமேலழகர், மேலும் கீழ் வருமாறு விளக்கம் கூறுகிருர்: "கவானின்கண் (துடைமீது) கண்ட பொது உவகையினும் சால்புடையன் எனக் கேட்ட சிறப்பு உவகை பெரிதாகலின் "பெரிதுவக்கும்" எனவும், **பெண் இயல்பால் தானக அறியாமையின்,** "கேட்ட தாய்" எனவும் கூறினர்."

Digitized By Roja Muthiah Research Library

பரிமேலழகர் கூறிய இவ்வுரையில் சில தடைகள் நிகழ்கின்றன. பெண் இனத்துக்கே தாமாக அறியும் அறிவு இல்லை என்று பரிமேலழகர் முடிவுகட்டி விட்டார். என்னை? "பெண் இயல்பால் தானாக அறியாமையின் **கேட்ட தாய்** எனவும் கூறினார்" என்று அவர் விளக்கம் கூறுவது காண்க.

ஆண்களிலும் தாமாக அறியும் சுய அறிவு இல்லாதவர் பலர் இருக்கிறார்கள். பெண்களிலும் தாமாக அறியும் சுய அறிவுள்ளவர் பலர் இருக்கிறார்கள். இதனை உலகத்தில் காண்கிறோம். ஆனால், பரிமேலழகர் பெண் மக்களுக்குச் சுய அறிவு இல்லை என்று கூறுகிறார். இதனை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்வது? பரிமேலழகர் கூறுவது திருவள்ளுவர் கருத்துக்கு முரண்படுகிறது. என்னை?

> தம்மிற் றம்**மக்கள்** அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

என்றும்,

> பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
> **மக்கட்பே** றல்ல பிற.

என்றும் திருவள்ளுவர் பொதுப்பட **மக்கள்** என்று கூறுகிறபடியினாலே ஆண் மக்கள் பெண்மக்கள் ஆகிய இருபால் மக்களும் அறிவுடையராய் இருத்தல் வேண்டும், இருபால் மக்களையும் அறிவுடையராக்க வேண்டும், இருபால் மக்களும் அறிவுடையராய் இருக்க முடியும் என்பதே திருவள்ளுவர் கருத்து. இக் கருத்துக்கு மாறுபடப் பரிமேலழகர் கூறுவது பொருந்தாது.

Digitized By Roja Muthiah Research Library

வாசகர் இங்கு எம்மை ஒரு கேள்வி கேட்க விரும்புவர். திருவள்ளுவர் **கேட்ட தாய்** என்றுதானே இக் குறளில் கூறுகிறார்; **கண்ட தாய்** என்று கூறவில்லையே. ஆகவே பரிமேல் அழகர் உரையில் என்ன தவறு உண்டு? என்று வாசகர் கேட்க விரும்புவர். மேலும், பெண்களைப் பிரித்து ஆண்மகனை மட்டுந் தானே **சான்றோன்** என்று திருவள்ளுவர் கூறுகிறார். இதனால் பரிமேலழகர் உரையில் குற்றம் என்ன இருக்கிறது? எனவும் வாசகர் கேட்க விரும்புவர்.

இந்தக் கேள்விகள் சரியான கேள்விகளே. இவற்றிற்கு விடை கூறவேண்டியதும் எமது கடமையே. இக் கேள்விகளுக்கு விடை கூறும் முன்னர், **சான்றோன்** என்னும் சொல்லுக்கு வீரன் என்னும் பொருள் உண்டா? இப்பொருளில் இச்சொல் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளதா? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் வாசகர் கேட்கும் இக் கேள்விகளுக்கு விடை கூறுவோம்.

சான்றோன் என்னும் சொல்லுக்கு வீரன் என்னும் பொருளும் உண்டு என்பதற்குச் சான்று காட்டுவோம்.

பதிற்றுப் பத்து, இரண்டாம் பத்து 14-ஆம் செய்யுளில்;

"எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரித் தடக்கைச் **சான்றோர்** மெய்ம்மறை"

என்று, இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் பாடுகிறார். இச் செய்யுளடியில் சான்றோர் என்னும் சொல் வந்துள்

ளது. இச் சொல்லுக்குப் பழைய உரையாசிரியர், **வீரர்** என்று உரை கூறியுள்ளார். என்னை? "ஈண்டுச் சான்றோரென்பது போரில் அமைதியுடைய வீரரை" என்று அப்பழைய உரையாசிரியர் உரையெழுதி இருப்பது காண்க.

இச்செய்யுளின் பொருள் இது: ஏழு அரசரை வென்று அவர்களுடைய கிரீடங்களைக் கொண்டு ஆரமாகச் செய்து அதனை அணிந்த மார்பினையும் வலிவுள்ள பெரிய கைகளையும் உடையவனே, போர் வீரர்களின் (சான்றோரின்) கவசம் போன்றவனே" என்பது இதன் பொருள் ஆகும். இதனால், சான்றோன் என்னும் சொல்லுக்கு வீரன் என்னும் பொருள் உண்டு என்பது அறிகிறோம்.

வேறு சான்றுகளையும் காட்டுவோம்:

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
**சான்றோன்** ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

என்பது புறநானூறு 312-ஆம் செய்யுள். பொன் முடியார் பாடியது. திணை; வாகை. துறை; மூதின் முல்லை.

இச் செய்யுளுக்குப் பழைய உரை காணப்படவில்லை. ஆகவே, இச் செய்யுளில் வந்துள்ள **சான்றோன்** என்னும் சொல்லுக்கு நாமே பொருள் காண வேண்டியிருக்கிறது. இங்குச் சான்றோன் என்பதற்கு அறிஞன் என்று பொருள் கொள்ள முடி

Digitized By Roja Muthiah Research Library

யாது. அறிஞன் என்று பொருள் கூறினல், அறிஞர் போர்ப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும் என்றும் அவர்கள் வேல் வாள் முதலிய படைக்கலப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் போர்க்களம் சென்று போர் செய்வது மட்டுமல்லாமல் பேராபத்துள்ள யானைப் படையுடன் போர் செய்து வெற்றியுடன் திரும்பிவர வேண்டும் என்றும் முடிவு கட்ட வேண்டும். இவை அறிஞர் தொழில் அல்ல; இவை போர் வீரர்களின் இன்றியமையாக் கடமை யாகும். ஆகவே சான்றோன் என்னும் சொல்லுக்கு இவ்விடத்தில் அறிஞன் என்னும் பொருள் சிறிதும் பொருந்தவில்லை. போர்வீரன் என்னும் பொருள் சாலவும் பொருத்தமாயிருக்கிறது.

இச் செய்யுளின் திணையும் துறையும் இதனை வலியுறுத்துகின்றன. திணை, வாகை: போர்ச் செயலுக்ுச் சம்பந்தப்பட்டது. துறை, மூதின் முல்லை, அதாவது, மறக்குடியில் பிறந்த வீர மகளின் வீரத்தைக் கூறுவது. என்னை?

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அக்குடி
மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று."

என்று புறப்பொருள் வெண்பாமாலை மூதின் முல்லையைப் பற்றிக் கூறுவது காண்க.

இந்தப் புறநானூற்றுச் செய்யுளில், மறக்குடியில் பிறந்த வீரமகள் ஒருத்தி தன் மகனுடைய போர்க் கடமையைப்பற்றிப் பேசுகிறாள். இச் செய்யுளின் பொருள் இது:

"வீரர் குடியில் பிறந்த நான் வீரமகனைப் பெற்றெடுக்க வேண்டியது என்னுடைய கடமை. அந்த

Digitized By Roja Muthiah Research Library

மகனைச் சான்றோன்(வீரன்) ஆக்குவது அவனுடைய தந்தையின் கடமை. வேல் வாள் முதலிய படைக்கலங்களைச் செய்து கொடுக்க வேண்டியது ஊர்க் கொல்லனுடைய கடமை. நல்ல நடைகளை (அதாவது போர் முறைகளை), கற்பிக்க வேண்டியது அரசனுடைய கடமை. (சங்க காலத்தில் போர்வீரர்களுக்குப் போர்ப் பயிற்சியை அரசாங்கத்தார் பயிற்சி செய்வித்தனர் என்பது இதனால் தெரிகிறது.) போர்க்களத்தில் சென்று போரிட்டு வெற்றியுடன் திரும்புவது, அதிலும் யானைப் படையுடன் போர் செய்து வெற்றியுடன் திரும்புவது, இவ்வாறு பயிற்சி பெற்ற சான்றோனாகிய (வீரனாகிய) அக்காளையின் கடமையாகும்" என்பது இச் செய்யுளின் கருத்தாகும்.

எனவே சான்றோன் என்னும் சொல், போர் வீரன் என்னும் பொருளில் இச்செய்யுளில் வந்துள்ளது காண்க.

> "ஈன்றாள் மகள் உடன்பிறந்தாள் ஆயினும்
> **சான்றோர்** தமித்தா உறையற்க ஐம்புலனும்
> தாங்கற் கரிதாகலான்."

என்பது ஆசாரக்கோவைச் செய்யுள். இச்செய்யுளில் சான்றோர் என்னும் சொல் வந்துள்ளது. இவ்விடத்தில் இச்சொல்லுக்கு அறிஞர் என்று பொருள் கொள்ளக் கூடாது. அறிஞர் என்று பொருள் கொண்டால், அறிவாளிகள் அனைவரையும் இழிவு படுத்தி அவமானப் படுத்துவதாக முடியும். என்னை? அறிஞர் தாயுடனும் மகளுடனும் உடன் பிறந்த தங்கை தமக்கைகளுடனும் தனியே வசித்தல் கூடாது. ஏனென்றால் அவர்கள் காமத்தை அடக்க முடியாதவர்கள் என்று

Digitized By Roja Muthiah Research Library

பொருள் கூறினால், அறிஞர் உலகத்தைக் காமுகர் என்றும் ஒழுக்கயீனர் என்றும் கூறி அவர்களை இழிஞர் என்று முடிவு கட்டுவதாகும் அல்லவா? அறிஞர்கள் காமத்தை அடக்க முடியாமல் ஒழுக்கந்தவறி நடப்பவர்கள் என்றால், அவர்கள் அறிவினால் என்ன பயன்? மிருகங்களுக்கும் அவர்களுக்கும் வேறுபாடு என்னை?

இவ்வாறு அறிஞரை இழிவுபடுத்துவது ஆசாரக் கோவை ஆசிரியரின் கருத்தன்று. ஆகவே, இச் செய்யுளில் வந்துள்ள சான்றோர் என்னும் சொல் லுக்கு வேறு பொருள் இருக்கவேண்டும். அப்பொருள் யாது? அதுதான் வீரன் என்னும் பொருள்.

வீரர்கள் (தேகபலம் மிகுந்தவர்கள் ஆகையினாலே) ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றல் இல்லாதவர்கள். ஆகவே அவர்கள் தாய் மகள் உடன் பிறந்தாள் இவர்களுடனும் தனித்து வசிக்கக் கூடாது என்பது இச் செய்யுளின் செம்பொருள் ஆகும்.

வேறு செய்யுள்களையும் சான்று காட்டுவோம்:—

“கூற்றுறழ் முன்பி னிறைதலை வைத்தபின்
ஆற்றி யவனை யடுதல்; அடாக் காலை
ஏற்றுக்களத்தே விளிதல்; விளியாக்கால்
மாற்ற மளவுங் கொடுப்பவோ **சான்றோர்தம்**
தோற்றமும் தேசும் இழந்து.”

“காலாளாய்க் காலாள் எறியான்; களிற்றெருத்தின்
மேலாள் எறியான்; மிகநாணக்—காளை
கருத்தினதே யென்று களிறெறியான் அம்ம
தருக்கினனே **சான்றோர்** மகன்”

இச் செய்யுள்கள் தகடூர் யாத்திரை என்னும் நூலைச் சேர்ந்தவை. போர் வீரர்களின் இயல்பைக் கூறுகின்றன. இச் செய்யுள்களில் போர்வீரர் **சன்றோர்** என்று கூறப்படுதல் காண்க.

இதுகாறும் காட்டிய சான்றுகளால், **சான்றோன் சான்றோர்** என்னும் சொற்களுக்குப் போர்வீரன், போர் வீரர் என்னும் பொருள் உண்டென்பதை ஐயமறக் கண்டோம்.

இனி, இக் கட்டுரையின் தொடக்கத்தில் எடுத்துக் கொண்ட

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்னும் குறளுக்கு உரை காண்போம்.

தன் மகனை வீரன் (சான்றோன்) என்று பிறர் கூறக் கேட்ட தாய், அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைப் பார்க்கிலும் அதிகமாக மகிழ்ச்சியடைவாள் என்பது இக்குறளுக்குச் செம் பொருள் ஆகும்.

இனி வாசகர் கடாவிய கடாவிற்கு விடை கூற வேண்டுவது எமது கடமையாகும். சான்றோன் எனக் கண்ட தாய் என்று கூறாமல் சான்றோன் எனக் கேட்ட தாய் என்று ஏன் கூறினார்? தன் மகனுடைய வீரச் செயலைத் தாயானவள் தானே நேரிற் கண்டு மகிழும் அறிவு அவளுக்கில்லையா? என்று வாசகர் கேட்கக் கூடும். இதற்கு விடை கூறுவோம்.

மகளிர் போர்க்களம் செல்வது தமிழ் நாட்டு மரபு அன்று. மறக்குடியிற் பிறந்த வீரத் தாயாக இருந்

Digitized By Roja Muthiah Research Library

தாலும் போர் நடக்கும் போது போர்க்களம் சென்று தன் மகன் செய்யும் போரைக் காண்பது தமிழ் மகளிர் மரபு அன்று. என்னை?

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
**பெண்டிரும்** பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிதுவிடுதும் நும்அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும்.........."

என்பது புறநானூறு 9-ஆம் செய்யுள்.

நாட்டில் போர் ஏற்பட்டால் இன்னின்னவர் போர்க்களம் செல்லக்கூடாது என்று அரசன் பறை யறைந்து தெரிவிப்பது பண்டைக் காலத்து வழக்கம். போர்க்களம் செல்லக் கூடாதவர் இன்னின்னார் என் பதை இப்புறப் பாட்டு கூறுகிறது. இதில், போர்க் களம் செல்லக்கூடாதவர் பெண்டிரும் ஆவர் என்று கூறப்பட்டிருப்பது காண்க. எனவே, மறக்குடியிற் பிறந்த வீரத் தாயாக இருந்தாலும், போர் நடக்கும் போது அவள் போர்க்களம் சென்று தன் மகன் எவ்வாறு போர் செய்கிறான் என்பதை நேரில் காண முடியாது. கண்டவர் பிறர் செல்லக் கேட்டுத்தான் அறியவேண்டும். இது தமிழர் மரபு. (போர் முடிந்த பிறகு போர்க்களம் சென்று இங்கு இறந்து கிடக்கும் தன் மகனைக் காண்பது மறக்குடியிற் பிறந்த வீரத் தாய்மார்க்கு இயல்பு. ஆனல் போர் நடக்கும் போது போர்க்களம் செல்லக் கூடாது.)

போர் நடக்கும்போது போர்க்களம் சென்று தன் மகனுடைய வீரத்தை நேரில் காணும் வாய்ப்பு

Digitized By Roja Muthiah Research Library

பெருத வீரத்தாய், போர்க்களம் சென்று போரை நேரிற் கண்டவர் யாரேனும் பிறர் சொல்லக் கேட்டுத் தானே அறியவேண்டி யிருக்கிருள்? இது பற்றித் தான், சான்றேன் எனக் கண்ட தாய் என்று கூருமல், சான்றேன் எனக் கேட்ட தாய் என்று கூறினர்.

வாசகர் இங்கு இதைக் கூறவிரும்புவர். மகனுடைய வீரத்தைக் கேட்ட தாய், பெரிதும் மகிழ்வது போல, தன் மகனுடைய அறிவுடைமையைக் கேட்டும் தாய் மகிழ்ச்சியடைய மாட்டாளா? மகனை அறிஞன் என்று கூறக் கேட்ட தாய் பெரிது மகிழ்வாள் என்று பொருள் கூறினுல் என்ன இழுக்கு என்று வாசகர் கேட்கலாம்.

இதற்கு விடை என்ன வென்ருல், இது சிறந்த பொருள் அன்று • என்பதே. என்னை? கற்றறிந்த அறிஞர் சபையிலே கற்றறிந்த மகளிரும் செல்வது தமிழர் மரபு. அவ்வையார், நச்செள்ளையார், கழார்க் கீரனெயிற்றியார், இளவெயினியார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார், ஆதிமந்தியார் முதலிய பல பெண் மணிகள் சிறந்த புலவராகத் திகழ்ந்தனர். இவர்களைப் போன்ற பெண்மணிகள் பெயரறியாதவர் பலர் இருந்தனர், இருக்கின்றனர். பெண்மணிகள் கற்றவர் சபையில் சென்று சபையில் பங்கு கொள்வது அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. ஆகவே தமது மகனுடைய அறிவுடைமையைக் கேட்டு மகிழும் தாய்மார், நேரில் கண்டு மகிழவும் வாய்ப்புடையவர்கள். ஆகையால் கேட்ட தாய் என்று கூறவேண்டிய அவசியம் இல்லை. ஆனல், மகனுடைய வீரத்தைத் தாயானவள் கேட்டுத்தான் அறியவேண்டுமே யல்லாமல்

Digitized By Roja Muthiah Research Library

கண்டு அறிய வாய்ப்புள்ளவள் அல்லள். இதனால்தான் கேட்ட தாய் என்று கூறவேண்டியதாயிற்று.

மேலும், தன் மகன் வீரன் என்று கேட்ட தாய், ஈன்ற பொழுதினும் பெரிது உவந்தனள் என்று நூல்கள் கூறுகின்றன வல்லாமல், தன் மகன் அறிஞன் என்று கேட்ட தாய் ஈன்ற பொழுதினும் பெரிது உவந்தனள் என்று நூல்கள் கூறவில்லை. தன் மகனுடைய வீரத்துக்காகத் தாயானவள் அவனை ஈன்ற பொழுதினும் பெரிது உவந்தனள் என்பதற்கு பழைய நூல்களில் சான்றுகள் உள்ளன. அச் சான்றுகள் ஆவன:—

"மீனுண் கொக்கின் தூவியன்ன
வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் **உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே."**

என்பது புறநானூறு 277—ஆம் செய்யுள்.

தன் மகன் போரில் இறந்தான் என்பதற்காக வருந்தாமல், அவன் வீரமாகப் போர் செய்து இறந்தான் என்று அறிந்து, அவனைப் பெற்றபோது அடைந்த உவகையைவிட அதிகமாக உவகையடைந்தாள் என்று இச்செய்யுள் கூறுகிறது.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்று பலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்
முலையறுத் திடுவேன் யானெனச் சினைஇக்



Digitized By Roja Muthiah Research Library

கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

என்பது புறநானூறு 278-ஆம் செய்யுள். இதில் தன் மகன் வீரத்தோடு போர் செய்தான் என்பதற் காகத் தாயானவள் அவனை ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனள் என்று கூறப்படுவது காண்க.

மகனுடைய வீரத்தை அறிந்து, அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சியடைவது வீரத் தாய்மார்க்கு மரபாகலின் அந்த மரபைப் பின்பற்றியே திருவள்ளுவரும் **ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்** என்று கூறினார் என்பதில் ஐயமில்லை. எனவே,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்,

என்னும் குறளுக்கு நாம் கூறியபொருளே பொருத்த மானது எனத் தோன்றுகிறது. அதாவது, தன் மகனை வீரன் (சான்றோன்) என்று பிறர் கூறக் கேட்ட வீரத் தாய், அவனை ஈன்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமாக மகிழ்ச்சி யடைவாள் என்னும் பொருள் செம்பொருள் உடையதாகத் தெரிகிறது. இப் பொருளைத்தான் வில்லிப்புத்தூராரும் கூறுகின்றார். வில்லிபாரதம் விராட பர்வம் நிரைமீட்சிச் சருக்கத்தில் இந்தக் குறளை இந்தப் பொருளில் அவர் வழங்கியுள் ளார்.

விராட நாட்டரசன் நாட்டில் இல்லாத சமயம் துரியோதனன் விராட நாட்டில் சென்று ஆனிரை

Digitized By Roja Muthiah Research Library

களைக் கவர்ந்து கொண்டு போனான். ஆனிரைகளை மீட்டுக் கொண்டு வரும் வீரர் அப்போது விராட நாட்டில் இலர். அச்சமயம் உத்தரன் என்னும் அரச குமாரன் தான்போய் நிரை மீட்டு வருவதாக அரசியாகிய தாயினிடம் கூறினான். அவளும் அவனை அனுப்ப இசைந்தாள். ஆனால், தேரைச் செலுத்தத் தேர்ப் பாகர் ஒருவரும் இலர். இச்செய்தியை யறிந்து அரண்மனையில் பேடி உருவத்துடன் அஞ்ஞாத வாசம் செய்திருந்த அர்ச்சுனன், தான் தேரைச் செலுத்துவதாகக் கூறித் தேரை ஓட்டிச் சென்றான்.

போர்க்களம் சென்று போர் வீரர்களைக் கண்ட போது உத்தர குமாரன் அச்சமடைந்தான். கை கால்கள் நடுங்க, உடல் வியர்க்க, மனம் பதற அச்சத்துடன் போர்க்களத்தை விட்டு ஓடினான். அப்போது அர்ச்சுனன் உத்தர குமாரனுக்குத் தைரியம் கூறி ஓடாமல் இருக்கச் செய்து, தான் ஒருவனாகவே நின்று போர் செய்து பகைவரை வென்று ஆனிரைகளை மீட்டான். பிறகு அர்ச்சுனன் தூதுவரை விராட நாட்டிற்கு அனுப்பி, உத்தர குமாரன் போர் வென்று ஆனிரைகளை மீட்டுக் கொண்டு வெற்றியுடன் வருகிறான் என்று செய்தி தெரிவித்தான். விராட நாட்டினரும், உத்தர குமாரன் தாயாகிய சுதேட்டிணை என்னும் அரசியும் இச்செய்தி கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள். உத்தர குமாரன் விராட நாட்டிற்குத் திரும்பி வந்தபோது—அவன்தான் போர் வென்றான் என்று அவர்கள் நம்பினபடியால்—, அவனை எல்லோரும் வரவேற்றுப் புகழ்ந்தனர். உத்தர குமாரன் அரண்மனைக்குச் சென்று தனது தாயை வணங்கினான்.

Digitized By Roja Muthiah Research Library

தன் மகன் போர் வென்று திரும்பி வருகிருன் என்று கேள்விப் பட்டிருந்த சுதேட்டிணை அவனைக் கண்ட போது, ஈன்ற பொழுதினும் எண்மடங்கு அதிகமாக உவகை அடைந்தாள் என்று வில்லிபுத்தூரார் கூறு கிருர். அச் செய்யுள் இது: "ஆன்றமைந் தடங்கு கேள்வி யண்ணலும் அவனைப் பெற்ற தோன்றலும் பின்னர்ச் சென்று சுதேட்டிணை கோயில் எய்த **ஈன்றவப் பொழுதின் ஓகை எண்மடங்காக விஞ்சச் சான்ற தன் மகனைக்கண்டு மகிழ்ந்தனள் தவத்தின் மிக்காள்.**

இந்தச் செய்யுளிலே வில்லிப்புத்தூரார், "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்னும் குறளின் கருத்தை—அதாவது சான்ருேன் என்பதற்கு வீரன் என்னும் பொருளை—, அமைத்திருப்பதைக் காண்க.

இதுகாறும் ஆராய்ந்தவற்ருல், "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்னும் குறளின் மெய்ப்பொருள் அல்லது செம்பொருள் இன்ன தென்பதைக் கண்டோம்.

பரிமேலழகருக்கு இந்தப் பொருள் தெரியாதா? சான்ருேன் என்பதற்கு வீரன் என்னும் பொருளும் உண்டென்று அவர் அறியாரா? பரிமேலழகர் கல்வி யிற் சிறந்த பெரியார். நல்ல உரையாசிரியர். இந்தப் பொருளை அவர் நன்கறிவார். ஆனல் ஏன் அவர் இந்தப் பொருளைக் கூருமல் வேறு பொருள் கூறினர்?

இதற்கு இரண்டு வித காரணங்கள் இருக்க வேண்டும். ஒன்று, இவர் தமது சொந்தக் கருத்தைப் புகுத்துவதற்காக இருக்கலாம். மற்ருென்று, இவ

Digitized By Roja Muthiah Research Library

காலத்தில் பயின்று வந்த கருத்தைத் தம் உரையில் கூறியிருக்கலாம். சொந்தக் கருத்தாக இருந்தாலும், இவர் காலத்தில் நிலவியிருந்த கருத்தாக இருந்தாலும், அக்கருத்துக்கள் எவை? அவை, பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம உரிமை இருத்தல் ஆகாது என்பது ஒன்று. வீரர்களுக்கும் அறிஞர்களுக்கும் சம உரிமை இருத்தல் ஆகாது என்பது மற்றொன்று.

இவற்றை அவர் எழுதிய உரையிலிருந்து அறியலாம். ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் சம உரிமை உண்டென்பது திருவள்ளுவர் கொள்கை. பழந்தமிழரின் கொள்கையும் இதுவே. பரிமேலழகர், ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் சம உரிமை கூடாது; பெண்கள் ஆண்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்னும் பிற்காலத்துக் கொள்கையைப் போற்றுபவர். இக்கொள்கை யுடையவரா யிருந்தபடியினால், திருக்குறளில் **மக்கட்பேறு** என்றிருந்த அதிகாரப் பெயரைப் **புதல்வரைப் பெறுதல்** என்று மாற்றி அமைத்து விட்டார். அன்றியும், பெண்களுக்குத் தாமாக அறியும் அறிவு இல்லை என்று தமது உரையிலும் எழுதிவிட்டார்.

மக்கட்பேறு அன்றிருந்த பெயரை புதல்வரைப் பெறுதல் என்று மாற்றிவிட்டது போலவே, அந்த அதிகாரத்தைச் சேர்ந்த "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்னும் குறளுக்கும் தமது கொள்கைக்கேற்ப உரையை மாற்றி எழுதிவிட்டார். வீரனுடைய வீரத்தையும் அறிஞனுடைய அறிவையும் ச ம ம ா க ப் போற்றுகிறார் **திருவள்ளுவர், பழந்தமிழர் கொள்கையும் அதுதான். ஆனல், பிற்காலத்தவராகிய பரிமேலழகர், வீரர்களுக்குச் சிறப்புத் தருதல் கூடாது; அறிஞர்களுக்கே சிறப்புத் தருதல்**

Digitized By Roja Muthiah Research Library

**வேண்டும் என்னும் மிகப் பிற்காலத்துக் கொள்கையைப் போற்று கிறவர்.** ஆகவே சான்றோன் என்னும் சொல்லுக்கு வீரன் என்று பொருள் கூற உடன்படாமல் அறிஞன் என்று பொருள் எழுதினார். பரிமேலழகர் தமது சொந்தக் கொள்கை காரணமாக இவ்வாறு மாறுபட உரை எழுதினாரேயல்லாமல், பொருள் தெரியாமல் எழுதினார் என்று கருதுதல் கூடாது. ஆனால், திருவள்ளுவர் கருத்துக்கு மாறுபட்டது இவர் உரை என்பது கருதத் தக்கது.

(குறிப்பு: சான்றோன் என்பதற்கு வீரன் என்னும் பொருளும் உண்டு என்று கண்டு கூறியவர், சென்னைக் கிருத்துவக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலஞ்சென்ற பெரியார் திரு. ச. த. சற்குணர் (B. A) அவர்கள் ஆவர். அவர் கூறிய பொருளை அடிப்படையாகக் கொண்டு சங்க நூல்களை ஆராய்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டது. ஆசிரியர் அவர்கள் இப்பொருள் உண்டென்பதைக் கூறவிட்டால் இக்கட்டுரை தோன்றியிருக்க முடியாது. ஆகவே, இக்கட்டுரைக்கு வித்து இட்ட பெரியாருக்கு எனது நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்—மயிலை. சீனி. வேங்கடசாமி)

Digitized By Roja Muthiah Research Library

# பகைத்திறன் தெரிதல்

[பேராசிரியர் ஆ. கார்மேகக் கோன்]

ஒரு அரசன் தனக்கு மாறாத பகையை அஃதாவது தன்னினும் வலிமிக்க பகையை உண்டாக்குதலும் முன் பகையாயிருந்தாரை நட்பாக்குதலும் அவர்களைப் பகையும் நட்புமில்லாது பொதுமலாக்குதலும் இப் பகைவர் மாட்டுச் செய்யவேண்டிய செயல்களும் இவர்களுள் களையத் தக்கவர்களைக் களைதலும் களையும் பருவமும் களையாக் காற்படும் இழுக்கும் ஆகிய இவையெல்லாம் **பகைத்திறன் தெரிதல்** என்னும் பொருளில் அடங்குவதாகும்.

## மாறுப்பகை

ஓர் அரசன் மாறாத பகையை ஆக்கிக்கொள்ளின் எவ்வாற்றால் தன்னைக் காக்கினும் தீமை வருதல் தப்பாது. இவ்வாறு பகை கொள்வது, பண்போடு பட்ட செயலாகாது. இத்தகைய பகையின் விளைவு தீமையே தருமாதலால் பகைகொள்ளத் தகாதவருடன் விளையாட்டிலும் பகைகொள்ளலாகாது; அப்பகைமை செற்றம் விளைத்து உண்மைப் பகையாக மாறிவிடுதலும் கூடும்.

வீரம்—சூழ்ச்சி என்னும் இருவகை ஆற்றல்களுள் வீரமே யுடைய ஓர் அரசனுடன் பகைகொள்ளின் கேடு வருதல் ஒருதலையன்று; போர் புரிந்து வென்று அக்கேட்டினைத் தவிர்த்தலும் கூடும்; கேடே வரினும் அது தன்னோடே நிற்கும். ஆனால் பல நீதி நூல்களை

Digitized By Roja Muthiah Research Library

யும் தந்திர நூல்களையும் உணர்ந்த புலவர்களான சூழ்ச்சித் திறன்மிக்க அமைச்சர்களோடு பகைகொள் ளின், அப்பகை தன்னையே யன்றித் தன் வழியிலுள் ளாரையும் தப்பாது அழிக்கும்.

## பகைவரையும் நட்பினராகக் கோடல்

படை, பொருள், நட்பு முதலிய துணைகள் ஒன்று மில்லாத அரசன், பல்லாரோடு பகைகொள்ளின் அவன் பித்தனும் பேதையும் ஆவன் என்பதில் ஐய மில்லை. ஆசிரியர் திருவள்ளுவனார்

ஏமுற் றவரினும் ஏழை தனியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்

என்றமை காண்க. அமையத்துக் கேற்ப பகைவர்களை யும் நட்பினராகக் கொண்டொழுகும் சதுரப் பாடுடைய அரசனுக்குப் படை பொருள் ஆகிய ஆற்றல்கள் பெருகும்; அதனால் பல நாடுகளும் அவன் ஆட்சியில் தங்கி அடங்கி நடக்கும்; ஆதலால் பகைவரையும் நட் பாகக் கொண்டொழுகலானும் நன்மை கணித்தறிய வொண்ணாத தாகும்.

## பகைத்திறம் அறியாமை

ஒரு சில வேந்தர் பகைத்திறம் அறிதலில் மடமை யுடையராயிருப்பர்; அவர்கள் தமக்குத் துணைவர் ஒரு வருமில்லாதிருக்கவும் ஒருவரோடன்றி இருவரோடுகூட பகைத்துக் கொள்வர். இந்நிலையில் இவர்கட்குண்டாகும் அழிவினை இத்துணைத் தெனக் கூறவும் வேண்டுமோ! இயற்கையாகவே இருவர் பகைவர் உண்டானால் அவர்களுள் ஒருவரை இன்சொல், கொடை முதலாய

Digitized By Roja Muthiah Research Library

உபாயங்களால் தன்வயப் படுத்தித் திரிபில்லாது நிற்கச் செய்தல் வேண்டும்.

## பகைவர் மாட்டுச் செய்வன

அரசன் தனக்கு அழிவு நேர்ந்துழிப் பகைவரை முன் நம்பினும் அப்போது நம்புதல் கூடாது; நம்பினால் உள்ளாயிருந்து கெடுக்கவுஞ் செய்வர். வெளிப் படையாகப் பகைத்தலும் ஆகாது. அங்ஙனம் பகைக் கின் நேர்ந்த அழிவினை மிகுதியாக்கவும் செய்வர். ஆதலால் இந்நிலையில் பகைவரை நொதுமலாகக் கொண்டொழுகலே நன்றாகும்.

தன் துன்பத்தைத் தாமாக அறியாத நண்பர்க ளிடத்தும் முந்துற வெளியிடலாகாது என்பது நெறி; இங்ஙனமாயின் பகைவர் திறந்து, வலிமை இன்றிய அரசன் தன்னிலைமை வெளித்தோன்றாது காப்பதில் எவ்வளவு விழிப்புடன் இருக்கவேண்டு மென்பது கூறாமலே விளங்கும். ஓர் அரசன் வினைசெய்யும் வகையை எண்ணித் துணிந்து அதனை முடித்தற்கு ஏற்பத் தன்னைப் படைபலத்தால் பெருக்கி மறதி உள்ளத்தில் புகாமல் காத்து, அடக்கத்துடன் இருப் பின் பகைவர் அவனது செறிவிற்கு அஞ்சித் தாம் கொண்டிருந்த செருக்கினைக் கைவிடுவர்.

## களையத்தக்கவரைக் களைதல்

பகைவர் பலர் கிளைப்பின் அவர்களை வளரவிடா மல் மெலியராயிருக்குங்காலே களைந்துவிட வேண்டும். அவர்கள் வளர்ந்து வலிமையுறின் அவர்களைக் களைய முற்படுபவரே களையப்படுவர். இக் கருத்தினை ஆசிரியர் திருவள்ளுவர்,

Digitized By Roja Muthiah Research Library

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

என சுருங்கச் சொல்லால் அழகுபட பிறிது மொழிதலாகக்கூறியிருப்பது அறிந்து போற்றி இன்புறற்பாலது.

## களையாக்காற் படும் இழுக்கு

செருக்குற்றுப் பொரக் கருதும் பகைவரைக் களையாது இகழ்ச்சியாக இருப்பின் அவ்வரசன் உலகில் மூச்சுவிடும் நேரங்கூட உயிருடன் வாழ முடியாது; இதனை வள்ளுவப் பெருந்தகையார்

உயிர்ப்ப உளரல்லர்மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்

என அருளியிருத்தல் காண்க.

---

Digitized By Roja Muthiah Research Library

# அரண்

புலவர். கா. கோவிந்தன், எம். ஏ

அரண் என்ற சொல், தற்காப்பு எனும் பொருள் உடைத்து; "ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்,.... எம்மம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்" என்ற தொடரில் வரும் அரண், அப்பொருட்டாதல் காண்க. அப்பொருளுடைய அச் சொல்லே, நிலம், நீர், மலை, மரஞ்செறி காடு ஆய இயற்கைகளால் சூழப்பெற்றும், இயற்கையானுய அவையற்ற வழி, செய்மதில், தோண்டிய அகழி, வளர்த்த காவற்காடு இவற்றால் சூழப் பெற்றும் பகைவர் அணுகாவாறு அமைந்த ஓர் இடத்தையும் குறிக்கும்.

அரண், அரசியலுக்கு இன்றியமையா உறுப்புக்களுள் ஒன்று; "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்ற திருக்குறளில், ஆறும் உடையான் என 'இனைத்தெனை அறிந்த சினை முதற் கிளவிக்கண் வரும் உம்மை கொடுத்துக் கூறியதனுல், அவை ஆறனுள் ஒன்று குறையினும், அரசியல் முற்றுப் பெற்றதாகாது என்பது பெறப்படும்; படவே, அரணின் சிறப்பினை வள்ளுவர் எத்துணைப் பெரிதாகக் கருதியுள்ளார் என்பது விளங்கும். கூறிய குறட்பாவின்கண் ஆறனுள், அரண், ஈற்றில் வைத்து எண்ணப்பட்டுள்ள தாயினும், அவற்றின் இயல்புகளை விரித்துரைப் புழி, அங்கவியல் முதல் அதிகாரத்தில் அமைச்சையும், பதினென்ருவது அதிகாரத்தில் நாட்டையும், பன்னி

Digitized By Roja Muthiah Research Library

ரண்டாவது அதிகாரத்தில் அரணையும், பதின்மூன்றாவது அதிகாரத்தில் பொருளையும், பதினான்காவது அதிகாரத்தில் படையையும், பதினாறுவது அதிகாரத்தில் நட்பையும் விரித்துரைத் துள்ளமையான், ஆசிரியர் வள்ளுவப் பெருந்தகையார்க்கு, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாம் என்பது கருத்தாதல் பெறப்படும்; படவே, அரண், நாட்டை அடுத்து நினைக்கவல்ல அத்துணைச் சிறப்பு வாய்ந்தது என்பது தெளிவாம். அரண் நாட்டின் ஒரு பகுதியே, என்றாலும், பகைவர் படையெடுப்பு நேர்ந்தக்கால், அந்நாட்டிற்கும், அந்நாடாள் அரசற்கும் ஏமமாம் சிறப்புடைத்து; ஆதலின், அரண், அஃது உள்ள நாட்டினும் நனிசிறப்புடைத்து என்க.

ஒரு நாடு, நால்வகை வளங்களையும் நனிமிகப் பெற்றிருப்பினும், பகைவரான் அழிவு வந்தக்கால், அதைப் போக்கவல்ல பேரரண்களைப் பெற்றிருத்தலே நாட்டிற்குப் பெருமை தருவதொன்றாம்; பெருவளம் பெற்றுள்ளதொரு நாடு, அரண் ஒன்றைப் பெறாதாயின், அது, தான் பெற்றுள்ள பெருவளத்தைப் பேணிக் காத்தல் இயலாது; அதன் பெருவளம் கண்ட பகைவர் படையெடுத்து வந்து பாழாக்கிப் பற்றிச் செல்வர்; ஆகவே, வளமற்ற நாட்டினும், அவ்வளம் நனிமிகு நாட்டிற்கே, அரண் மிக மிக இன்றி யமையாததாம். நாடு என்ற அதிகாரத்தின் கீழ், நாட்டின் நல்லியல்புகளை எல்லாம் எடுத்துக் கூறி, அந் நாட்டின் நல்லியல்பிற்கு நற்றுணையாய உறுப்புக்களைக் கூறுமிடத்தே, அவ்வுறுப்புக்களுள் ஒன்றாக, அரணையும் கூறியுள்ளார் வள்ளுவர். "இருபுனலும்,

Digitized By Roja Muthiah Research Library

வாய்ந்த மலையும், வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

தன்னினும் பேராற்றலும், பெரும் படையும் உடைய அரசர் படையெடுத்து வந்தக்கால், தானும், தன் படையும், அவரால் அழிவுறுவதி னின்றும் தப்பற்கும், படையெடுத்து வந்த பகையரசரைப் பாய்ந்து தாக்கி வெல்லற்காம் காலம் வருந்துணையும் காத்திருத்தற்கும் துணை புரிவதே அரண் எனப்படும். ஆதலின், அரண், சிறுபடை யுடையார்க்கே துணை புரியும் எனக் கருதுவர்; ஆனால், பெரும் படை யுடைமையால், பிறர்நாடு புகுந்து போருடற்ற எண்ணும் பேரரசர்களும், தாமும், தம் படையும் தம் நாடு விட்டுப் போயவிடத்து, அக்காலம் நோக்கிப் பகைவர் சிலர், அவர் நாட்டுப் புகுந்து விடுதலும் கூடும் ஆதலின், அவ்வாறு புகுவாரால், தம் சுற்றமும், பொருளும் பாழுறா வண்ணம் பாதுகாத்தற்கு அரண் வேண்டுமாதலின், சிறுபடை யாளர்க்கே யன்றி, பெரும் படையுடையார்க்கும் அஃது இன்றி யமையாததேயாம். இவ்வாறு பெரும் படைகொண்டு, பிறர்நாடு புகுவார்க்கும், பகைவர் பெரும்படை கண்டு பதுங்கி வாழ்வார்க்கும் அரண் துணையாதலை, "ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்; அஞ்சித்தற் போற்றுபவர்க்கும் பொருள்" என்ற குறட்பாவால் எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

அரண், சிற்றரண், பேரரண், என இருவகைப் படும்; சிற்றரண், குறுப்பு என்ற பெயரானும், பேரரண் அருப்பம் என்ற பெயரானும் வழங்கப் பெறும். சிற்றரண், நாட்டின் பல்வேறு பகுதியினும் அமைந்து, ஆறலை கள்வர், பகையரசர், பாழ்செய்யும் பல் குழு ஆய

Digitized By Roja Muthiah Research Library

இவரான், ஆங்காங்கு உண்டாம் இடையூறுகளைப் போக்கி நாட்டின் அமைதி வாழ்விற்கு நற்றுணையாய் அமைந்து, நாட்டின் நடுநாயகமாய், நாடாள் அரசர்தம் வாழ்விடமாய் அமையும் பேரரண்களைப் பேணிக் காக்கும் பெருந்துணையுமாம்; அக் குறும்புகள் காட்டிடை வழிகளில், கவர்த்த இடந்தோறும் அமைந்து, அவ்வழிச் செல்லும் வணிகக் குழுவினர்க்கு, ஆங்கு உண்டாம் அச்சம் போக்கித் துணைபுரிவதோடு, அவ்வழிச் செல்லும் வணிகப் பொருட்குரிய அரச இறையாகிய சுங்கம் தண்டுதலையும் புரிந்து வந்தன எனச்சங்க நூல்கள் சான்று பகர்கின்றன.

"திங்களும் நுழையா எந்திரப் படுபுழைக்
கண்மாறு நீட்ட நணிநணி இருந்த
குறும்பல் குறும்பல் குறும்பு." —புறம்: 177.

"சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலைக் காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டு இயவு"
—பெரும்பாண: 8.—82.

பகைவர் படையால் தம் படை பாழுறுமைக்கும், பகைவர் தம் பெரும் படையினைத் தம் சிறு படையால் பாழ் செய்தற்கும் உறுதுணை புரிவதே அரணும் என உணர்ந்த தமிழர்கள், அவ்வரண், அதற்கேற்ற அமைப்புக்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதில் பெரிதும் கருத்துடையராய் விளங்கினர்.

பகைவர்தம் பெரும்படை, தம் அரணை அணுக விடல் ஆகாது என உணர்ந்து, அப்படை அரணை அணுகாவாறு செய்தற்கு ஆவன புரிதலை அரண்

Digitized By Roja Muthiah Research Library

அமைப்பின் முதற் பணி என மேற்கொண்டனர்; யானை, தேர் குதிரை வீரர் என்ற நான்கான் இயன்ற பழந் தமிழ்ப் படை, காடு, மலை, கடல்போல் நீர்நிலை இவற்றைக் கடந்து சேறல் அரிதாம் ஆதலின், அக் கால அரசர்கள், தாம் அமைத்த அரண்களை, அத் தகைய காடு, மலை, முதலிய வற்றுள் ஒன்றாலோ, அன்றிப் பலவற்றாலோ சூழப்பெற்ற இடங்களைத் தேடி அமைத்தனர்; அவை இயல்பாகச் சூழப்பெறா இடங்களில், தம் அரண்களைச் சூழ ஆழமான அகழி களைத் தோண்டியும், காவற் காடுகளை வளர்த்தும், மேடும், பள்ளமும் ஆய நிலங்களை உண்டாக்கியும் தம் அரண்களுக்கு அரண் அமைத்தனர்; அரண் அமைப் பார், முதற்கண் அமைக்க வேண்டுவன இத்தகைய அரண்களே என்பதைத் திருவள்ளுவர், அரண் அதி காரத்தில், அரணின் இன்றியமையாமையினை எடுத் துரைக்கும் முதற்குறளை அடுத்து வரும் குறட்கண், இவ் வரண்களை வற்புறுத்தி யுள்ளமையாலும் உணர்க. 'மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழல் காடும் உடையது அரண்."

பகைவர் படை, தம் அரணைச் சூழ உள்ள கடத்தற் கரிய அரண்களை யெல்லாம் கடந்து, தம் அரணை அணுகி விடுமாயின், அந்நிலையில் அப்படையினைத் தடுத்து நிறுத்த வல்லது அரணைச் சூழ அமைந்துள்ள மதில் ஒன்றே யாதலின், அம்மதில், பகைவரால் எளிதிற் கடக்க லாகா அருமையுடைத்தாதல் வேண்டும் என்றும் அறிந் திருந்தனர்; பகைவர் மதிலை ஏணியிட்டு ஏறிக்கடக்கவும், அகழ்ந்து உட்புகவும், அழித்துக் கைக் கொள்ளவும் எண்ணுவர் ஆதலின், மதில், அவர் கொணரும்

Digitized By Roja Muthiah Research Library

ஏணிக்கு எட்டா உயர்வும், அகழலாகா அடியகலமும், அழிக்கலாகாத் திண்மையும் உடையதாக அமைத்த னர்; பகைவர், இவ்வாறு ஏணியிட்டு ஏறவும், அகழ்ந்து உட்புகவும், அழித்துக் கடக்கவும் கருத்துடையராயக் கால், அகத்துறைவோர் வாளா இருத்தலின்றி, ஆங் கிருந்தவாறே, புறத்துறை பகைவர் படையினைச் சிறிது சிறிதாகப் பாழ் செய்யவும் தொடங்குவர்; இவ் வாறு, தாம் அகத்திருந்தவாறே, தமக்குச் சிறிதும் அழிவுறாவண்ணம் புறத்துறைவார்க்கு பாழுண்டாம் வண்ணம் நின்று போர் செய்தற்கு ஏற்றவாறு, மதில் அகத்தே தலைப்பகலம் உடையதாகவும் அமைத்தனர். பகைவர் படைவீரர், அரிதின் முயன்று மதிலை நெருங்கி விடுவாராயின், அந்நிலையில், அகத் தார் அவரை அணுகித் தடுத்து நிறுத்திப் போரிடல் ஆகாது ஆதலின் மதிலை அணு கிய அப்பகைவர், ஆங்குச் சிறிது காலம் நிற்ற லாற்றாவாறு அழித்துத் துரத்தவல்ல அரிய பொறிப் படைகள் பலவற்றை மதிற்கண் ஆங்காங்கே அமைத்து வைத்தனர். அவ்வாறு அமைத்த அரும் பொறிகள் சிலவற்றைச் சிலப்பதிகார ஆசிரியர் எடுத்துக் காட்டி யுள்ளார். வளைந்துதானே எய்யும் எந்திரவில்; கருவிர லுடைய குரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறி; கல்லுமிழும் கவண்பொறி; கவண்பொறிக்கு வேண்டும் கற்களைக் கொண்ட கூடை; காய்ந்து இறைத் துச் சேர்ந்தாரை வருத்தும் நெய்; அந்நெய்காயும் மிடாக் கள்; உருகக் காய்ச்சி எறிந்து வருந்தும் எஃகு உலைகள்; தூண்டில் வடிவாயிருந்து மதில் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் பொறி; கழுத்திற்பூட்டி முறுக்கும் சங்கிலிப்பொறி; ஆண்டலைப் புள்வடிவாய்ப் பறந்து

Digitized By Roja Muthiah Research Library

ருந்து உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் பொறிகள்; கிடங்கில் ஏறின் மறியத்தள்ளும் இருப்புக்கை; கழுக்கோல்; அம்புப் பொதிகள்; ஏவறைகள்; சிற்றம்புகள் வைத்து எய்யும் இயந்திரம்; மதில்தலையைப் பற்றுவார் கையைப் பொதுக்கும் ஊசிப்பொறிகள்; பகைவர் மேற் பறந்து சென்று கண்களைக் கொத்தும் சிச்சிலிப் பறவை போலும் பொறிகள்; மதில் மேல் ஏறினால் உடலைக் கோட்டால் கிழிக்கும் பன்றி போலும் பொறிகள்; ஆங்கு வந்தாரை அடித்து அழிக்கும் மூங்கில் போலும் பொறிகள்; கதவுக்கு வலியாக உள் வாயிற் படியில் நிலத்தே வீழ விடும் மரங்கள்; கணையமரம்; கோல்; குந்தம்; வேல்; இவை போலும் பிற.

வளைவில் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல் உமிழ் கவணும்,
பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்,
காய் பொன் உலையும், கல்லிடு கூடையும்,
தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை அடுப்பும்,
கவையும், கழுவும், புதையும், புழையும்,
ஐயவித்துலாமும், கைபெயர் ஊசியும்,
சென்று எறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும், சீப்பும், முழுவிறற் கணையமும்,
கோலும், குந்தமும், வேலும், பிறவும்."

—சிலம்பு: 15: 207—216.

அரணமைப்புரைக்கும் நூல்கள் அனைத்தும், நீர் அரண், நிலஅரண், மலையரண், காட்டரண் இவற்றை யடுத்து, அரணிற்கு அரண் அளிப்பன, இத்தகைய



Digitized By Roja Muthiah Research Library

அருமதில்களே என்ப என்ற கருத்துடைய வள்ளுவர், அந்நால்வகை அரண்களைக் கூறும் குறளை அடுத்து; மதிற் சிறப்புரைக்கும் "உயர்வு, அகலம், திண்மை, அருமை இந் நான் கின் அமைவு அரண் என்று உரைக்கும் நூல்" என்ற குறளைக் கூறியுள்ளமை யுணர்க.

பற்றவரும் பகைவர் படையினும், சிறுபடையுடை யவரே, அரண் புகுந்து தம் அழிவினைத் தடுக்க எண்ணு வர்; அவ்வாறு புகுவார், தம் சிறு படைகொண்டு காக்கலாம் காப்புடை அரணையே தேடிப்புகுதல் வேண்டும்; அவ்வாறின்றி, அவர் புகும் அரண், காக்கப்படவேண்டும் இடம் பலவாய், அவர் சிறு படைகொண்டு காத்தல் ஒண்ணுத ஒன்ருயின் அவர் அவ்வரணுட் புகுந்தும் பயனுருர்; அவ்விடங்களைப் பகைவர்தம் பெரும்படை எளிதில் அழித்து உட்புகுந்து விடும்; ஆகவே படைகொண்டு காக்க வேண்டும் இடம் சிறிதே அமைய, இயற்கையானுய காப்புமிக்க அரணே சிறந்த அரணும்.

அரணுள் உறைவார் உண்ணல், உறங்கல், அவர் உணவிவிற்காம் பொருளை உண்டாக்கல், அவ்வர ணுறை படையாளர் பயிற்சி பெறல், அவர்க்கு வேண் டும் படைக்கலம் பண்ணல் ஆய இவையெல்லாம் அவ் அரணுள்ளேயே நடைபெறல் வேண்டும்; இவை யெல்லாம் இனிது நடைபெறுவதற்குப் பேரிடம் வேண்டும்; ஆகவே அமைக்கும் அரண், ஊர் ஒன் றைச் சுற்றி வளைத்ததே போலும் பெரும் பரப்பினை உடையதாதல் வேண்டும்;

Digitized By Roja Muthiah Research Library

பகைவர் படையோ பெரிது; அதைப் பாழாக்கி வெற்றி கோடலோ தம் சிறு படையால் இயலாது என்ற நிலை உண்டான விடத்து, அப்பெரும் படையினை வெல்லுதற்கு வேறு வழி வகைகளைக் காணல் வேண்டும்; உள்ளத்தே ஊக்கம் அற்றார் பலர் ஒன்று கூடினும், அவரால் ஒரு தொழிலும் நடைபெறாது; படை பெரிதாயினும், அப் படையினர், 'இவ்வரணை எவ் வாறு அழித்துக்கைக் கொள்ளவல்லோம்!' என ஒரு முறை எண்ணி ஏங்கி விடுவாராயின், பின்னர், அவ ரால் அவ்வரணைக் கைப்பற்றல் இயலாதாம்; ஆகவே, புறத்தே வந்துறையும் பகைவர் பெரும் படை, பார்த்தே அஞ்சும் அத்தகைய தோற்றம் அளிக்குமாறு அரண் அமைத்தல், அரண் அமைப்பிலக்கணம் அனைத்தினும் இன்றியமையாததாம்.

இவ்வாறு காக்கும் இடம் சிறிதாய், வாழும் இடம் பெரிதாய், கண்டார் உளம் நடுங்கும் உருவம் உடைய தாய் அமைவதே அரணிற்கு அழகு தரும் என்பதை ஆசிரியர் வள்ளுவப் பெருந்தகையாரும் வற்புறுத்தியுள் ளார்; "சிறு காப்பிற் பேரிடத்ததாகி, உறுபகை ஊக்கம் அழிப்பது அரண்."

பழந்தமிழரசர்கள், தாம் கைப்பற்ற எண்ணிய பகை யரசர்தம் அரணைச் சூழத் தம் பெரும் படையினை நிறுத்தி முற்றியிருத்தலை மேற்கொள்ளுவர்; முற்றுகை நிகழ்காலத்தே, அகத்திருந்து புறத்தே போதருவாரும், புறத்திலிருந்து அகத்துட் புகுவாரும் இலராவர் ஆகவே, அகத்துறைவார்க்கு வேண்டும் இன்றியமையாப் பொருள்கள் சிறிதும் புறத்திருந்து கிடைத்தல் இன் றாம்; ஆகவே, மேற்கொண்ட முற்றுகை பல நாள்

Digitized By Roja Muthiah Research Library

நிகழுமாயின் அரணகத்திருப்பார், வாழ்க்கைக்கு வேண்டும் இன்றியமையாப் பொருளாய உணவும் பெற மாட்டாமல் பெரிதும் வருந்துவர்; அதனால், அவர், இறுதியில் பகைவர்க்குப் பணிந்து போதலும் செய்வர்; ஆகவே அரண் அமைத்தும் பயன் பெறாராவர். இவ்வாறு ஒரு நாட்டைப் போரிட்டுக் கைப்பற்ற விரும்புவோர், முதற்கண், அந்நாட்டு மக்களுக்கு வேண்டும் உணவுப்பொருள் பிற நாடுகளிலிருந்து உட்புகாவாறு, அந்நாட்டைச் சூழ உணவு முற்றுகை யிடுதல், அண்மையில் நிகழ்ந்த உலகப் பெரும் போரினும் நிகழக் கண்டோம்;

பகைவர் மேற் கொண்ட முற்றுகை நாள் பல நீடினும், அரணகத் துறைவோர் பணிந்து போகாமை நிகழ வேண்டின், அவ் அரண், தன் அகத்துறைவார்க்கு வேண்டும் அனைத்துப் பொருள்களையும் அளிக்க வல்ல பெருவளம் உடைத்தாதல் வேண்டும்; அத்தகைய அரணைப் பெற்றார், பகைவர், எத்துணைப் பெரும் படைகொண்டு, எத்தனை ஆண்டுகள் முற்றியிருப்பினும் பணியார்; மாறாக முற்றியிருப்பார் தம் உள்ள ஊக்கத்தை அழித்து வெற்றி கோடலும் செய்வர்; அத்தகைய பெருவளம் பெற்ற அரண் பகைவர்க்கு அருமையும், அகத்துறைவார்க்கு எளிமையும் உடையதாய், அரண் எனும் பெயர்க்கு உரிமை உடையதாம்; இவ்வாறு புறத்தார்க்கு அருமையும், அகத்தார்க்கு எளிமையும் ஒருங்கே அளிக்கவல்ல சிறப்பு, அவ் அரண் பெற்றிருக்கும் உணவு முதலாம் பெருவளத்தினாலேயே உண்டாம் ஆதலின், அத்தகைய வளத்தின் சிறப்பினை, அவ்வருமை, எளிமைப் பண்புகட்

Digitized By Roja Muthiah Research Library

கிடையே வைத்துப் பாராட்டியுள்ளார் திருவள்ளுவர். "கொளற்கு அரிதாய்க், கொண்ட கூழ்த்து ஆகி, அகத் தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண்." அரணின், இவ்வுண்மை இயல்பினை உள்ளவாறு உணர்ந்திருந் தனர் தமிழர்.

பாரி, ஒரு குறு நிலத்தலைவன்; பறம்பு என்ற மலையையும், அதைச் சூழ இருந்த முந்நூறு ஊர்களைக் கொண்ட சிறு நாட்டையும் ஆண்டவன்; சிறந்த கொடையாளி; கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; இவன் புகழ் பெருகுவது கண்ட மூவேந்தர், இவனை அழிக்க எண்ணினர்; நால் வகைப் படையும் கொண்டு சென்று அவன் பறம்பு அரணை முற்றுகையிட்டனர்; பல நாள் ஆகியும் அவன் பணிந்திலன்; சிறிய மலை யரண் உடைய அவன் பணியாமை கண்டு வியந்தனர் வேந்தர் மூவரும்; அந்நிலையில், அவன் பணியாமைக் காம் காரணம் இஃது என்பதை அவன் ஆருயிர் நண்பர் புலவர் கபிலர் அவ்வேந்தர்க்கு எடுத்துக் கூறி னர். அவன் மலை வளத்தாற் சிறந்தது; உழவர், தம் ஏர் கொண்டு உழுதொழில் புரிந்து வருந்த வேண்டுவ தின்றியே உண்டாம் நால் வகை உணவுப் பொருள் களை உடையது; ஒன்று மூங்கில் நெல்; இரண்டு, தீஞ்சுளைப் பலாப் போலும் பழவகைகள்; மூன்று வள்ளி போலும் கிழங்கு வகைகள்; நான்கு இயற்கை யில் உண்டாம் மலைத்தேன்; இவையே யன்றி, வற்றாத நீர் நிறைந்த சுனைகள் பல, அவன் மலை நிறைய உள; இவ்வாறு வளம் மிக உடைமையால், உள்ளிருப்போர் ஒரு குறையும் இலராவர்; அதனால், பகைவர், மரந் தோறும் பிணித்த களிறும், புலந்தொறும் பரப்பிய

Digitized By Roja Muthiah Research Library

குதிரையும் கொண்ட பெரும்படை உடையராயினும், பாரியைப் பணியவைத்து வெற்றி கோடல் அறியார் எனக் கூறிய கபிலர் கூற்று, அரணிற்கு, உணவளிக்கும் அரண் எத்துணை வலியுடைத்து என்பது தெற்றென விளங்குதல் காண்க.

"அளிதோதானே பாரியது பறம்பே?
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்,
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே;
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும் மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும் மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு
வீழ்க்கும் மே;
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின், மீதழிந்து
திணி நெடும் குன்றம் தேன் சொரியும் மே;
வான் கணற்று அவன் மலையே; வானத்து
மீன் கணற்று அதன் சுனையே; ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிராயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்,
தாளிற் கொள்ளவிர்; வாளிற்றூ ரலன்;
புறம்: 109

நால்வகை அரண்களையும், பற்றற்கரிய பெருமதில்களையும், உணவு முதலாம் பொருட் செல்வங்களையும் ஒருங்கே பெற்றுள அரணும், ஒரோ வழி அழிந்து போதல் உண்டு; ஆதலின், அவ்வாறு, அஃது அழிந்து போவுழி, அவ் அரணகத்து வாழ்வார், பகைவரான் பாழுறுவண்ணம் பாதுகாத்து நிற்கவல்ல வீரர்களையும் அவ்வரண் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும்; தமக்கு அரணாய் அமைந்த அவ் அரணும் அழிந்து

Digitized By Roja Muthiah Research Library

போவுழி, ஆங்கு வாழ்வாரைக் காத்து நிற்றல் வேண்டும்; அது, தம் கடன் எனக் கொள்ளும் உயர்வுள்ளம், எல்லா வீரரிடத்தும் உண்டாதல் இல்லை; தன் நாடு, தன் நாட்டு மன்னன், தன்னாட்டு மக்கள் ஆய இவர் மாட்டுக் கொள்ளும் பேரன்பு, மானமும், மறமும், சோர்வின்மையும் ஆய நற்பண்புகள் நன்கு வாய்க்கப் பெற்றாரிடத்து மட்டுமே, அவ்வெண்ணம் உண்டாம். ஆதலின், அத்தகைய நல்லாட்களை அரணகத்தே பெற்றிருத்தற்கண் அரசர் பெரிதும் விழிப்புடையராதல் வேண்டும் என்று கூறுகிறார் வள்ளுவர். "எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்து உதவும் நல்லாள் உடையது அரண்."

அரண் ஒன்றைக் கைப்பற்ற எண்ணும் பகையரசர், அவ் அரணகத்துள்ளார் வெளியே வருதலோ, அகத்துறைவார்க்கு வேண்டும் புறத்தார் உட்புகுதலோ இயலாவாறு முற்றுகைசெய்தும், முற்றுகையிட்டுக் காத்திராது, அரணைப் படைகொண்டு பாழ்செய்தும், அகத்துறைவாரை வஞ்சனையால் ஏமாற்றியும் தாம் எண்ணியதை முடிக்க முனைவர்; பெரும் பொருளும், கொளற்கு அருமையும், நல்லாளும் பெற்றுள்ளமையால், பகைவர் தம் மூவகை முயற்சியும் முடியாவாறு ஆக்கி வெற்றி கோடலே அரணிற்குச் சிறப்பளிப்பதாம்; "முற்றியும் முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும் பற்றற்கரியது அரண்;" தம் படைப் பெருமையால் முற்றுகையிட்டு வெற்றியுறுவேம் எனச் செருக்கி வந்த பகையரசர் பெரும் படை யனைத்தும் பாழுற்றுப் பின்னிடுமாறு பண்ணவல்லதே பேரரணிற்குப் பெருமை தருவதாம்; "முற்றாற்றி முற்றியவரையும், பற்றாற்றிப் பற்றியார் வெல்வது அரண்;" அகத்துறைவார் ஆண்டிருந்தவாறே செய்த அரும் போரால், புறத்தார் அழிந்து புறம் இடச்செய்ய வல்லதே நல்லரணும்; "முனை

Digitized By Roja Muthiah Research Library

முகத்து மாற்றவர் சாய, வினைமுகத்து வீறெய்தி மாண்டது அரண்" என்றெல்லாம் கூறிய வள்ளுவர், அரண் எத்துணை ஆற்றல் வாய்ந்ததாயினும், உள்ள வாய்ப்பினை ஒழுங்காகப் பயனுறுத்தி வெற்றிகோட வல்ல அறிவுடையாரைப் பெறுதாயின், அது பெற்றுள்ள ஏனைப் பேறுகளால் பயன் இன்றாம்; ஆகவே, அரண், அத்தகைய அறிவுடையாரைப் பெற்றிருத்தல் இன்றியமையாத தொன்றாம் என்ற கருத்தினை இறுதிக்கண் கூறி வற்புறுத்தி யுள்ளார்; "எனை மாட்சித் தாகியக் கண்ணும், வினைமாட்சி இல்லார்கண் இல்லது அரண்."

அரண் அமைப்பார், தம் கோட்டை வாயிலில், மகளிர்க்குரிய, சிலம்பு, தழை உடை, பந்து, பாவை முதலாயினவற்றைக் கட்டித் தொங்க விடுவதை வழக்கமாக மேற்கொள்வர் என்றும், அவ்வாறு தொங்க விடுதல், "வாளேந்த வல்ல வீரர் உட்புகல் அரிது; ஆடல் மகளிர்க்கு அஃது எளிது; ஆகவே பகைவர்காள்! அரணுட் புகும் ஆசையுடையீராயின், நீவிரும் மகளிராய், ஆண்டுள சிலம்பு முதலாயின கொண்டு உட்புகுக" எனக் கூறாமற் கூறிப் பகைவரை இழித்தற்காம் என்றும் சங்க நூல்கள் கூறுகின்றன; அரண் அமைப்பின் சிறப்பு என்னே! அவ்வரணகத் துறைவார் தம் ஆண்மை என்னே!!

"செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்"
—பதிற்றுப்பத்து: 53: 6—7.

"வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்',
—திருமுருகாற்றுப் படை: 68—69.

Digitized By Roja Muthiah Research Library

# செம்பொருள் கண்டார்

**உமை தாணு**

**நாகரிகச் சிற்பி.** நாயனர் நாடும் ஊரும் அறிந்தவர். ஒரு நாகரிகச் சிற்பி. உலகியலை வடிவடித் துதவியவர். மக்களுடைய உள்ளங்களை அளந்தவர். வழக்காற்றுச் சொற்களை ஆராய்ந்தார். நுண் மாண் நுழை புல முடையவர். செம்பொருளின் இயல்பைத் தெளிய வுரைத்தவர். ஈரடியில் இவ்வுலகை அடக்கினர். அவரது இலட்சியங்கள் அதியற்புதமானவை. உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளுபவர். வள்ளுவரது வாக்குகள் வளமுடையவை. அவை உலகைக் கவருந்தன்மை யுடையன. கற்றவர்க் கேற்ற விருந்து.

**நூல்.** அவை எக்காலத்தவர்க்கும், எச்சமயத்தவருக்கும், எந் நாட்டவருக்கும் பொதுவானவை. திருக்குறள் சமயப் பொது நூல். காலங் கடந்த நூல். சமயங் கடந்த நூல். இதன்பால் இல்லாத பொருள் ஒன்றுமே இல்லை. தன்னேரில்லாதது. இதைப் போலொரு நூல் என்றுந் தோன்றப் போவதில்லை. திருவள்ளுவருடைய சமயத்தை அளந்து சொல்ல முடியாது. கடவுள் தன்மையைப் போல அவருடைய சமயமுங் கடந்து நிற்கிறது. இவை போன்ற காரணங்களால் அவர் மீதும், அவருடைய பாடல்கள் மீதும் கடவுள் தன்மை அமைவதாயிற்று.

**மெய்யுணர்தல்.** அவர் வாழ்க்கையில் முதிர்ந்த அனுபவங்களைக் கண்டார். பிறப்பின் பயனை உணர்ந்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
Digitized By Roja Muthiah Research Library

தார். பிறவிக்குரிய காரணத்தை ஆராய்ந்தார். இறுதியில் துறவை உணர்ந்தார். உயிர் உடலைத் தாங்கி நிற்கும். அதன் வழி நின்று அறிவைக் கெடுக்கும். ஆசையை ஊட்டிப் பிறவிக் கடலில் தள்ளும். அதை அகற்றுவதற் குரிய நெறிகளைத் தெரிந்தார். இறைவனை வணங்குவதுவே எளிய வழியெனக் கண்டார். மெய்யுணர்ந்து, ஆசைகளை அறவே நீக்கி ஒழுகினார். அக்காலத்தில் இந்நூலைப் பாடினார். நூலை மூன்று பிரிவாகப் பிரித்தார். முதலில் பாயிரமுங் கண்டார். அறிவாய் அருவாய் அழிவற்றதாயுள்ள பொருளே செம்பொருளெனக் கொண்டார். அப்பொருளாகிய இறைவனை-இறைத்தன்மையைத் தெரிவிப்பன கடவுள் வாழ்த்தாகும். அதையுணர்ந்து இந்நூலில் முதலில் கடவுளை வாழ்த்தும் வாழ்த்துக் கூறினார்.

**இறைநிலை.** தாமறிந்த இறைவனை 'ஆதிபகவன்' 'வாலறிவன்' 'மலர்மிசை யேகினான்' 'வேண்டுதல் வேண்டாமையிலான்' 'பொறிவாயிலைந்த வித்தான்' 'தனக்குவமையில்லான்' 'அறவாழியந்தணன்' 'எண்குணத்தான்' எனத் தெளிந்து கூறினார். இவை இறைவனது சிறப்பைக் காட்டுவன. பெயரல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவையன்றி செம்பொருளைக் குறிக்கும் பல பெயர்களும் நூலில் இடம் பெற்றிருக்கின்றன. 'புத்தேள்' 'புத்தேளிர்' 'வானோர்' 'வானத்தவர்' இப்பெயர்கள் தேவர்களைக் குறிக்கின்றன. 'அடியளந்தான்' 'தாமரைக் கண்ணான்' 'உலகியற்றியான்' 'தாமரையினான்' இவை இறைவனது சிறப்பியல்பைக் காட்டுவன. 'இந்திரன்' 'வேந்தன்' 'காமன்' 'கூற்றம்' 'திங்கள்'

Digitized By Roja Muthiah Research Library

'திரு' 'செய்யவள்' 'தௌவை' 'அணங்கு' 'பேய்'அலகு' தெய்வம் முதலிய பிற்றம் உள்ளன. ஆராய்ச்சிக்கு கல்வெட்டுக்கள் செப் பேடுகள் ஓலைப் பிரமாணங்கள் முதலியவை இன்றியமையாதவை. வரலாறுகளும் சாத்திரங்களும் அதற்கு ஓரளவு உதவுமே தவிர, அவ்வளவு சிறப்புடையவையல்ல.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் சைவரா? வைணவரா? மகமதியரா? கிறிஸ்தவரா? பௌத்தரா? சமணரா? என்று பல கேள்விகள் எழும்.எழுவதும் முறையல்லவா? இவரை சமணர் என்று ஊகிக்க இடமுண்டு. நாவுக்கரசர் பிறவிசைவர். சமணமதத் தொண்டுகள் செய்தவர். தரும சேனன் என்ற பெயரும் பெற்றவர். பக்திச்சுவை சொட்டச் சொட்டத் தேவாரம் பாடவில்லையா? தேவாரம் சமண நூலாகிட்டதா? எவரெவர் எவ்விதம் விரும்புகிறாரோ, அவரவர்க்கு அவர் அவ்விதமாகவே தோன்றுபவர். இனி மதவாதிகளின் கூற்றுக்களைக் கவனிப்போம்.

**சைவரா?** சைவர்கள் சிவனைத் தெய்வமாகக் கொண்டொழுகக் கூடியவர்கள். பதி, பசு பாசம் நித்தியமானவை. பசுக்களாகிய ஆன்மாக்கள் புண்ணியத்தினால் பதிஞானம் பெற்றுப் பாசத்தளைகளிலிருந்து விடுதலை பெற்றுச் சிவத்தோடு இரண்டறக் கலத்தலே முத்தியாகும். ஆசையே பிறவிக்குக் காரணம். பற்றொழிதலே முத்திக்கு வழி.இதுவே இம்மதக் கோட்பாடு.

'எண்குணத்தான்' என்ற பெயர்ப் பொருள் சைவாகமத்திலுள்ளது என்பர் பரிமேலழகர். துறவியலில் ஞானம் கூறும் பகுதிகள் சைவ சித்தாந்தத்தை ஒத்திருக்கின்றன என்று சில சைவாபிமானிகள் கூறு

Digitized By Roja Muthiah Research Library

வர். சைவப் பெரியார்கள் திருவள்ளுவருக்கு நாயனர் என்ற சிறப்புப் பெயரும் சூட்டியிருக்கிறார்கள். சிவ சின்னங்களையும் அவருக்கு உடைமையாக்கி விட்டார்கள். பூசைகள் எடுக்கின்றார்கள். விழாக்கள் கொண்டாடுகின்றார்கள். இதை மறைக்க முடியுமா? மறைப்பது முழுபூசனிக் காயைச் சோற்றில் மறைப்பது போலாகு மல்லவா?

**வைணவரா?** வைணவர்கள் விஷ்ணுவைத் தெய்வமாகக் கொண்டொழுகக் கூடியவர்கள். 'விசிஷ்டாத்துவம்' என்றும் கூறுவதுண்டு. கடவுள் வேறு. ஆத்மா வேறு. 'ஆத்மாக்கள் ஞானங்கூடி பிரபஞ்சத்தைத் துறந்து, இறவனுடைய திருப்பாதங்களில் அன்புடையவராய், வைகுண்டஞ் சென்று, சாமீபம் பெறுதலே மோக்ஷம்' என்ற கொள்கையுடையவர்கள்.

'ஆதிபகவன்' என்பதற்கு அந்தமில் ஆதியம் பகவன் என்றும் 'வாலறிவன்' என்பதற்கு அடலாழி கொண்ட அறிவன் என்றும், 'மலர் மிசை யேகினன்' என்பதற்கு மன்னகமல மற மலர்மிசை எழுதரு மனனுணர்வினன் என்றும் 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்பதற்கு கொள்கை, கொள்ளாமை இல்லாதவன் என்றும், 'பொறிவாயிலைந்தவித்தான்' என்பது துவாதச திருநாமங்களுள் ஒன்றான இருடி கேடவன் என்பதின் மொழிபெயர்ப்பு என்றும் 'தனக்குவமையிலான்' என்பதற்கு தன் னொப்பாரில்லப்பன் என்றும் 'அறவாழியந்தணன்' என்பற்கு அரவணை ஆழிப் படை அந்தணனை என்றும், ஆழ்வார்கள் அருளிச் செய்திருப்பதால் இத்தொடர்கள் திருமாலைக் குறிக்கு மென்பர்.

Digitized By Roja Muthiah Research Library

'தாமரைக் கண்ணன்' 'அடியளந்தான்' இதாற் சுட்டும் வரலாற்றாராய்ச்சிகள் வைணவர் என்பதை வலியுறுத்து மென்பர். 'தாமரைக் கண்ணன்' என்பதற்கு, 'தாமரையிடத்து இருப்பவனாகிய அயனுலகு' என்பர் பரிமேலழகர். 'அகர முதல' என்பது 'அகாரார்த்தோ விஷ்ணு' என்ற வைணவ கருத்தைக் கொண்டது என்று எடுத்துக்கூறி வைணவர் என்று நிலைநாட்டுவாருமுண்டு.

திருவாய் மொழியின் கருத்துக்களும் திருக்குறள் கருத்துக்களும் தம்முள் ஒத்திருப்பதைக் காட்டி வள்ளுவர் வைணவரே என வாதிப்பவருமுளர். அவர் கூறுவதை அடியில் வருமாறு கண்டு கொள்க.

1. "ஊரவர் கௌவை யெருவிட் டன்னை சொன்னீர்ப் படுத்து"

(43ம் திருவாய்மொழி 4ம் பாசுரம்)

ஊரவர் கௌவை யெருவாக வன்னை சொல்
நீராக நீளு மிந்நோய்" (குறள்)

2. கண்டுகேட் டுற்று மோந் துண்டுழலு மைங்கருவி
கண்ட வின்பந் தெரிவரிய வளவில்லாச்
சிற்றின்பம்
ஒண்டொடியர் டிருமகளு நீயுமே நிலா நிற்ப"
(திருவாய் மொழி)

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டோடி கண்ணே யுள" (குறள்)

**மகமதியரா?**

'பள்ளி' என்பதற்கு பொருள் என்ன? சொல்லைப் புரட்டும் தொள்ளாளிகள் இருவர். புலவர் கூட்டத்தவர்

Digitized By Roja Muthiah Research Library

ஒருவர். மற்றவர்கள் வக்கீல்கள். திருவள்ளுவர் பேதமை என்னும் அதிகாரத்தில் கூறிய ஒரு சொல்லாட்சியைக் கொண்டு அவரை தமது மதத்தினர் என நிலை நாட்ட முயல்கின்றனர்.

"கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல்" குறள்.

சான்றோரவையின் கண் பேதையாயினான் புகுதல், தூயவல்ல மிதித்த காலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும், அமளியும் இழிக்கப் படுமாறு போல, இவனால் இவ்வவையும் இழிக்கப்படும் என்பர் பரிமேலழகர்.

கழுவாத காலை பள்ளியின் கண்ணேவைத்தாற் போலும் சான்றோர் அவையின்கண் பேதை புகுந்து கூடியிருத்தல். இது பேதை யிருக்க அவை இகழப் படுவது என்பர் மணக்குடவர்.

'பள்ளி' என்பதற்கு பாயல், அமளி, இருக்கை, சயனம் என்பது பொருள். மகமதியர், கிறிஸ்தவர் பௌத்தர், சமணர் பள்ளியையும் குறிக்கும். ஆசிரியரது உள்ளத்தைச் சற்றும் உணராது 'பள்ளி' என்ற சொல்லை மட்டும் கொண்டு பள்ளி மகமதியர் பள்ளி என்று பொருள் கொண்டு ஆசிரியர் இஸ்லாமிய மதத்தினர் என்பது இருட்டைக் கொண்டு துவாரத்தை அடைப்பதற்கு ஒப்பாகும் அல்லவா?

**கிறிஸ்தவரா?**

பள்ளி—கிறிஸ்தவர் பள்ளி என்று பொருள் கொண்டு வள்ளுவர் தம் மதத்தைச் சார்ந்தவர் என்பாருமுளர். G. U. போப் என்பவர் எங்கள் ஏசுநாதர்

Digitized By Roja Muthiah Research Library

ஒலிவ மலையின் மேல் நிகழ்த்திய உபதேசத்தின் எதிரொலியே, 'குறள்' என்பார். அன்றியும் "எல்லா நூற்களிலும் நல்லென எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு" என்ற பரி மேலழகர் கூற்றை மேற்கோளாகக் காட்டி அவர் கிறிஸ்தவ மதத்தினரே! என்பவரும் உண்டு.

"மாதவி மாதவர் பள்ளி யடைந்ததும்"

மணி-18-8.

"புத்த நோன்பியர் பள்ளி யுள்ளுறை"

திவ்-பெரியதா-2,1,5

'புதுப் பூம்பள்ளி' புறம் —33.

இத்தொடர்களில 'பள்ளி'என்ற சொல் பள்ளி— ஆலயம் என்ற பொருளைக் குறிக்கின்றது. ஆனல் திருவள்ளுவர் கூறும் நயத்தையும் பொருளையும் விட்டு 'பள்ளி' என்பதற்கு ஆலயம் என்று பொருள் காண் பது சற்றும் பொருந்தாதாகும். ஆதலால் இக் கூற்று கொள்ளத்தக்கதல்ல.

**பௌத்தரா?** கடவுள் மனோவாக்குகளுக்கு எட்டா தவராகையால் அவரை மானுட நிலையிற் கண்டு தெளிவது முடியாது. புத்த நிலையடைய முயல்வதுவே முத்தி யுபாயம். அவாவறுத்து உலக நிலையாமையை யுணர்ந்து ஆத்மதரிசனம் செய்த வழியன்றி அந் நிலை சித்தியாகா தென்பது இம்மதக் கொள்கை. இதைக் கண்டவர் கௌதம புத்தர்.

'மலர் மிசையேகினன்' என்று இறந்த காலத்தில் கூறியிருக்கிறது. கௌதமபுத்தர் மாயாதேவியின் வயிற்றிலிருந்து வலது விலாவழியாக திருவவதாரஞ்

Digitized By Roja Muthiah Research Library

செய்தருளினர். அக்காலத்தில் நீலத்தாமரை மேல் ஏழு அடி நடந்தார். என்று வரலாற்றைக் கூறுவர். புத்தர் ஞானம் பெற்று உலக உபதேசியாகி பூமி யெங்குந்திரிந்தார். அச் செய்தியை 'பூமிசை நடந் தோன்' என்று இறந்த காலத்தால் கூறப்பட்டது என்பர்.

"பொன்னெயில் நாதன் பூமிசை நடந்தோன்"
(திவாகரம்)

"புனிதன் வென்றோன் விராகன்
பூமிசை நடந்தோன்போதன்"
சூடாமணி நிகண்டு.

'பூமிசை நடந்தோன்' என்ற இப்பெயர் நிகண்டு பெயராக புத்தனுக்கும் காணப் படுகிறது. அருக தேவனையும் இப்பெயர் குறிக்கிறது, ஆ க வே இக் கூற்று ஆராய்வதற் கொன்றாகும்.

'மலர் மிசை யேகினன்' 'பூமிசை நடந்தோன்' இத்தொடர்களிலுள்ள 'மலர் மிசை' 'பூமிசை' என்ற சொல்லாட்சியும், அதன் பொரு ளமைதியையும் கூர்ந்து நோக்கத்தக்கது. 'பொறிவாயிலைந்தவித்தான்' 'வேண்டு தல் வேண்டாமையிலான்' என்பது புத்த தேவர் மாரனை வென்றதைக் குறிக்கும் என்பர். மட்டுமல்ல புத்த தேவர் விதந்து கூறிய அருளறத்தையே வள்ளு வர் மிகுத்துக் கூறினர் என்பர். 'அறவாழியந்தணன்' தருமச் சக்கரத்தை உலகில் செலுத்தியவன். ஆத லால் இப்பெயர் அமையலாயிற்று, என்பர். 'தர்ம சக் ரப் பிரவர்த்தன சாரியன்' என்பது புத்தரது பெயர். இதுவும் அக்கூற்றை வலியுறுத்தும் என்பர்.

Digitized By Roja Muthiah Research Library

'ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்'
மணி-10-61

"அருளாழி நயந்தோய் நீ
அறவாழி பயந்தோய் நீ" வீர-யாப்பு 11

இக்கூற்றுக்களையும் ஆதாரங் காட்டுவர்.

துன்பமற்ற வாழ்வு துறவு. முற்றுந்துறந்தவர் வீட்டுலகிற்கு உரியவராவர். ஆசை வலையில் வீழ்ந்தவர்கள் பிறவிக் கடலில் உழல்வார்கள். துறவானன்றி வீட்டுவகை யடைய முடியாது. இக்கருத்துக்களை ஆசிரியர் துறவியலில் கூறியுள்ளார். இக் கொள்கையாலும் ஆசிரியர் பௌத்த மதத்தைச் சார்ந்தவரே என்று கூறுவர்.

பௌத்தர், ஞானமே கடவுள் என்றும் ஞானமே ஆன்மா என்றும் கருதுபவர்கள். அவர்களுக்குப் பதமுத்தி உடன் பாடல்ல. உயிரைக் கொல்ல மாட்டார்கள். ஆனால் ஊன் உண்பார்கள். ஆசிரியர் மாணடி சேர்தலாகிய ஞானத்தைக் கூறுவதை அவர்கள் எடுத்துக் காட்டுவார்கள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இப்பாடலில் இறைத்தன்மை யுணர்த்தப் பட்டிருப்பதைச் சுட்டிக் கூறுவர். 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று ஞானத்தின் வேறாக உயிர் உண்டு என்று உணர்த்துவதாலும் 'தாமரைக் கண்ணான் உலகு' 'புத்தேளுலகு' என்று பத விகுதிகளைக் கூறுவதாலும்



Digitized By Roja Muthiah Research Library

"தின்னற் பொருட்டால் கொல்லாதுல கெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"

என்று புலாலுண்பதை ஆசிரியர் மறுத்துக் கூறுவதாலும் திருவள்ளுவர் பௌத்தர் என்பது பொருந்தாதாகும். இம்மதத்தைச் சார்ந்தவர்கள் இலங்கை, பர்மா முதலிய இடங்களில் உளர்.

**சமணரா?** கீர்வாண வேதத்தை நம்பாதவர். கொல்லா விரதமே இவர்களது விரதம். இவர்களுக்குரிய கடவுள் அருகதேவன். இரவில் இவர்கள் உணவு உண்பதில்லை. காஞ்சி, மன்னார்கோயில், மைசூர் முதலிய இடங்களில் இவர்களைக் காணலாம்.

'மலர் மிசையேகினான்' 'பொறி வாயிலைந்தவித்தான்' 'அறவாழியந்தணன்' இவை தம் தெய்வத்தையே குறிக்கும் என்பர். ஆதலால் இவர் சைனர் என்பர். வாலறிவன் என்பது கேவல ஞானி. 'உலகெலாம் உணர்ந்த மூர்த்தி அலகிலா ஞானவாரி' என சூடாமணி நிகண்டில்* காணப்படுகிறது. 'அறிவன்' என்பது அருகக் கடவுளைக் குறிக்கும். இக் கூற்றை மேரு மந்தர புராணம், நீலகேசி, திவாகரம் முதலிய நூற்கள் வற்புறுத்துகின்றன. ஆதலால் இப் பெயர் அருகக் கடவுளுக்கே உரியதென்பர்.

'அறவாழியந்தணன்' என்பது தருமச் சக்கரத்தை முத்திரையாக உடைய ஜினக்கடவுளைக் குறிக்கும். இதை இலக்கியங்களில் பல இடங்களிலும் காணலாம் என்பர்.

'ஆதியங் கடவுள் அறவாழி யந்தணன்'
(திவாகரம்)

'அறவாழி வேந்தன் வாமனன்'
(சூடாமணி நிகண்டு)

Digitized By Roja Muthiah Research Library

'பொறி வாயிலைந் தவித்தான்' 'ஐவரை வென்றேன்' 'பொறியிலா அறிவன்' என்பன அருகனைக் குறிப்பதை இலக்கியங்களில் காணலாம். ஆனால் பொறிகளை யடக்கி யாள்தல் இறைத் தன்மைக்குப் பொருந்தாது. கவி ராஜபண்டிதர் சிறந்த சமணமத புலமையுடையவர். பொறிகளை வழியாகவுடைய மித்தையை அறுத்தவன் என்பது இப்புலவரது கூற்றாகும். யாருடைய மித்தையை அறுத்தவன்? என்ற கேள்வி எழும். அதற்கேற்ற விளக்கமில்லை. ஆனால் வள்ளுவர் ஐந்த வித்தான் என நீத்தாரையும் குறிக்கிறார். நீத்தாரகிய அந்தணர் பொறிகளை அறிவால் அடக்கியாண்டவர். ஜினதேவர் அவ்விதம் ஆளவில்லை. இக்கூற்று ஆராய்வதற் குரியது.

'என்குணத்தான்' என்பது இளங்கோவடிகளால் சித்த பரமேட்டியைக் குறிக்குமிடத்து ஆளப்பட்டது. 'கடையிலா அறிவை முதலாக உடையன' என்று கூறுவாருமுளர்' என பரிமேலழகர் காட்டுகின்றார். ஆதலால் ஆசிரியர் சைனர் என்பர்.

'மலர் மிசையேகினான்' இச் சொற்றொடர் கூர்ந்து ஆராய்வதற் கொன்றாகும். தேவர்களா லிடப்பட்ட தாமரையின் மேல் அருகக் கடவுள் நடந்தார் என்ற கொள்கையைக் குறிக்கும் என்பர். 'மலர் மிசை நடந்தோன் மலரடி' (சில-நாடு 204) இது அருகனைக் குறிக்குமென்பர். 'மலரின் கண்ணே சென்றவன்' என்று அதற்குப் பரிமேலழகர் பொருள் காண்பார். அன்பால் நினைப்பவரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறலின் ஏகினான் என இறந்த காலத்தால் கூறினார். 'ஏகினான்' என்பது

Digitized By Roja Muthiah Research Library

குறிக்கத் தக்கது. இது ஒரு வினை நிகழ்ச்சியைக் குறிக்கு மல்லவா? அது ஆண்டவன் மலரின் மேல் நடந்த நிகழ்ச்சியைக் காட்டும். அச் செய்தி சைனர்களுடைய நூலாகிய ஸ்ரீ புராணத்தில் கூறியதின் கருத்து அடியில் வருமாறு காண்க.

"பகவானது பாதத்தின் கீழ் ஒரு மலர் உண்டு. அதன் முன்னரும், பின்னரும் தாமரை மலர்கள் தோன்றின" என்று இவ்விதம் குறிக்கப்பட்டிருக்கிறது.

"விருஷப தீர்த்தங் கரர்க்கு ஆதிபகவான் என்று ஒரு பெயருண்டு. அவர் பரமான்ம நிலைந்து சமவசரணம் என்ற பீடத்தில் அமரச் சொல்லும் சமயத்தில் அவர் பாதத்தினடியில் மட்டுமல்ல முன்னரும் பின்னருமாக தாமரை மலர்கள் தோன்றின. அவற்றின் மேல் அவர் நடந்து சென்றார்," என்ற கருத்துக்கள் மகா புராணத்தில் 25 பர்வம் 271 ல் கூறப்பட்டிருக்கிறது. இது சைன மதக் கொள்கையைக் குறிக்கிறது.

மலர், பூ, இரண்டும் ஒரு பொருளையே குறிக்கும். 'பூமிசை நடந்தோன்' இது அருகனைக் குறிக்கிறது.

"பொன்னெயில் நாதன் பூமிசை நடந்தோன்"
(திவாகரம்)

"புனிதன் வென்றோன்வி ராகன் பூமிசை
நடந்தோன் போதன்"
(சூடாமணி நிகண்டு)

"வேந்தன் விரிபூந் தாமரை மேல்"
(சீ. சிந்தாமணி 2814)

Digitized By Roja Muthiah Research Library

"கமலமீ துலவுமுனைக் காதலிப் பாரரியரே"
(மேரு மந்தர புராணம்)

'தேனரும் அரவிந்தம் சென்றேந்தும் போது'
(சூளாமணி துறவு 69.)

'பூவின் மேல் சென்றான் புகலடியை'
(அறநெறிச் சாரம்)

'நகா நின்ற தாமரைமேல் நடந்தேகிய நற்றவனே'
(திரு நூற்றந்தாதி. 45.)

இவை மேலே கூறிய கூற்றை வற்புறுத்துகின்றன.

"மலர் மிசையேகினான்" என்பதற்கு புத்தர் மீதேற்றிய விளக்கம் முதலில் கூறப்பட்டிருக்கிறது. அது பொருந்தாது. ஆண்டவன் பக்தர்களின் இதயத் தாமரையில் வீற்றிருப்பவன், என்பதை புலவர்கள் பல இடங்களில் குறிப்பிட் டிருக்கின்றார்கள்.

'மாமலர் மேய சோதி' (திருவாசகம்) 'தாமரைமேல் இயங்கினாரும்' (அப்பர்) 'உள்ளத்து மலர் பதுமபதம்' (குமரகுருபரர்) 'மனத் தாமரை' (கம்பர்) சிவன் மலர் மேலேகியதை இங்கே குறிக்கவில்லை. கற்பாந்த காலத்தில் உலகில் எஞ்சிய பொருள் 'சிவன்' என்பதைக் குறிக்கும். ஏகினான் என்று இங்கே பொருள் விளக்க முற வில்லை, என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொருளை இயற் பெயரால் அழைப்பார்கள் அல்லது மரபுப் பெயரால் விளிப்பது வழக்கம். அவ் விதம் கூறுவதால் பொருள் தெரிந்து நிற்கும் 'ஏகினான்' என்பது அருகனைக் குறிப்பதாகக் கொள்வது அமைவுடையதாகும். இவ் வுண்மையை சைனர்க

Digitized By Roja Muthiah Research Library

னுடைய நூற்களில் காணலாம். நிகண்டிலும் அருகனுடைய பெயரை முறைப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இக் காரணங்களால் ஆசிரியரை சமணர் என்று ஊகிக்க இடமுண்டு.

ஆனால் ஆகாயம் நீங்கிய ஏனைய பூதங்களின் சேர்க்கையால் உயிரனு, வினைக்குக் காரணமான உடலை எடுக்கிறது. இவற்றிற்கு வேறாகக் கடவுள் ஒருவர் என்பதும், உடையில்லாமையும், முக்குணங்கள் கெடுவதுமே முத்தியென்பதும் இவர்களது கொள்கை.

உயிர்கள் வினைக்கீடான உடலைத் தாமே எடுப்பதில்லை. வினைகளும் அறிவற்றன. உயிர்களைத் தாமே சென்றடைவதில்லை. ஆதலால் வகுத்தான் ஒருவனே யாவன் என்று ஆசிரியர் குறிப்பதாலும், 'உடுக்கை யிழந்தவன் கைபோல' என்று உடையின் அவசியத்தை வற்புறுத்திக் கூறுவதாலும், மாணடி சேர்ந்தார் என அடிசேர் முத்தியை வற்புறுத்தலாலும் சமணரல்லர் என்பாருமுளர்.

ஆசிரியர் பிறந்தது இழிந்த குலம். வாழ்ந்தது மயிலாப்பூர். லௌகிகம், வைதீகம் யாகம் முதலியன நாட்டில் நிலவின. சைனர் பௌத்தர் எழுந்தனர். நாட்டில் அமைதியின்மை நிலவியது. ஒழுக்கத்தை நாட்ட புலவர்கள் முயன்றனர். முயற்சி பலன் கனிந்தது. அம் மறுமலர்ச்சியில் மலர்ந்தவைகளே குறட்பாக்கள். நாட்டில் அமைதி நிலவ அது ஒரு சிறந்த ஒழுக்க நூலாக விளங்கியது. மயிலாப்பூர் பாடல் பெற்ற இடம். பழமையானது. கபாலீசுவரரை சம்பந்தர் பாடினர். அன்று சமணர்கள் இந்நகரில் வாழ்ந்து வந்தார்கள். அங்கே ஒரு ஜினாலயமும் இருந்தது. அதில் எழுந்தருளியவர் மயிலை

Digitized By Roja Muthiah Research Library

நாதர். இப் புனித நகரைக் காலதேவன் கண் வைத்தான். கடல் தன் கடும் பசியைத் தணித்துக் கொண்டது.

இச் சூழ்நிலையில் வாழ்ந்தவர் திருவள்ளுவர். சூழ்நிலை ஆசிரியரை வளைத்திருக்கும், அல்லது அதற்கேற்றபடி அவர் நடந்திருக்க வேண்டும். இதனாலும் அவர் சமண மதத்தைத் தழுவியிருக்க வேண்டும் என்று ஊகிக்க இடமுண்டல்லவா? 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதைக் குறியாகக் கொண்டு அவர் தமிழ் மொழிக்குச் சேவை செய்தார். அத்தொண்டு பெரிது. அதை அளந்து கூறமுடியாது. உலகம் அவருக்கு என்றும் கடப்பாடுடையது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாரதியார் அவரைப் பாராட்டுவா ராயினர்.

**பொதுநூல்**

" சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன் "

எனவும், (திருவள்ளுவமாலை - கல்லாடமுடையார்)

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி "

(திருவள்ளுவ மாலை - கல்லாடமுடையார்

என்று கூறியிருப்பது ஆசிரியரது சமயப் பொதுத் தன்மையை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

Digitized By Roja Muthiah Research Library

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்க
ளுள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி"
(மனோன்மணீயம்)

இதுவும் ஆசிரியரது கருத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

"ஒருநாமம் ஓருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ"
(திருவாசகம்)

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
(திருமந்திரம்)

இத்தொடர்கள் இறைவனது பொதுத் தன்மையைப் புலப்படுத்துகிறது. திருவள்ளுவ மாலையில் கோதமனாரும், வெள்ளிவீதியாரும் பிறரும் கூறும் கூற்றுக்கள் மேலும் அக்கூற்றை வலியுறுத்து மல்லவா?

உலகிற்குப் பொதுத் தன்மையை யுணர்த்திய மகான்கள் பலர். அவர்கள் வாய்ச் சொல்லில் வீரராக வாழவில்லை, செய்கையிலும் காட்டியுள்ளார்கள். ரஸ்கின், டால்ஸ்டாய், தாயுமானவர், இராமலிங்க அடிகள் முதலியோர்களை உலகம் நன்கறியும். இப் பெரியார்கள் உண்மைப் பொருளைக் கண்டு ஓதியவர்கள். காந்தியும் தாகூரும் மக்களைப் பயிற்றுவித்தார்கள். அன்பு சமயத்தில் உலகத்தை ஒன்றுபடுத்தினார்கள். சாதிசமய சழக்கை ஒழித்தார்கள். பிறவுயிரிடம் தன்னுயிர்போல ஒழுக வைத்தார்கள். உலகப் பெரியார்கள் எல்லோரும் ஆசிரியரது உள்ளத்தையே கண்டளந்து கூறுவராயினர்.

Digitized By Roja Muthiah Research Library

சிவனும், திருமாலும், மகமதுநபியும், ஏசுவும், புத்தனும், அருகனும் பிறவும் ஆகிநின்றவன் யாவனோ அப்பொருளையே ஆசிரியர் செஞ்சொற்களால் சமயப் பொதுத்தன்மையில் வைத்துப் பாடுவா ராயினர். பாவடிகள் தேன்வடிய பதுமனார் பாயிரங் கண்டார். அதில் செஞ்சொற்களால் உண்மைப் பொருளையும் ஆராய்ந்தார்.

இருள் அகல வேண்டும். அதை அகற்றுவது ஒளி. அவ்வொளி எவ்வொளியாக இருந்தாலென்ன? எங்கிருந்து வந்தாலென்ன? அறியாமையை அகற்றி அறிவைத் தருவது தெய்வத் திருக்குறள். காற்று, ஒளி, ஒலி, தண்ணீர், கல்வியறிவு முதலியவை மக்களுக்குப் பொது. அதுபோல குறளும் மக்களுக்குப் பொது. இந்நூலில் கடவுள் தன்மை தெரிந்து உணர்த்தப் பட்டிருக்கிறது. தெய்வப் புலவர் அதைச் செம்பொருளாகக் கண்டார். அப்பொருளை யுணர்த்தும் திருக்குறட் பாடல்கள்

"என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாம்"

என்று பாராட்டிப் பாடப்பட் டிருக்கிறது.

தெய்வத் திருக்குறள் வாழ்க. செந்தமிழ் வாழ்க.

செம்பொருள் அருள் நிலவுக.

Digitized By Roja Muthiah Research Library

# நன்றியில் செல்வம்

அ. சே. சுந்தரராஜன்

மக்கள் உள்ளப் பண்பினையும் ஆற்றலின் எல்லையையும் நன்குணர்ந்த ஆசிரியர் திருவள்ளுவனார் நாம் அறிய வேண்டுவன எல்லாவற்றையும் சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க எடுத்துக் கூறியுள்ளார். தீர்க்கதரிசியும் மகா கவியுமாகிய ஆசிரியர் மக்கட் சமுதாயம் எல்லாக் குறைகளும் நீங்கி, சீரும் சிறப்பு முற்று வாழ வேண்டும் என்னும் ஆர்வ மிகுதியினால் எழுதியளித்த தமிழ் வேத மாகிய திருக்குறள் எக்காலத்தும் யாவர்க்கும் 'இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல் போன்று' உதவும் பண்பாடுடையது. நம்மனோர்க்கு அழியாப் பெரும் செல்வமாக அமைந்த இச்சிறு நூல் உலகிலே தோன்றிய பெருநூல்கள் யாவற்றுள்ளும் முன் வைத்து எண்ணத்தகும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் 'செல்வம்' என்பது பற்றிப் பலப்பல கருத்துக்கள் தோன்றியுள்ளன. அவற்றின் விளைவாக, தனியுரிமை, பொது உரிமை என்னும் அடிப்படை பற்றி, சில பல அரசியல் இலட்சியங்களோடு கலப்புற்றுத் தற்காலம் தலையெடுத்துள்ள தனியுடைமை, ஜனநாயகம், சமுதாயப் பொதுவுடைமை, தேசியப் பொதுவுடைமை, சமதர்மம் முதலிய பலதிறப்பட்ட கொள்கைகளும் அவற்றின் பன்முகப்பட்ட விரிவுரை விளக்கங்களும் சாதாரண மக்கள் அறிவைக் கலக்கி, ஒரு தெளிவான முடிவிற்கு

Digitized By Roja Muthiah Research Library

வரவொட்டாது அலைக்கின்றன. இஃது ஒரு புறம் இருப்ப சென்ற இரண்டு உலகப் பெரும் போர்களின் பயனாக வாழ்க்கையின் பல துறைகளிலும் உண்டாகிய பெரிய மாறுதல்களினால் தனிமனிதன் சிந்தனையில் 'செல்வ முடைமை' ஒரு பெரிய புது மதிப்பினைப் பெறலாயிற்று. தனி மனிதனும் மக்கட் சமுதாயமும் வழியல்லா வழி மேற் சென்று, உலக அமைதியைக் குலைக்க இடந் தரும் தற்கால சூழ் நிலையில் 'செல்வம்' என்பது பற்றி ஆசிரியர் திருவள்ளுவனார் கொண்ட கருத்துக்களை அறிய முயல்வது நலம்.

முதலில் 'செல்வம்' என்பது பற்றி ஆசிரியர் வகுத்துக் கூறியவற்றைச் சுருக்கமாக ஆராய்வோம்.

செல்வம் நிலையில்லாதது; கூத்தாட்டவைக் குழாம் போன்று முன்னை வினை கூட்ட வருவது; அது முடியப் போவது. ஆதலால் பெரியர் கண்ணும் உளதாய பொருட் செல்வம் ஊக்கத்தினாற் சிறிது நிலை பேறுடையது. அசைவிலா ஊக்க முடையானிடம் தானே வழிதேடி வந்தடைவது. ஆதலால் அறிவுடையான் வேண்டும் பொழுது பெறற்பாலது.

இவ்வுலக வாழ்க்கைக்கு அஃது இன்றியமையாதது; பொருளின்றி இவ்வுலக இன்பம் இல்லை. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது செல்வம்; இல்லாரை எள்ளும் உலகினர் செல்வ முடையவர் இழிந்த படியினரே யாயினும் தாமே வலியச் சென்று சிறப்புச் செய்வர். எண்ணிய தேயத்துச் சென்று இருளறுக்கும் செல்வத்தினால் அரிய காரியமும் எளிதிலே கைகூடும். இதனால் ஆகாதது ஒன்றில்லை.

Digitized By Roja Muthiah Research Library

அறத்தையும் இன்பத்தை அளித்து முடிவில் ஒரு வரை அருளுடையவராக்கும்.

இத்தகைய பெரும் பயன் தரும் செல்வத்தை அற நெறி நின்று ஈட்டல் வேண்டும். செப்ப முடையவன் ஆக்கமே சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்புடைத்து. தன்னைப் போலப் பிறரையுங் கருதி நல்வழியில் ஈட்டிய செல்வமே தனக்குப் பயன் படும். தாளாற்றித் தந்த பொருளே தக்கார்க்கு வேளாண்மை செய்ய உகந்தது.

மேலும் பிறர் மனமெரியப் பெற்ற செல்வம் தன் வயிறெரியப்போம். அழக் கொண்ட வெல்லாம் அழப்போம். மேலும் ஆக்கமும் சுற்றமும் சிதைக்கும் அழுக்காறு, வறுமை, நடுவின்மை காரணமாகப் பிறர் பொருளை வெஃகல்—இக் குற்றங் களைந்து பொருள் செய்தல் வேண்டும். வழியல்லா வழியால் வருஞ் செல்வம் ஒரு வேளை அறப்பயனைத் தருவதாயினும் அதனைக் கையினல் தொடுதலும் தகாது. பெறப் படுவோன் மாட்டு அன்பும் பெறுவோன் மாட்டு அருளும் அமைந்த நிற்ப வாராத செல்வத்தை மனத்தினும் விரும்பாது கழிய விடுதலே அறிவுடைமை.

அற்கா இயல்பினதாகிய செல்வத்தை ஊழ்வினையினலோ தாளாண்மையினலோ பெற்றால் காலந் தாழ்க்காது நிலையான நல்லறங்களை விடாது செய்க. மறுமைப் பயன் கருதித் தானதருமஞ் செய்பவர் பலர். இம்மையிலே பெறுஞ் சிறப்புக் கருதி நல்வினை புரிபவர் பலர். அன்பு கனிந்த மனத்தினராய் அற்றார் அழி பசி தீர்த்து இம்மையில் புகழையும் மறுமைக்கு எய்ப்பில் வைப்பையும் ஒருங்கு பெறுபவர் சிலர்.

Digitized By Roja Muthiah Research Library

அறிவும் நீதியுணர்வும் பெற்றவர் கைம்மாறு வேண்டாது, தம் கடமையாகக் கருதி தக்கார்க்குத் தம்மால் இயலுதவி யாவுஞ் செய்வர். இயல்பாக வள்ளன்மை வாய்ந்த பெருந்தகையினர் மேல் உலகம் இல்லெனினும் ஈதலையே மேற்கொண்டு, வரையாது வழங்கி, மருந்தாகித் தப்பா மரம் போன்று தம்மை அழிய மாறியும் ஒப்புரவினுல் வரும் கேடு என்னும் பெருத பயன் பெறுவர். செல்வப் பயனை யாவரும் அடைதற்குக் காரணமான தான் துய்த்தலும், தன் சுற்றத்தாரைத் துய்ப்பித்தலும் செல்வந்தான் பெற்றத்தாற் பெற்ற பயனேயாகும்.

மேலே சுட்டிய வழிகள் ஒன்றிலும் செல்வத்தைப் பயன் படுத்தாது போற்றி வைப்பர் பலர். அத்தகையினர் ஏன் இங்ஙனஞ் செய்கின்றனர் என்பதை ஆசிரியர் துணை கொண்டு, அகநூன் மரபு பற்றி ஆராய்தல் பொருத்தமாகும். செல்வம் மக்கள் மனத்தைப் பல வழிகளிலும் பேதிக்கும் இயல்பு வாய்ந்தது. சிலர் செல்வம் பெற்றபின் புது மனிதராக மாறி விடுகின்றனர். செல்வத்தைப் பிழையான வழியில் கொண்டு செலுத்தும் மக்கட் பகுதியினரை நான்கு வகையினராக வைத்து ஆராய்வது நலம்.

அவருள் முதலாம் வகையினர் எவ்வளவு செல்வம் பெற்றுலும், போதும் என்ற மனமின்றி, மேலும் மேலும் பொருளை ஈட்ட விரும்புபவர். செல்வத்தின் கவர்ச்சி இவரைப் பொருட்பித்த ராக்குகின்றது. பொருளால் எல்லாம் கைகூடும் என்ற எண்ணத்தினுல் முதலில் உந்தப் பட்டவராயினும், நாளடைவில், பொருளால் வரும் பயனை அறவே மறந்து, அதனை ஈட்டு

Digitized By Roja Muthiah Research Library

தலே பெரும் பயன் என்று மருள் கொண்டு, இம்மை யிலே பணப்பேய்களாய்த் திரிந்து, மறுமையில் பேய்ப் பிறவி எய்துவர்.

இரண்டாம் வகையினர் பிறவியிலேயே உலோபி கள்; அதாவது ஈதல் என்னும் பண்பில்லாதவர்கள். மனித வர்க்கத்தில் இவர்கள் ஒரு தனி இனம். ஒருவரையும் விரும்பாது ஒருவராலும் நச்சப் படாது, தனி மரம் போன்று உலகில் வாழ்பவர். இவர்களுக்கு கையிலுள்ள பொருளைச் செலவு செய்வதாயின், உயிர் போவது போன்றிருக்கும்.

மூன்றும் வகையினர் செல்வம் மனிதப் பண் பினையே மாற்றி விடுகின்றது. இவர்கள் அற்றூரை யும் ஆற்றூரையுங் கண்டவழி, தம் உள்ளத்தில் இயல்பாக எழும் அன்புணர்ச்சியை வேரறுத்து, இரக்கத்தைக் களைந்து, தம்மை இரும்பினும் வலிய நெஞ்சினராக்கிக் கொள்வர். பின்பு அறநெறி பற்றிய சிந்தனைக்கு இடமில்லை. தம் வாழ் நாள் முழுவதும் தம்முடம்பையும் உயிரையும் நலிந்து, பழி பாவம் பாராது அரும்பாடு பட்டுப் பெரும் பொருள் ஈட்டிக் கழிவர்.

இனி நான்காவதாக மற்ெருரு வகையினரைப் பற்றியும் அறிதல் வேண்டும். இவர்கள் அன்பு, அறிவு, நீதி யுணர்ச்சி சிறிதும் இல்லாதவர்; மனித சமுதாயத் திற்கு ஒவ்வொருவரும் பல்லாற்ருனும் கடப்பாடுடையர் என்பதை யுணராது, தன்னலமயமான வாழ்க்கையர். வழியல்லா வழிகளில் புதுமைப் பொருளீட்டிய இவர்கள், தாம் எய்திய செல்வமெல்லாம் தம் சொந்த உழைப்பினலேயே பெற்றதாகு மதிமயங்கி, “நான்

ஒருவருக்கும் உதவி செய்யேன்; ஒருவரிடமும் உதவி பெறேன்; இதுவே எனது வாழ்க்கைத் தத்துவம்" என்று பறை சாற்றிச் செல்வர்.

இனி நன்றியில் செல்வத்தினால் விளையும் ஏதம் பற்றி ஆசிரியர் திருவள்ளுவனார் கருத்துக்களை ஆராய்வோம்.

முதலாம் வகையினராகிய 'பொருளான் ஆம் எல்லாம் என்று' 'ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவரைப்' பற்றிப் பார்ப்போம். இவர்கள் பெரும் பொருளை ஈட்டி வைத்தவரே யாயினும், அப்பொருளால் ஒருவருக்கும் ஒரு பயனில்லை. இந்த உலோபிகள் உயிருள்ளவரே யாயினும் செத்தவர்; பெருஞ் செல்வரே யாயினும் வறியருள் வறியர். இவர்கள் இம்மையில் பணப் பித்தராய், பூமிக்குப் பாரமாக வாழ்ந்து, மறுமையில் புதையுண்ட செல்வத்தைக் காவல் புரியும் பேய்ப் பிறவி எய்துவர். இவற்றைப் பின்வரும் பாக்களால் அறியலாம்:—

"வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக் கிடந்த தில்!" (1001)

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை" (1003)

"கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி யுண்டாயினு மில்" (1005).

"பொருளானும் எல்லாம் என்று ஈயாதிவறும்
மருளானும் மாணாப் பிறப்பு." (1002).

Digitized By Roja Muthiah Research Library

'ஈதல் என்னும் பண்பு இல்லாத மற்ெருரு வகை உலோபிகள் தாமும் உண்ணுர்; சுற்றத்தார்க்கும், தக்கார்க்கும் ஒன்று ஈயார். இவர்கள் தமக்கும் தம்மைச் சூழ்ந்துள்ளவர்களுக்கும் பலவிதமான துன்பத்தையே வருவிப்பர். தம்மிடமுள்ள பெருஞ் செல்வத்தால் இவர்கள் ஈட்டல் காத்தல் முதலிய துன்பங்களைப் பெற்றதன்றி ஒரு இன்பமும் பெற்றறியார். தம்மினத்தவராகிய ஏனைய மக்களோடு அளவளாவும் வாழ்க்கை இன்பத்தை அறவே இழந்து வாழ்பவர். இத்தகையோரது செல்வம் பாத்திரப் பிழையினுல் திரிந்த பாலைப் போலவும், கொடுப்பாரும் கொள்வாருமின்றித் தமியளாய் மூப்படைந்த கன்னியின் எழில் நலம் போலவும், நடுவூருள் பழுத்த நச்சு மரம் போலவும், ஒருவர்க்கும் பயன்படாது, தனக்கும் பாரமாகி, யாவர்க்கும் துன்ப ஏதுவாகி நிற்கும். இவ் வுண்மைகளைப் பின்வரும் வாய்மொழிகளால் அறியலாம்:—

"ஏதம் பெருஞ்செல்வம் தான் துவ்வான் தக்கார்க்
கொன்று
ஈத லியல்பிலா தான்" (1006)

"பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வம் நன்பால்
கலந்தீமை யால் திரிந்தற்று...." (1000)

"அற்றூர்க் கொன்ருற்ருதான் செல்வம் மிக நலம்
பெற்ருள் தமியள் மூத்தற்று." (1007)

"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத் தற்று." (1008)

செல்வத்தைப் பயன் படுத்தாதவருள் மூன்ரும் வகையினரைப் பற்றி இனி ஆராயலாம். முன்பு

Digitized By Roja Muthiah Research Library

சுட்டிய படி இவர்கள் செல்வத்தின் சேர்க்கை மக்க ளுக்குரிய அன்பு கெழுமிய பண்பினை இழந்து அரக்க ராக மாறுகின்றனர். இவர்கள் வருந்திப் பெற்ற பொருளை ஒன்று கள்வர் முதலியோர், இவரை வருத் திக் கவர்வர்; இன்றேல், பின்பு தாயத்தார் முதலி யோர் கொள்வர். இவர் பொருள் சந்ததியினருக்குப் பயன்படாமற் போம். இது பின் வரும் பாவினால் தெளிவு படும்:—

"அன் பொரீஇத் தற்செற்று அறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்." (1009).

இனி ஈற்றில் நான்காம் வகையினரைப் பற்றி ஆராயவேண்டும். மனித சமுதாயத்துக்குத் தம்முடைய கடமையை மறந்து, தம் கைப்பட்ட பெரிய செல்வத் தின் உதவியினால் பலவிதமான தீமைகளை விளைவிக்கும் இப் பகுதியினரது விபரீத மனப்பான்மையே தற்கால உலகில் ஏற்பட்டுள்ள பல துன்பங்களுக்கு மூல காரணமாம்.

எல்லாச் செல்வத்திற்கும் மூலகாரணமாய் உள்ளது மழை; அடுத்தபடி பூமியின் இயல்பான வளம். இவ்விரண்டுமின்றி மனித முயற்சி பயன்படாது; மேலும் ஒருவன் முயலும் பருவம் எய்துமுன் பெற்றோர், உற்றார், ஆசிரியர் முதலிய பலருடைய உதவியைப் பெறுகின்றான். அவனது ஆற்றல் முதலியன மலர் தலும் தன்மை வளர்ச்சியும் ஏற்ற சமுதாயச் சூழலி லேயே ஆகும் அவன் உபயோகிக்கும் கருவி, ஆடை, வாழும் இடம் முதலிய எல்லாம். பிற பிறர் முயற்சியின் விளைவே யாகும். அவனுடைய அறிவும் இனத்தியல்



Digitized By Roja Muthiah Research Library

பினால் தோன்றி அவனுடைய மனத்தியல்பாக உருக் கொண்டதே யாகும். ஆதலால் ஒவ்வொருவரும் மனித சமுதாயத்துப் பலதிறப்பட்ட முறையில் கடப்பாடுடை யார்; தன் முயற்சியினால் பெற்ற பொருளெல்லாம் தனக்கே உரிய தென்று தாறுமாறாகச் செலவு செய் யும் உரிமையிலர். தமது தேவைக்கு இன்றியமை யாததை மட்டும் தாம் வைத்துக் கொண்டு எஞ்சிய வற்றையெல்லாம் தம் சுற்றத்தார்க்கும், தக்கார்க்கும், அற்றார்க்கும், ஆற்றார்க்கும், ஏற்றவாறு உதவவேண்டும். இதுவே நீதி யுணர்ச்சி யுடையவர் கடமை; அறிவு டைமையின் உரைகல்; பெருந்தகையினர் பொழுது போக்கு. இத்தகையினரது செல்வம் நீர் நிறைந்த ஊருணி போலவும், ஊர் நடுவுள் அமைந்த பழுமரம் போலவும், மருந்தாகித் தப்பா மரம் போலவும், யாவர்க் கும் பல்லாற்றாலும் முட்டின்றிப் பயன்படும்.

இங்ஙனஞ் செய்யாது தாம் பெற்ற செல்வத்தைத் தமியராய் உண்ணலும், பிறர்க்கு ஈயாது விடுதலும், அதனைக் கொண்டு எளியாரை ஏமாற்றி மேலும் பொருள் ஈட்டுதலும், அற்றாரை அடிமைப் படுத்தலும், ஆதியன வெல்லாம் வசையாகும். ஈதலால் வருவது புகழ்; ஈயாமையினால் வருவது வசை; மக்கட் சமுதாயத் திற்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறிய வசை; நன்றி மறந்த குற்றம். நன்றியில் செல்வத் தினால் விளையும் ஏதங்களுள் இதுவே மிகவும் பெரிது. இது பற்றியன்றே ஆசிரியர் திருவள்ளுவனார்,

"வசையென்ப வையத்தார்க் கெல்லாம்
இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்." (238)

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்" (240)

என்றும் திருவாய் மலர்ந்தருளினார். பெருஞ் செல்வம் படைத்த தனி மனிதன் ஒவ்வொருவனும் ஆசிரியர் உள்ளக் கருத்தினைத் தெள்ளிதினுணர்ந்து, செல்வமுடைமைபற்றிக் கொண்டுள்ள விபரீத மனப்பாங்கினை மாற்றி, தன் செல்வத்தின் பெரும் பகுதியைத் தன் கருத்திற் கிசைவுற்ற வழியில் சமுதாயப் பொது நலத்திற்குப் பயன் படுத்த வேண்டும். இதுவே இக் காலம் தலையெடுத்துள்ள முரண்பட்ட பொருளியற் கொள்கைகளை இசைவித்தற்குரிய ஒரே வழியாகும்.

Digitized By Roja Muthiah Research Library

# வள்ளுவர் கண்ட நாடு

சுப. இராமநாதன் எம். ஏ.

உலகத்தில் பல்வேறு காலங்களிலே பல்வேறு நாடுகளிலே வாழ்ந்த அறிஞர்களும், கவிஞர்களும் ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும், ஆட்சி எவ்விதம் அமைய வேண்டும், மக்கள் எங்ஙனம் வாழ வேண்டும் என்று கூறி யிருக்கின்றார்கள். இங்கிலாந்திலே வாழ்ந்த சர் தாமஸ் மூர் கண்டது "உடோபியா" நாடாகும். கிரேக்க அறிஞர் பிளாடோவும் தான் எழுதிய அரசியல் என்ற நூலிலே ஒரு நாட்டைக் காண்கின்றார். ஆனால் இவைகளெல்லாம் கனவுலகிலே காணப்படுகின்ற நாடுகள். அவர்கள் கூறுகின்ற ஒரு நாடு முன்னர் இருந்ததுமில்லை, இப்பொழுது இருக்கின்றதுமில்லை. இனிமேல் இருக்கப் போகின்றதுமில்லை. வழக்கிலே கூட "உடோபியா" என்பது அடைய முடியாத ஒரு நாட்டைக் குறிக்கின்ற சொல்லாகவே இருக்கிறது.

மேலே கூறிய அறிஞர்களைப் போன்று நம் நாட்டிலும் வெவ்வேறு காலங்களிலே வாழ்ந்த கவிஞர்கள் கனவு கண்டதுண்டு. கம்பர் முதலாய பெரிய கவிஞர்கள் தாங்கள் பாடிய பெரு நூற்களிலே ஆங்காங்கு நாடுகளையும் நகரங்களையும் மக்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். கோசல நாட்டையும் அயோத்தியையும் வர்ணிக்கின்ற பொழுது கம்பன் ஒரு நாடும் ஒரு நகரமும் எங்ஙனம் அமையவேண்டு மென்பதனையே குறிப்பிட்டான். அந்நாட்டில்,

Digitized By Roja Muthiah Research Library

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமு மெய்தலாலே
இல்லாருமில்லை உடையார்களுமில்லை மாதோ"

என்ற நிலையிருந்ததாகச் சொல்கின்றார். அதாவது கொள்வாருமில்லை கொடுப்பாருமில்லை யென்பதாம். அந்நிலை யுண்மையிலேயே அங்கிருந்ததா? இல்லை. இருக்க முடியுமா? முடியாது. ஆனால் எவ்வளவிற்கு எவ்வளவு கொள்வாரை (வறுமை காரணமாகப் பிச்சை கொள்வாரை) குறைக்கின்றேமோ அவ்வளவிற்கவ்வளவு நாடு சிறப்படைகின்றது; மக்கள் வாழ்க்கை உயருகிறது. ஆகவே கம்பர் நாட்டைப் பற்றிக் கூறுகின்ற கருத்துக்கள் விழுமியவை யெனினும் அப்படியே முழுவதும் நடைமுறையிற் கொண்டு வரமுடியாதவை. குறிக்கோளாக மாத்திரம் கொள்ளப் படக்கூடிய தன்மை வாய்ந்தவை. அதனாற்றான் கம்பர் முதலாயவரும் சர். தாமஸ் மூர் முதலியோரைப் போன்று நாட்டினைப் பற்றிக் கனவு கண்டார்கள் என்று சொல்கின்றேம்.

இனி, வள்ளுவர் கூறும் நாட்டைப் பார்போம்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தகைசான்ற
செல்வரும் சேர்வது நாடு."

(குறள் 731)

குறையாத விளைவும் நல்லியல்புகள் நிறைந்த ஆன்றேரும் தகுதி நிறைந்த செல்வருமாகிய மூன்றும் சேர்வது நாடு. இக் குறளில் "**தள்ளா விளையுள்**" என்பதில் விளையுள் என்ற சொல்லினை எத்துணை ஆழமான பொருளிலே வள்ளுவர் பயன் படுத்தி யிருக்கின்றா ரென்பதைப் பார்க்க வேண்டும். இதற்கு உரையாசிரியர்கள் கூறுவது:—

Digitized By Roja Muthiah Research Library

**தள்ளாவிளையுள்** = குன்றாத விளையுளைச் செய்வோரும் (செய்கின்ற உழவரும்) [பரிமேலழகர் உரை]

= தப்பாமல் விளையும் நிலங்களும் (விளக்கம்—மழையில்லாத காலத்தும் சாவி போகாத நிலம்) [மணக்குடவர் உரை]

= மாறா விளைச்சலும் [பரிதியார் உரை]

= மாறாது விளையும் விளைச்சலும் [வி. ஆர். ஆர். தீக்ஷிதர் மொழி பெயர்ப்பு]

உரைகாரர்கள் வேறுபட்ட பொருள் கூறுகின்றனர். அவையெல்லா வற்றையு முணர்த்த வல்லதாய் அமைந்துள்ளது அச்சொல். பரிமேலழகர் கூறுகின்ற உழவர் வேண்டும். அவர் மாத்திரமிருந்து பயனில்லை. மணக்குடவர் சொல்லும் விளை நிலமும் வேண்டும். இவ்விரண்டுமிருந்தும் விளைவில்லாமற் போய்விடலாம். அதனால் மற்றவர் கூறுகின்ற விளைச்சலும் வேண்டும். ஆகவே முயற்சி மிகுந்த உழவரும், விளையும் நிலமும், மாறாத விளைச்சலு மிருந்தாற்றான் ஒரு நாடு தனக்கு வேண்டிய உணவினைத் தான் பெற முடியும். அந் நாடு தான் சிறக்கும்.

ஒரு நாடு தன்னாட்டில் உணவுப் பொருள் விளையாமலே பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதன் மூலம் தள்ளாத உணவினைப் பெற்றுவிட முடியாததோ வெனின், முடியும். ஆனால் அத்தகைய நாடு சிறந்த நாடாகாது. ஏனெனில் தான் உணவு பெறும் நாட்

டோடு பகைமை யேற்படுமேயானல் உணவுப் பொருள் கிடைக்காது; அதுவன்றியும் வேறு நாட்டோடு போர் மூண்டால் அந்நாடுகள் இந்த நாட்டிற் குணவினை வெளியேயிருந்து வரமுடியாமல் முற்றுகை செய்துவிட முடியும். கடந்த இரண்டு உலகப் பெரும் போர் களிலே கண்டதென்ன? ஜெர்மனியில் புறமுதுகு காட்டாத வீரர்களிருந்தார்கள்; புதிய புதிய படைக ளிருந்தன; படையினைத் திறம்பட நடத்தும் தலைவர்க ளிருந்தார்கள். இருந்தும் தோற்றதேன்? உணவுப் பற்றுக் குறைதான். அதனால் முதற்கண் குன்றுத விளைவு வேண்டும்.

இனி, விளையுள் என்பதன் மூலம் நிலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகின்ற நிலக்கரி, இரும்பு, எண்ணெய் போன்ற கனிப்பொருள்களையு முணர்த்து கின்றார் என்று கூறலாம். இன்றைய உலகில் வேளாண்மையில் மாத்திரம் ஈடுபட்டிருந்தால் அதாவது விவசாய நாடாக மாத்திரமிருந்தால் முன்னேற முடி யாது. பலவகைத் தொழிற் றுறைகளிலும் மேம்பட்டு விளங்கவேண்டும். அவைகளுக் கெல்லாம் கனிப் பொருள்கள் இன்றியமையாதவை.

இனி, அத்தள்ளா விளையுளும் மக்களுடைய பெரு முயற்சியல்லாது சிறிய அளவு முயற்சி யிலேயே வர வேண்டும்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு." (குறள் 739)

மக்கள் நாடாது தானகவே வளத்தினைத் தருவதுதான் சிறந்த நாடு. மக்கள் நாடியபின் தருகின்றது நாடா

Digitized By Roja Muthiah Research Library

காது. அது போன்று பாரியினுடைய பறம்பு நாடிருந் ததைக் காண்கின்றோம். மூவேந்தரும் நெடுநாள் முற் றுகை யிட்டும் பறம்புமலை அடிபணியவில்லை. காரணம் அதனுடைய வற்றாத, நாடாத வளந்தான். உழவர் உழாமலே மூங்கில் நெல்லும், பலாவின் பழமும், வள்ளிக் கிழங்கும் தேனிறாலும் கிடைக்கும். அதைக் கபிலர் குறிப்பிடுகிறார்.

> " நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
> உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே
> ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே
> இரண்டே, தீஞ்சுளைப் பலாவின் பழமூழ்க்கும்மே
> மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்
> கும்மே
> நான்கே, அணி நிறவோரி பாய்தலின் மீதழிந்து
> திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே"
>
> (புறம் 109)

இனி, மேற் சொல்லிய குறளின் (739) மூலம் மற் றொன்றினையும் வள்ளுவர் உணர்த்துகின்றார். பிற நாடுகளை உணவிற்கோ அன்றி வேறு மூலப் பொருள் களுக்கோ நாடாத வளத்தினையுடையது தான் நாடு. அங்ஙன மில்லாது அயல் நாட்டார் கையினை எதிர் பார்ப்பது நாடாகாது. இதைத்தான் இப்பொழுது தன் நிறைவு (**Self supporting**) நாடென்கின்றார்கள்.

இனி, மேலே சொல்லிய 731-வது குறளின் படி தள்ளாவிளையுளுக் கடுத்தபடியாகத் "தக்கார்" வேண்டும். விளையுள் ஒன்றே யிருந்து தக்காரில்லை யென்றால் நாடு முன்னேறாது. பர்மாவிலும் இந்தோனேஷியா விலும் விளைவிற்குக் குறைவில்லை. ஆனால் அரசியலை

Digitized By Roja Muthiah Research Library

நடத்துகின்றவர்கள் அத்துணைத் தகுதியுடையவர்களாக இல்லை. அது காரணமாக அந்நாடுகள் அடைந்திருக்கின்ற சீர்கேட்டைக் காண்கின்றோம்.

இனி, "தாழ்விலாச் செல்வர்" வேண்டும். அவர்கள் தான் வணிகர்கள். அவர்கள் வாய்மை தவறாதவர்களாய்க் கொள்வதும் அதிகம் கொள்ளாது கொடுப்பதும் குறைவாகக் கொடுக்காது தங்களுடைய பொருளைப் போலப் பிறருடைய பொருளைப் பேணவேண்டும். மேனாடுகளிலும், அமெரிக்காவிலும் வணிகர்களிடையே இந்தப் பண்பினைக் காண்கின்றோம். ஆனால் இந்தியா முதலிய கீழை நாடுகளில் வணிகர்களிடையே வாய்மையைக் குறைந்த அளவிலேதான் காண்கின்றோம். அவர்கள் முன்னர்க் காட்டுவது ஒரு பொருளாகவும் (மாதிரி, **sample**) பின்னர் அனுப்புவது மற்றொரு பொருளாகவு மிருக்கிறது. கீழ் நாடுகள் முன்னேற்ற மடையாததற்கு அதுவும் ஒரு காரணம்.

மற்றொரு வகையிலும் வணிகர்கள் நாட்டிற்குத் தீங்கு விளைவிக்கின்ற துண்டு. பெரும் வணிகர்கள் சிலர் தங்கள் பண வலிமையினால் அரசாங்கத்தையே தாங்கள் விரும்புகின்றபடி நடக்கும்படி செய்வதாகும். அதுபோன்று வணிகர்கள் அரசாங்க அலுவலிலே தலையிடுதல் கூடா தென்று காட்டுதற்காகவும் "தாழ் விலாச் செல்வர்" என்றார்.

இனி, மேற் சொல்லிய தள்ளா விளையுள்இல்லையென்றால், அதாவது உணவில்லை யென்றால் பசி மிகும். பசி மிகவே நோய் மிகும். காரணம் பெரும்பாலான நோய்கள் உணவின்மையாலேயே வரும். நோயும் பசியுமிக உள் நாட்டில் மக்களிடையே

Digitized By Roja Muthiah Research Library

அமைதியிராது. அதில்லாதாகவே உள் நாட்டுப்போர் அல்லது வெளி நாட்டுப் பகை தோன்றும். இதனைற்றுன்

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு." (குறள் 734)

என்கின்ருர். இக்கருத்தினை மணிமேகலையிற் காண்கின்ருேம்.

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"
(மணிமேகலை விழாவறை காதை,70-71)

இனி, பசியும் பிணியுமின்றி நாட்டில் அமைதி நிலவுகின்ற பொழுது பிற நாட்டாரின் நாடு பிடிக்கு மாசையால் பகைமை யேற்படுகின்றதுண்டு. அந்நிலையில் நாடு தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். அதற்கு வலிமையான அரண் வேண்டும்."

"இரு புனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு". (குறள்737)

[நீரூற்றும் மழையுமாகிய இருவகை நீர் வளமும் பொருந்திய மலையும், அம்மலையிலிருந்து வருகின்ற ஆறும், வலிமையான அரணும் நாட்டிற் குறுப்புக்கள்.]

அரண்களாக அமைவன கடலும், மலையும், காடு மாகும்.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடு முடையதரண். (குறள்742)

கடல் கடத்தற் கரிய அரண் என்பதை இங்கிலாந்து வரலாறு காட்டும். நெப்போலியனும் ஹிட்லரும்

Digitized By Roja Muthiah Research Library

ஐரோப்பாவிலே பெரும் பகுதியினை வென்று இங்கிலாந்தையும் வெல்ல முயன்றனர். நெப்போலியன் "எனக்கு ஆங்கிலக் கால்வாயில் 6 மணி நேரம் அவகாசம் கொடுங்கள். பின்மன்னர் மன்னனாய் விடுவேன்" என்று சொல்லியதைக் காண்கின்றோம். இங்கிலாந்தை இது வரை அடிபணிய வைக்க முடியாததற்குக் காரணம் அதனைச் சூழ்ந்துள்ள கடலே (மணி நீரே) யாம். இந்தியாவின் வரலாற்றைப் படிக்கின்ற பொழுது இமய மலை (மலை) எவ்விதம் பிறநாட்டாரைப் புக விடாத பெரிய அரணாக அமைந்திருந்த தென்பதனைக் காண்கின்றோம். இன்றைய மலாயாவில் உள் நாட்டுப் போரிலே அளவிலும் ஆற்றலிலும் மிகுந்த ஆங்கிலேயரது படை தன்னிலும் பன் மடங்கு படைக்கலத்திலும், படைப் பலத்திலும் குறைந்த பொதுவுடைமைக் கலகக்காரர்களை அடக்க முடியாதிருக்கிறது. காரணம் மலாயா நாட்டின் செறிந்த காடுகள்தான் கலகக்காரர்களுக்குச் சிறந்த அரணாக அமைகின்றது.

அரணிற்கடுத்து வேண்டியது படை. படை எண்ணிக்கையிலே பெரிதாக இருந்தால் மாத்திரம் போதாது. நன்கு பயிற்சி பெற்றதாய் வீரம் செறிந்த இளைஞர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும். பயிற்சியில்லாது எண்ணிக்கையிலே மாத்திர மிகுந்த படைகள் போரில் புற முதுகு காட்டி ஓட நேரிடும். சீனாவில் நடந்த உள் நாட்டுப் போரில் சியாங்கை ஷேக்கின் படைகள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தும் பயிற்சி பெற்ற மா-ஸே-துங்கின் படைக்கு முன்னிற்க மாட்டாது ஓடியதைக் கண்டோம். அதனாற்றான் வள்ளுவர் எலிகள் எண்ணிக்கையில் கடல் போல, இருந்து ஒலித்

தாலும் ஒரு பாம்பின் முன்னிற்கு மாற்றலில்லாதவை என்று சொல்கின்றார்.

"ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்". (குறள் 763)

இனி, மாற்றாரை மாற்றுவதில் படையினைப் போல் வலிமை யுடையது செல்வம். ஏன்? அதைக் காட்டிலும் கூட வலிமையுடைய தென்கின்றார். அது உண்மை யென்பதை அண்மையில் நடந்த நிகழ்ச்சி யொன்று காட்டுகிறது. இங்கிலாந்து தன்னுடைய ஸ்டர்லிங் என்ற நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொண்டது. அந்த ஸ்டர்லிங்கோடு தொடர்பு கொண்டிருந்த எல்லா நாடுகளும் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக் கொண்டன. பாக்கிஸ்தான் மாத்திரம் பொருளாதார வலிமையுடையதாக இருந்தமையால் மதிப்பினைக் குறைக்காதிருந்தது. மதிப்புக் குறைப்பிற்கு முன்னர் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலு மிருந்த நாணயம் ஒரே மதிப்புள்ள ரூபாய்தான். மதிப்புக் குறைப்பிற்குப் பின்னரும் அதே போன்று நீடிக்க வேண்டு மென்று விரும்பிற்று இந்தியா. ஆனால் பாகிஸ்தான் இணங்க வில்லை. சில மாதங்கள் வரை இரண்டு நாடுகளுக்கும் பெரும் வாணிபத் தொடர்பில்லாமலிருந்தது. கடைசியாகப் பொருளாதார வலிமை மிகுந்த பக்கிஸ்தானுக்கு இணங்க வேண்டியது நேரிட்டது இந்தியா. இதனைற்றான் வள்ளுவர்

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியதில்". (குறள் 759)

என்கின்றார்.

Digitized By Roja Muthiah Research Library

இனி, அச் செல்வத்தை ஈட்டுதல், செலவழித்தலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. (குறள் 385)

நாட்டின் செல்வத்தைப் பெருக்கப் பல புதுத் துறைகளைக் காண வேண்டும். வரி விதித்தல் ஒரு வழி. ஆனால் நாட்டிற்குச் செலவழிக்க வேண்டிய பொருளனைத்தினையும் வரி விதித்தல் மூலம் பெற முடியாது. அங்ஙனம் செய்தால் குடிகள் நசித்துப் போவார்கள். அதனைப் பிசிராந்தையார் என்ற புலவர் அழகாகச் சொல்கின்றார். ஒரு சிறு விளை நிலம். ஒரு மா அளவினையுடையது. அதில் விளைந்து வருகின்ற நெற்கதிரினை அறுத்து வந்து கவளம் கவளமாகக் கொடுத்து வந்தால் ஒரு யானைக்குப் பல நாட்கட்குப் போதும் அவ்வுணவு. மற்றொரு நிலம் நூறு மா அளவினையுடையது. அதுவும் நன்றாக விளைந்து நெற்கதிர் முற்றியிருக்கின்றது. அந்நிலத்திலே அந்த யானையானது அவிழ்த்து விடப் படுமேயானால் ஒரு நாளோடு நெற்கதிர் முழுவதும் அழிந்து போய் விடும். எல்லாவற்றையும் அது உண்டா விடுகின்றது. இல்லை. அதனுடைய வாயினுள்ளே புகுவதைக் காட்டிலும் அதன் காலால் அழிவது அதிகம். அது போன்று நாட்டிலும் சிறிதுசிறிதாக வரி விதிக்கப் படுமேயானால் குடிகளும் கொடுக்க முடியும். நாடும் செழிக்கும். இல்லையேல் யானைபுக்க நிலம் போல இரண்டும் அழியும்.

ஆகையால் வரியைச் சிறிது சிறிதாகத்தான் வாங்க வேண்டும். வரியைத் தவிர வேறு பல வழிகளி

லும் வருவாயைப் பெற்றிருக்க வேண்டும். கனிப் பொருள்களைப் புதிதாகக் கண்டு பிடித்துப் பெருக்குதல். எடுத்துக் காட்டு வட ஆற்காடு வட்டத்திலுள்ள நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வெட்டிப் பெருக்க நினைத்தல். நாட்டில் பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தல். எடுத்துக் காட்டு இந்திய நாடு ஜெர்மானிய வாணிப நிலையத்தோடு கூட்டாக உருக்குற்பத்தியைப் பெருக்கத் திட்டம் வகுத்தல். ஊதியம் தரக் கூடிய தொழில்களை நாடே மேற்கொள்ளுதல். எடுத்துக் காட்டு புகை வண்டிப் போக்கு வரத்து, ரிசர்வ் வங்கி ஆகிய வற்றினை அரசாங்கம் மேற்கொண்டது. நாட்டின் விளைவினைப் பெருக்குதல். எடுத்துக் காட்டு பவானி அணைக் கட்டு, இராமபாத சாகர் அணைக்கட்டு ஆகியவை.

இனி, மேற் சொன்ன பல வழிகளிலே பொருளீட்டவேண்டும். அவ்விதமில்லையேல் முதலிலே போட்ட அடிமுதலும் அதிலிருந்து வரவேண்டிய வருவாயு மிழக்க நேரிடும். இதனை இந்திய நாட்டில் அண்மையில் நடந்த பல நிகழ்ச்சிகள் மூலம் காணலாம். இந்நாடு சிந்திரியில் பல நூறுயிரம் ரூபாய்கள் செலவழித்து உர உற்பத்தித் தொழிற் சாலையைத் துவக்கிற்று. ஆனல் நிர்வாகத்திறமை யின்மையாலும் முன்யோசனை யில்லாமையாலும் அங்குற்பத்தி செய்யப்படும் உரம் வெளி நாட்டிலிருந் திறக்குமதி செய்யப்படுகின்ற உரத்தினைக் காட்டிலும் விலையதிக மாகிறது. அதே போன்றுதான் சென்னை அரசாங்கம் எடுத்துக் கொண்ட சென்னை நகர பஸ் போக்கு வரத்தும். அந்த பஸ்கள் நாட்டுடைமை யாக்கப் படுதற்கு முன்னர் குறித்த காலத்திலும் வந்தன. பெருத்த

Digitized By Roja Muthiah Research Library

இலாபத்தையும் தந்தன. ஆனால் அரசாங்கம் எடுத்துக் கொண்டவுடன் இரண்டுமில்லை. எனவே புது வழிகளை இயற்றினால் மட்டும் போதாது. இயற்றிய வழிகளிலே ஈட்டவும் வேண்டும்.

இனி, ஈட்டிய பொருளை வீணாகச் செலவு செய்யாது காக்கவும் வேண்டும். காவாமையினால் இந்திய அரசாங்கம் தனக்கு வேண்டிய ஜீப்கார்களைக் கூடிய விலைக்கு வாங்கி எவ்வளவு பொருளை யிழந்தது. தன்னுடைய நாட்டிலுள்ள் புகைவண்டிப் பாதைக்குப் பொருந்தாத எஞ்ஜின்களைக் கானடாவி லிருந்து வரவழைத்தமையி னால் பெரும் நஷ்டம். •

இனி, காத்த பொருளை வகுத்துச் செலவழிக்க வேண்டும். பெரிதும் முயன்று பெறுகின்றது ஒவ்வொரு நாடும் டாலர் சேமிப்பினை. சேமித்த டாலரினை ஆடம் பரப் பொருள்களாகிய சோப்பிலும், வாசனைத் தைலத் திலும் செலவழிப்பதைத் காட்டிலும் நாட்டினை வளப் படுத்தும் இயந்திரங்களை வாங்கப் பயன்படுத்தலாம்.

எனவே நாட்டிற்கு இயற்றல், ஈட்டல், காத்தல், காத்த வகுத்தல் மிக இன்றியமையாதவை என்றார்.

இதுகாறும் நாடு நலமடைய வளம் வேண்டும், அரண் வேண்டும்' படை வேண்டும், செல்வம் வேண்டும் என்று பார்த்தோம். இதுபோன்று அந்நாட்டின் குடியை, கோனை, கோலை, அமைச்சை, தூதை, ஒற் றைப் பற்றிக் கூறுகின்றார். விரிவஞ்சி விடப்பட்டது.

பிறநாட் டறிஞர், நம் நாட்டுக் கவிஞர் கூறும் நாட்டிற்கும் வள்ளுவரது நாட்டிற்கும் வேறுபாடுண்டு.

Digitized By Roja Muthiah Research Library

முன்னையோர் கூறியவை குறிக்கோளாக மாத்திரம் கொள்ளக் கூடியவை; ஆனால் நடைமுறைக் கொவ்வா தவை. ஆனால் வள்ளுவர் கண்டது குறிக்கோளாகவும் கொள்ளலாம். நடைமுறையிலும் காணலாம். அப் பெருமை பொருந்திய நூலை ஆக்கித் தந்த வள்ளுவர்க் குப் பெரிதும் கடப்பட் டிருக்கின்றோம்.

Digitized By Roja Muthiah Research Library

# சொல் வன்மை

திரு. வித்துவான். ந. சேதுரகுநாதன்.
செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்.

## ஓங்குக தமிழ்

"வில்லே, ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை".

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல், இன்மை யறிந்து."

உலகத்தில் எவ்வளவோ உயிர்க் கூட்டங்கள் மக்களைக் காட்டிலும் நுண்ணறிவு படைத்தனவாக இருக்கின்றன. மோப்பம் பிடிப்பதில் கழுகு, நாய், எறும்பு இவற்றின் முன் ஆறறிவு படைத்த எவனும் நிற்க முடியாது. நிலத்தின் கீழ் பாறையடுக்குகளுக்குள் கரந்து நிற்கும் நீர்நிலையை அறிவதில் கறையானுக்கு ஈடாக இந்த மாநிலத்தில் வேறு ஒரு உயிரும் இல்லை. இவ்வாறே, காற்று, மழை, வெயில் இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு இயற்கையோடு போராடி வாழும் உயிரினங்களில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பியல்பு உண்டு. இவற்றையெல்லாம் நுணித்து உணர்ந்து அறிவதற்கே இந்த ஆறறிவுடையானுக்கு ஆற்றல் இல்லையென்றால்; ஐயோ! இவன் எதற்குத் தான் ஆகப் போகின்றான்.

நுட்பமாக நினைத்துப் பார்த்தால் மக்கள் எவ்வளவோ நொய்ம்மையுடையவர்கள். என்றாலும் எல்லாக்



Digitized By Roja Muthiah Research Library

குறைவுகளையும் நீக்குவதற்கு மனிதனுக்கு ஒரே ஒரு வன்மையுண்டு. அதுதான் சொல் வன்மை; அதுதான் மொழி. அதனாலே தான் கவிதைகள், காவியங்கள், கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதைகள் எல்லாவற்றையும் குவிக்க முடிகிறது. கருத்தை வெளியிட இயலுகின்றது. மக்கள் எல்லோருக்கும் கருத்துக்களைத் தெரிவித்துக் கூட்டம் கூட்டவும், செயற்கரிய செயல்களைச் செய்யவும், அரசாளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இவையேயன்றி ஏனைய உயிரினங்களை யெல்லாம் அடக்கியாளவும் உதவுவது இந்த மொழி வன்மைதான். வேட்டைக்காரருக்கு மொழி வன்மை உதவுவதுபோல விலங்கினங்கட்கும் மொழி வன்மையின் உதவியி லிருந்து கூட்டங் கூட்டின வென்றால் அவைகள் உலகத்தின் மனித இனத்தையே அழித்து விட்டுத்தான் வேறு வேலை செய்யும்.

மனிதனே இந்த மொழி வன்மையால் எல்லாவற்றையும் அடிமை யாக்குகின்றான். கடவுளையும் இந்த வன்மையினால் வசப்படுத்திக் கால்சிவக்கத் தூதுபோகவும் உச்சிநோக மண் சுமக்கவும், முதுகு புண்ணாகப் பிரம்படி படவும் வைக்கின்றானென்றால் இந்தச் சொல் வன்மைக்கு ஈடான பொருள் உலகத்தில் ஏதேனும் வேறு ஒன்று இருத்தல் இயலுமா? இதைத்தான் ஆசிரியர் திருவள்ளுவர் அழகாகக் கூறுகின்றார்,

“நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று” என்று.

உடைமை என்பது செல்வம். ஒழுக்கமுடைமை, அறிவுடைமை, அருளுடைமை, பொருளுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, நாணு

Digitized By Roja Muthiah Research Library

டைமை, பண்புடைமை, பொறையுடைமை என்றிவ்வாறாக எத்துணையோ உடைமைகளிருக்கின்றன. இன்னும் செல்வ நலம், கல்வி நலம், அறிவு நலம், வணிக நலம், தொழில் நலம் என்றிவ்வாறாக அளவில்லாத நலங்களிருக்கின்றன. ஆனல் இந்த உடைமைகள் எல்லாவற்றிலும் மேலான உடைமை; இந்த நலங்கள் எல்லாவற்றிலும் சிறந்த நலம் "நாநலம் என்னும் நலனுடைமை" தான். "நாவினல் சொல்லுகின்ற சொல்லின் நலமென்னும் நலனுடைமையாகிய அந்த நன்மையானது வேறு எந்த வகை நலத்திலும் இல்லை" என்று ஒரேயடியாய் அறைந்து சொல்லி முடித்து விட்டார் ஆசிரியர்.

ஆனல் இந்த அருமையான சொல் வன்மையை மக்கள் எவ்வாறு பயன் படுத்துகிருர்கள் என்பதை நினைத்தால் இந்த வன்மை எதற்குத்தான் இவர்களுக்குக் கிடைத்தது என்று வருந்த நேரிடும். என்ருலும் சொல் வன்மை என்பது வெறும் வாய்ப் பேச்சைக் குறிப்பதில்லை. இலங்கைத் திருக்குறள் மன்றத்தார் போன்ற அறிஞர்கள் மிக அருமையாக முயன்று ஒரு கூட்டத்தைக் கூட்டினர்களென்ருல், ஊரிலுள்ளவர்களில் நூற்றுக்கு ஒருவர் தான் கூட்டத்திற்கு வந்திருப்பார். வந்திருப்பவர்களில் புலவர்களைப் பற்றி ஆராய்ந்தால் நூற்றுக்கு ஒருவராகத் தெளிவடைந்து வந்தவர் ஆயிரம்பேர் இருந்தால் அவர்களுள் ஒருவர் புலவராக இருப்பார். ஆகவே நூருயிரத்துக்கு ஒருவர்தான் புலவராக இருத்தல் கூடும். அத்தகைய புலவர்களுள் பதினுயிரத்துக்கு ஒருவர் சொல் வன்மை யுடையவராக விளங்குவர் என்ருல் நூறு கோடிக்கு ஒருவர் தான்

Digitized By Roja Muthiah Research Library

உண்மையான சொல் வன்மை யுடையவராகக் காணப் படுவர். அத்தகையாருள் கோடிக்கு ஒருவர் தான் வள்ளலாக விளங்க முடியும். அந்த வள்ளல்களின் தன்மையையும் வள்ளுவரின் தன்மையையும் சீர் தூக்கினுல் வள்ளுவருக்கு நிகர் எந்த உலகத்திலும் இல்லை என்பது தெளிவாகத் தெரியவரும்.

"ஆர்த்த சபை நூற்றொருவ ராயிரத்தொன்றாம் புலவர்
வார்த்தை பதினு யிரத்தொருவர்—பூத்தமலர்த்
தண்டாமரைத் திருவே தாதாகோ டிக்கொருவர்"

என்று ஒளவையார் அருளியது தான் இந்த உண்மை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சொல் வன்மையை வளர்ப்பதற்கு மக்கள் பலவகையால் முயலுகின்றார்கள். முயன்றாலும் சிலருக்குத்தான் வெற்றி கிட்டுகின்றது.

(1) அரசியல் மேடைகளில் நின்று விலாவை வளைத்துக்கொண்டு அலறுகிறார்கள். போன போன இடங்களில் எல்லாம் ஒரே வகையாக ஆவேசமான உணர்ச்சிகளை அள்ளி வீசுகின்றார்கள். ஆனல்,

"அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்"

என்பதை இவர்கள் கருதுவதேயில்லை. "அல்லவை நாடி அறைவார்க் கரசியலில் வெல்லும் வகைகள் பல" என்பது அவர்கள் போக்கு. எனவே ஒரே ஆட்டம் தான்.

(2)சொற் போர்களிற் கலந்துகொண்டு அரங்கத்தில் நின்று அரற்றிக்கொண்டு வாய்க் கொத்துக் கொத்துவார்கள். ஆனல் வெற்றி யொன்றையே கருதி,

Digitized By Roja Muthiah Research Library

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்."

என்பதை நினைப்பதே தவறு என்கிறார்கள். இவர்களிடத்தில் உண்மை காண இயலாது.

(3) ஒருத்தியும் மற்றொருத்தியும் சண்டைபோடும் போது அள்ளி வீசுகின்ற வசைமாரிக்கு அளவேயில்லை. இவர்களிடத்தில் அரசியல்வாதிகள் ஒரு துளி கடன் வாங்கிக் கொண்டாற் போதும். உலகத்திலுள்ள எல்லோருடைய அறிவையும் மூழ்கடித்து விட்டுத் தலைமைப் பீடத்திலேயே அமர்ந்து விடலாம். இவர்கள் செவியிற் குறள் ஏறாது.

(4) வழிமறித்துக்கொண்டும் வீட்டில் வந்து இருந்து கொண்டும், தொடர்வண்டியிலும் மற்றும் எல்லா இடங்களிலும், காலத்தையும் நேரத்தையும் பாழாக்கிக் கொண்டு கேட்போரை வாயெடுக்க விடாமல் முழுமூச்சாகத் தன் வயிற்றெரிச்சலைக் கொட்டித் திணற அடிப்பவர்கள் உண்டு. பாவம் அவர்கள் மனமாவது ஆறுதலடையுமோ அல்லது இதுவே வழக்கமாக ஒரே வெறியாக மாறிவிடுமோ என்பது அவர்களைப் பொறுத்தது.

"அறன்நோக்கி யாற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை."

என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லி "அடேயப்பா, தம்பி! போதும் நிறுத்து. இந்தப்படி பேசிக்கொண்டேயிருந்தால் இந்த மண்ணும் கூடப் பொறுக்காதே! வேறு எந்த மனிதனால் பொறுக்க முடியும்" என்று கூறினால் பயன் விளையுமா என்பது அவனுக்குத் தான் வெளிச்சம்.

Digitized By Roja Muthiah Research Library

(5) வித்தைக்காரன், விளம்பரக்காரன், வணிகத் தரகன், மணமக்கள் தரகன், வழக்கறிஞன், வரைவின் மகளிர் இவர்கள் பேச்செல்லாம் ஒருவகை. இவர்களு டைய இன்சொல் இழுக்குத் தரும்.

(6) இலக்கிய மன்றங்கள் எங்கெல்லாமோ மலிந்து விட்டன இப்போது. மன்றத்தாருக்கும் தலைவருக்கும் கேட்போருக்கும் மற்றச் சொல்வல்லோருக்கும் தலைவலி உண்டாக்க வென்றே நாட்டிற் பலர் பரம்பரை பரம் பரையாக வந்துகொண் டிருக்கிறார்கள். இவர்கள் எங்கே யாவது மேடையிற் சிறிது இடம் கிடைத்து விடாதா என்று விடாய்த்துக்கொண்டு அலைவார்கள். இவர்கள் பேச்சுக்களைத் தலைவலிப் பேச்சு, ஏகாதசிப் பேச்சு, சிவராத்திரிப் பேச்சு என்று குறிப்பிடலாம். இவர் களுக்கு மேடையிற் பேசுவதற்கு ஒரே காமமயக்கம்:— விரித்த கம்பளியை எடுப்பதற்கு ஒருவன் நின்றாலும் போதும் பேச்சை நிறுத்த மாட்டார்கள். வள்ளுவர் காலத்துக்கு முன்பிருந்தே இவ்வாறு காமுறுதல் வந்து கொண்டிருக்கின்றது.

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்."

என்று பொய்யில் புலவர் குறிப்பிடுகின்றார். மேற் குறிப்பிட்டவாறு 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று நாள் முழுதும் வாய்ப்பறை யடிப்பவர்களால் தினையளவும் பயனில்லை. இவ்வாறு அளக்கின்ற அளப் புக்களை யெல்லாம் கேட்பதற்கும் ஒவ்வொரு கூட்டம் இருக்கின்றதே அதுதான் அவர்கள் அப்படி யெல்லாம் கொட்டுகின்றார்கள். இவைகள் மலிந்த நாட்டில் வேண் டாதன வெல்லாம் வேண்டப்படுவன வாகவும் வேண்டு

Digitized By Roja Muthiah Research Library

வன வெல்லாம் வேண்டப் படாதனவாகவும் மக்களுக்குத் தோன்றும்.

இந்த நோய்களுக் கெல்லாம் திருவள்ளுவர் மருந்து தந்திருக்கின்றார். ஆனால் இவ்வாறு ஒரு நோய் தன்னிடத்திலிருந்து அது மற்றவர்களைத் துன்புறுத்துகின்றது என்று அறியாதவன் அந்த மருந்தைத் தேடுவான் என்று கருதவே இடமில்லை. பெரும்பாலோர் அவ்வாறுதான் இருக்கின்றார்கள். என்றாலும், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அரசியற் சட்ட மன்றங்களிற் பேசுவோர், இலக்கிய மன்றங்களிற் சொல்மாரி வழங்குவோர், வானொலி நிலையங்களிற் பேசுவோர், கட்டுரை, சிறு கதை, தொடர் கதை முதலியன எழுதுவோர் ஆகிய இவர்கள் திருவள்ளுவர் கூறுகின்ற இவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு செயலாற்றுவார்களென்றால் அவர்களால் உலகமெல்லாம் உய்யும்.

இவர்கள் எல்லோரைக் காட்டிலும் சிறப்பாக ஆசிரியர்கள் வள்ளுவர் வழியில் நடந்து சொல் வன்மையைப் பெறவேண்டியது மிகவும் இன்றியமையாதது. அமைச்சர்களும் அரசியல் தூதர்களும் இருபெரும் பகைவர்களுக்குள் நடக்கும் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முயலும் நடுநிலையாளர்களும் சொல் வன்மையைப் பிறவியிலேயே உடையவராக யிருந்து முயன்று வளர்த்திருக்கவும் வேண்டும். வழக்கறிஞர்களின் சொல் வன்மையைத் தான் பார்க்கின்றோமே; அதற்குமேல் என்னத்திற்கு?

## பேசுவோர்களுக்கு எச்சரிக்கை

எவற்றைக் காத்தாலும் காக்காவிட்டாலும் நாக்கு ஒன்றை மட்டுமாவது காத்துக்கொள்க; காவாமல் விட்டு

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106

Digitized By Roja Muthiah Research Library

விட்டால் சொல்லிழுக்குப் பட்டு நீங்காத சோகத்துக்குள் அகப்பட்டுக் கொள்வார்கள்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

ஒரு தீச்சொற் சொன்னாலும் அவன் செய்த அறங்களெல்லாம் பாழாகிப் போய்விடும்.

"ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்".

தீயினால் சுட்டால் மனம் ஆறிவிடும். நாக்கினால் சுட்டவடு வசையாய்ப் பழியாய் மனத்தில் என்றும் ஆறாமல் நிற்குமே!

தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு."

வீட்டில் நட்பாகப் பழகி மன்றத்தில் பழிப்பவரது பக்கத்தில் சிறிதுகூட அணுகாமற் தப்பிப் பிழையுங்கள்.

"எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு."

சொல் வேறாகவும் செயல் வேறாகவும் நிகழ்த்துவோருடைய நட்பினைக் கனவில் நினைத்தாலும் கூட ஐயோ! அது கொடிய துன்பமல்லவா?

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு."

தீய சொற்களைத் தங்கள் வாயால் தடுமாறிச் சொல்வது கூட ஒழுக்க முடையவர்களுக்குப் பொருந்தாதே!

Digitized By Roja Muthiah Research Library

"ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்."

முக்குண வசத்தால் பிறழ உணர்ந்தாலும் கூடச் செறிந்த கல்வியும் கேள்வியும் உடையார் தமக்கு அறியாமை தரும் சொற்களைச் சொல்ல மாட்டார்.

"பிழைத் துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்"

என்றெல்லாம் நாவடக்கத்தைப் பற்றி மிகமிக அருமையாக, நாயனார் அருளினார். மேலும் பயனில சொல்லாமை, இன்சொல் என்பனவும் சொல்வல்லார் அறிய வேண்டுவன.

அறிஞர் பலர் வெறுக்கும் வண்ணம் பயனில்லாத சொற்களைச் சொல்லுவோன் உலகத்தில் எல்லோராலும் இகழப்படுவான். நண்பர்களுக்கு வெறுக்கத் தக்கன செய்வதைக் காட்டிலும் பலரிடம் பயனில்லாத சொல்லுதல் தீது. பயனில்லாத சொற்களை ஒருவன் பரப்பி உரைத்துக் கொண்டிருந்தால் அது அவனை நீதியில்லாதவன் என்பதை அறிவிக்கும்.

பயனும் பண்பும் இல்லாத சொற்களை ஒருவன் சொன்னால் அச்சொற்கள் அறநெறியொடு பொருந்தாமல் அவனை நற்குணங்களிலிருந்து நீக்கிவிடும். பயனில்லாத சொற்களைச் சிறந்த பண்புடையாளர்கள் சொன்னாலும் அதனால் அவர்களுடைய சிறப்பும் மதிப்பும் போய்விடும். என்றெல்லாம் சொல்லி,

"அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும் பயன் இல்லாத சொல்."

Digitized By Roja Muthiah Research Library

"பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள் தீர்ந்த
மாசறு காட்சி யவர்"

என்று அறிஞர், சான்றோர் இவர்களுடைய முறைகளை யும் சொல்லிச்,

"சொல்லுக, சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

என்றும் திருவள்ளுவர் வேண்டுகின்றார். அதுவுமின்றிச் சிறுமையுள் நீங்கிய இன் சொற்களை பண்பிலிருந்து நீங்காத சொற்களை, ஈரம் (அன்பு) அளாவிய சொற் களை, பொய்மை இல்லாத சொற்களை முகத்தான் அமர்ந்து இனிது நோக்கிச் சொல்லுக என்று வழி காட்டுகின்றார்.

"சொற் கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட் கோட்ட மின்மை பெறின்."

என்று கூறி நடுவு நிலைமையோடு பேசுக என்கின்றார். மேலும் அவையறிந்து பேசுக. அவையறிந்து அஞ் சாமற் பேசுக, என்கின்றார். அவற்றைக் காண்போம்.

சொல்லின் நடையைத் தெரிந்து நன்கு உணர்ந்து சொல்ல வேண்டிய நேரம் அறிந்து அவையறிந்து சொல்லுக. உணரக் கூடிய ஆற்றலுடையவர் முன்பு சொல்லுதல் வளர்கின்ற பயிர் நிற்கின்ற பாத்திக்குள் நீர் சொரிந்தாற் போன்ற சிறப்புடையது. ஆதலால் உணரக் கூடியவர் முன்பு சொல்லுக.

நல்ல அவையில் நன்றாகக் கேட்போர் மனங் கொளச் சொல்லக் கூடிய வல்லவர், புல்லறிவாளர் இருக்கின்ற அவையில் மறந்தும் யாதொன்றும் சொல்லக்

Digitized By Roja Muthiah Research Library

கூடாது. ஏனெனில் அவர் முன்பு சொல்லுதல் நல்ல அமிழ்தத்தை அங்கணத்துக்குள்ளே ஊற்றியது போலாகும்.

"புல்லறிவாளர்க்கு அறிவிக்கப் புகுந்தால் புகுந்தவன் அறியாமை யுடையவனுகக் காட்டப்படுவான்" புல்லறிவாளனேதான் கொண்ட புல்லறிவையே நல்லறிவாகக் கொண்டு எல்லாம் கண்டவனுகத் தன்னைக் காட்டிக் கொள்வான்.

"காணுதாற் காட்டுவான் தான் காணுன் காணுதான்
கண்டானும் தான் கண்ட வாறு."

என்றும் அறிவுறுத்து கின்ருர்.

பேசுவோர் சொல்லின் தொகைகளையெல்லாம் அறிந்த தூயவராக இருத்தல் வேண்டும். கற்றவர் முன் அவர் மனங்கொளச் சொல்லவல்லவ ராதலும் வேண்டும். அஞ்சாமலும் அளவறிந்தும் சொல்லுதல் சிறந்தது. தூதுரைப் போர்க்கு ஆராய்ந்த கல்வி வேண்டும். தொகுத்துச் சுருக்கமாகச் சொல்லியும் நீக்க வேண்டியவற்றை நீக்கியும் மனமகிழச் சொல்லியும் நன்மையை உண்டாக்குதல் சாலவும் சிறந்தது என் கின்ருர்.

இனி, கடனறிந்தும் இடனறிந்தும், காலங் கருதியும், அவையறிந்தும், அஞ்சாமலும், தொகுத்தும், வகுத்தும் சொல்லும் சொல் வன்மையைக் காண்போம்.

## சொல்வன்மையின் முறை

சொல் வன்மை என்னும் அரிய வன்மையைப் பெறுவதற்கு விரும்புகிறவன் கற்கவேண்டிய நூல்களை

Digitized By Roja Muthiah Research Library

அதற்கு உரிய நெறிப்படி கற்றல் வேண்டும். தருக்க நூல் முதலிய அளவை நூல்களைத் தெளிவாகப் பயிலுதல் சாலச் சிறந்தது. அத்தகைய திறத்தினாலே தான் அவைக்கண் அஞ்சாமல் எழுந்த கேள்விகளுக்கு மாற்றம் சொல்ல முடியும்.

**இலக்கிய மன்றங்களிற் பேசுகின்றவன் தனது குரலும் பொருளமைதியும் உணர்வும் மெய்ப்பாடும் கேட்போருடைய உள்ளத்திற் சென்று கலந்து எதிரலையாக வந்து மீண்டும் தன்னொடுங் கலந்து ஊக்கந் தருகின்றதா என்று தெளிந்து பேசுதல் வேண்டும்.** அவ்வாறு தெளியாமல் கேட்போருக்குந் தனக்குந் தொடர்பே இல்லாமல் தனது உரத்த குரல் சுதி சேராத பாடலைப் போல ஆகாயத்திற் போய்க் கலந்து சென்று கொண்டிருக்கத் தனக்குந்தான் பேசும் சொற்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் சங்கிலிருந்து ஓசைபிரிவது போலப் பரியச் செய்து கொண்டிருந்தால் அதனால் எள்ளளவும் பயனில்லை.

பலகாலும் பயின்று உணர்ந்து தெளிந்த பொருள்களைப் பற்றிப் பேசுவதே நல்லது. அவ்வாறன்றிப் பேசுவதற்குச் சிறிது முன்பு ஏதோ முயன்று தேடிக் கொண்டு வந்து தாறுமாறாகக் கொட்டுதல் என்பது பெரிய மானக் கேடாகும்.

மேலும் திருவள்ளுவர் சொல்லும் இவைகள் எல்லாவற்றையும் மனத்தில் வாங்கி முறையாகப் பயின்று செப்பம் செய்து கொள்ளுதல் நல்லது.

(1) நாவினாற் சொல்லும் நலமெனப் படுகின்ற நலமாகிய அந்தச் செல்வம் உலகிலுள்ள வேறு எந்த நலத்தினுள்ளும் இல்லை.

Digitized By Roja Muthiah Research Library

ஆனால், ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும். ஆதலால் சொல்லின்கண் சோர்வு வராமற் காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

சோர்வில்லாமற் சொல்லுவதுடன் கல்வி கேள்வியுடையாரது மனத்தைக் கவர்ந்து தன் வசப் படுத்தும் படியாகவும், கல்லாதாரும் கேட்க விரும்பும் படியாகவும் பேசுதல் வேண்டும். அவ்வாறு பேசும் மொழிகளே சிறந்த சொற்களாம்.

சொற்களைக் கேட்போரின் திறமறிந்து சொல்லுதல் வேண்டும். அவ்வாறு சொல்வதைக் காட்டிலும் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

தான் சொல்லக் கருதிய சொல்லை வெல்லுவதற்கு வல்ல பிறிதோர் சொல் இல்லா வண்ணம் ஆராய்ந்து தன் சொல்லைச் சொல்லுதல் வேண்டும்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல்
அச் சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை யறிந்து."

என்பது காண்க.

தான் சொல்லும் போது பிறர் மேன்மேலும் விரும்பும் வண்ணம் சொல்லிப் பிறர் எவ்வாறு சொன்னாலும் அவற்றின் குற்றமும் நோக்காது பயனை மட்டும் ஆராய்ந்து கொள்வது மாட்சிமையுடைய மாசற்ற சான்றோர் கொள்கையாகும்.

ஒருவன் சொல்லுதற்கு வல்லனாகவும், சோர்வு இல்லாதவனாகவும், அவைக்கு அஞ்சாதவனாகவும் இருப்பின் அவனைப் பகைத்து வெல்லுதல் உலகில் யாவர்க்கும் அரிது.

Digitized By Roja Muthiah Research Library

மாசற்ற சில சொற்கள் சொல்லத் தெரியாதவர்கள் தாம் பல சொற்களைச் சொல்லுவதற்கு அலந்து திரிவார்கள்.

கொத்துக் கொத்தாகப் பூத்துலைத்தும் மணமில்லாத பூவை யொப்பார்கள், தாம் கற்றவற்றை விரித்துச் சொல்ல மாட்டாதவர்கள். மணமுள்ள பூ சிறந்த இடத்திற்குச் சென்று தலையில் இடம் பெறும்; தலைமையும் பெறும். மணமில்லாத பூ பிறந்த இடத்திலேயே செடியின் காலடியில் விழுந்து வாடும். அது போன்று சொல் வன்மை இல்லாரது கல்வி அவர்காலடியிற் கிடந்து வாடி அவரோடு செமித்துப் போகும். அவ்வளவேயன்றிப் பயனில்லை.

"இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

என்ற பாடலின் சிறப்பினை நோக்குக.

"வில்லே ருழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை."

என்றும் நாயனார் கூறுகின்றார். எனவே ஏருழுவோர் முரம்பு நிலத்தை உழுவது போன்று கேட்போருடைய முரம்புடைய மனமாகிய நிலத்தில் கரடு முரடு நீங்கும் வண்ணம் சென்று சொற்கள் பதிந்து உழும்படியாகவும் பேசுதல் வேண்டும். உழுத இடத்தைப் பரம்படிப்பது போன்று மனத்தைப் பரசிக்கொடுத்து அமைவுடையதாக ஆக்குதற்குச் சொற்களைப் பரசி வீசிப் பரம்புதலும் வேண்டும். பின்பு பயன் தரும் விதை விதைப்பது போல் நல்ல கருத்துக்களை விதைத்தலும் வேண்டும்; மேலும் நீர்பாய்ச்சுதல் போன்று ஈரமளாவிய

Digitized By Roja Muthiah Research Library

சொற்களைப் பொழிதலும் வேண்டும். அவ்வாறு பொழிகின்ற முறையைத்தான்,

> "உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
> பாத்தியுள் நீர்சொரிந் தற்று."

என்று பொய்யில் புலவர் சொல்லுகின்றார். இத்தகைய வித்தகத் திறங்கள் எல்லாவற்றையும் ஒரு சேரத் திருவள்ளுவர் மொழியிலே காணலாம்.

எவ்வாறெல்லாம் திருவள்ளுவர் நயம்பட உரைக்கின்றார் என்று எண்ணித்தொகுத் து அந்த முறைகளை ஆராய்ந்தால் அது ஒரு தனி நூலாக விரியும் என்றாலும் ஈங்கும் சில பாடல்களை நோக்குவோம்.

பேசுகின்ற எல்லோரும் ஒருவகையான சொற்களாலே தானே பேசுகின்றார்கள். எல்லாச் சொற்களும் நெடுங்கணக்கிலுள்ள அகரம்முதலாக னகர இறுதியாக வுள்ள எழுத்துக்களாலே தானே ஆகியிருக்கின்றன. இவற்றுக்குள் சொல்வன்மையாவது ஒன்றுவது என்று கூடக் கருதலாம். ஆனால் உலகத்தில் எந்த மொழி வல்லுநரும், எந்தப் புலவரும் செய்யாத வித்தகத் திறத்தைத் திருவள்ளுவர் செய்து வைத்துவிட்டார். தமிழர்கள்தாம் நல்ல தவம் செய்தவர்கள். தமிழும் ஒரு பெரிய தவம் செய்துதானிருக்கும். தமிழ்ல் மொழிக்கு முதலில் வராத எழுத்துங்கூட திருவள்ளுவர் குறளில் இடம் பெறும் போது ஒரு சிறப்பினைப் பெறுகின்றது. முதலில் அத்தகைய சிலவற்றை நோக்குவோம்.

திருவள்ளுவர் மாசற்ற சில சொற்களால் தெளிவாகச் சொல்லுவார். பிறிதோர் சொல் தன் சொல்லை வெல்லுதற்கு இல்லாத வகையாக அமைப்பார். ஒரு

Digitized By Roja Muthiah Research Library

சொல்லை எடுத்துக் கொண்டாரென்றால் அதன் முன்னும் பின்னும் அடைகளையும் விகுதிகளையும் சேர்த்தும் திரித்தும் அந்தச் சொல்லின் பல்வேறு வடிவங்களை யெல்லாம் கையாண்டும் சொல்லுவார். எடுத்துக் காட்டாக,

"இன்மையின் இன்னாத தியாதெனின்
இன்மையின்
"இன்மையே இன்னா தது." என்ற குறளை நோக்குங்கள். இந்தப் பாடலைப் பதினாயிரம் முறை சொல்லிப் பார்த்தாலன்றி இதன் அரிய தன்மைகளை அறிய முடியாது. பல வகைத் தாளத்திலும் ஓசையிலும் வைத்து நவின்று நவின்று பார்த்தல் வேண்டும். ஆசிரியர் அவ்வாறு பார்க்கச் சொல்லுகின்றார்.

"நவில்தோறும் நூல் நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு." என்கின்றார்.

ஓர் அழகிய நங்கையை மணந்து அவளொடு இன்பம் நுகர்ந்து வாழ்பவன், காலந்தோறும் பருவந்தோறும் அவளாற் பெறும் இன்பம் வளர வளர அதன் சிறப்பினையும் முன்னை அறியாமையையும் காண்பது போன்று காணும் வண்ணம் காலந்தோறும் பருவந்தோறும் துய்க்கத் துய்க்க உவட்டாத இன்பந்தரும் திருக்குறட் பாட்டு. அறிய அறிய முன்னை அறியாமையைக் காண்பது போன்று குறளின் சிறப்பினை மேன் மேலும் அறிய அறிய அதற்கு முன்பு அறிந்த தன்மை அறியாத் தன்மையாகவே விளங்கும்.

"அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு."

Digitized By Roja Muthiah Research Library

என்கின்றார் ஆசிரியர்.இனி முதலில் எடுத்துக் கொண்ட பாடலை நோக்குவோம். 'இன்மை' 'யாது' 'எனின்' என்ற மூன்று சொற்களைத்தான் எடுத்துக் கொண்டார். வறுமையைப் பற்றிக் கூறுகின்றவராதலின் அதனைக் குறிக்கும் இன்மை என்ற சொல்லை முதலில் வைத்து அதன் உருவ வேறுபாடுகளை யெல்லாம் பின்னால் அமைத்து அதற்குள் உவமை யணியையும் வைத்து, கேள்வியும் விடையுமாகவும் செப்பின் வரு நிலை யணியும் உருண்டு கொண்டே வர எவ்வளவோ அருமையாக ஆக்கியிருக்கின்றார். மொழிக்கு முதலில் வராத னகரம் ஒவ்வொரு சீரிலும் பெரும் பாலு நடு நாயகமாக நின்று இன் இன் இன் என்று மூ கொடு சேர்ந்து முரலுகின்றது. வீணையின் நரம்பு விண் விண் என்று ஒலிப்பது போன்று ஒலிக்கின்றது. கூறியது கூறல் போன்று காணப்படினும் அந்தக் குற்றமும் இல்லாமல் அமைத்த இந்த அமைப்பு உணருவோருக்கு உவட்டாத இன்பந் தரும். இப்படி ஒரு தொடர் வேறு ஒரு மொழிக்காரருக்குக் கிடைத்திருந்தால் அவர்கள் எப்படியெல்லாமோ பாராட்டி யிருப்பார்கள். நாமும் அவர்களோடு சேர்ந்து பின் பாட்டுப் பாடிக் கொண்டே யிருப்போம். ஆனால், "இந்தச் செல்வம் நமக்கல்லவா கிடைத்திருக்கின்றது; ? நாம் எப்படி இதைப் பாராட்டலாம்; தற்புகழ்ச்சி கூடாதல்லவா?" என்றுதான் நாம் வாளா யிருக்கின்றோம் போலும். நாமும் அது போன்று ஒரு பாட்டுச் சொல்லிப் பார்ப்போம்.

"வறுமையிற் பொல்லாத தியாதெனின் மற்றந்த வறுமையே பொல்லாதது." என்பதுதான் முந்திய



Digitized By Roja Muthiah Research Library

குறளின் பொருள். ஆனால் இவ்வாறு இந்தச் சொற்களை அமைத்து இப்படிப் பாடி விட்டால் முன்னைய நயமே வராது. வறுமை என்ற சொல்லை மீண்டும் சீரில் வைக்கத் தமிழே இடம் கொடாது. இந்தப் பாட்டின் சிறுமையை இங்கே சொல்லுதல் வேண்டாம். இனி வேறு இது போன்ற பாடல்களை நோக்குவோம். இதே பாணியில் எத்தனையோ பாடல்கள் உண்டு

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு."

"நிழல் நீரும் இன்னாத இன்னா தமர் நீரும்.
இன்னாவாம் இன்னா செயின்;" என்ற இந்த இரண்டு பாடல்களையும் அந்தப் பாட்டுடன் சேர்த்துப் பல்லாயிரக் கணக்கான முறை சொல்லிப் பார்த்தல் வேண்டும். மொழிக்கு முதலில் வரும் நகரமும் வராத னகரமும் அணி வகுத்துக் கொண்டு பாடுகின்றன. "இன்னாத இன்னா-இன்னாவாம் இன்னா செயின்." என்பதை எவ்வளவு காலமோ சொல்லிக் கொண்டிருக்கலாம்.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."

"அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந்த தற்று';' என்ற பாடல்களை நவின்று நவின்று பாருங்கள். பிறரொடு அளவளாவிப் பழகாதவன் வாழ்க்கை உடைகுளத்தில் கரையில்லாமல் நீர் நிரம்பியது போல பயனில்லாமற் போகு மென்கின்றார். கரையில்லாத குளத்து நீர் எப்படிச் சளசளவென்று நாலாபக்கமும் போகுமோ அது

Digitized By Roja Muthiah Research Library

போன்றும், பல்விழுந்தவன் வாய் கொப்புளிக்குந் தண்ணீர் கள கள வென்று ஒழுகுவது போன்றும் ஓசை தரும்படி "அளவளா—குளவளா" என்று சொற்களை அமைத்துத் தந்திருக்கின்ற அருமையை நோக்குங்கள். அந்தச் சொற்களே, குளத்து நீரும் அவன் வாழ்வும் பாழாகின்ற க ள க ள ப் பை ஒலித்துக் காட்டுகின்றது. இனி, பொருள் வகையாக வேறு மூன்று பாடல்கள் நோக்குவோம்.

காதலின் தன்மையை ஒரு சொல்லாலேயே விளக்கிய பெருமை தமிழ் மொழிக்குத்தான் உண்டு. காதல், காமம் என்ற இரண்டு சொற்களுக்கும் பண்டைக் காலத்தில் பொருள் ஒன்றேயாகும். இரண்டு சொற்களுக்கும் பகுதியும் ஒன்றுதான். விரும்புதல் விருப்பம் என்றும் வருவதுபோல காதல் என்பது காமம் என்றும் வரும். ஒரு காவடித் தண்டின் ஒரு பக்கத்திலுள்ள பாரம் அடுத்த பக்கத்திலுள்ள பா ர த் தை யு ம் கவர்ந்து இழுத்து நிற்கும். காவடித் தண்டின் இரு தலையிலுந் தொங்கும் இரண்டு உறியில் வைத்த இரண்டு பாரமும் ஒன்றை யொன்று கவர்ந்து இழுத்துச் சீரொப்ப நிற்பது போன்று காதலனும் காதலியும் ஒருவர் மனத்தை ஒருவர் கவர்ந்து கலவி நிற்பது காதல். காவடித்தண்டில் ஒரு பக்கத்து உறியிலுள்ள தேன் குடம் விழுந்து உடைந்தால், அடுத்த பக்கம் உள்ள குடமும் அதே தடுமாற்றத்தில் விழுந்து உடைந்து விடும்; அது போன்று காதலரில் ஒருவர் இறந்தால், (பாண்டியன் இறந்தவுடன் கோப்பெருந்தேவியும் உடன் விழுந்து உயிர் விட்டது போன்று) மற்றவரும் உடனுயிர் நீப்பர்.

Digitized By Roja Muthiah Research Library

அதுவே உண்மையான உயர்ந்த பேரெல்லைக் காதல். இதனை யெல்லாம் அச் சொல் உணர்த்துதல் காண்க

'கா' என்பது பகுதி. "கமம் நிறைந்தியலும்" "கவவு அகத்திடுதல்" என்பன தொல் காப்பிய உரி யியலில் உள்ள நூற் பாக்கள். "காதலர்ப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்" என்பது சிலப்பதிகாரம். இவை யெல்லாம் இதற்கு இனமான சொற்கள். "காவினெம் கலப்பை" என்பது புறநானூறு. "நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்" என்பது மலை படு கடாம். ஓமம், ஈமம், ஏமம், நாமம், (அச்சம்), பாமம், தாமம் என் பன காமம் என்பது போன்ற இனச் சொற்கள். திருவள்ளுவர் காமத்துப்பாலிலுள்ள இருபத்தைந்து அதிகாரங்களில் பதினெட்டு அதிகாரத்தில் காமம் என்ற சொல்லையும் அதனடியாகப் பிறந்த சொல்லை யும் நாற்பது இடங்களில் கையாண்டிருக்கின்றார். ஏனை அறத்துப்பால் பொருட் பால்களில் பதினைந்து இடத்தில் வைத்திருக்கின்றார். காமத்துப்பாலில் ஒரு அதிகாரத்தில் ஆறு குறளில் காமம் என்ற சொல் லையே மீண்டும் மீண்டும் வழங்கி யிருக்கின்றார். தொல்காப்பியரும் மற்றும் பண்டைப் பாவலரும் காதல் என்ற பொருளில் காமம் என்ற சொல்லைப் பல்வேறிடங்களில் வைத்துள்ளனர். (இது பற்றி விரி வாக 1949-ல் தமிழ்த் தென்றல் ஆண்டுமலரில் எழுதியுள்ளேன்) இந்த அருமைத் தமிழ்ச் சொல்லின் பகுதியைத் தமிழர் அறியும் வண்ணம்,

"காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென் நோனா உடம்பி னகத்து." என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

Digitized By Roja Muthiah Research Library

"என் நுண்ணிய உயிரே காவடித் தண்டாக அதன் ஒரு தலையில் நாணமும், மற்றொரு தலையில் காமமும் தொங்குகின்றன, என் தாங்க முடியாத உடம்பின் உள்ளிடத்தில்" என்று ஒரு தலைவி கூறுவதாக உள்ள இந்த அருமைப் பாடலுக்கு ஈடு உலகத்திலேயே இல்லை என்றால் அது முற்றிலும் உண்மைதான். இந்தப் பாடலின் கவிதை நயமும், சுவை நயமும் மனத்தை விட்டு நீங்காது. அதுவுமன்றிக் காதல், காமம் என்ற சொல்லின் பொருளை மறந்த தமிழகத்திற்கு நினைப்பு ஊட்டத் துணையாகவும் இலங்குகின்றது. இதனையே மற்றோரிடத்தில்,

"ஒருதலையான் இன்னது காமம் காப்போல
இருதலை யானும் இனிது." என்றும்,

"பருவரலும் பைதலுங் காணான் கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்"

என்றும் கூறியிருக்கின்றார்.

"காமம் **காப்போல**, இருதலையானும் இனிது. என்றுகூறிக் காதலின் உண்மை யியல்பான பொருளை உலகுக்கு உணர்த்திய திருவள்ளுவரின் சொல் வன்மையைப் போன்று வேறு யாரிடத்திலும் சொல் வன்மை காண்பது இயலாது. அத்தகைய பெரு நாவலரின் பொன் மொழியைத் தமிழர்கள் உணர்ந்து போற்றுவாராக.

கல்வியும் கேள்வியும் உடையவராகிப் பயனில்லாத சொற்களை விலக்கி அவையறிந்து அஞ்சாமல் யாவரும் விரும்பும் வண்ணம் சொல்வாராக.

Digitized By Roja Muthiah Research Library

"வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ள
முதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து."

"முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினும் இல்."

"அப்பால் ஒரு பாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார்."

"எப்பா வலரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி.

'வாழியரோ,

தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்ததிரு
வள்ளுவனார் பாத மலர்."

**வெல்க தமிழ்.**

Digitized By Roja Muthiah Research Library

இலங்கைத் திருக்குறள் மன்றத்தாரின்
அடுத்த படைப்பு!

# திருக்குறள் கட்டுரைகள்

அறிஞர்: கி. ஆ. பெ. விசுவநாதம்,
பன்மொழிப்புலவர்: கா. அப்பாத்துரை,
இரசிகமணி: டி. கே. சி.,
கோவைக்கிழார்
ஆகிய

தமிழ்ப் பேராசிரியர் பலரின் அரிய
கட்டுரைகளின் தொகுப்பு.

விலை ரூ. 2—0—0

கிடைக்குமிடம்:

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னை-கோவை-மதுரை-திருநெல்வேலி

Digitized By Roja Muthiah Research Library

நியூமெதட் பாக்கட்
டிக்ஷனரி
{ இங் - இங் - தமிழ் }

15000க்கு மேற்பட்ட ஆங்கில வார்த்-
தைகளுக்கு நல்ல தமிழில் அர்த்தம்.
306 பக்கங்கள்
விலை ரூ 1/8

முன்பணம் அனுப்பினால் செலவு இனாம்
ஸ்ரீ மகள் கம்பெனி; சென்னை-1

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1

Digitized By Roja Muthiah Research Library